T. 2098

ANNAMALAI UNIVERSITY TAMIL SERIES No. 7.

உ

கணபதி துணை.

## ஆதி குமர குருபர அடிகள்

# நினைவுத் தமிழ்ப் பரிசுத் தொகுதி

பதிப்பாசிரியர் :

வித்துவான் மு. அருணாசலம் பிள்ளை

தமிழ் ஆசிரியர்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரால் வெளியிடப்பட்டது

1945

# முன்னுரை

திருப்பனந்தாட் காசிமடத்துத் தலைவராகிய அருட்டிருவாளர் காசி வாசி சாமிநாதத் தம்பிரானவர்கள், மக்கட்கு மொழியறிவும் கடவுளுணர்ச்சியும் இன்றியமையாதன வென்பதை யுணர்ந்து தமிழ் மொழியையும் சைவ நெறியினையும் பல்லாற்றானும் வளர்த்தற்கு முன் வந்தார்கள். அதனால், சென்னைப் பல்கலைக் கழகத்துத் தனித்தமிழ் வித்துவான் தேர்வில் முதல் முறையில் முதல்வராகத் தேர்ச்சி பெறு வோர்க்கு ஆயிரம் ரூபாய் பரிசாக வழங்கப்படவேண்டுமென்று அதற் குரிய முதற்பொருளை அப்பல்கலைக் கழகத்தாரிடம் அளித்துள்ளார் கள். அவ்வாறே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தும், தமிழ் நூல் வெளியீட்டிற்காகவும், தேவாரத் திருமுறை, தமிழிலக்கியம், இலக் கணம், நீதி நூல், சமய நூல், இசை யென்பவற்றின் பரிசுகட்கா கவும் பெரும் பொருள் உதவியுள்ளார்கள். அப்பரிசுகளுள், காசி வாசி ஆதி குமரகுருபர அடிகளார் நினைவுத் தமிழ்ப் பரிசு என்பது ஒன்றாகும். இப்பரிசுக்காக மூவாயிரத்தைந்நூறு ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளன. அம் முதற் பொருட்குக் கிடைக்கும் ஊதியத்திலிருந்து ஆண்டுதோறும் நூறு ரூபாய் பரிசாக வழங்கப்படும்.

இப்பரிசுத் தேர்விற்குரிய நூல், அறுபத்து நான்கு தமிழ் நூல் களிலிருந்து தொகுக்கப்படும். இத்தொகை நூலின்கண், பரிசுவிதி முறைப்படி, பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்திலிருந்து 200 பாடல்களும், திருவிடைமருதூர்த் தல புராணத்திலிருந்து 50 செய்யுட்களும், ஏனைய 62 நூல்களிலிருந்து 500 செய்யுட்கள் அல்லது 2000 வரிகளும் தொகுக்கப்பட்டுள்ளன. இதன்கண் அடங் கிய 750 செய்யுட்கள் அல்லது 3000 வரிகளும் மனப்பாடம் இருத்தல் வேண்டும். வாய்மொழியாகவும் எழுத்தாகவும் தேர்வு நடைபெறும். எல்லாவற்றிற்கும், பொருள், கருத்துரை, அருஞ் சொற்பொருள், விளக்கவுரைக் குறிப்பு, அவ்வப் பகுதிகள் அமைந் துள்ள இடங்கள் முதலியன தெரியவேண்டும். வாய்மொழித் தேர் வில் செய்யுட்களைச் செவ்வனே இசையோடு பாடிக் காட்டுபவர்க்குத் தனியே 10 மதிப்பெண்கள் உண்டு. நான்கு ஆண்டுகட்கு ஒருமுறை மேலே காட்டியவாறு 64 நூல்களிலிருந்து வேறு வேறு 750 செய் யுட்கள் அல்லது 3000 வரிகள் தெரிந்தெடுத்துத் தொகுக்கப்படும்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரால் ஆண்டுதோறும் இத் தொகைநூற் பரிசுத் தேர்வு நடத்தப்பெறும். இத்தேர்விற் கலந்து கொள்ள விரும்புவோர் சென்னைப் பல்கலைக்கழகத்துத் தனித்தமிழ் வித்துவான் முதற் பகுதி (பிரிலிமினெரி) யிலாதல், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துப் புலவர் முதற்பகுதியிலாதல் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். பிற பல்கலைக் கழகங்களில் இதற்கு நிகரான தகுதியுள்ள தேர்வுகளில் தேர்ந்தவரும், மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பால பண்டிதத்தேர்வில் வெற்றிபெற்றோரும் கலந்துகொள்ளலாம். குலம் கொள்கை, ஆண் பெண் என்பவை பற்றிய வேறுபாடு கருதப்பட மாட்டாது. நூற்றுக்கு 60-க்குக் குறையாத மதிப்பெண் பெற்று முதல் முறையில் முதல்வராகத் தேர்ச்சியுற்றவரே பரிசு பெறுவர் ஒரே காலத்தில் ஓரளவான மதிப்பெண்களை ஒருவர்க்கு மேற்பட்டவர் பெறுவாராயின், அவர்கள் பெயரெழுதிய சீட்டுக்களை யொன்று சேர்த்துக் குலுக்கி ஒருவர் பெயரே தேர்ந்தெடுக்கப்படும். எக் காரணத்தாலும் பரிசுத் தொகையைப் பிரிக்கவும் குறைக்கவும் முடியாது.

அறுபத்துநான்கு நூல்களையும் ஊக்கத்தொடு படித்தற் பொருட்டே இத் தொகைநூற்பரிசு ஏற்படுத்தப்பட்டது. காசி வாசி சாமிநாதத் தம்பிரானவர்கள், ஆதி குமரகுருபர அடிகளார் நினைவு குறித்து இப் பரிசை அமைத்தார்களாயினும், இவ்விரு பெரியாரையும் என்ஞான்றும் நினைவிலிருத்துதற்கு அறிகுறியாக இப் பரிசுத் தேர்வில் எல்லோருங் கலந்து வெற்றிபெற்று இன்புறுவாராக.

பதிப்பாசிரியர்.

# APPENDIX C—1

## SRI KASIVASI ATHI KUMARAGURUPARA SWAMIGAL MEMORIAL TAMIL PRIZE.

BY

HIS HOLINESS SILASRI KASIVASI
SVAMINATHA TAMBIRAN SVAMIGAL AVERGAL
OF TIRUPPANANDAL.

1. This Endowment was founded by His Holiness Silasri Kasivasi Svaminatha Tambiram Svamigal Avergal of Tiruppanandal to encourage the study of 64 selected books in Tamil Literature.

2. The endowment for the prize consists of 3% Government Promissory Notes of 1949-52 (Defence War Loan) of the face value of Rs. 3,500/- (Rupees Three Thousand and five hundred only). The interest on this investment shall be utilised for the award of a prize annually of the value of Rs. 100/-. The balance of the interest after the award of the prize will be added to the corpus of the fund. When the above pro-notes mature, the proceeds shall be invested in other Government securities yielding a higher total income for the Endowment.

3. The following are the terms of award of the prize :—

(i) The Prize shall be awarded irrespective of sex, caste, religion and nationality.

(ii) To be eligible for the award, the following shall be the conditions :—

(*a*) A pass in the Preliminary Examination of the Vidvan course, Tamil alone, of the Annamalai or the Madras University or any other examination (of any University which has already been or may be established hereafter) which may be considered equivalent to the Preliminary Vidvan Examination of the two Universities above-named, or the Bala Pandita Examination of the Madura Tamil Sangam, as a condition precedent to appearance for the test.

(*b*) First rank at the first appearance with not less than 60% of the marks in a competitive test to be conducted annually for the purpose by the Annamalai University. A selection of 750 stanzas of which 200 from *Tiruvilaiyadalpuranam* 50 from *Tiruvidaimarudur Thala Puranam* and the remaining 500 or 2,000 lines from the other 62 books in the list

appended hereto, will be made once in every four years by the Annamalai University—the selections for one period of 4 years being different from those for the next period or periods of four years. At the competition (i) the first part will consist of a memory test of selections made by the examiners out of the 750 stanzas. In this oral memory test special credit will be awarded for singing the verses in correct music; for this singing the marks will be 10; (ii) The second part will consist of a test of the meaning and the purport of the 750 stanzas above referred to, wherein a knowledge of the meaning of words, paraphrase, purport of the verses and the special extent notes will be tested; and (iii) The third part of the competition will consist of giving explanations with or without reference to the context to portions of all the 64 books chosen by the examiners.

(iii) If two or more competitors should be considered equally eligible for the award, lots shall be cast to decide who will have the prize or prizes of the year.

4. The Prize shall be awarded at a meeting of the Syndicate of the Annamalai University. If in any year the prize-winner is unable to be present to receive the prize, the Syndicate shall arrange to send him the prize amount. If the prize-winner dies before the prize is presented to him, the prize amount shall be paid to his legal heir or heirs.

5. The prize amount shall be paid either in cash or by cheque and shall not under any circumstances be either divided or reduced.

6. If in any year, or a series of years the prize be not awarded, from out of the annual interest of the endowment, Rs. 50/- in each year of no award shall be set apart. The entire amount so set apart shall be awarded in the subsequent year to the candidate eligible for the award along with the prize amount of that year. After setting apart Rs. 50/- as above, the balance of the annual interest shall be added to the corpus of the fund at the end of each year.

7. If in the process of investments, the face value of the paper increases and an addition to income results either by addition of unspent amounts under clause (6) above, or by reinvestments, such additional income may, at the discretion of the Syndicate of the Annamalai University, be utilised to institute second and third prizes and, thereafter, to increase the value of each one of the three prizes.

8. The Syndicate shall at the end of each year communicate to the Donor or to the Donor's successors-in-interest the name and address of the prize-winner and the amount of the prize and if in any year the prize be not awarded, the amount at credit at the end of the year and shall also publish the same in an important Tamil Daily Newspaper. This Deed, shall be published along with the deeds relating to the Rs. 1,000/- Tamil Prize Endowent perpetuating the memory of King George V in the Madras University and the Raja Raja Abhaya Kulasekhara Chola Maharaja Memorial Endowment, the Tiruvalluvar Niti Nul Prize Endowment, and the Sekkilar Nayanar Memorial Tamil Prize Endowment in the Annamalai University made by the same Donor in every one of the publications made under the 2nd Endowment mentioned above.

9. The income from the Endowment and the accumulations thereto shall not be diverted to any other purpose.

| தொடர்ந்த நம்பர் | நூல்களின் பெயர்கள் | நூலாசிரியர்களின் பெயர்கள் |
|---|---|---|
| 1 | கந்தர் கலி வெண்பா | குமரகுருபர சுவாமிகள் |
| 2 | சகல கலாவல்லி மாலை | குமரகுருபர சுவாமிகள் |
| 3 | குமரேச சதகம் | குருபாத தாசர் |
| 4 | தண்டலையார் சதகம் | படிக்காசுப்புலவர் |
| 5 | சரசுவதியந்தாதி | கம்பர் |
| 6 | அருணகிரியந்தாதி | குகை நமசிவாய தேவர் |
| 7 | அபிராமியந்தாதி | அபிராம பட்டர் |
| 8 | திருப்புகலூர் அந்தாதி | நெற்குன்றவாண முதலியார் |
| 9 | திருவேங்கடத்தந்தாதி | பிள்ளைப்பெருமாளையங்கார் |
| 10 | பழமலையந்தாதி | சிவப்பிரகாச சுவாமிகள் |
| 11 | மறைசையந்தாதி | சின்னத்தம்பிப் புலவர் |
| 12 | கல்வளையந்தாதி | சின்னத்தம்பிப் புலவர் |
| 13 | திருவரங்கத்தந்தாதி | பிள்ளைப்பெருமாளையங்கார் |
| 14 | திருச்செந்தில் நிரோட்டக யமகவந்தாதி | சிவப்பிரகாச சுவாமிகள் |
| 15 | திருக்கருவைப்பதிற்றுப் பத்தந்தாதி | அதிவீரராம பாண்டியர் |
| 16 | மதுரைப்பதிற்றுப் பத்தந்தாதி | பரஞ்சோதி முனிவர் |
| 17 | கலைசைச்சிலேடை வெண்பா | தொட்டிக்கலை சுப்பிரமணிய தம்பிரான் |

| தொடர்ந் நம்பர் | நூல்களின் பெயர்கள் | நூலாசிரியர்களின் பெயர்கள் |
|---|---|---|
| 18 | சிங்கைச்சிலேடை வெண்பா | நமச்சிவாயப் புலவர் |
| 19 | இங்கித மாலை | இராமலிங்க சுவாமிகள் |
| 20 | திருவரங்கத்து மாலை | பிள்ளைப்பெருமாளையங்கார் |
| 21 | சோணசைல மாலை | சிவப்பிரகாச சுவாமிகள் |
| 22 | பெரியநாயகியம்மை திருவிருத்தம் | சிவப்பிரகாச சுவாமிகள் |
| 23 | மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை | குமரகுருபர சுவாமிகள் |
| 24 | சிதம்பர மும்மணிக்கோவை | குமரகுருபர சுவாமிகள் |
| 25 | நால்வர் நான்மணி மாலை | சிவப்பிரகாச சுவாமிகள் |
| 26 | திருவாரூர் நான்மணி மாலை | குமரகுருபர சுவாமிகள் |
| 27 | செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் | சிவஞான சுவாமிகள் |
| 28 | முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் | குமரகுருபர சுவாமிகள் |
| 29 | அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் | சிவஞான சுவாமிகள் |
| 30 | மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் | குமரகுருபர சுவாமிகள் |
| 31 | திருவிடைமருதூருலா | மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| 32 | தஞ்சைப் பெருவுடையாருலா | சிவக்கொழுந்து தேசிகர் |
| 33 | திருவெங்கையுலா | சிவப்பிரகாச சுவாமிகள் |
| 34 | இராசராச சோழனுலா | ஒட்டக்கூத்தர் |
| 35 | நெல்விடுதூது | |
| 36 | பணவிடுதூது | |
| 37 | நெஞ்சுவிடுதூது | மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| 38 | தமிழ்விடுதூது | |
| 39 | வருணகுலாதித்தன் மடல் | |
| 40 | சித்திர மடல் | காளமேகப் புலவர் |
| 41 | வெங்கைக் கலம்பகம் | சிவப்பிரகாச சுவாமிகள் |
| 42 | மதுரைக் கலம்பகம் | குமரகுருபர சுவாமிகள் |
| 43 | காசிக் கலம்பகம் | குமரகுருபர சுவாமிகள் |
| 44 | அழகர் கலம்பகம் | வேம்பத்தூர்க்கவிகுஞ்சரபாரதி |
| 45 | சிதம்பரச்செய்யுட்கோவை | குமரகுருபர சுவாமிகள் |
| 46 | சமுத்திர விலாசம் | கடிகை முத்துப்புலவர் |
| 47 | சந்திர விலாசம் | மாம்பழக்கவிச் சிங்கநாவலர் |

| தொடர்ந்த நம்பர் | நூல்களின் பெயர்கள் | நூலாசிரியர்களின் பெயர்கள் |
|---|---|---|
| 48 | முக்கூடற்பள்ளு | |
| 49 | கதிரைமலைப்பள்ளு | |
| 50 | திருக்குற்றாலக் குறவஞ்சி | திரிகூடராசப்பக் கவிராயர் |
| 51 | சரபேந்திர பூபாலக் குறவஞ்சி | சிவக்கொழுந்து தேசிகர் |
| 52 | கலிங்கத்துப்பரணி | சயங்கொண்டான் |
| 53 | சீகாழிக் கோவை | மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| 54 | வெங்கைக் கோவை | சிவப்பிரகாச சுவாமிகள் |
| 55 | கோடீச்சுரக் கோவை | சிவக்கொழுந்து தேசிகர் |
| 56 | தஞ்சைவாணன் கோவை | பொய்யாமொழிப் புலவர் |
| 57 | அரிச்சந்திர சரிதை | ஆசுகவிராசர் |
| 58 | நளவெண்பா | புகழேந்திப்புலவர் |
| 59 | நைடதம் | அதிவீர ராம பாண்டியர் |
| 60 | இரகு வம்மிசம் | அரசகேசரி |
| 61 | பிரபுலிங்க லீலை | சிவப்பிரகாச சுவாமிகள் |
| 62 | சீகாளத்திப் புராணம் | கருணைப்பிரகாசர்<br>சிவப்பிரகாச சுவாமிகள்<br>வேலைய சுவாமிகள் |
| 63 | திருவிடைமருதூர்த் தல புராணம் | சிவக்கொழுந்து தேசிகர் |
| 64 | திருவிளையாடற் புராணம் | பரஞ்சோதி முனிவர் |

# பொருளடக்கம்.


| தொடர் எண். | நூற் பெயர். | செய்யுள் எண். | அடிகளின் எண். |
|---|---|---|---|
| 1 | கந்தர் கலிவெண்பா | ... | 72 |
| 2 | சகலகலாவல்லி மாலை | 1 | 4 |
| 3 | குமரேசர் சதகம் | 3 | 12 |
| 4 | தண்டலையார் சதகம் | 4 | 16 |
| 5 | சரசுவதி அந்தாதி | 2 | 8 |
| 6 | அருணகிரி யந்தாதி | 3 | 12 |
| 7 | அபிராமி யந்தாதி | 4 | 16 |
| 8 | திருப்புகலூரந்தாதி | 4 | 16 |
| 9 | திருவேங்கடத்தந்தாதி | 4 | 16 |
| 10 | பழமலையந்தாதி | 4 | 16 |
| 11 | மறைசை யந்தாதி | 4 | 16 |
| 12 | கல்வளையந்தாதி | 4 | 16 |
| 13 | திருவரங்கத்தந்தாதி | 4 | 16 |
| 14 | திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி | 3 | 12 |
| 15 | திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி | 4 | 16 |
| 16 | மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி | 4 | 16 |
| 17 | கலைசைச்சிலேடை வெண்பா | 4 | 16 |
| 18 | சிங்கைச் சிலேடை | 4 | 16 |
| 19 | இங்கித மாலை | 5 | 20 |
| 20 | திருவரங்கத்து மாலை | 4 | 16 |
| 21 | சோணசைல மாலை | 4 | 16 |
| 22 | பெரியநாயகியம்மை திருவிருத்தம் | 1 | 4 |
| 23 | மதுரை மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை | 2 | 8 |
| 24 | சிதம்பர மும்மணிக்கோவை | 1 | 82 |
| 25 | நால்வர் நான்மணி மாலை | 4 | 25 |
| 26 | திருவாரூர் நான்மணி மாலை | 4 | 30 |
| 27 | செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் | 4 | 16 |
| 28 | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் | 4 | 16 |
| 29 | அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் | 4 | 16 |
| 30 | மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் | 4 | 16 |
| 31 | திருவிடைமருதூருலா | ... | 46 |
| 32 | தஞ்சைப் பெருவுடையாருலா | ... | 40 |

| தொடர் எண். | நூற் பெயர். | செய்யுள் எண். | அடிகளின் எண். |
|---|---|---|---|
| 33 | திருவெங்கையுலா | ... | 20 |
| 34 | இராசராச சோழனுலா | ... | 26 |
| 35 | நெல்விடு தூது | ... | 40 |
| 36 | பணவிடு தூது | ... | 30 |
| 37 | நெஞ்சுவிடு தூது | ... | 32 |
| 38 | தமிழ்விடு தூது | ... | 40 |
| 39 | வருணகுலாதித்தன் மடல் | ... | 54 |
| 40 | சித்திரமடல் | ... | 40 |
| 41 | வெங்கைக்கலம்பகம் | 4 | 16 |
| 42 | மதுரைக் கலம்பகம் | 4 | 16 |
| 43 | காசிக் கலம்பகம் | 4 | 16 |
| 44 | அழகர் கலம்பகம் | 4 | 16 |
| 45 | சமுத்திர விலாசம் | 4 | 16 |
| 46 | சந்திர விலாசம் | 4 | 16 |
| 47 | முக்கூடற்பள்ளு | 3 | 12 |
| 48 | கதிரைமலைப் பள்ளு | 3 | 12 |
| 49 | சிதம்பரச் செய்யுட் கோவை | 3 | 12 |
| 50 | திருக்குற்றாலக் குறவஞ்சி | 3 | 15 |
| 51 | சரபேந்திரபூபால குறவஞ்சி | 1 | 16 |
| 52 | கலிங்கத்துப்பரணி | 20 | 40 |
| 53 | சீகாழிக்கோவை | 9 | 36 |
| 54 | வெங்கைக்கோவை | 9 | 36 |
| 55 | கோடீச்சுரக் கோவை | 9 | 36 |
| 56 | தஞ்சை வாணன் கோவை | 9 | 36 |
| 57 | அரிச்சந்திர புராணம் | 26 | 104 |
| 58 | நளவெண்பா | 20 | 80 |
| 59 | நைடதம் | 30 | 120 |
| 60 | இரகுவம்மிசம் | 34 | 136 |
| 61 | பிரபுலிங்கலீலை | 29 | 116 |
| 62 | சீகாளத்திப் புராணம் | 38 | 152 |
| 63 | திருவிடைமருதூர்த் தலபுராணம் | 50 | 200 |
| 64 | பரஞ்சோதி-திருவிளையாடற் புராணம் | 200 | 800 |
| | | | 3000 |

கடவுள் துணை

திருச்சிற்றம்பலம்

# குமரகுருபர சுவாமிகள் இயற்றிய
# திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா

பூமேவு செங்கமலப் [1]புத்தேளுந் தேறரிய
[2]பாமேவு [3]தெய்வப் பழமறையும் —[4]தேமேவு
[5]நாதமுநா தாந்த முடிவு [6]நவைதீர்ந்த
[7]போதமுங் காணாத போதமாய்—[8]ஆதி நடு
அந்தங் கடந்த[9]நித்தி யானந்த போதமாய்ப்
[10] பந்தந் தணந்த பரஞ் சுடராய்—வந்த
[11]குறியுங் குணமுமொரு [12]கோலமுமற் றெங்குஞ்
செறியும் [13]பரம சிவமாய் — அறிவுக்
[14]கனாதியா [15]யைந்தொழிற்கு மப்புறமா யன்றே
[16]மனாதிகளுக் கெட்டா வடிவாய்த்—[17]தனாதருளின்
[18]பஞ்சவித ரூப பரசுகமா யெவ்வுயிர்க்கும்
[19]தஞ்சமென நிற்குந் தனிப்பொருளாய்—[20]எஞ்சாத

---

1 நான்முகக் கடவுள்.

2 பாடல் வடிவில் அமைந்த; பரவுதல் பொருந்திய என்றலுமாம்.

3 வேதம்; "கடவுட் பழம்பாடல்" என்பர் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில்.

4 தெய்வத்தன்மை.

5 நாத தத்துவமும்.

6 குற்றம்.

7 அறிவு. புத்தேளும் மறை முதலிய நான்கும் காணாத போதமாய் என்க.

8 முதல் இடை இறுதி யென்பவற்றைக் கடந்த; தோற்றம் நிலை கேடுகள் இல்லை யென்றபடி. "ஆதி நடு அந்தமிலா அளவில் சோதி" (சிவஞான சித். 2) "ஆதியனேயந்த நடுவாகியல்லானே" (திருவாச.) "மூலமு நடுவு முடிவு மிகந்து, கால மூன்றுங் கடந்த கடவுள்" (பட்டின-திருவிடைமருதூர்) என்னும் அருட்பெரியார் திருவாக்குக்கள் ஈண்டு நோக்கற் பாலன.

9 உண்மை இன்பம் அறிவு ஆகி; "உண்மையறிவானந்த வுருவாகி" என்பர் பரஞ்சோதியார். இவை சச்சிதானந்தம் எனப்படும்.

10 இயல்பாகவே பாசங்களின் நீங்கிய.

11 பெயர்.

12 உருவம்.

13 முருகக் கடவுளுக்கும் சிவபெருமானுக்கும் வேற்றுமையின்மையின் இப்பெயராற் கூறினார்; இங்ஙனமே சிவபெருமானுக்குரிய அடை மொழிகள் பல முருகக்கடவுளுக்கு ஏற்றிக் கூறப்படுதலை இந்நூலுட் பின்னுங் காணலாம்.

14 ஆதியற்றது; எல்லைக்குட் படாதது என்பது கருத்து.

15 படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்பன.

16 உள்ளம் முதலிய கருவிகளுக்கு.

17 தன்னுடைய.

18 அயன் அரி அரன் மகேசன் சதா சிவன் என்னும் ஐவர் திருவுருவங்கள்.

19 பற்றுக்கோடு.

20 குறையாத நிறைவு. "குறைவிலா நிறைவே" என்றார் ஆளுடைய அடிகளார்.

பூரணமாய் [21]நித்தமாய்ப் போக்குவர வும்[22]புணர்வும்
காரணமு மில்லாக் [23]கதியாகித்—தாரணியில்
[24]இந்திரசா லம்புரிவோன் யாவரையுந் தான்மயக்கும்
[25]தந்திரத்திற் சாராது சார்வது போல் — முந்தும்
[26]கருவின்றி நின்ற கருவா [27]யருளே
உருவின்றி நின்ற வுருவாய்த் — [28]திரிகரணம்
ஆகவரு [29]மிச்சை யறிவியற்ற லால்[30]இலய
[31]போக[32]வதி காரப் பொருளாகி — ஏகத்
[33]துருவு மருவு முருவருவு மாகிப்
[34]பருவ வடிவம் பலவாய் — இருண்மலத்துள்
மோக முறும் பல்லுயிர்க்கு முத்தியளித் தற்குமல
பாகமுற வேகடைக்கண் பாலித்துத் — தேக முறத்
தந்த வருவுருவஞ் சார்ந்த[35]விந்து மோகினிமான்
[36]பெந்த முறவே பிணிப்பித்து — [37]மந்த்ரமுதல்

---

[21] அழிவில்லதாய்.
[22] தொடர்பு. "போக்கும் வரவும் புணர்வு மிலாப் புண்ணியனே" (திருவாச.)
[23] புகலிடம்.
[24] மாயவித்தை.
[25] உபாயம். "வலிகொ ளிந்திரசாலஞ் செய்வோன்றனை மயக்காது, உலகில் மற்றுள மனிதரை மயக்குதலொப்ப" என்றூர் மருதவன புராண ஆசிரியர்.
[26] சுயம்பு; தானே தோன்றியது.
[27] அருளே உருவாயெனக் கூட்டுக.
[28] உள்ளம் மொழி மெய்கள்.
[29] இச்சா ஞானக்கிரியா சத்திகள். (இந்நூலின் 69-ம் அடிபார்க்க.)
[30] ஒன்றுதல்.
[31] துய்த்தல்.
[32] தொழில் புரிதல்.
[33] அயன் அரி அரன் மகேசன் சதாசிவன் விந்து நாதம் சத்தி சிவம் என்பவற்றுள் முன்னின்ற நான்கும் உருவத் திருமேனிகள். பின்னின்ற நான்கும் அருவத்திருமேனிகள். இடை நின்ற ஒன்றும் அருவுருவத் திருமேனி. இவற்றை நவந்தரு பேதமென்பர். "ஈசனருள் இச்சையறிவியற்றல் இன்பம் இலயமொடு போக மதிகாரமாகித், தேசருவம் அருவுருவம் உருவமாகி" (சிவஞானசி.-3.)

"சிவஞ் சத்தி நாதம் விந்து சதாசிவன் திகழும் ஈசன்
உவந்தருள் உருத்திரன்தான் மாலயன் ஒன்றி னொன்றாய்ப்
பவந்தரும் அருவநாலிங் குருவநாலுபய மொன்றாய்
நவந்தரு பேதம் ஏக நாதனே நடிப்ப னென்பர்" [ஷை சுப-164].

[34] அன்பர்களின் பக்குவத்திற்கேற்பக் கொள்ளப்படுந் திருவுருவங்கள்.
[35] இம் மூன்றனையும் முறையே சுத்த மாயை அசுத்த மாயை பிரகிருதி மாயை யென்பர்.
[36] கட்டு.
[37] மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவம் கலை என்பன.

ஆற[38]த்து வாவு மண்டத் தார்ந்தவத்து வாக்களுமுற்
கூறத் தகுஞ்[39]சிமிழ்ப்பிற் கூட்டுவித்து — மாறிவரும்
[40]ஈரிரண்டு தோற்றத் [41]தெழுபிறப்புள் யோனியெண்பான்
ஆரவந்த நான்குநூ றாயிரத்துள் —[42]தீர்வரிய
[43]கன்மத்துக் கீடாய்க் [44]கறங்குஞ் சகடமும்போற்
[45]சென்மித் துழலத் [46]திரோதித்து — வெந்[47]நிரய
சொர்க்காதி போகமெலாந் [48]துய்ப்பித்துப் பக்குவத்தால்
நற்கா ரணஞ்சிறிது நண்ணுதலும் —[49]தர்க்கமிடும்
தொன்னூற் பரசமயந் தோறு [50]மதுவதுவே
நன்னூ லெனத்தெரிந்து நாட்டுவித்து — முன்னூல்
விரதமுத லாயபல [51]மெய்த்தவத்தி னுண்மைச்
சரியைகிரி யாயோகஞ் சார்வித் — தருள்பெருகு
சாலோக சாமீப சாரூப மும்[52]புசிப்பித்
[53]தாலோகந் தன்னை யகற்றுவித்து —[54]நால்வகையாம்
[55]சத்திநி பாதந் தருதற் [56]கிருவினையும்
ஒத்துவருங் கால முளவாகிப் —[57]பெத்த
[58]மலபரி பாகம் வருமளவிற் பன்னாள்
[59]அலமருதல் கண்ணுற் றருளி — உலவா
தறிவுக் கறிவாகி யவ்வறிவுக் கெட்டா
நெறியிற் செறிந்தநிலை நீங்கிப் —[60]பிரியாக்

---

38 வழி; இவை பிண்டத்துள்ளன.
39 கட்டு.
40 நால்வகைப் பிறப்பு; முட்டை வேர்வை வித்து கரு என்பவற்றிற் பிறப்பன.
41 தேவர் முதல் தாவரம் ஈறாகக் கூறப்படுவன.
42 நுகர்ந்தாலன்றி நீங்குதல் இல்லாத.
43 வினைகளின் வயப்பட்டு.
44 காற்றாடியும் வண்டியின் சக்கரமும்.
45 பிறந்து.
46 மறைத்து.
47 நரகம்.
48 நுகர்வித்து.
49 வாதம் இடுகின்ற.
50 அவ்வச் சமய நூல்களே.
51 உண்மைத் தவத்தின் பயனாக.
52 துய்க்கச் செய்து.
53 தெளிந்த அறிவை விரிவடையச் செய்து; இதனை அலோகம் என்பதன் விகாரமாகக் கொண்டால் அறியாமையை நீக்கி யென்க.
54 மந்ததரம் மந்தம் தீவிரம் தீவிரதரம் என்னும் நால்வகைப் பக்குவங்கள்.
55 திருவருட் பதிவு.
56 இருவினை யொப்பு உண்டாகுங் காலம்.
57 கட்டு.
58 மலங்கள் கெடுதற்குரிய பக்குவநிலை.
59 சுழலுதல்.
60 பிரியாத.

[61]கருணை திருவுருவாய்க் [62]காசினிக்கே தோன்றிக்
குருபரனென் றோர்திருப்பேர் கொண்டு —[63]திருநோக்கால்
[64]ஊழ்வினையைப் போக்கி [65]யுடலறுபத் தெட்டு[66]நிலம்
ஏழு[67]மத்து வாக்க ளிருமூன்றும் — பாழாக
[68]ஆணவ மான [69]படலங் கிழித்தறிவிற்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப் — பூணும்
[70]அடிஞானத் தாற்பொருளு மான்மாவுங் காட்டிக்
கடியார் [71]புவனமுற்றுங் காட்டி — முடியாது
தேக்கு பர மானந்தத் தெள்ளமுத மாகியெங்கும்
[72]நீக்கமற நின்ற நிலைகாட்டிப் — போக்கும்
வரவு நினைப்பு மறப்பும் பகலும்
இரவுங் கடந்துலவா [73]வின்பம் — மருவுவித்துக்
[74]கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன்றுந் தாழ்சடையும்
வன்மழுவு மானுமுடன் மால்விடைமேல் —[75]மின்னிடத்துப்
பூத்த பவளப் பொருப்பொன்று வெள்ளிவெற்பில்

---

61 17, 18 ஆம் அடிகள் பார்க்க.
62 பூமியில்; உருபுமயக்கம்.
63 அருட்பார்வையால்; இதனை நயன தீட்சை யென்பர்.
64 ஈண்டுச் சஞ்சித வினைகளாம்.
65 தூலதேகக் கருவிகள் அறுபதும் சூக்கும தேகக் கருவிகள் எட்டும்.
66 ஆதாரம் ஆறும் அதற்கு மேலுள்ள சூனிய ஆகாயமும் என்ப.
67 இவை மேலே கூறப்பட்டன.
68 ஆணவமலம்.
69 கண்ணொளியை மறைப்பதொரு நோய்.
70 பதிஞானத்தால்.
71 உலகம்.
72 இடையறவின்றி. 51-56-ஆம் அடிக் கருத்துக்களை

"நின், தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப் படலங் கீறித் தூய
ஞான நாட்டம் பெற்றபின் யானும்
நின்பெருந் தன்மையுங் கண்டேன் காண்டலும்
என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன்
நின்னிலை யனைத்தையுங் கண்டேன்"

எனப் பட்டினத்துப் பிள்ளையார் கூறியது கொண்டு தெளிக.

73 வீட்டுலக இன்பம்; இதனை, "பொய்யில் புலவர் புரிந்துறையும் மேலுலகம், ஐயமொன் றின்றி யறிந்துரைப்பின் = வெய்ய, பகலின் றிரவின்று பற்றின்று துற்றின், றிகலின் றிளிவரவு மின்று" (பு-வெ-மா-காஞ்சிப் பொது-4.) என்பதனுலுணர்க.
74 பிரளயாகலர்.
75 மின்னற் கொடியொன்று இடப்பக்கத்தே தோன்றிய; மின் என்றது உமாதேவியாரை; முருகக்கடவுளும் சிவபிரானும் வேறல்லராகலின் இங்கு இவ்வாறு கூறினர்.

வாய்த்தனைய தெய்வ வடிவாகி —[76]மூத்த
கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள்செய் துண்ணின்
[77]றொருமலத்தார்க் கின்ப முதவிப் — பெருகியெழு
[78]மூன்றவத்தை யுங்கழற்றி[79]முத்தருட னேயிருத்தி
ஆன்றபர முத்தி யடைவித்துத்—தோன்றவரும்
[80]யானெனதென் றற்ற விடமே திருவடியா
மோனபரா னந்த முடியாக — ஞானம்
திருவுருவா விச்சை செயலறிவு கண்ணா
அருளதுவே செங்கை யலரா —இருநிலமே
சந்நிதியா நிற்குந் தனிச்சுடரே [81]யெவ்வுயிர்க்கும்
[82]பின்னமற நின்ற பெருமானே.

---

குமரகுருபரர் இயற்றிய

## சகல கலாவல்லி மாலை

1. நாடும் பொருட்சுவை சொற்சுவை [1]தோய்தர[2]நாற்கவியும்
[3]பாடும் பணியிற் பணித்தருள் வாய்[4]பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றும் [5]ஐம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே [6]சகல கலாவல்லியே.

---

[76] அநாதிகாலமாகத் தொடர்ந்த.

[77] விஞ்ஞானகலர். ஒரு மலத்தார்க்கு உண்ணின்று உதவியென்க.

[78] கேவலாவத்தை சகலாவத்தை சுத்தாவத்தை யென்பன.

[79] மலங்களினின்றும் விடுபட்டவர்.

[80] அகப்பற்றுப் புறப்பற்றுக்கள். "யான் எனதென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க், குயர்ந்த வுலகம்புகும்" என்றார் தெய்வப் புலவர்.

[81] எல்லாவுயிர்களிடத்தும்.

[82] வேறுபாடு.

1. [1] பொருந்த. [2] வெண்பா முதலியன; ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நான்கும் ஆம். [3] பாடுகின்ற பணிவிடை. [4] தாமரைத் தவிசில். [5] கூந்தலாகிய காடு. [6] எல்லாக்கலைகளும் பூத்த கொடி போல்வாள்; கலைமகள். மலரில் இருக்குங் கொடியென்றதும், மலையுங் காடும் சுமக்கும் கரும்பு என்றதும் நயமாதல் காண்க.

குருபாத தாசர் இயற்றிய

## குமரேசர் சதகம்

### இறந்தும் இறவாதவர்

1. அனைவர்க்கு முபகார மாம்[1]வாவி [2]கூவமுண்
   டாக்கினோர் நீதிமன்னர்
   அழியாத தேவால யங்கட்டி வைத்துளோர்
   [3]அகரங்கள் செய்த பெரியோர்
   தனையொப்பி லாப்புதல்வ னைப்பெற்ற பேர்பொருது
   சமர்வென்ற சுத்தவீரர்
   தரணிதனி னிலைநிற்க வெந்நாளு மாறாத
   தருமங்கள் செய்தபேர்கள்
   கனவித்தை கொண்டவர்க ளோயாத கொடையாளர்
   காவியஞ் செய்த கவிஞர்
   கற்பினின் மிகுத்தவொரு பத்தினி மடந்தையைக்
   கடிமணஞ் செய்தோர்களிம்
   மனிதர்கள் சரீரங்கள் போகினுஞ் சாகாத
   மனிதரிவ ராவரன்றோ
   மயிலேறி விளையாடு குகனே[4]புல் வயனீடு
   மலைமேவு குமரேசனே.

### பெரியோரியல்பு

௨. அன்னதா னஞ்செய்தல் பெரியோர்சொல் வழிநிற்றல்
   [1]ஆபத்தின் வந்தபேருக்
   [2]கபயங் கொடுத்திடுத லில்லினஞ் சேர்ந்திடுத
   லாசிரியன் வழி நின்ற[3]வன்
   சொன்னமொழி தவறாது[3]செய்திடுதல் தாய் தந்தை
   துணையடி [4]யருச்சனை செயல்
   சோம்பலில் லாமலுயிர் போகினும் வாய்மைமொழி
   தொல் புவியி னாட்டியிடுதல்

---

1. [1] குளம். [2] கிணறு. [3] அந்தணர் இருக்கை. "மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும் மாசறு சீர்ப்,பெண்ணினுட் கற்புடையாட் பெற்றானும் - உண்ணுநீர் கூவல் குறைவின்றித் தொட்டானு மிம்மூவர், சாவா வுடம்பெய்தினார்" என்பது திரிகடுகம். [4] புதுக்கோட்டையைச் சார்ந்த ஒரு சிவத்தலம்.

2. [1] மிகுவருத்தம். [2] அச்சமின்மை. [3] அவ்வாசிரியன். [4] வழிபாடு இயற்றல்.

மன்னரைச் சேர்ந்தொழுகல் கற்புடைய மனைவியொடு
வைகினுந் [5]தாமரையிலை
மருவுநீ ரெனவுறுத லிவையெலா மேலவர்த
மாண்பென் றுரைப்ப ரன்றே
வன்னமயின் மேலி[6]வர்ந் திவ்வுலகை யொருநொடியில்
வலமாக வந்தமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

திருநீறு அணியும் முறைமை

3. பத்தியொடு சிவசிவா வென்றுதிரு நீற் றைப்
[1]பரிந்துகை யாலெடுத்துப்
பாரினில் விழாதபடி [2]யண்ணாந்து செவி யொடு
பருத்தபுய மீதி லொழுக
நித்த மூ விரல்களா னெற்றியி னழுந்தவுற
நினைவாய்த் தரிப்பவர்க்கு
நீடு வினை யணுகாது தேகபரி சுத்தமா
நீங்காம னிமலனங்கே
சத்தியொடு நித்தம் விளை யாடுவன் முகத்திலே
[3]தாண்டவஞ் செய்யுந்திரு
சஞ்சலம் வராதுபர கதி யுதவு [4]மிவரையே
சத்தியுஞ் சிவனென்னலாம்
மத்தினிய மேருவென வைத்தமு தினைக் கடையு
மான்மருக னைமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

---

[5] "தாமரை யிலைத்தண்ணீர்போல் சகத்தொடுங் கூடிவாழ்வார்" என்றார் பிறர். [6] ஏறி.

3. [1] விரும்பி. [2] மேல் நோக்கி. [3] திருமகள் ஆடல்புரிவள் என்க. [4] இங்ஙனம் தரிக்கும் இருபாலாரை. "சத்தியுஞ் சிவனுமெனலாம்" எனப்பாடம் இருப்பின் நலம்.

### படிக்காசுப் புலவர் இயற்றிய
### பழமொழி விளக்கம் என்னும்
## தண்டலையார் சதகம்

1. வரமளிக்குந் தண்டலையார் திருக்கோயி லுட் புகுந்து
வலமாய் வந்தே
ஒரு விளக்கா யினும் பசுவி னெய்புடன்தா
மரை நூலி னொளிர வைத் தால்
கரு விளக்கும் பிறப்புமில்லை யிறப்புமில்லை
கைலாசங் [1]காணி யாகுந்
திரு விளக்கிட் டார்த மையே தெய்வ மளித்
திடும்வினையுந் தீருந் தானே.

2. [1]சங்கை யறப் படித்தாலுங் கேட்டாலும்
பிறர்க்[2]குறுதி தனைச்சொன் னாலும்
அங்கணுல கினிற்சிறியோர் தாமடங்கி
நடந்துகதி யடைய மாட்டார்
திங்களணி சடையாரே தண்டலையா
ரேசொன்னேன் சிறிது காலம்
கங்கையிலே படர்ந்தாலும் பேய்ச் சுரைக்காய்
நல்லசுரைக் காயா காதே.

3. செங்காவி மலர்த்தடஞ்சூழ் [1]தண்டலை நீ
ணெறி யேநின் செயலுண் டாகில்
[2]எங்காகி லென்னவவ ரெண்ணிய வெல்
லாமுடியு [3]மில்லை யாகில்

---

1. [1] உரிமை. "விளக்கிட்டால் வினை தீரும்" என்பது பழமொழி. "விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்" என்றார் அப்பர்.

2. [1] சந்தேகம். [2] உறுதிப் பொருள்களை உபதேசித்தாலும். "இடம்பட மெய்ஞ் ஞானம் கற்பினும்" என்னும் நாலடிச் செய்யுள் இக்கருத்துள்ளது.

3. [1] தண்டலைநீள் நெறியென்னும் தலத்திலுறையும் இறைவனே. [2] எங்கிருந்தாலென்ன. [3] உன் செயல் இல்லையானால்.

பொங்காழி சூழுலகி[4] லுள்ளங்கால்
வெள்ளெலும்பாய்ப் போக வோடி
ஐங்காதம் போனாலுந் தன்பாவந்
தன்னுடனே யாகுந் தானே.

4. மானென்று வடிவெடுத்து மாரீசன்
போய்மடிந்தான் மானே யென்று
தேனென்று மொழிபேசிச் சீதைதனைச்
சிறை யிருக்கத் திருடிச் சென்றான்
வானென்று மரசிழந்தான் தண்டலையார்
திருவுளத்தின் மகிமை காணீர்
தானென்று நினைக்கையிலே தெய்வமொன்று
நினைப்பதுவுஞ் சகசந் தானே.

கம்பர் பாடிய

## சரசுவதி யந்தாதி.

1. பாதாம் புயத்திற் பணிவார் தமக்குப் பலகலையும்
[1]வேதாந்த முத்தியுந் தந்தருள்[2]பாரதி வெள்ளிதழ்ப்பூஞ்
சீதாம் புயத்தில் இருப்பா ளிருப்பவென் சிந்தையுள்ளே
யேதாம் புவியிற் பெறலரி தாவ தெனக்கினியே

---

[4] உள்ளங்கால்......போக" "உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்ற வொருகோடி வெள்ளங் காலங்கழித்து விட்டோமே" என்றார் பிறரும். "ஐங்காதம் போனாலுந் தன்பாவந் தன்னுடனேவரும்" என்பது பழமொழி.

4. 'நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும்' என்பது பழமொழி. "ஒன்றை நினைக்கின் அது வொழிந்திட்டொன்றாகும்" என்ற நல்வழிச் செய்யுளை ஈண்டு நினைக்க.

1. [1] மறையின் முடிவாகிய உபநிடதங்களிற் கூறப்படும் வீடு. [2] கலைமகள். என் சிந்தை யுள்ளே யிருப்ப எனவும், இனி எனக்கு புவியில் பெறல் அரிது ஆவது ஏது ஆம் எனவுங்கூட்டுக. யான் சரசுவதி தேவியை இடைவிடாது தியானித்து அவளுடைய திருவருளைப் பெற்றேனாதலால் இனி எனக்கு எல்லாப் பேறுகளும் எளிதிற்கைகூடும் என்பதாம்.

2. [1]ஒருத்தியை [2]யொன்றுமி லாவென் மனத்தி னுவந்து[3] தன்னை
யிருத்தியை வெண்கம லத்திருப் பாளை[4]யெண்
ணெண்கலைதோய்
கருத்தியை [5]யைம்புல னுங்[6]கலங் காமற் கருத்தை யெல்லாந்
திருத்தியை யான்மற வேன்[7]திசை நான்முகன் தேவியையே

குகை நமச்சிவாய தேவர் இயற்றிய

## அருணகிரி யந்தாதி.

1. [1]காய நெகிழா முன் கண்கள் [2]இருளாமுன்
வாயி லுள்ள பல்லும் வழுவாமுன்—காயம் பார்த்
தோடிநமன் வாராமுன் உள்ளமே [3]சோணகிரி
நாடி [4]நம வென்றே நட

2. [1]அச்செல்லாம் [2]ஒன்று அதிலே [3]யிருவகையா
வைச்சதென்ன சோணகிரி வள்ளலே—[4]இச்சையிலே
வாழ்ந்துசில பேரிருக்க வாய்புதைத்துக் கைகட்டித்
தாழ்ந்துசில பேரிருக்கத் தான்

---

2. [1] ஒப்பற்றவளை. [2] யாதொரு நல்லெண்ணமுமில்லாத. [3] தன்னை வீற்றிருக்கச் செய்தவளை; அடியவர்க்கு எளியளாந்தன்மை கூறியபடி. [4] அறுபத்துநான்கு கலைஞானமும் நிறைந்த மனத்தை யுடையவளை. [5] ஈண்டு மெய்வாய் முதலிய ஐம்பொறிகளை யுணர்த்தும். உம்மை முற்றுப்பொருளது. [6] தீயபுலன்களிற் செல்லாமல். [7] நான்கு திக்கையும் நோக்கிய நான்கு முகங்களையுடைய பிரமன்.

1. [1] உடம்பு தளர்ந்து வருத்தம் அடையாததற்கு முன்னும். [2] ஒளிகுன்று முன்னும். [3] திருவண்ணுமலை; நெருப்பின் வடிவாய் முளைத்த சிவந்தமலையாதலின் இப்பெயர் பெற்றது. [4] நமவென்று—வணக்கமென்று கூறி.

2. [1] உடல் உறுப்புக்களின் அமைப்பு எல்லாம். [2] ஒரு படித்தாகப்படைத்து. [3] அவ்வகை பின்இரண்டடிகளிற் கூறப்படுவன. [4] தாம் விரும்பியவாறே. வள்ளலே இருக்க இருக்க வைச்சது என்ன என்க. இறைவன் வள்ளற்பெருமானாயினும் மக்களுடைய ஆகூழ் உண்மையும் இன்மையுமே அவ்வகைக்குக் காரணமென்பதாம். “கற்பகத்தைச் சேர்ந்தார்க்குக் காஞ்சிரங்கா யீந்ததேல், முற்பவத்தில் செய்த வினை”. “இலர்பல ராகிய காரணம் நோற்பார், சிலர்பலர் நோலா தவர்” என்னும் பொருளுரைகள் ஈண்டுக்கருதத்தக்கன.

3. மாண்டு பிறந்துழலும் [1]மாப்பிணியை நீக்குதற்கு
வேண்டு மருந்துனக்கு வேண்டினல்—ஈண்டுலகில்
[2]வீணேசர் சொல்லே விரும்பாமல் நெஞ்சமே
சோணேச னென் [3]றொருகாற் சொல்

அபிராமி பட்டர் இயற்றிய

*அபிராமி யந்தாதி.

1. மனிதருந் தேவரு மாயா முனிவரும் வந்து [1]சென்னி
குனிதருஞ் சேவடிக் [2]கோமள மேகொன்றை [3]வார்சடைமேல்
[4]பனிதருந் திங்களும் பாம்பும் [5]பகீரதி யும்படைத்த
[6]புனிதரு நீயுமென் [7]புந்தியெந் நாளும் பொருந்துகவே

2. [1]கண்ணிய துன்புகழ் கற்பதுன் னாமங் கசிந்து [2]பத்தி
பண்ணிய துன்னிரு [3]பாதாம் புயத்திற் பகலிரவா
நண்ணிய துன்னை [4]நயந்தோ ரவையத்து நான்முன் செய்த
புண்ணிய மே[5]தென்னம் மேபுவி யேழையும் [6]பூத்தவளே

---

3. [1] வீடு அடைதற்குத்தடையாய் உயிரைப் பிணித்து நிற்றலின் பிறப் பிறப்புக்கள் பிணியெனவும், ஏனைய உடற்பிணியின் வேறென்பது தோன்ற மாப்பிணி யெனவுங் கூறப்பட்டன. [2] பயனற்ற ஏனைத்தேவர்கள். [3] நினைப்பளவில் முத்தி நல்குந்தலத்து இறைவர் ஆதலின், அவர் பெயரைச்சொல்லவே அப்பிணி நீங்குதல் உறுதி யென்பார் "ஒரு காற் சொல்" என்றார்.

*உமையம்மை.

1. [1] தலைவணங்கும். [2] பேரழகுடையவளே. [3] நீண்ட. [4] குளிர்ச்சி. [5] கங்கை. [6] தூயவராகிய இறைவரும். [7] அறிவு; உள்ளமும் ஆம்.

2. [1] கருதியது. [2] அன்பு செலுத்தியது. [3] திருவடித்தாமரையில். [4] விரும்பிய அடியார் கூட்டத்தில்; பகல் இரவு ஆக நண்ணியது என்க. [5] என்தாயே. [6] படைத்தவளே. முன்செய்த நல்வினையுடையார்க்கன்றி இம்மையில் இறைவியின் புகழைக் கருதுதல் முதலியன இயலா என்பதாம்.

3. [1]விழிக்கே யருளுண் [2]டபிராம வல்லிக்கு வேதஞ் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ் நரகக்
குழிக்கே யழுந்துங்[3]கயவர்தம் மோடென்ன [4]கூட்டினியே

4. நன்றே வருகினுந் தீதே விளைகினு நா[1]னறிவ
தொன்றேயு மில்லை யுனக்கே [2]பரமெனக் குள்ள[3]வெல்லாம்
[4]அன்றே யுனதென் றளித்துவிட் டேனழி யாதகுணக்
குன்றே யருட்கட லே[5]யிம வான்பெற்ற கோமளமே

நேற்குன்றவாணமுதலியாரியற்றிய

## திருப்புகலூரந்தாதி.

1. நின்[1]னகத் தைப்பணிந் தேத்தா [2]தெடுத்தவ னீண்முடிதாட்
[3]பொன்னகத் தைக்கொண் ட[4]டர்த்தவ னேபுக ழூரரசே
[5]பன்னகத் தைப்[6]படுத் [7]தோதத்தின் மேவுவர் பல்சமயஞ்
சொன்ன[8]கத் தைப்பழித் தைந்தெழுத் தோதுமெய்த்
தொண்டர்களே

---

3. [1] கண்களினிடத்தே. [2] பேரழகுடைய பூங்கொடிபோல்வாளாகிய அம்பிகைக்கு. [3] கீழ்மக்கள். [4] உறவு.

வல்லிக்கு விழிக்கு அருளுண்டெனவும், எமக்கு வழிபட நெஞ்சுண்டு எனவுங் கூட்டுக. விழிக்கே என்பது முதலாக முதற்கண் உள்ள குவ்வுருபு நான்கும் மயக்கம்.

4. [1] அறிந்து செய்யத்தக்கது. [2] பாரம். [3] உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும். [4]ஆட்கொண்ட அந்நாளே. [5] மலையரசன்.

"அன்றே யென்றன் ஆவியும் உடலும் உடைமை யெல்லாமுங், குன்றே யனையா யென்னையாட் கொண்ட போதே கொண்டிலையோ, இன்றோ ரிடையூ றெனக்குண்டோ எண்டோள் முக்கண் எம்மானே, நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ விதற்கு நாயகமே" என்னும் ஆளுடைய அடிகள் அருட்பாடல் ஈண்டு நோக்கத்தக்கது.

1. [1] கைலைமலையை. [2] இராவணன். [3] அழகிய பெருவிரல் நகத்தை. [4] துன்புறுத்தியவனே. [5] (ஆதிசேடனாகிய) பாம்பை. [6] படுக்கையாகப் பரப்பி. [7] பாற்கடலில். [8] பிதற்றுரைகளை. தொண்டர் ஓதத்தில் மேவுவர்; திருமால் பதவியை யெய்துவரென்க.

2. நிலா[1]வம்[2]ப ராவிதழ்க் கொன்றைவைக் குஞ் சடை நின் மலனே
[3]யிலாவம்ப ரா[4]வியற் றென்புக லூரவென் றேத்துதற்குக்
[5]கலாவம்ப[6]ராவி கவர்கின்ற கூற்றெனக் காதை[7]யடர்ந்
துலா [8]வம் ப[9]ராவிக் [10]கழிக்கின்ற[11]வா லின்றென்
னு[12]ள்ளத்தையே.

3. என்னையன் பா[1]லடி த்தொண்டுகொண் டோன்புக லூர [2]னில்லா
வன்னையன் [3]பால னருந்[4]தமிழ்ப் பாவ னறுமுகத்தோன்
றன்[5]னையன் [6]பா[7]லணங் காளநின் றோனடி [8]தாழ்குலத்துப்
[9]பின்னையன் பாலரி தாமெளி தாமன்பர் பேதைமைக்கே.

4. கெட்ட[1] விருப்பு மனமே யுனக்[2]கொன்று கேண்மடவார்
[3]துட்ட விருப்பு[4] மெய் யென்றுகொள் ளாது சுடர்ப்பவளம்
[5]விட்ட விரு[6]ப்பு வளைபுக லூரரை [7]மேவு[8]நமக்கு
இட்ட விருப்புச் சிவலோக மாக்குவ ரிப் பொழுதே.

---

2. [1] நீர்; கங்கை. [2] பாம்பு. [3] இல்லாத ஆடையையுடையவனே; திக்காடையுடுத்தவன் என்பது கருத்து. [4] பெருமை பொருந்திய. [5] கற்றுக்கொள்ளாத வீணர்களுடைய. [6] உயிர். [7] நெருங்கியுலாவும். [8] (என்னாற்காணப்பட்ட நங்கையின் கண்களாகிய) பாணங்கள். [9] அராவுதல்செய்து; தூளாக்கி. [10] குறைக்கின்றன. [11] அசை. [12] மனமாகிய இரும்பை. இது தலைவன் பாங்கனுக்கு உற்றது உரைத்தல் என்க.

3. [1] தன் திருவடிக்குத்தொண்டு செய்யும்படி ஆக்கிக்கொண்டவன். [2] தாயில்லாதவன். [3] ஆளுடைய பிள்ளையார். [4] (தேவாரமாகிய) தமிழ்ப் பாசுரங்களையுடையவன். [5] தந்தை. [6] இடப்பாகத்தில். [7] உமையம்மை. [8] ஆயர்குலத்துப்பிறந்த. [9] நப்பின்னைப் பிராட்டியையுடைய திருமாலிடத்து. அடி, பின்னையன்பால் அரிதாம் அன்பர் பேதைமைக்கு எளிதாம் என்க.

4. [1] இரும்புபோலும் கடுமையான நெஞ்சே. [2] ஒரு செய்தி சொல்லுகிறேன் அதைக் கேட்பாயாக. [3] பொல்லாத ஆசையை. [4] உண்மையென்று. [5] இடையிட்டு ஒளி வீசுகின்ற. [6] கடல். [7] அடைவாய். [8] நமக்கு விருப்பமான இருக்கை; நமக்கென்று இடப்பட்ட இருக்கையெனலுமாம். புகலூரரை அடைந்தால் சிவலோகத்தில் இடம்பெறலா மென்பது.

பிள்ளைப்பெருமாளையங்கார் இயற்றிய

## திருவேங்கடத்தந்தாதி

1. மாயவன் கண்ணன் மணிவண்ணன் கேசவன் மண்ணும் விண்ணுந்
தாயவன் கண்ணன் கமலமொப் பான்சரத் தாலிலங்கைத்
தீயவன் கண்ணன் சிரமறுத் தான்றிரு வேங்கடத்துத்
தூயவன் கண்ணன் புடையார்க்கு வைகுந்தந் தூரமன்றே.

2. பற்றி யிராமற் கலைபோய் வெளுத்துடல் பாதியிரா
வற்றி யிராப்பகல் நின்கண் பனிமல்கி மாசடைந்து
நிற்றி யிராக மொழிச்சியைப் போல்நெடு வேங்கடத்துள்
வெற்றி யிராமனை வேட்டாய்கொல் நீயுஞ்சொல் வெண்மதியே

---

1. மாயவன்—மாயையையுடையவன். மணி—நீலமணி. தாயவன்—அளந்தவன். கண் நல்கமலம் ஒப்பான் என்க. தாமரைக்கண்ணன் என்றபடி. தீய—கொடிய. வன்கண்ணான்—கண்ணோட்டமில்லாத இராவணன். தூயவன்கண்—புனிதனாகிய திருமாலிடத்து. திருவேங்கடமுடையான் பக்கல் அன்புசெய் தொழுகுவார்க்கு மிக எளிதில் வைகுந்தம் கிடைக்கு மென்பதாம்.

2. இது தலைவனைப்பிரிந்த தலைவியின் வருத்தங்கண்டு ஆற்றாளான தோழி சந்திரனை நோக்கி இரங்கிக்கூறல்.

இச்செய்யுளில் சிலேடையுவமையணி அமைந்துள்ளது.
தலைவிக்குக் கூறுங்கால்—பற்றியிராமை—விரகதாபத்தால் ஓரிடத்தும் நிலைகொள்ளாமை. கலைபோதல்—ஒளி குறைதல்; அல்லது ஆடை சோர்தல். வெளுத்தல்—நிறம் மாறுதல். உடல் பாதியிராவற்றுதல்—உடம்பு முன் அளவிற்பாதியும் இல்லாமல் மெலிதல். இராப்பகல் கண்பனிமல்குதல்—அல்லும் பகலும் கண்ணீர் பெருகப் புலம்புதல். மாசு அடைதல்—நீராடாமையாலும் தரையிற் புரளுவதாலும் உடலில் தூசி படிந்திருத்தல். உபமேயமாகிய சந்திரனுக்கு—ஓரிடத்தில் நில்லாமல் எப்பொழுதும் வானத்தில் உலாவுதல், இருட்பக்கத்தில் நாளடைவிற் கலைகுறைதல், இயற்கை வெண்ணிறம், உடல் தேய்ந்து போதல், எப்பொழுதும் தன்னிடத்தே குளிர்ந்த கிரணங்களையுடையனாதல், களங்கமுடைமை என்பன கொள்க. நிற்றி—நிற்கின்றாய். இராக மொழிச்சி—இசைப் பாட்டைப்போலும் சொற்களையுடைய தலைமகள். இராமன்—இராமனாக அவதரித்த திருமால்.

3\. பழுத்தெட்டி போன்ற நடுச்செல்வர் பின்சென்று
பல்செருக்காற்
கொழுத்தெட் டினையள வெண்ணமற் றீர்குவ டேறிமந்தி
கழுத்தெட்டி யண்டர் பதிநோக்கும் வேங்கடக் காவலனை
யெழுத்தெட்டி னாலெண்ணி யேத்தீர் பரகதி யேறுதற்கே.

4\. பேரானைக் கோட்டினைப் பேர்த்தானை வேங்கடம்
பேணுந்துழாய்த்
தாரானைப் போதனைத் தந்தானை யெந்தையைச் சாடிறப்பாய்ந்
தூரானை மேய்த்துப்புள் ளூர்ந்தானைப் பஞ்சவர்க்
குய்த்துநின்ற
தேரானை நான்மறை தேர்ந்தானைத் தேருநுந் தீதறுமே.

---

3\. பழுத்த எட்டி—பழுத்த எட்டி மரம். நடுச்செல்வர்—இடைக்காலத்தேவந்த செல்வத்தையுடையவர். எள்தினை என்பன சிறுமைக்கு எல்லையாக எடுத்துக்காட்டப்பட்டன. குவடு—சிகரம். மந்தி—பெண்குரங்கு. கழுத்து எட்டி—கழுத்தைத்தூக்கி; அண்ணாந்து. அண்டர்பதி—தேவருலகம். எழுத்து எட்டினால்—எட்டெழுத்தாலாய மந்திரத்தால். எண்ணி ஏத்தீர்—நினைந்து துதியுங்கள். எண்ணம் அற்றீர் ஏறுதற்கு எண்ணி ஏத்தீர் என்க.

4\. பேர்ஆனை—பெரிய குவலயா பீடம் என்னும் யானை. பேர்த்தான்—பெயர்த்தெடுத்தவன். போதனைத்தந்தான்—பிரமனைப் படைத்தான். சாடு இற பாய்ந்து—சகடாசுரன் முறியும்படி தாவியுதைத்து. ஊர் ஆனை—ஆயர் பாடியிலுள்ள பசுக்களை. புள்—கருடன். பஞ்சவர்—ஈண்டு அர்ச்சுனன். தேரும்—அறிந்து துதியுங்கள். இச்செய்யுளில் பேரானை பேர்த்தானை யென்பன முதலாக வந்துள்ளவை, எதிர் மறையும் உடன் பாடுமாய் ஒன்றுக்கொன்று முரண்படுவதாகத் தோன்றினும் பொருள் கொள்ளுமிடத்து முரணின்றி முடிதலால் முரண் விளைந்தழிவணியாம்.

சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய

## பழமலை யந்தாதி

1. மாசி யதிகந் துறந்தார் மகிழ்குன்றை மாநகரோ
காசி யதிகங் கொலோவென்பி ராயினக் காசி யெனப்
பேசி யதிகந் தகன்றிருந் தான்பரன் பேரடலை
பூசி யதிகம் பரனீங்கி லானிப் புரியினையே.

2. நற்றவ ராக மறையவ ராகவிந் நானிலத்தி
லற்றவ ராக மனமுடை யார்க்கன்றி யச்சமற
வுற்றவ ராக மறியா தொளித்தநின் னொண் பதங்கள்
பற்றவ ராகம லாலயன் போற்றும் பழமலையே

---

1. அதிகம் துறந்தார்—பற்றறத்துறந்தவர்களும். மாசி மகிழ்— திருவிழாக் காட்சியின் பொருட்டு மாசித்திங்கள் வரவை விரும்பும். குன்றைமாநகரோ—திருமுது குன்றமென்னுந் திருப்பதி உயர்ந்ததோ. என்பிராயின்—என்று கேட்பிராயின். உலகீர் என்பது வருவிக்க. காசியெனப் பேசியது—காசி யென்று நீர் சொல்லிய அத்திருப்பதியை. பரன் இகந்து அகன்று இருந்தான் என்க. அடலை —திருநீறு. திகம்பரன்—திக்காடையுடுத்தவன். இப்புரியினை — விருத்த காசி என்னும் இம்முது குன்றநகரை.

திவோதானன் என்னும் அரசன் கருத்துப்படி இறைவன் அக்காசியினின்றும் நீங்கியிருந்தான் என்பது வரலாறு. காசியினும் முதுகுன்றம் உயர்ந்தது என்பதற்குக் காரணங்காட்டப்பட்டது.

2. அராகம் அற்றமனம்—மனைவி மக்கள் பொருள் என்னும் மூவகைப்பற்று நீங்கிய உள்ளம். உற்றவர்—பிற உயிர்கட்கு ஊறுபாடு விளைப்போருடைய. ஆகம் அறியாது ஒளித்த—உடம்பின்கணிருந்தும் அவர்க்குப் புலப்படாமல் மறைத்திருந்த. பற்றவரா—அடைதற்கு எட்டா. கமல ஆலயன்—பிரமன். பழமலையே—பழமலையப்பரே. பழமலையே நின் ஒண்பதங்கள் அராகம் அற்றமனமுடையார்க்கு அன்றி நல்தவராக மறையவராக அவர்கட்குப்பற்றவரா எனக் கூட்டிமுடிக்க.

3. கொல்லைக் குறவரை வாயனை யார்கரிக் கோட்டை விளை
நெல்லைக் குறவரை யாதுகொள் காளத்தி நேயரைவான்
றில்லைக் குறவரை நம்முது குன்றரைச் சேர்வலென் றூர்
எல்லைக் குறவரை மாத்திரைக் கேநல மீகுவரே.

4. வேதிய வாவி தனக்காவி யாகிய வித்தகபெண்
பாதிய வாவி மலர்த்தேன் பெருகும் பழமலை வாழ்
சோதிய வாவி வருவிடைப் பாகநின் தொண்டருறு
நீதிய வாவி யவரையென் றோசென்று நேர்குவனே.

யாழ்ப்பாணத்து நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர் இயற்றிய

## * மறைசை யந்தாதி

1. கருந்தாதை யன்ன கயவர்தம் மீதிற் கவிதை சொல்லி
வருந்தாதை யானனன் வேதா ரணியன்வை வேற்குகனைத்
தருந்தாதை தெய்வ மணங்கமழ் சேவடித் தாமரைமேற்
பொருந்தாதை யோநினை வில்லாவென் சித்தப் பொறிச்
சுரும்பே.

---

3. குறவரை வாய் அனையார்—குறவரைக் கணவராகப் பெற்ற கொடிச்சியர். கொல்லை விளை நெல்லை எனக்கூட்டுக. குற—குற்றுதற்கு: குற்ற என்பது இடைக் குறைந்து நின்றது. கரிக்கோட்டை வரையாது கொள்காளத்தி—யானைக் கொம்புகளை நீக்காது உலக்கையாகக் கொள்ளுதற்கிடமான திருக்காளத்தி மலையின் கண். தில்லைக்கு உறவரை—சிதம்பரதலத்தில் உறவாயிருப்பவரை. சேர்வல் என்று—சேர்ந்து வணங்குவேனென்று. ஊர் எல்லைக்கு உற—ஊரின் எல்லையையுற்றால். அரைமாத்திரைக்கே—அரைநொடிப் பொழுதிற்குள்ளாகவே. தில்லைக்கு, எல்லைக்கு, மாத்திரைக்கு என்பன உருபுமயக்கம்.

4. ஆவிதனக்கு ஆவியாகிய—உயிர்க்கு உயிராய் விளங்குகின்ற. பெண்பாதிய—உமையொரு கூறனே. வாவி—நீர் நிலை. சோதிய—ஒளி வடிவினனே. வாவிவரு—தாவிச்செல்லும். நீதி அவாவி—ஒழுக்கங்களை விரும்பி. அவரை—அவ்வடியார்களை.
அடியார் இணக்கம் வேண்டுமெனக்கூறியது.

* வேதாரணியம் என வழங்கும் திருமறைக்காடு.

1. கருந்தாது—இரும்பு. கயவர் — கீழ்மக்கள். வருந்தாது—யான்வருந்தாமல்' ஐஆனனன்—ஐந்துமுகங்களுடையவன். குகனை தரும்தாதை—முருகக்கடவுளைப் பெற்ற தந்தையாகிய சிவபெருமான். சித்தப் பொறிச்சுரும்பு—மனமாகிய புள்ளிகளையுடைய வண்டு. பொறி, வண்டுக்கு இயற்கை அடை; இந்திரியமுமாம். ஐயோ பொருந்தாது—அந்தோ வீழ்கின்றதில்லை. தாமரை மலரில் தேன் உண்ணச் செல்லுதல் வண்டுக்கு இயல்பாகவும் என் உள்ளமாகிய வண்டு இறைவன் திருவடித் தாமரைகளைச் சார்ந்து பேரின்பத்தேனுண்ணச் செல்லுகின்றதில்லையேயென இரங்கியவாறு.

2. புகரானை யீரு முரியானை வெண்பொருப் பானையெண்ணம்
பகரானை மேய்த்துவெண் பற்றானை யாற்கைப் பகட்டைக்
கவ்வி
யகராநை யச்சுட ராழிதொட் டாற்கரி யானைமறை
நகரானை யன்றிச் சொலாதிறைஞ் சாதென்ற னாச்சிரமே.

3. சித்திர வன்னிக ருங்கொங்கை பங்கர்செற் றார்புரமூன்
றத்திர வன்னிக் கருணைகை யார்க்கிட மாகமநூன்
மித்திர வன்னியும் பூவையுங் கேட்டு வியந்துரைக்கும்
பத்திர வன்னி மரஞ்சேர் மறைசைப் பதியகமே.

4. ஏற்றுக் கொடியர் திருமறைக் கானத்த ரேழுலகப்
பேற்றுக் கொடியத்தர் திக்காடை நாதரைப் பேணிக்கொண்
டேன்
கூற்றுக் கொடியற்கு மஞ்சே னினியிக் குவலயத்தே
தோற்றுக் கொடிவரை கேதன மாதுந் தொலைந்தனளே.

---

2. புகர்—புள்ளி. ஆனை ஈரும் உரியானை—யானையினின்றும் உரித்தெடுத்த தோலையுடையவனை. வெண்பொருப்பானை—வெள்ளிய கைலைமலையையுடையவனை. எண் அம்பகர்—எட்டுக்கண்களையுடைய பிரமனுக்கும். ஆனை—பசுக்களை. பல்தானையால்—பற்களாகிய ஆயுதத்தால். பகடு—கஜேந்திரன் என்னும் யானை. கவ்விய கரா—பற்றியிழுத்த முதலை. நைய—மடிய. ஆழிதொட்டாற்கு—சக்கரத்தை விடுத்த திருமாலுக்கும். மறை நகரானை—திருமறைக்காடு என்னுந்தலத்தில் எழுந்தருளியிருப்பவனை. நா, சொல்லாது; சிரம், இறைஞ்சாது என நிரல் நிறையாக்குக.

3. சித்திரம்—அழகு. வல்நிகரும்—சூதாடு கருவியையொத்த. கொங்கை—நகில்களையுடைய உமையம்மை. அத்திரவன்னிக்கு—அம்பின் (நுனியாகிய) நெருப்பிற்கு. அருள்—உண்ணும்படி கொடுத்த. ஆகமநூல்—சிவாகம நூல்களை. மித்திரம்—நட்பு. வன்னியும் பூவையும்—கிளிகளும் நாகணவாய்ப்புட்களும். கேட்டு—பெரியோர்கள் சொல்லக்கேட்டு. பத்திரம்—இலைகளையுடைய. மறைசைப்பதியகம்—திருமறைக்காடு என்னும் திருப்பதியாகியதலமாம். இடமாவது, மறைசைப் பதியகம் என முடிக்க. அகமே யென்பதனை மனமே என முன்னிலைப்படுத்துரைப்பினும் ஆம்.

4. எற்றுக் கொடியர்—இடபக்கொடியையுடையவர். எழுலகப் பேற்றுக்கொடி—எழுலகங்களையும் பெற்றருளிய உமாதேவியை. அத்தர்—இடப்பாகத்திலுடையவர். கூற்றுக் கொடியற்கும்—இயமனாகிய கொடியவனுக்கும். கொடிவரை கேதன மாதும்—காகத்தின் வடிவந் தீட்டப்பெற்ற கொடியையுடைய மூதேவியும். தோற்று தொலைந்தனள்—தோல்வியுற்று என்னை விட்டு நீங்கினாள். வறுமையும், இறப்பும் இல்லை என்பதாம்.

யாழ்ப்பாணத்து நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர் இயற்றிய

## * கல்வளையந்தாதி

1. பாலை வனத்தத்தைக் கியாரளிப் பாரென்று பன்னினளைம்
பாலை வனத்தடங் கார்கண்டு வெட்கும் படிவந்தமின்
பாலை வனத்தகன் ருள்கல் வளைப்பர மானந்தன்றன்
பாலை வனத்தள வும்மன்பி லாரிற் பதைபதைத்தே.

2. அரவம் புலிங்க வனற்கண்ண வென்றரி போற்றச்சிலம்
பரவம் புலிபணி கேட்பமன் ருடி யருண்மதலை
யரவம் புலியணி கோடீரன் கல்வளை யண்ணல் கண்ணே
யரவம் புலிய குணத்தா ரெனினு மவர்முத்தரே.

---

* ஓர் ஊரின் பெயர்.

1. வனம் தத்தைக்கு—அழகிய கிளிக்கு. பன்னினள்—(நேற்றுக்) கூறினுள். ஐம் பாலைவனம் தடம் கார்கண்டு—கூந்தலை நீருண்ட பெருமையாகிய மேகம் பார்த்து. மின்—மின்னற் கொடிபோன்ற நமது மகள். கல்வளைப் பரம ஆனந்தன் தன் பால்—கல்வளை யென்னும் பதியிலெழுந்தருளியுள்ள பேரின்ப வடிவினராகிய மூத்தபிள்ளையாரிடத்து. ஐவனத்து அளவும்—ஒரு மலைநெல் அளவாயினும். பதை பதைத்து—நடுநடுங்கி. மின், நெருநல் பன்னினள் இன்று அன்பிலா ரிற் பதை பதைத்து அகன்ருள். இக்குறிப்பை நேற்று உய்த்து உணர்ந்திலேன் எனப் பின் சென்ற செவிலி தன் அறிவின்மையை நொந்து இரங்கிக் கூறியது.

2. அர—அழித்தற்ருெழிலை யுடையவனே. அம் புலிங்க அனற்கண்ண—அழகிய பொறியையுடைய நெருப்புக் கண்ணையுடையவனே. அரி—திருமால். சிலம்பு அரவம் புலிபணி கேட்ப—திருவடிச் சிலம்பின் ஒலியைப் புலிப்பாதரும் பதஞ் சலியாருங் கேட்கவும். போற்றவும் கேட்கவும் மன்றின்கண் ஆடிய இறைவன் என்க. மதலை—புதல்வர். அரவு அம்புலி எனப் பிரிக்க. கோடீரன்—சடையை யுடையவன். அண்ணல்கண் நேயர்—தலைவராகிய விநாயகக் கடவுளிடத்து அன்புடையவர். அவம் புல்லியகுணத்தார்—தீமைசார்ந்த குணத்தையுடையவர். முத்தர்—சீவன் முத்தர்.

மதலையும் கோடீரனும் அண்ணலுமாகிய விநாயகர் என்க.

3. அருந்துதிக் கையமில் கற்பீந்த மேனை யசலவரை
யருந்துதிக் கைக்கு மகளாய்ப் பிறந்திடு மன்னைவிட
மருந்துதிக் கைப்புனை கூறைப் பிணகி யருள்கல்வளை
யருந்துதிக் கைக்குன்ற மேயடி யேனுன் னடைக்கலமே.

4. கும்ப னகத்திய னூலளந் தோகொற்ற வாகல்வளைக்
கும்ப னகத்திற் கனகா சுரற்செற்ற கோளரியே
கும்ப னகத்தின் சிறகரிந் தோன்றொழுங் கோன்வெற்
பின்வாய்க்
கும்ப னகத்தின் புவிதாங்கி யோகுறைந் தாய்புயமே.

---

3. அருந்துதிக்கு—வசிட்டர் மனைவியான அருந்ததிக்கு. ஐயம்—சந்தேகம். மேனை அசல அரையரும் துதிக்கைக்கு—மேனை என்பவளும் மலையரசனாகிய இமவானும் போற்றி வளர்த்தற்கு. அன்னை—தாயாகிய இறைவியும். விடம் அருந்து—நஞ்சை யுண்ட. திக்கை கூறை புனை பிணகி—திசைகளை ஆடையாக உடுத்த பிணகம் என்னும் வில்லைத்தரித்த இறைவரும். அருள்—பெற்ற. அரும் துதிக்கை குன்றமே—அருமையான துதிக்கையையுடைய மலைபோலும் விநாயகக்கடவுளே.

4. கும்பன் அகத்தியன் நூல் அளந்தோ—குடத்திற் பிறந்தவனாகிய அகத்திய முனிவன் வளர்த்த தமிழ்நூல்களை வரையறுத்து உணர்ந்தோ. கொற்றவா—தலைவனே. கல்வளை கும்பன்—கல்வளை யென்னும் தலத்தில் எழுந்தருளிய மத்தகத்தையுடையவரும். நகத்தில் கனக அசுரன் செற்ற கோளரி—நகங்களால் இரணியனைக் கொன்ற நரசிங்கமாகிய திருமாலும். எகும்பல் நகத்தின்—பறந்து செல்லும் பலமலைகளினுடைய. அரிந்தோன்—இந்திரன். கல்வளைக்கும்பனும் கோனும் ஆகிய விநாயகக்கடவுளுடைய வெற்பில் என்க. பன்னகத்தின் வாய்க்கும் புவிதாங்கியோ—ஆதிசேடன் என்னும் பாம்பின் தலையில் உள்ள பூமியைச் சுமந்தோ. குறைந்தாய்—வாடினாய். கொற்றவா, நூல் அளந்தோ புவிதாங்கியோ புயங்குறைந்தா யென்க.

இது, பாங்கன் தலைவனை உற்றதுவினாதல்.

பிள்ளைப் பெருமாளையங்கார் இயற்றிய

## திருவரங்கத் தந்தாதி

1. தாரணி தானவன் பாலிரந் தான்சங்கம் வாய்வைத் தொன்னர்
தாரணி தானவஞ் செய்தா னரங்கன் தமர்கள்பொருந்
தாரணி தான வமரா வதியுந் தருநிழலுந்
தாரணி தான வயிரா வதமுந் தருகினுமே

2. தருக்காவ லாவென்று புல்லரைப் பாடித் தனவிலைமா
தருக்காவ லாய்மயி லேகுயி லேயென்று தாமதராய்த்
தருக்காவ லாநெறிக் கேதிரி வீர்கவி சாற்றுமின்பத்
தருக்காவ லாயுதன் பின்னோன் றரங்கர்பொற் றாளிணைக்கே.

---

1. தானவன்பால் = அசுரனான மாபலியினிடத்து. தார் அணிதான் அவம்செய்தான். படைவகுப்பின் ஒழுங்கைப் பழுதுபடுத்தியவன். தமர்கள் பொருந்தார் = அடியார்கள் உடன்படார். அணிது ஆன = அழகியதாகிய. தார் அணி தான அயிராவதமும்—கிண்கிணி மாலையணிந்த மதங்கொண்ட வெள்ளை யானையையும்.

தமர்கள் தருகினும் பொருந்தார் என்க. திருமாலடியார்கள் பரமபதத்தையன்றி இந்திரபதவியையும் விரும்பாரென்பதாம்.

2. தரு காவலா என்று — கற்பகதருவுக்குத் தலைவனாகிய இந்திரனே யென்று, புல்லரை — அற்பமனிதரை. தனம் விலைமாதருக்கு — கொங்கையின் எழிலையுடைய பரத்தையருக்கு, நகில்களை விலைகூறும் பரத்தையர்; செல்வத்தின் பொருட்டுத் தம் நலத்தை விற்கும் பரத்தையர் எனினும் அமையும். ஆவல்ஆய்—மோகங்கொண்டு. தாமதராய் = தாமதகுணத்தையுடையவர்களாய். தருக்கா—செருக்குற்று. அல்லா நெறிக்கே—நல்லதல்லாததீய வழியிலே. திரிவீர்—அலைகின்ற புலவர்களே. கவிசாற்றுமின் = கவிபாடித் துதியுங்கள். பத்தருக்கு ஆ—அடியார்கட்கு அருள் செய்யும் பொருட்டாக. அல ஆயு தன்—கலப்பை ஆயுதத்தையுடைய பலராமனுக்கு: திரிவீர் தாளிணைக்குக் கவிசாற்றுமின் எனக் கூட்டுக. இன் பத்தருக்கு எனவும் பிரிக்கலாம்.

3. பாலனஞ் செய்யமர் நாடாண்டு பூணொடு பட்டணிந்து
பாலனஞ் செய்ய கலத்துண்டு மாதர்பல் போகத்தையும்
பாலனஞ் செய்ய விருப்பதி லையம் பருகிநந்தன்
பாலனஞ் செய்யவள் கோமா னரங்கம் பயில்கைநன்றே.

4. வடமலை தென்மலை கச்சி குறுங்குடி மானிற்பது
வடமலை வேலை யரங்கங் குடந்தை வளருமிடம்
வடமலை கொங்கைத் திருவோ டிருப்புவை குந்தங்கர
வடமலை யன்ப ருளநடை யாட்ட மறையந்தமே.

சிவப்பிரகாசர் இயற்றிய

## திருச்செந்தில்

## *நிரோட்டக யமகவந்தாதி

1. தினகர னந்த நனியிலங் காநின்ற செய்யநற்செந்
தினகர னந்த நிதியா யினனடற் சீரயிலேந்
தினகர னந்தகனைச்செற்ற தாளர் திகழ்கனகா
தினகர னந்த நடனர் தனயனென் சிந்தையனே.

---

3. பால் அன்னம் செய் அமர் — வெண்ணிறமான அன்னப்பறவைகள் வயல்களில் தங்கப்பெற்ற. செய்யகலத்து பால் அன்னம் உண்டு—சிவந்த பொன்னாலாகிய உண் கலங்களிற் பாற்சோற்றை அருந்தி. பல்போகத்தையும் — பலவகையின் பங்களையும். பாலனம் செய்ய இருப்பதில்—தவறாமல் நுகர்ந்து வீற்றிருப்பதினும். ஐயம் பருகி—இரந்து பெற்ற கூழைக் குடித்தாயினும். நந்தன் பாலன் அம் செய்யவள் கோமான்—நந்தகோபனுக்குப் புதல்வனும் அழகிய திருமகளுக்குக் கணவனும் ஆகிய திருமால். நம் செய்யவள் எனவும் உரைக்கலாம். ஆண்டு அணிந்து உண்டுசெய்ய இருப்பதினும் பருகி பயில்கை நன்று என்க.

4. திருமால் நின்றதிருக்கோலமா யெழுந்தருளியுள்ள இடம்—திருவேங்கடமலை, திருமாலிருஞ்சோலைமலை, திருக்கச்சி அத்திகிரி, திருக்குறுங்குடி யென்பனவாம். கண்வளருங் கோலமாயிருக்கும் இடம்—ஆலிலை, திரைகளையுடைய பாற்கடல் முதலியன. வடம் அலை — ஆரங்கள் அசையப்பெற்ற. திருமகளுடன் இருந்த திருக்கோலமாயிருக்கும் இடம்—வைகுந்தம். கரவடம் மலை— கபடத்தை யொழித்த. சென்று சேருமிடம்—அன்பர் உள்ளம். நடிக்குமிடம்—வேதமுடி வாகிய உபநிடதங்கள்.

* (இதழ் முயற்சியாற் பிறக்கும் எழுத்துக்கள் சேராதது)

1. தினகரன் நந்த = சூரியன் ஒளி குன்றும்படி. செந்தில் நகரன் = திருச்செந்திலென்னும் நகரத்தையுடையவன். நம்தம்நிதி ஆயினன் = நம்முடைய செல்வமாயினவன். அயில் ஏந்தின கரன் = வேற்படையைத் தாங்கிய கையையுடையவன். அந்தகனை செற்ற தாளர் = கூற்றுவனைக் கொன்ற திருவடிகளையுடையவரும். காதில் நகர் அனந்த நடனர் = செவிகளில் அசைகின்ற ஆதிசேடனாகிய குண்டலத்தையுடைய கூத்தப் பெருமானுமாகிய பரமசிவனுக்கு. செந்தில் நகரனும் நிதி ஆயினவனும் அயிலேந்தினகரனும் நடனர் தனயனும் ஆகிய முருகன் என் சிந்தையன் என்க.

2. கந்தரங் கானந் தனிற்சென் றடங்கிலென் காசிக்கநே
கந்தரங் கானந்த நண்ணிலென் கன்னியர் கட்டளக
கந்தரங் கானந்த நின்ரு டெழிற்செந்திற் கண்டிறைஞ்சிக்
கந்தரங் கானந்த நல்கச் சனனங் கடந்திலரே.

3. கணக்காக நாய்கடின் காய நிலையெனக் கண்ணியென்ன
கணக்காக நானலைந் தெய்த்தே னெழிற்செந்திற் கந்த நெற்றிக்
கணக்காக னார்தந்த நின்றனை யேயினிக் காதலினற்
கணக்காக னநிகர்த் தேயழி யங்கத்தின் காதலற்றே.

---

2. கந்தரம் கானம் தனில் சென்று அடங்கில் என் : கந்தரம்—குகை. கானம்—காடு. அடங்கில் என்—புலன் ஒடுங்க இருந்ததனல் பயன்யாது. காசிக்கு அநேகம் தரம் கால் நந்த நண்ணில் என் : கால்நந்த = கால்கள் வருந்தும்படி. கன்னியர் கட்டு அளககந்தரம் கான்நந்த நின்று ஆடு எழில் செந்தில் கண்டு இறைஞ்சி : கட்டு = முடிக்கப்பட்ட. அளககந்தரம் = மேகம் போன்ற நிறத்தையுடைய கூந்தல். கான்நந்த = வாசனைமிக. கன்னியர் ஆடுதற்கிடமாகிய செந்தில் என்க. செந்தில்—திருச்செந்திற் பதியை. கந்தர் அங்கு ஆனந்தம் நல்க சனனம் கடந்திலர் : ஆனந்தம் நல்க = பேரின்பத்தை அருள. சனனம் கடந்திலர் = பிறவியை நீங்காதவர்கள்.

கடந்திலர் அடங்கிலென் நண்ணிலென் என முடிக்க.

3. கணம் காகம் நாய்கள் தின்காயம் நிலை என கண்ணி : கணம் = கூட்டம். காயம் = உடல். கண்ணி = கருதி. என்ன கணக்கு ஆக நான் அலைந்து எய்த்தேன் : என்ன கணக்கு ஆக = யாது பயனை அடைதற் பொருட்டு. எய்த்தேன்—இளைத்தேன். எழில் செந்தில் கந்த : செந்தில் = திருச்செந்தூர். கந்த என்பது விளி. நெற்றிக்கண் அக்கு ஆகனார் தந்த நின்தனையே : அக்கு ஆகனார்-சங்குமணியையணிந்த திருமேனியையுடைய சிவபெருமான். இனி காதலினல் கண்ண கா : காதல்—விருப்பம். கண்ண = தியானிக்க. இது கணவெனத் தொக்கது. கா = காத்தருள்வாய். கன நிகர்த்தே அழி அங்கத்தின் காதல் அற்றே : கன—கன்வு. அங்கம்—உடம்பு.

கந்த, காதலற்று நின்றனையே கண்ணக்கா எனக் கூட்டுக.

## அதிவீரராம பாண்டியரியற்றிய
## திருக்கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி

1. எவன்உயிர்க் குயிராய் எள்ளுமெண் ணெயும்போல்
எங்கணும்[1] இடையறு நின்றான்
எவன்அனைத் துலகும் ஈன்றுகாத் தழிக்க
[2]இறைமைசால்[3] மூவுரு வெடுத்தோன்
எவன்[4]முத லிடையீ றின்றிஎஞ் ஞான்றும்
[5]ஈறிலா மறைமுடி யிருப்பான்
அவன்எனைப் புரக்கத் திருக்[7]களா நீழல்
அமர்ந்தருள் புரிந்த[8]கா ரணனே.

2. [1]முன்னைப் பிறவித் தவப்பயனோ முழுதும் அறியா மூடனிவன்
என்னக் கருத்தி லெண்ணியோ யாதோ அறியேன்
இரவுபகல்
[2]கன்னற் பாகிற் [3]கோற்றேனிற் [4]கனியிற் கனிந்த [5]கவிபாட
[6]அன்னத் தொகுதி வயற்கருவை [7]யாண்டா னென்னை
யாண்டதுவே.

---

1. (கருவை = கரிவலம் வந்த நல்லூர் என்னும் தலம்.) [1] இடையறுமல் நின்றவன் எவன் என மாறுக. பிறவும் அன்ன. [2] தலைமை. [3] அயன் அரி அரன் எனும் மூவர் திருவுருவங்கள். "செழும்பொழில்கள் பயந்து காத்தழிக்கு மற்றை, மூவர் கோனாய் நின்ற முதல்வன்" என்பது திருவாசகம். [4] தனக்கு ஒரு முதலும் நடுவும் முடிவும் இல்லாமல். [5] அழிவில்லாத. [6] அவனே. [7] களாமரத்தின் நிழலில்; இது தல விருட்சம். [8] நிமித்த காரணன் ஆவான்.

2. [1] பழம் பிறப்புக்கள். [2] கரும்பை ஆலையிலிட்டரைத்த சாற்றைக் காய்ச்சி யெடுப்பது. [3] கொம்புத்தேன்; பலமலர்களினின்றெடுத்துத் திரட்டிவைக்கப்படுவது. [4] காலத்தால் முதிர்ந்தது. [5] மேற்கூறிய மூன்றும் உவமையாதலால், ஆராய்ச்சியானும், நுண்மாணுழை புலத்தானும் அநுபவ முதிர்ச்சியானும் சொற்பொருட் சுவைததும்பிய கவியென்க. [6] பாசத்தை நீக்கி உயிர்த் தொகுதிகளை யாட்கொள்ளுந் தலமென்பார் நீரைப்பிரித்துப் பாலையுட்கொள்ளும் அன்னங்களையுடைய கருவை என்றார். [7] இறைவன்; பால் வண்ணநாதர். இரவு பகல் கவி பாட ஆண்டது, பயனோ எண்ணியோ யாதோ அறியேன் என்க.

3. [1]பாசம் நீக்கி[2]மூ வகைப்ப சுக்களை
மாசில் [3]முத்தியாம் வனத்தில் [4]மேய்த்திடும்
ஈசன் [5]மின்னைநேர் இடைச்சி காதலன்
ஆசில் பால்வணத் [6]தண்டர் நாதனே.

4. பிறந்த யாக்கைகள் [1]அளப்பில பெருங்கடற் புவிக்குள்
[2]இறந்து போயவல் லால[3]வற் றெய்திய துண்டோ
கறந்த பால்நிற வண்ணனைக் கருத்துற இருத்திச்
[4]சிறந்த யாக்கையீ திதற்குநான்[5] செய்வது முளதோ.

---

3. [1] ஆணவ முதலியன. [2] விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னும் மூன்று வகை யுயிர்களை. [3] மோட்சவுலகமாகிய சோலையில். [4] பேரின்ப நுகரச்செய் வன். [5] மின்னலையொத்த இடையினையுடைய உமையம்மை. [6] தேவாதிதேவன். பால்வண்ணநாதர் என்பது, இறைவன் திருப்பெயர்.

ஆவும் எருமையும் ஆடுமாகிய மூவினங்களையும் கட்டவிழ்த்துக் கொண்டு போய் மூன்று வகை வேள்வித்தீ வளர்த்தற்கு இடமாகிய காட்டில், அவ்வினங் களுக்குத் தலைவனும், மின்னற் கொடியையொத்த ஆயர்குல மகளுக்குக் காதல னும், குற்றமற்ற பாலுணவால் நன்னிறம் பெற்ற இடையர்களுக்குத் தலைவனும் ஆனவன் மேய்த்திடுவான் எனப் பிறிதொருபொருளுந் தோன்றுதல் காண்க. இப்பொருட்கு [1] கயிறு. [3] ஈகாரம் குறுகியது. [6] இடையர்.

4. [1]அளவில்லாதன. [2] அழிந்து ஒழிந்தனவேயல்லாமல். (பி-ம்) "போயதல்லால்" [3] அவ்வுடம்புகளால் யான் பெற்றபேறு ஏதேனும் உண்டோ? (இல்லை.) [4] மேன் மைபெற்ற உடம்பு; இறைவனைக் கருத்தில் இருத்தி வீடு பெறுதலே யாக்கை யெடுத்ததன் பயனாதலால் அதற்கு ஏதுவாகிய ஈது சிறந்த யாக்கை எனப்பட் டது. [5] செய்யத்தக்க கைம்மாறும்; உயிரை வீடு பெறுவித்துத் தான் அழிவதே யாதலின் அதற்குச் செய்யுங் கைம்மாறு இலதாயிற்று. "தெண்ணிலாமலர்ந்த வேணியா யுன்றன் திருநடங் கும்பிடப் பெற்று, மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு வாலிதாம் இன்பமாம்" என்னும் சேக்கிழார் திருவாக்கு ஈண்டு நினைக் கத்தக்கது.

பரஞ்சோதி முனிவர் இயற்றிய

## மதுரைப்பதிற்றுப்பத்தந்தாதி.

1. கனியுங் கிழங்குங் [1]கருக்காயுங் காற்றுஞ் சருகு மருந்தி[2]யிரு
பனியு மழையும் வெயிலுநின்று [3]படிவந் திரிந்து புல
னைந்தும்
[4]முனியும் படிவீ ணருந்தவஞ்செய் முனிகாள் மதுரை
புகுவீரேல்
[5]இனியுங் களுக்கு மதுரேசர் எல்லாப் பதமுந் தருவாரே.

2. [1]குற்றேவல் செய்பவரைக் கும்பிடேன் கோயில்வலஞ்
சுற்றேன் மெழுகேன் சுடர்த்திரியுந் தூண்டுகிலேன்
[2]கற்றேனு மல்லேன் கடம்பவனச் சொக்கேநான்
மற்றே தினி[3]யுரைக்கேன் வன்கூற்றுக் கென்கூற்றே.

3. பாரறியு [1]மறிவினுமிப் பார்மே னின்ற
[2]பசுஞானத் தாலுமெட்டிப் பார்க்கொ ணுத
[3]பேரறிவே சிற்றறிவேற் [4]கிருளை நீக்கும்
பேரொளியே யங்கயற்கண் பிரியா தானே
யாரறிவார் தமிழருமை யென்கின் றேனென்
னறிவின மன்றேவுன் மதுரை மூதூர்
[5]நீரறியு நெருப்பறியு மறிவுண் டாக்கி
[6]நீயறிவித் தாலறியு நிலமுந் தானே.

---

1. [1] முற்றாதகாய். [2] முன்பனி பின்பனி. [3] உடல்நிலை வேறுபட்டு. [4] வெறுக்கும்படி. [5] இப்பொழுதே. பிறவிடங்களிலிருந்து உடலை வருத்தி அரிய தவஞ்செய்து பெறும் பேறுகளெல்லாவற்றையும் மதுரையின்கண் வாழ்வார்க்கு ஆலவாய்ப் பெருமானடிகள் எளிதின் அருளுவாரென்பதாம்.

2. [1] இறைவனுக்குத் திருத்தொண்டு செய்பவரை. [2] கற்றற்குரியன—இறைவன் புகழ்நூல்கள். [3] சொல்வேன். கூற்றுக்கு என் கூற்றாக இனி ஏது உரைக் கேன் என முடிக்க. இறைவனுக்குக் குற்றேவல் முதலியன செய்வோரைக் கூற்றுவன் அணுகான் என்பதாம்.

3. [1] உலக ஞானம். [2] தத்துவஞானத்தாலும். [3] முற்றுணர்வுடையவனே. [4] அஞ் ஞான இருட்டை. [5] ஆளுடைய பிள்ளையாருக்கும் அமணர்க்கும் உண்டாய வாதங்களை நினைந்து இவ்வாறு கூறினர். [6] "காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே" என்னும் அப்பர் திருவாக்கை நினைப்பிக்கின்றது.

4. சோதி வெண்பிறை சூடிய கூடலான்
ஆதி யந்தமி லாவெழுத் தஞ்சுடன்
[1]பூதி [2]கண்டிகை யைப்[3]பொருட் கொண்டிடாச்
சாதி யன்றியுண் டோபுலைச் சாதியே.

தோட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் இயற்றிய

## கலைசைச் சிலேடை வெண்பா

1. ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமுங்
காவலரைச் சூழுங் கலைசையே = மேவும்
அரிவையம்பா கத்தான் அரனொருமுன் றெய்தோன்
அரிவையம்பா கத்தா னகம்.

2. தாமரைவண் டுங்குளமுஞ் சார்விரகத் தாரிடமுங்
காமரம்பா டுஞ்சீர்க் கலைசையே = மாமதமா
தங்க முரித்தார் தடங்கேழற் கோட்டினைச்சூர்
தங்க முரித்தார் தலம்.

---

4. [1] திருநீறு. [2] உருத்திராக்கமாலை. [3] மெய்ப்பொருளாகக் கொள்ளாத. திருவைந் தெழுத்து முதலிய சிவசாதனங்களைக் கைக்கொள்ளாதவரே புலையராவரன்றிப் பிறப்பினாற் புலைத்தன்மை யுடையாரில்லை யென்பதாம்.

1. காவலரை சூழும் = அரசரைச் சுற்றியிருக்கும். கா அலரை சூழும் = சோலையிலுள்ள மலர்களை ஆராயும். அரி வை அம்பு ஆக = திருமாலைக் கூரிய அம்பாகக் கொண்டு. அரிவை அம் பாகத்தான் = உமாதேவியை அழகிய இடப்பாகத்திலுடையவன். கலைசையே, எய்தோனும் பாகத்தானும் ஆகிய சிவபிரானுக்கு இடமாம் என்க. இடம் கலைசையே யெனினும் அமையும்.

இனிவருவன மும்மொழிச் சிலேடை.

2. தாமரை வண்டும் = தாமரைப் பூவிலிருக்கும் வண்டுகளும். காமரம்பாடும் = சீகாமரம் என்னும் பண்ணைப்பாடும். குளமும், காமர் அம்பு ஆடும் = அழகிய நீர் அசையும். விரகத்தாரிடமும் = காமிகளிடத்தும். காமர் அம்பு ஆடும்—மன்மதபாணம் வருத்தும். மாதங்கம் உரித்தார் = யானையைத் தோலுரித்தவர். கேழல் கோட்டினை சூர் தங்க முரித்தார் = திருமாலாகிய பன்றியின் கொம்பை அச்சந் தங்க ஒடித்தவர்.

3. மாப்பொலிந்த வீகையரும் மைந்தருநன் மாதவருங்
காப்பணியாக் கொள்ளுங் கலைசையே = தீப்பிறங்கு
மாலாழி யீந்தான்முன் மாலினுக்குப் பாலனுக்குப்
பாலாழி யீந்தான் பதி.

4. வாரியளிப் போர்கரமும் மாதருங்கோங் கும்பூவிற்
காரிகைக்கொப் பென்னுங் கலைசையே = ஆரியனுய்க்
கல்லா லடியுற்ருர் கான்போ யருச்சுனன்கை
வில்லா லடியுற்ருர் வீடு.

நமச்சிவாயப் புலவர் இயற்றிய
*சிங்கைச் சிலேடை வெண்பா

1. [1]மைவார் [2]பொழிற்றுயிலு மாமதியை வேதியரைச்
[3]செவ்வா ரணமெழுப்புஞ் சிங்கையே—[4]ஒவ்வாத
[5]போற்றுக் கொடியான் புகழவுமென் பாலிரங்கும்
[6]ஏற்றுக் கொடியான் இடம்.

---

3. மா பொலிந்த ஈகையர் = பெருமை விளங்கிய கொடையாளிகள். கா பணி ஆ கொள்ளும்—கற்பகச் சோலையை ஏவலாகக் கொள்ளும். மைந்தரும், காப்பு அணி ஆ கொள்ளும் = கடகத்தைக் கைக்கு ஆபரணமாகக் கொள்ளும். மாதவரும், கா பணி ஆ கொள்ளும் = பிறரைக் காத்தலைத் தொழிலாகக் கொள்ளும்; காப்பு அணி ஆ கொள்ளும் எனப்பிரித்துத் திருநீற்றை அழகாகக் கொள்ளும் எனினும் பொருந்தும்.

தீ பிறங்கு மால் ஆழி = தீயைப்போல் விளங்குகின்ற பெரிய சக்கரத்தை. பாலன் = உபமன்னியமுனி. பால் ஆழி = பாற்கடல்.

4. வாரி அளிப்போர் = பொருளை அளவின்றி அள்ளிக்கொடுப்பவர். பூவில் காரிகைக்கு ஒப்பு—பூமியில் காரியென்னும் வள்ளலுடைய கைகளுக்கு உபமானம். மாதரும் பூவிற்காரிகைக்கு ஒப்பு—பெண்களும் திருமகளுக்கு உவமை. கோங்கும் பூவில் காரிகை கொப்பு என்னும்—கோங்கமலரும் பொலிவையும் ஒளியையும் அழகையும் உடைய கொப்பாகிய ஆபரணமென்று சொல்லப்படும். கொப்பு = மாதர் காதணிகளில் ஒன்று. ஆரியன் = ஆசாரியன். கல் ஆல் அடி = கல்லால மரத்தின் அடியில்.

* விக்கிரமசிங்கபுரம்.

1. [1] மேகம். [2] சோலை. [3] செவ்விய கோழிச்சேவல் கூவி மதியையெழுப்பும் எனவும், செம்மையான வேத வொலி அந்தணரைத் துயிலெழச் செய்யுமெனவுங் கொள்க. [4] தன் பெருமைக்குப் பொருந்தாத. [5] துதிமொழிகளைக் கொண்டு. [6] இடபக்கொடியையுடைய இறைவன்.

2. [1]ஆரத் தடம்பொருநை யாறு[2]மடற் காளையருந்
[3]தீரத் தனம்பெயராச் சிங்கையே = [4]வாரத்து
நீ[5]ளத் தருவா னிழல்வாழ் [6]வருளடியார்க்
கா[7]ளத் தருவா னகம்.

3. [1]மாவாய்மைத் தொண்டர்[2]மணிவாயு நன்மனமுந்
[3]தேவாரப் பண்பாடுஞ் சிங்கையே = ஓவாமல்
[4]சீலமிசைந் துள்ளார் தெரிவரியார் தெண்டிரைநீர்
[5]ஆலமிசைந் துள்ளா ரகம்.

4. [1]பத்தி தரு[2]விழவும் பன்மா ளிகையு[3]முன்னாட்
சித்திரைமா தங்குலவுஞ் சிங்கையே = புத்திரராம்
தார்க்[4]குஞ் சரமயிலான் றனை[5]யொரு பாதி[6]தனைப்
பார்க்குஞ் [7]சர[8]மயிலான் [9]பற்று.

---

2. [1] முத்துக்களையுடைய. [2] வெற்றிபொருந்திய. [3] கரைகளில் அன்னப்புட்கள் நீங்காத எனவும், வீரத்தன்மை நீங்காத எனவும் முறையே கூட்டுக. [4] அன்போடு. [5] அந்தக் கற்பகத்தருவின் சிறந்த நிழலின்கண் வாழும் வாழ்க்கையை வானுலகத்திலுள்ள தருவெனினும் ஆம். [6] தன் அருளைப்பெற்ற அன்பர்கட்கு [7] ஆட்சிசெய்ய.

3. [1] சிறந்த உண்மையையுடைய. [2] அழகு. [3] தேவாரப் பண்ணைப்பாடும் எனவாய்க்கும், தேவு ஆர் அ பண்பு ஆடும் = கடவுளின் அரிய அந்த எண்குணங்களும் பொருந்தும் என மனத்திற்குங் கொள்க. [4] ஞானவொழுக்கத்தைப் பொருந்தியுள்ளவர்களும். [5] நஞ்சை அருந்தினவரும் (ஆகிய சிவபெருமானுக்கு) சிங்கையே அகமாம் என்க.

4. [1] அன்பு. [2] திருவிழாவும். [3] சித்திரைமாதம் முன் நாள் குலவும் = சித்திரைத் திங்களில் முதல் நாளாகிய அசுவதியில் விளங்குமென விழாவுக்கும், முன் ஆட்சி திரை மாது அங்கு உலவும் = முன்னே ஆளுதலையுடைய பாற்கடலில் தோன்றிய திருமகள் அவ்விடத்து உலாவும் என மாளிகைக்கும் ஏற்றுக. [4] யானைமுகக் கடவுளுக்கும் வேற்படைதாங்கிய முருகக்கடவுளுக்கும். [5] இடப்பாகத்தில். [6] சிவமாகியதன்னை. [7] அம்பு போன்ற கண்களையுடைய. [8] மயில் போன்ற உமையம்மையையுடையவன். [9] விரும்பியிருக்கும் இடம்.

## இராமலிங்க அடிகள் இயற்றிய

## * இங்கிதமாலை

1. [1]திருவை யளிக்குந் திருவொற்றித் [2]தேவ ரீர்க்[3]கென் விழைவென்றேன்
[4]வெருவ லுனது [5]பெயரிடையோர் மெய்நீக் கியநின் முகமென்றார்
[6]தருவ லதனை வெளிப்படையாற் சாற்று மென்றேன் சாற்றுவனேல்
[7]இருவை மடவா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

2. துதிசே ரொற்றி வளர்தரும துரையே நீர்முன் [1]னாடலுறும்
பதியா தென்றே [2]னம்பெயர்முற் பகரீ ரெழுத்தைப் பறித்ததென்றார்
நிதி சேர்ந் திடுமப் பெயர்யாது நிகழ்த்து மென்றே [3]னீயிட்ட
தெதுவோ வதுகா ணென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ

---

* (உள்ளத்தில் தோன்றுங் குறிப்புகளைப் பலபடத் தொகுத்துக் கூறுவது)

1. [1] முத்திச் செல்வத்தை. [2] பெருமானாகிய உமக்கு. [3] யாதுவிருப்பம். [4] அஞ்சாதே. [5] பெயர் நங்கை என்பது. இதன் நடுவிலுள்ள மெய்யை நீக்கினால் நகையென்றாகும். உனது நகை முகமே விருப்பமென்றார் என்பது. நகை—ஒளி; புன் முறுவலுமாம். [6] தருவேன். [7] இரண்டுவை; வைவை; வெளிப்படையாகக் கூறினால் வைவாய் என்பது பொருள்.

பிச்சைக்குவந்த ஒற்றியூர்ப் பெருமான் பக்கல் உரையாடிய தலைமகள் ஒருத்தி அவர் பேச்சின்கட் கண்ட குறிப்பு மொழிகட்குத் தன் தோழியினிடம் பொருள் வினவுமுகமாக இப்பாடல் அமைந்துள்ளது. பிறவும் அன்ன.

2. [1] திருக்கூத்தாடும் ஊர். [2] நமது பெயரில் முன்னாகச் சொல்லப்பட்ட இரண்டெழுத்துக்களை நீக்கியது. [3] இட்டு அழைத்தபெயர் "தருமதுரை" என்பது. இதன்கண் முதலிலுள்ள இரண்டெழுத்தை நீக்கிவிட்டால் மதுரையென்றாகும். முன் ஆடலுறும் பதியாது என்ற வினாவிற்கு மதுரை என்பது விடையாம்.

3. வயலார் சோலை யெழிலொற்றி வாண ராகு மிவர்தமைநான்
செயலா ரடியர்க் கருள்வீர்நுந் [1]சிரத்து [2]முரத்துந் திகழ் கரத்தும்
[3]வியலாய்க் கொண்ட தென்னென்றேன் விளங்கும்[4]பிநாக மவைமூன்றும்
[5]இயலாற் காண்டி யென்கின்றார் இதுதான் சேடி யென்னேடீ.

4. [1]ஓமூன் றுளத்தி ரொற்றியுளீர் [2]உற்றோர்க் களிப்பீ ரோ வென்றேன்
[3]தர்மூன் றென்பார்க் [4]கயன்மூன்றுந் தருவே மென்றா ரம்மமிகத்
[5]தேமூன் றினநும் மொழியென்றேன் செவ்வா யுறுமுன் [6]நகையென்றே
[7]ஏமூன் றுறவே நகைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

5. நல்லா ரொற்றி யுடையீர்யா [1]னடக்கோ[2]வெறும்பூ வணையணைய
வல்லா லவனும் முடன்வருகோ [3]வணையா தவலத் துயர் துய்க்கோ
செல்லா வென்சொல் [4]நடவாதோ திருக்கூத் தெதுவோ வெனவிடைகள்
எல்லா நடவா தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ

---

3. [1] தலையினிடத்தும். [2] மார்பினிடத்தும். [3] மேன்மையாய். [4] பிநாகம் என்பது வினாமூன்றற்கும் விடையாம். [5] இலக்கண முறையாற் பாராய். கம், நாகம், பிநாகம் என நிரனிறையாற் கொள்க. இது எழுத்துப் பெருக்கம் என்னும் சொல்லணி. நீர், பாம்பு, வில் என்பன பொருள். பிநாகம், நாகம் கம் என விடை கூறி எழுத்துச் சுருக்கமாகவுங் கொள்ளலாம்.

4. [1] பிரணவப் பொருள் பதிந்த. [2] உம்மைச் சார்ந்தவர்க்கு. [3] மூன்றுதா; முத்தா என்பார்க்கு. [4] தா என்னும் எழுத்திற்குப் பக்கத்திலுள்ளது "தி" என்பது. அது மூன்று சேர்ந்தால் "முத்தி" என்றாகும். முத்தனே என்று அழைப்பார்க்கு முத்தி நல்குவேம் என்றார். [5] இனிமை பொருந்தியுள்ளன. [6] பல். தே—மூன்றின எனக்கொண்டார் அவர்; மூன்று தே—முத்தே. உன்பல் முத்தே என்பது பொருள். [7] இன்பம் மிகவே. ஏமம்—ஏமென ஈறு தொக்கது.

5. [1] செல்வேனோ? [2] உம்மைக் கூடப்பெறாமையால் வெறுவிதாய பூம்படுக்கை. [3] நும்மைத் தழுவப் பெறாமையால் மிக்க துன்பத்தை நுகர்வேனோ? [4] செல்லாதோ; ஏற்காதோ. வினாக்கள் ஐந்தினுக்கும் விடை "நடவாது" என்பது. [1] நட. [2] வா. [3] து. [4] நடவாது. [5] நடம் வாது; வாது நடம்; காளியுடன் புரிந்த கூத்து. இவற்றை வினாக்கள் ஐந்தற்கும் முறையே தனித்தனி விடையாகக் கொள்க.

## பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் இயற்றிய
## திருவரங்கத்து மாலை

1. [1]சின்னூல் பலபல வாயா [2]லிழைத்துச் [3]சிலம்பிபின்னு
மந்நூ லருந்தி விடுவது போல வரங்கரண்டம்
பன்னூறு கோடி படைத்த[4]வை யாவும் [5]பழம்படியே
[6]மன்னூழி தன்னில் விழுங்குவர் [7]போத மனமகிழ்ந்தே.

2. சிந்திக்க நெஞ்சில்லை நாவில்லை நாமங்கள் செப்பநின்னை
[1]வந்திக்க [2]மெய்யில்லை வந்[3]திரு போதுமொய்ம் மர்மலர்ப்பூம்
[4]பந்தித் தடம்புடை சூழரங் கா[5]ததி பாண்டனுன்னைச்
[6]சந்தித்த நாண்முத்தி பெற்றதென் னோதயிர்த் தாழியுமே.

3. நம்பெரு மா[1]ளெழுத் தெட்டின் பெருமை [2]நவிலுமதோ
[3] சம்பரன் மாயம் [4]புரோகிதர் [5]சூழ்வினை [6]தாரணிவாள்
வெம்படை [7]மாசுண மாமத வேழம் விடந்தழல்[8]கால்
[9]அம்பர மேழுத லானவை [10]பாலனுக் கஞ்சினவே.

---

1. [1] சிறியநூல் ; மெல்லிய நூலுமாம். [2] நூற்று. [3] சிலந்திப் பூச்சி. [4] அவ்வண்டங்கள் எல்லாவற்றையும். [5] முன்போலவே. [6] பெரிய. [7] மிகவும். திருமால் அண்டங்கள் எல்லாவற்றையும் தாமே படைத்து ஊழியிறுதியில் அவை அழியா வண்ணம் தம்வயிற்றினுள் கரந்து வைத்துக் காப்பர் என்னுங் கொள்கைக்குச் சிலம்பி தன் வாயால் நூல்நூற்று அதனைப்பின்பு தானே உட்கொள்ளுஞ் செயல் உவமையாயிற்று.

2. [1] வணங்க. [2] கைகால் முதலிய உறுப்புக்களையுடைய உடல். [3] காலைமாலையாகிய இரு பொழுதிலும். இருபோதும் வந்து நின்னை வந்திக்க என்க. [4] வரிசை. [5] ஆயர்குலத்துப் பிறந்த ஓர் அன்பன். [6] அடைந்து முத்திபெற்றபொழுது. சிந்தித்தல் முதலிய செய்தற்கு வேண்டுங் கருவிகள் இல்லையாகவும் தயிர்த்தாழி முத்திபெற்றது வியப்பு என்பதாம். இவ்வரலாற்றைப் பாகவதத்திற் காண்க.

3. [1] எட்டெழுத்தாலாகிய திருமால் மந்திரத்தின். [2] என்போல்வாரால் சொல்லுந் தரம் உடையதோ. [3] ஓர் அசுரன் ; இவன் செய்த மாயச்செயல்கள். [4] பின்னே வரும் நலந்தீங்குகளை முன்னே தெரிந்து சொல்லுபவர். [5] கொல்லுதற்கு ஆராய்ந்து செய்த செயல்கள். [6] வெற்றிமாலை. [7] பெரும்பாம்பு. [8] காற்று. [9] கடல். [10] சிறுவனாகிய பிரகலாதன். எட்டெழுத்தின் பெருமைக்கு ஓர் உதாரணம் எடுத்துக்காட்டியவாறு.

4. [1]தொடைமாற னுந்தமிழ் சொன்[2]மாற் னுந்தொழத்
[3]துத்திவெள்ளைக்
[4]குடைமா சுணத்திற் றுயிலரங் கேச குலவுவைவேற்
படை[5]மாறு கொண்டமைக் கண்ணியர் பால்வைத்த[6]பாச
நெஞ்சை
[7]மடைமாறி யுன்றன் றிருவடிக் கேவர [8]வைத்தருளே.

சிவப்பிரகாசர் இயற்றிய

***சோண சைல மாலை.**

1. [1]துவக்கற [2]வறிந்து [3]பிறக்குமா ரூருந்[4]துயர்ந்திடா
தடைந்துகாண் [5]மன்றும்
உவப்புட [6]னிலைத்து [7]மரிக்குமோர் பதியு மொக்குமோ
[8]நினைக்குநின் [9]னகரைப்
பவக்கடல் கடந்து முத்தியங் கரையிற் [10]படர்பவர்
[11]திகைப்பற நோக்கித்
தவக்கல நடத்த வுயர்ந்தெழுஞ் சோண சைலனே
கைலைநா யகனே.

---

4. [1] வேப்பமலர் மாலையணிந்த பாண்டியன். [2] நம்மாழ்வார். [3] படப்பொறி. [4] குடை போலக் கவிந்திருக்கிற ஆதிசேடன்மேல். [5] பகைமைகொண்ட. [6] அன்பு. [7] மாற்றி. [8] அன்புவைத்தருள்வாய். பாண்டியன் திருவல்லப தேவன் என்பர்.

* [திருவண்ணாமலை ; இது சிவந்த நெருப்பின் வடிவாய் மூளைத்தமையின் இப் பெயர் பெற்றது.]

1. [1] தோல் ; உடம்பிற்கு ஆகு பெயர். [2] (பிறப்பால் வீடளிக்குந் தகையது எனத்) தெரிந்து. [3] பிறக்க விரும்பும். [4] பிறவித்துன்பம் உண்டாகாதபடி. [5] பொன்னம்பலம். [6] நிலையாக வாழ்ந்து. [7] இறத்தற்குரிய காசிப் பதி. [8] நினைத்த அளவானே முத்தி நல்குவதெனக் கருதத்தக்க. [9] அருணைப்பதியை.

ஆரூர் முதலிய நான்கு தலங்களும் பிறத்தல் முதலிய செயல்களால் வீடளிப்பனவாகவும் ஏனையபோலாது இஃது யாவரும் இருந்துழியிருந்தே நினைத்தற்கு எளிமையாதல் பற்றி நின்னகரை ஒக்குமோ என்றார்.

[10] செல்ல விரும்புவோர். [11] கலக்கம். பவக்கடல் முதலிய மூன்றும் உருவகம்.

2. [1]அருங்கவி[2]வாத வூரனே முதலோர் அன்பிலே மென்[3]றது
வேண்டி
யிரங்குதல் பொய்ம்மை யன்பிலே னெனயான் இயம்பலே
மெய்[4]யெனக் கருளாய்
[5]கருங்கட முமிழும்[6]ஈர்ங்கவுட் பனேக்கைக் கரி[7]யுரிக்
கஞ்சுகங் கடுப்பத்
[8]தரங்கமுண் டெழுகார் முகில்பயில் சோண சைலனே
கைலைநா யகனே.

3. [1]வேலையந் துகில்சூழ் மலர்தலை யுலகின்[2]மெய்யினைப்
பொய்யெனு மவர்க்கே
[3]ஏலவந் தருள்வ தன்றிமெய் யினை[4]மெய் யெனுமெனக்
கருள்புரிந் திடாயோ
[5]காலநன் குணர்ந்து[6]சினகரம் புகுந்து [7]காண்பரி
தெனுதுல கனைத்துஞ்
[8]சாலநின் றுழியே கண்டிடுஞ் சோண சைலனே
கைலைநா யகனே.

---

2. [1] திருவாசகம் திருக்கோவையார் என்னும் அரிய திருப்பாடல்கள். [2] மாணிக்க வாசகர் முதலான சமயகுரவர்கள். [3] அவ்வன்பைப் பெறவிரும்பி. [4] எனக்கு அவ்வன்பை அருள்புரிவாய். [5] கரிய நிறமுள்ள மதநீர். [6] குளிர்ந்த கன்னம். [7] தோலாகிய சட்டையை ஒத்துத் தோன்ற. [8] அலை; ஈண்டுக் கடல் நீரை யுணர்த்திற்று ஆகுபெயரால்.

முகில் கஞ்சுகங் கடுப்பப் பயில் சோண சைல மென்க.

3. [1] கடல். [2] உடம்பைப் பொய்யென்று மதிப்பவர்க்கே; உடல் நிலையற்றதெனக் கண்டு அதன்கட் பற்றற்றவர்க்கே. [3] மிகவும். [4] நிலைத்ததெனக்கருதி யிருக்கு மெனக்கு. [5] வழிபாட்டுக்குரிய வேளைகள். [6] கோயிலின்கட் சென்றும். [7] காண்டல் இயலாதென்று வருந்தாமல். [8] நின்றுழியே சாலக்கண்டிடுமென்க.

மெய்யினைப் பொய்யென்னும் அவர்க்கு அருள்வதன்றி மெய்யினை மெய் யென்னும் எனக்கு அருள்புரியாயோ என்று கூறியது நயம் பயத்தல் காண்க.

4. [1]வெண்டிரு நீறு புனையுமா தவர்க்கு [2]விருந்துசெய்
துறுபெரு மிடியுங்
கொண்ட[3]நல் விரதத் [4]திளைக்கும்பாக் கையுமிக் கொடியனேற்
கருளுநா ளுளதோ
வண்டு[5]மூழ்ங் குவளை மலர்த்தடஞ் சுனையின் மற்றைவா
னவர்க்[6]குரித் தன்றிச்
[7]சண்டியுண் மகிழ்ந்து கொளமலர் சோண சைலனே
கைலைநா யகனே.

சிவப்பிரகாசர் இயற்றிய

***பெரியநாயகியம்மை திருவிருத்தம்**

1. முழு[1]மணி மிடற்றன்[2]கனன்மழு வீரன்[3]முக்கணுண்
டகைநின தெழில்கூர்
முகம்[4]புலர் தலைக்கண் டுடல்வளைந் [5]தடியின் முனைப்பிறைக்
கோடுகொண் டுழுது
விழுமணி யரவ நுழை[6]சடா டவியின்[7]விண்ணதித்
தண்புனல் விடுப்ப

---

4. [1] பிறநிறமுள்ள நீறுகள் வறுமை பிணி முதலியவற்றை விளைக்குமாதலால் அவற்றின் வேறுபடுத்து வெண்டிருநீறு என்றார். [2] அமுது செய்வித்தலால் உண்டாகும் மிக்க வறுமையும். [3] சிறந்த நோன்புகளால். [4] மெலிந்துபோகும் உடம்பும். [5] இளைக்கும். [6] உரிய ஆகாமல். [7] சண்டேச்சுர நாயனார்.

குவளைமலர் சுனையில் மலர் சோணசைலமென்க. செல்வமும் உடல் வன்மையும் வேண்டுவார் பிறராகவும் இவர் அதற்கு மாறாக மிடியும் இளைக்கும் யாக்கையும் அருளு நாளுளதோ என்றார்.

இறைவன் இம்மலைவடிவாயிருத்தலின் அதனிடத்துக் காணப்படுமலர்களெல்லாம் அவர்க்குச் சாத்திக் கழித்தனபோலுமாதலின் அவை ஏனைய தேவர்க்காகாது சண்டி யுள்மகிழ்ந்துகொளற்கு உரியவாயின.

* (திருமுது குன்றத்தில் கோயில்கொண்டருளிய இறைவியின் திருப்பெயர்.)

1. [1] நீலமணி. [2] வினைத்தொகை; பண்புத்தொகை; உவமைத் தொகையுமாம் [3] சிவபெருமான். [4] வாடுதலை. [5] உன் சீர்பாதங்களில், [6] சடைக்காட்டில் [7] ஆகாயகங்கை.

விரைவொடு குளிர்ந்து[8] முகமலர் தலிஞன் மென்கொடி
யெனநினை யுணர்ந்தேன்
செழுமணி நீல [9]மழைமுகி றவழுஞ் சிலம்பெனும்
புற்றினின் றூர்ந்து
திரைபொரு[10]கடற்பேர்ப் பெரும்படம் விரித்துத் [11]தினமணி
யெனப்படுஞ் [12]செங்கேழ்
கெழுமணி யுமிழ்ந்து பேரிரு டுரந்து கிடக்கு[13]மெய்ம்
முடக்குமா சுணமாய்க்
கிளர்மணி முத்த நதியுடை[14]விருத்த கிரியமர்
பெரியநா யகியே.

குமரகுருபரர் இயற்றிய

**மதுரை மீனுட்சியம்மை இரட்டைமணிமாலை.**

1. நெஞ்சே திருக்கோயில்[1]நீலுண் டிருண்ட[2]குழல்
மஞ்சேந் [3]தபிடேக வல்லிக்கு—[4]விஞ்சி
வரு[5]மந் தகாவென் வழி[6]வருதி யா[7]லிக்
கருமந் தகா[8]வென் கருத்து.

---

[8] இறைவியின் ஊடலை நீக்குதற்கு இறைவன் பணிந்த அளவில் அவர் சடையிலுள்ள பிறையும் மாற்றாளாகிய கங்கையும் தன் திருவடிகளில் வீழ்ந்து கிடப்பதுகண்டு ஊடல் தீர்ந்து முகமலர்ந்தாளென்பதாம்.

"ஆதி பகவன் தனதுடல் தணிப்பான் பணிய அவ்விறைவன்
பாத மிறைஞ்சு மதற்குநெற்றிப் பகையு மல்குற் பகையுமாம்
சீத மதியு மரவும்விழும் செயற்கு மூவகை செயாமலலை
மாது பணியு மதற்குமன மகிழு மூமையை வணங்குவாம்."

என இவ்வாசிரியரே பிரபுலிங்க லீலையிற் கூறியிருத்தல் காண்க.

இறைவியைக் கொடியென்பதற்கேற்ப உழுதல் நீர்பாய்ச்சுதல் மலர்தல் கூறியிருப்பது நயமாம்.

[9] மழைபெய்தற்குரியகார்மேகம். [10] கடலென்னும் பெயரையுடைய பெரிய படத்தை. [11] சூரியன். [12] சிவந்த நிறம் பொருந்திய. [13] உடல் வளைவுள்ள பாம்பையொத்து. [14] விருத்தாசலமெனப்படும் திருமுது குன்றம்.

மணிமுத்தயாறு பெரும் பாம்பை யொக்குமெனக்கொண்டு அதற்கு இயைய மலை கடல் பகலவன் என்பவற்றைப் புற்று படம் மணிகளாக உருவகித்திருப்பது பாராட்டத்தக்கது.

1. [1] கரிய நிறம். [2] கூந்தலாகிய மேகம். [3] தடாதகையாயிருந்து முடிசூட்டியதாற் பெற்றபெயர். வல்லிக்கு நெஞ்சே திருக்கோயில் என்க. [4] வரம்பு கடந்து. [5] காலனே. [6] வருகின்றாய். [7] இச்செயல்கள் பொருந்தமாட்டா. [8] உன்னுடைய எண்ணம் யாது? (பி - ம்) "உன் கருத்து."

2. நாவுண்டு நெஞ்சுண்டு நற்றமி ழுண்டு நயந்துசில
பாவுண் [1]டினங்கள் பலவுமுண்டே [2]பங்கிற் கொண்டிருந்[3]தோர்
தேவுண் டுவக்குங் கடம்பா டவிப் பசுந்[4]தேனின் பைந்[5]தாட்
பூவுண்டு [6]நாரோன் றிலையாந் தொடுத்துப் புனைவதற்கே.

குமர குருபரர் இயற்றிய

**சிதம்பர மும்மணிக்கோவை.**

பூமலி கற்பகப் [1]புத்தேள் வைப்பும்
[2]நாமநீர் [3]வரைப்பி னிைல [4]வளாகமும்
[5]ஏனைப் புவனமு மெ[6]ண்ணீங் குயிருந்
[7]தானே [8]வகுத்ததுன் [9]தமருகக் கரமே
தனித்தனி வகுத்த [10]சராசரப் பகுதி
அனைத்தையுங் காப்பதுன் [11]னமைத்தபொற் கரமே
[12]தோற்றுபு நின்றவத் தொல்லுல [13]கடங்கலும்
[14]மாற்றுவ தார[15]ழல் வைத்ததோர் கரமே
[16]ஈட்டிய [17]வினைப்பய னெவற்றையு மறைத்துநின்
[18]றூட்டுவ தாகுநின் னூன்றிய பதமே
அடுத்தவின் னுயிர்கட் களவில்பே ரின்பங்
கொடுப்பது முதல்வநின் [19]குஞ்சித பதமே

---

2. [1]பாவினங்கள்; தாழிசை துறை விருத்தம் என்பன. [2]இடப்பாகத்தில். [3]ஒப்பற்ற முதற்கடவுளாகிய இறைவர். [4]அங்கயற்கணம்மை. [5]திருவடித் தாமரை. [6]அன்பு.

பூவுண்டு தொடுத்துச் சூட்டுதற்கு நாரில்லை யென்றது நயம்.

[1]தேவருலகம். [2]அச்சத்தைத் தருங்கடல். [3]எல்லை. [4]பரப்பு. [5]நாகருலகம். (பி - ம்) 'ஏனைய புவனமும்' [6]அளவிடப்படாத. [7]பிறர் துணைவேண்டாமலே. [8]படைத்தது. [9]உடுக்கை யேந்திய திருக்கரம். [10]இயங்குவனவும் நிற்பனவுமாகிய உலகுயிர்கள் எல்லாவற்றையும். [11]அஞ்சலென்ற திருக்கரம். (பி - ம்) 'அமைத்த கைத்தலமே.' [12]தோற்றி. [13]முழுதும். [14]அழிப்பது. [15]நெருப்பு. [16]உயிர்களால் ஆக்கப்பட்ட. [17]இருவினைப்பயனாகிய இன்பத் துன்பங்களெல்லாவற்றையும். [18]நுகரச்செய்வது. [19]வளைந்த திருவடி; அஃதாவது தூக்கிய திருவடி. இஃது அருள்புரிவது.

இவற்றால் அம்பலவாணரது திருக்கூத்து ஐந்தொழில் நடாத்துங்குறிப்புடையது என்பது பெறப்பட்டது, "தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பில், சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமாய், ஊன்று மலர்ப்பதத்தே யுற்றதிரோ தம்முத்தி, நான்ற மலர்ப்பதத்தே நாடு." என்றதுங்காண்க.

இத்தொழி லைந்துநின் மெய்த்தொழி லாகப்
பாலுண் குழவி [20]பசுங்குடர் பொறாதென
[21]நோயுண் மருந்து தாயுண் டாங்கு
மன்னுயிர்த் தொகுதிக் கின்னருள் கிடைப்ப
வையமீன் றளித்த தெய்வக் கற்பின்
அருள்[22]சூற் கொண்ட [23]ஐயரித் தடங்கட்
[24]டிருமாண் சாயற் [25]றிருந்திழை காணச்
சிற்சபை பொலியத் திருநடம் புரியும்
அற்புதக் கூத்தநின் னமுதவாக் களித்த
நல்லற நூல்களிற் சொல்லறம் பல[26]சில
இல்லறந் துறவற மெனச்சிறந் தனவே
அந்நிலை யிரண்டினுண் [27]முன்னது கிளப்பிற்
கற்றநூற் றுறைபோய்க் கடிமனைக் [28]கிழவன்
நற்குண நிறைந்த கற்புடை மனைவியோ
[29]டன்பும் [30]அருளுந் தாங்கி யின்சொலின்
விருந்து [31]புறந்தந் தருந்தவர்ப் [32]பேணி
[33]ஐவகை வேள்வியும் [34]ஆற்றி யிவ்வகை
நல்லற நிரப்பிப் பல்புகழ் நிறீஇப்
பிறன்மனை நயவா னறன்மனை வாழ்க்கைக்கு
[35]வரையா நாளின் மகப்பேறு குறித்துப்

---

[20] குழந்தையின் மெல்லிய குடல். [21] நோயைக் கெடுக்கும் மருந்தை. [22] கரு. [23] அழகிய செவ்வரி. சூற்கொண்டகண் என்க. [24] அழகு மாட்சிமைப்பட்ட மென்மைத் தன்மைவாய்ந்த. [25] சிவகாமவல்லி. (நோயுற்ற இளங்குழந்தையின் மெல்லிய குடர் மருந்தின் ஆற்றலைப் பொறாதென வெண்ணித் தான்மருந்துண்டு அதன் பயனைப் பாலின்வழியே அக்குழந்தைக்கு ஊட்டும் தாய்போல, இறைவி, அம்பலவாணர் திருக்கூத்தைத் தான் கண்டு அதன்பயனை உயிர்கள் நுகருமாறு செய்வள் என்பதாம்.)

[26] இரண்டு. [27] இல்லறம். [28] உரியவன். [29] தொடர்புடையார் மாட்டு உளதாகும் உள்ள நெகிழ்ச்சி. [30] தொடர்பின்றி யாவர்மாட்டும் செல்லும் இரக்கம். [31] காத்து. [32] வழிபட்டு. [33] ஐவகை வேள்வி - வேதம் ஓதல், ஓமம் வளர்த்தல், பலியீதல், தென்புலத்தார்க் களித்தல், விருந்தோம்பல். [34] செய்து. [35] விலக்கப்படாத நன்னாளில்.

பெருநலந் துய்க்கும் [36]பெற்றித் தன்றே
[37]மற்றையது கிளப்பின் மனையற நிரப்பி
முற்றுணர் கேள்வியின் [38]முதுக்குறை வெய்திப்
பொருளு மின்பமும் [39]ஓரீஇ யருளொடு
பொறையும் [40]ஆற்றலு நிறைபே ரொழுக்கமும்
வாய்மையுந் தவமுந் தூய்மையுந் [41]தழீஇ
[42]ஓரறி வுயிர்க்கு முறுதுய [43]ரோம்பிக்
[44]காலோய் நடைய னாகித் தோலுடுத்
தென்பொழு மியாக்கையன் [45]துன்புறத் [46]துளங்காது
வரையுங் கானு மெய்திச் சருகொடு
[47]கானீ ரருந்திக் கடும்பனிக் காலத்து
[48]மாநீ ரழுவத் [49]தழுங்கி வேனிலில்
[50]ஐவகை யழலின் மெய்வருந்த வருந்தி
இவ்வகை யொழுகு மியல்பிற் றன்றே, அதனால்,
இந்நிலை யிரண்டும் [51]எம்மனோர்க் [52]கியலா
நன்னிலை யாகலி னந்நிலை நிற்றற்
[53]குரனும் [54]ஆற்றலு மின்றி [55]வெருவந்
தெளிதினிற் றமியனே னரியது பெறுதற்

---

36 தன்மையையுடையது. இவற்றால் இல்லறத்தின் இலக்கணங் கூறப்பட்டது. 37 துறவறம். 38 பேரறிவு. 39 நீக்கி. 40 (ஐம்பொறிகளையும் வயப்படுத்தொழுகும்) மனவலி. 41 தழுவி. 42 புல்மரமுதலியன. 43 வாராமற் காத்து இதனால் ''உயிர்க்கு உறுகண் செய்யாமை'' கூறப்பட்டது. 44 விரைந்த செலவு இன்மை. 45 பசி பிணி வெப்ப தட்பமிகுதி இவற்றால் வருவன. 46 கலங்காது. இதனால் 'உற்றநோய் நோன்றல்' கூறப்பட்டது.

47 காற்றையும் நீரையும் உண்டு. 48 பெரிய நீர்ப் பரப்பு. 49 வருந்தி. 50 ஐந்து வகைத் தீ; தன்னைச்சுற்றி நாற்புறமும் நெருப்பு வளர்த்து அதன் நடுவண் வெயில் வெப்பத்தையும் பொறுத்து நிற்றல்; இதனைப் பஞ்சாக்கினியென்பர். 51 எம்மையொத்தவர்க்கு. 52 எளிதிற் செய்ய முடியாத. 53 உள்ளத்தின் வன்மை; அறிவுமாம். 54 உடல்வன்மை. 55 அஞ்சி.

குளதோ நெறியொன் றுணர்த்துமி னீ[56]ரென
[57]முத்தலந் தலங்களுண் முத்தித் தலமா
[58]இத்தல முடைத்தென விசைத்தனர் சிலரே
அறிஞராங் குரைத்த உறுதிக் [59]கட்டுரை
உலகியல் வழக்கும் [60]புலனெறி வழக்குமென்
றிருவகை வழக்கினு [61]நிலைபெற் றன்றே: அவற்றுள்,
ஆரூர்ப் பிறத்தல் [62]நேர்படி னல்லது
செயற்கையி னெய்து மியற்கையதன்றே, [63]அதூஉ அன்று,
காசியி லிறத்த லேக்கித் தேசம்விட்
[64]டறந்தலைத் தந்த வரும்பொரு டாங்கிப்
பிறன்பொருள் கொள்ளாப் பேரறம் பூண்டு
[65]கழிபெருங் கான நீங்கி வழியிடைத்
தீப்பசிக் கிரங்கி [66]நோய்ப்பனிக் கொதுங்கிப்
பல்பிணிக் குடைந்து செல்லுங் காலத்
திடைச்[67]சுரத் திறவா தின்னுயிர் தாங்கிக்
[68]கிடைத்தன னாயி னடுத்தநல் லொழுக்கமோ
டுடல்விடு [69]காறுமத் தட[70]நகர் வைகி
[71]முடிவது கடைபோக முடிவதோ வரிதே, அதனாற்
சிற்றுயிர்க் கிரங்கும் [72]பெரும்பற்றப் புலியூர்
உற்றநின் றிருக்கூத் [73]தொருகா லேக்கிப்
பரகதி பெறுவான் றிருமுன் பெய்தப்
பெற்றனன் [74]அளியனேன் பற்றில னாயினும்
அன்பிலை கொடியையென் றருளா யல்லை
நின்பதம் வழங்குதி நிமலவென் றனக்கே

---

[56]என்று அறிஞரைக் கேட்க. [57]திருவாரூர் காசி தில்லை என்பன. [58]இந்தப்பூமி. [59]பொருள் பொதிந்த சொல். [60]செய்யுள் வழக்கு. [61]நிலை பெற்றது. [62]ஊழ் வசத்தால் அமைந்தாலன்றி. [63]அஃதல்லாமல். [64]நல்வினையால் தரப்பட்ட. [65]மிகப் பெரிய காடுகள். [66]துன்பத்தைத் தருங்குளிருக்கு.

[67]காடு; வழியுமாம். [68]அடைந்தானாயின். [69]அளவும். [70]காசியில் தங்கி. [71]இறத்தல் முற்றுப்பெற. [72]சிதம்பரம். [73]ஒரு முறை; தில்லைப் பெருமான் திருக்கூத்தை ஒரு முறை பார்த்த அளவிலே வீடு பெறலாம் என்பது நூல் துணிபு. [74]நின்னால் காக்கத்தக்கவனாகிய யான்,

மருந்துண் [75]வேட்கையன் மனமகிழ்ந் துண்ணினும்
அருந்துழி யொருவன் [76]அருவருப் புறீஇத்
தன்முகஞ் சுளித்துத் தலைநடுக் குற்றுக்
கண்ணீர் வீழ்த்துக் [77]கலுழ்ந்தனன் மாந்தினும்
வாய்ப்புகு மாயினம் மருந்திரு வருக்குந்
தீப்பிணி மாற்றுதல் [78]திண்ணமே யன்றி
[79]நொதுமலும் பகையும் போக்கி யொருபொருள்
விழுத்தகு கேண்மையோர்க் குதவல்
[80]வழக்குமன் றைய [81]மன்றுடை யோர்க்கே.

சிவப்பிரகாசர் இயற்றிய

## நால்வர் நான்மணிமாலை

[1]விளங்கிழை [2]பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரணன் [3]உரையெனும் [4]ஆரண மொழியோ
[5]ஆதிசீர் பரவும் வாதவூ [6]ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த [7]வாசகத் தேனோ
[8]யாதோ சிறந்த தென்குவி ராயின்
[9]வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்ச[10]நெக் குருகி நிற்பவர்க் காண்கிலேந்
திருவா சகமிங் [11]கொருகா லோதிற்
கருங்கல் மனமுங் கரைந்துகக் கண்கள்
[12]தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப [13]விதிர்விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி

---

75 வேட்கையனாகி. 76 வெறுப்புற்று. 77 அழுதுகொண்டு அருந்தினாலும். 78 உறுதி. 79 அயல். 80 ஆன்றோர் மரபு. 81 நீதிமன்றத்து இருந்து அறங் கூறுவோரையும் அம்பலமுடையாரையும் உணர்த்துதல் காண்க.

1. 1 உமாதேவியார்; அன்மொழித்தொகை. 2 பங்கிட்டுக் கொண்ட. 3 திருவாக் கென்று சிறப்பித்துச் சொல்லப்படும். 4 வேதவாக்கோ. 5 முதற்கடவுளாகிய சிவபெருமானது. 6 மணிவாசகனார். 7 திருவாசகமாகிய தேனோ. 8 இவ் விரண்டினுள் மேன்மையுடையது எதுவோ. 9 வேதத்தைப் பலமுறையோதி னாலும். 10 குழைந்துருகி. 11 ஒருமுறையோதினாலும். 12 தோண்டுகின்ற மணற்கேணி சுரக்குமாறுபோல, கண்கள் நீர் சுரந்து என்க.

மன்பதை யுலகின் [14]மற்றைய ரிலரே.

2. [1]இலைபடர்ந்த [2]பொய்கை யிடத்[3]தழுதல் கண்டு
முலைசுரந்த [4]வன்னையோ முன்[5]னின்—னிலைவிளம்பக்
கொங்கை [6]சுரந்த[7]வருட் கோமகளோ சம்பந்தா
இங்குயர்ந்தா ளார்[8]சொல் லெனக்கு.

3. [1]அறிந்து செல்வ முடையானும்
[2]அளகைப் பதியாற் [3]றோழமைகொண்
[4]டுறழ்ந்த கல்வி யுடையா[6]னும்
ஒருவன் வேண்டு மென[6]விருந்து
[7]துறந்த முனிவர் தொழும்[8]பரவை
துணைவா நினைத்தோ ழமைகொண்டான்

---

13 நடுநடுக்கம். 14 அன்பாகாதார்.

விதி விலக்குகளை யறுதியிட்டுக் கூறுவதாகலின் ஆரண மொழியோ என்றும் சிந்தைக்கும் செவிக்கும் வாய்க்கும் இனிமை பயத்தலின் வாசகத்தேனோ என்றுங் கூறினர்.

மலரிற் பிறந்த தேனென்றது நயமாதல் காண்க. ஒருகால் ஓதின் என்பதற்கு ஓர் அடியை ஓதினாலும் என்றும் பொருள் கொள்ளலாம்.

திருவாசகத்திற்குருகார் ஒருவாசகத்திற்கும் உருகார் என்பர். ஓகாரங்கள் வினைப்பொருளன.

2. [1] தாமரையிலைகள். [2] பிரமதீர்த்தக்கரை. [3] அம்மே அப்பா என்று நீ அழுதலைப் பார்த்து. [4] தாயாகிய அம்பிகையோ. [5] நினது நிலைமையை அந்தணன் ஒருவன் கூறும்பொழுதே. [6] விளம்பச் சுரந்த என்றமையால் இருசெயலும் ஒருங்கே நிகழ்தல் பெறப்படும். [7] முதிர்ந்த அன்புடைமையும் மங்கையர்க்கரசியாதலும் தோன்ற அருட்கோமகளோ என்றார். [8] ஞானசம்பந்தனாதலால் நீயே அறிந்து எனக்குச் சொல் என்பதாம்.

நேரில் அழுதலைக்கண்டும் இறைவன் தூண்டியபின் பால் சுரந்த அன்பினும், காணாது கேட்ட அளவில் பால் சுரந்த அருள் உயர்ந்ததென்பதாம். அங்ஙனம் சுரந்தும் அப்பால் ஊட்டப்பெறாமையின் அன்னையென்றிலர்.

3. [1] (அறிவும் திருவும் உடையார் நட்பு ஒருவர்க்கு இன்றியமையாதது என்பதைத்) தெரிந்து. [2] குபேரன். [3] இவனது நட்பு எளிதிற்கிடைத்தமையால் தோழமை கொண்டு என்றார். [4] (அறிவு வடிவமாய்த் திகழும் தம்மை) ஒத்த. [5] உம்மை உயர்வு சிறப்பு. [6] நெடுங்காலம் காத்திருந்து. [7] முற்றத்துறந்த உபமன்ய முனிவர் முதலாயினர். [8] சுந்தரரை விளித்தது.

நெற்றிக்கண் படைத்தவரே தோழமை கொண்டாராயின் நின்பெருமை சொல்லுந்தரத்ததோ என்பதாம். தம்பிரான்தோழர் என்பதும் அவர்க்குப் பெயர்.

சிறந்த வறிவு வடிவமாய்த்
திகழு நுதற்கட் பெருமானே.

4. [1]பெற்றா னினைப்[2]பெற் றவர்போற் பெறலும் பிறப்பதுண்டேல்
நற்றா ரணியி னினைப்போற்[3]பிறப்பது நல்ல[4]கண்டாய்
செற்றார் புரமெரி செய்தவில் வீரன்[5]திருப்பெயரே
[6]பற்றா மறிவெண் டிரைக்கட னீந்திய [7]பாவலனே.

குமரகுருபரர் இயற்றிய

**திருவாரூர் நான்மணிமாலை**

1. [1]தானமால் களிறு மாநிதிக் குவையும்
ஏனைய பிறவும் [2]ஈகுந ரீக
[3]நலம்பா டின்றி நாண்டுறந் [4]தாரீஇ
[5]இலம்பா டலைப்ப [6]வேற்குந ரேற்க
புரவலர் புரத்தலு மிரவல ரிரத்தலும்
[7]இருவே றியற்கையு மிவ்வுல குடைத்தே, [8]அதாஅன்று,
ஒருகா லத்தி லுருவமற் றொன்றே
[9]இடப்பான் முப்பத் திரண்டறம் வளர்ப்ப
[10]வலப்பா லிரத்தன் மாநிலத் தின்றே
விண்டொட [11]நிவந்த வியன்றுகிற் கொடிகள்
[12]மண்டலம் போழ்ந்து மதி[13]யக டுடைப்ப
வா[14]ணிலா வமுதம் வழங்கியக் கொடிகள்

---

4. [1] ஒரு புதல்வற் பெற்றால். [2] இருமுது குரவர்; புகழனார் மாதினியார். [3] மகவாய்ப் பிறத்தலும். ஏனைப் பேறும் பிறப்பும் நல்லன அல்ல என்பது குறிப்பு. [4] அசை. [5] திருவைந்தெழுத்து. "படைக்கல மாகவுன் னாமத் தெழுத்தஞ் சென்னாவிற் கொண்டேன்" என்பது அப்பர் திருவிருத்தம். [6] துணையாகக் கொண்டு. [7] நாவுக்கரசர். "கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும், நற்றுணை யாவது நமச்சி வாயவே" என்பது அப்பர் அருள் வாக்கு.

1. (உமையொரு கூறாய இறைவன் திருவுருவத்தைக் குறித்தது இச்செய்யுள்.) [1] மதநீர். [2] கொடுப்பவர். [3] நன்மையுண்டாதல். [4] நீக்கி. [5] வறுமைவருத்த. இலம்பாடின்றி யெனவும் பாடம். [6] இரப்போர். [7] இரண்டாகிய வேறுபட்ட இயல்புகளையும் [8] அங்ஙனம் அல்லாமல். [9] அம்பிகையின் கூறு. [10] சிவபிரான் கூறு. [11] உயர்ந்த. [12] சந்திர மண்டலம். [13] நடு; வயிறு. [14] சந்திரன்.

வேனிலிற் பயின்ற வெப்பம [15]தாற்றுபு
[16]கொடியா ரெத்துணைக் கொடுமை செய்யினும்
[17]மதியார் செய்திடு முதவியை யுணர்த்தும்
பன்மணி மாடப் பொன்மதிற் [18]கமலைக்
குடிநகர் வைப்பினிற் கண்டேம்
வடிவ மற்றிது வாழிய பெரிதே.

2. [1]கண்ணனூர் [2]பொய்ச்சூள் [3]கடைப்பிடித்தோ தென்புலத்தார்
[4]அண்ணலா ரஞ்சுவரென் றஞ்சியோ—[5]விண்ணோர்
விருந்தாடு மாரூரா மென்மலர்த்தா டேக்கா
[6]திருந்தாடு கின்றவா வென்.

3. [1]இதுவே பொருளென் றெ[2]வரெவர் கூறினு மே[3]ற்பதெது
அதுவே பொருளென் றறிந்துகொண் டேனப்
பொருளெவர்க்கும்
[4]பொதுவேயென் றூலும் பொருந்துமெல் லோர்க்கும்
[5]பொதுவினிற்கும்
மதுவேய் மலர்ப்பொழி [6]லாரூ ரினும்வைகும் வைகலுமே.

---

[15] ஆற்றி. [16] ஆடைக் கொடிகள்; கொடியவர். [17] சந்திரன்; அறிவுடையோர்; சிலேடை. கொடிகள் தன் வயிற்றைக் கிழித்து வருத்தியதையும் எண்ணாது அமுதம் பொழிந்து அவற்றின் வெப்பத்தைத் தணித்த மதியின் செயல் அறிஞர் செயலைப் புலப்படுத்தியது.

"இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால், என்ன பயத்ததோ சால்பு" என்பது பொய்யாமொழி. [18] திருவாரூர் என்னும் சிறந்த நகரத்தில். உலகத்தில் ஈகையாளரும் இரவலரும் தனித்தனியே இருப்பர். ஒரு காலத்தில் ஓர் உருவத்தில் ஒருபால் அறம் வளர்த்தலும் மற்றொருபால் இரத்தலும் அமைந்தமை வியப்பாகும். அவ்வடிவத்தைக் கமலையிற் கண்டேம். இது பெரிது வாழிய என்க.

2. இருந்தாடழகர் என்பது தியாகேசர் திருநாமங்களிலொன்று. [1] திருமால். [2] பொய்யான உறுதிமொழி; முன்பு காணாதார் இன்று கண்டேனென்று கூறுதல். [3] உறுதியாக எண்ணியோ. [4] கூற்றுவன். [5] தேவர்கள் புதுமையை அநுபவிக்கும் திருவாரூரில் இருக்கும் தியாகப்பெருமானே. [6] இருந்தாடுகின்ற விதம் யாது.

3. [1] இம்மூர்த்தியே பரம்பொருளென்று. [2] பல்வேறு சமயத்தார். [3] அவற்றை ஏற்றுக்கொள்ளும் பொருள். "விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்தே, எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்கேற்றதாகும்" (திரு நா. தே) [4] பொதுப்பொருளே. [5] அம்பலத்தில் நடித்து நிற்கும்; பொதுவான் இடத்தில் நிற்கும் என்பது வேறு பொருள். [6] திருவாரூரிலும் எழுந்தருளியிருக்கும்; யாருடைய ஊரிலும் தங்கும் என்பது வேறு பொருள்.

4. [1]மல்லல்வளங் கனிந்தபுகழ்[2]கமலேசர் திருவுருவும்
[3]வாம பாகத்
[4]தல்லமர்பைங் குழலுமையா டிருவுருவு மிருவருக்கும்
அமுத மான
கொல்லயில்வேற் பசுங்[5]குழவி திருவுருவு [6]மருவுருவாங்
[7]குணங்கண் மூன்றின்
[8]நல்லுருவா தலினன்றே[9]விவரகில காரணராய்
நவில்கின் றாரே.

சிவஞானமுனிவர் இயற்றிய

**செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ்**

வருகைப்பருவம்

1. உருகு மடியார் [1]அள்ளூற [2]வுள்ளே யூறுந் தேன்வருக
வுண்ணத் [3]தெவிட்டாச் சிவாநந்த வொளியே வருக
[4]புலன்வழிபோய்த்
[5]திருகு முளத்தார் நினைவினுக்குஞ் [6]சேயாய் வருக
வெமையாண்ட
செல்வா வருக வுண்மையீன்ற சிறுவா வருக விணைவிழியாற்
பருகு மமுதே வருக[7]வுயிர்ப் பைங்கூழ் தழைக்கக் கருணைமழை
பரப்பு முகிலே வருகநறும் பாகே வருக[8]வரைகிழித்த
முருக வேட்கு முன்னுதித்த முதல்வா வருக வருகவே
[9]மூரிக் [10]கலைசைச் செங்கழுநீர் [11]முனியே வருக வருகவே.

---

4. [1] மிக்கவளம். [2] திருவாரூரிலெழுந்தருளியுள்ள தியாகேசர். [3] இடப்பாகத்தில். [4] இருளையொத்த. [5] முருகக் கடவுள். [6] அருவத்தை உருவமாகப் பெற்ற. [7] சாத்துவிகம் தாமதம் இராசதம் என்னும் முக்குணங்களின். [8] வெண்மை கருமை செம்மை யென்பன. [9] இங்குக் கூறிய மூவருடைய நிறங்களும் இவையேயாதலின், முக்குணவடிவாய்த் திகழும் அனைத்துலகங்கட்கும் இம் மூவரும் தலைமக்களாவார் என்பது கருத்து.

வாயூறும்படி. [2] உள்ளத்திலே. [3] நிறையாத. [4] சுவை ஒளி முதலிய ஐம்புலன்கள். [5] மாறுபட்ட. [6] எட்டாதவனே. [7] உயிர்களாகிய பயிர். [8] கிரவுஞ்சமென்னுமலை. [9] பெருமை. [10] தொட்டிக்கலை யென்னும் ஊர். இது தொண்டை நாட்டிலுள்ளது. [11] யானைக்கன்று.

சிற்றிற்பருவம்

2. பெருத்த வயிறு [1]தயங்க மெல்லப் [2]பெயர்ந்து நடந்து
[3]குடங்கை மிசைப்
பெரும்[4]பண் ணியமு மேந்தியெம்பாற் பேணி வருநின்
வரவினைக்கண்
[5]டருத்தி யொடுநீ யுண்டபரி கல[6]சே டத்தை யடியேங்கட்
களிக்க வருவா யென்றுவகை யரும்பி வழிபார்த்
திருந்தேமை
வருத்த லழகோ [7]விக்கினஞ்செய் மன்னா னெனும்பேர்
[8]பேதையரே
மாட்டுத்[9]தெரிப்ப தொரு புகழோ மடவா ரூடன்
[10]மகிழ்நரென்றுந்
திருத்துங் கலைசைச் செங்கழுநீர்ச் சிறுவா சிற்றில் சிதையேலே
தெள்ளித் தெளிந்தோர்க் [11]கள்ளூறுஞ் செல்வா சிற்றில்
சிதையேலே.

இதுவுமது

3. [1]விருந்து விளிப்போ மெனக்கருதும் வேலை யடிகே ளிவணீயே
விரும்பி வந்தா யெனமகிழ்ச்சி [2]மீக்கூர் தலினாற்
செவ்வாயின்
[3]முருந்து தோன்ற [4]முறுவலித்தே மல்லா லொருநின்
[5]கரிமுகம்போன்
முகமும் [6]பூதப் பெருவயிறு [7]முடங்குங் [8]குறட்டா ணகு
நடையு
மிருந்த வாறு நோக்கிநகைத் திட்டே மல்லே மிடந்தோறு
[9]மிருக்கு முழக்குந் தேவாரத் திசையுந் [10]துவன்றி
யோங்கவளந்

---

2. [1] விளங்க. [2] இடம் விட்டு நீங்கி. [3] உள்ளங்கையிலே. [4] அப்பவகை. [5] ஆசை. [6] மிச்சிலை. [7] துன்பம்; தம்மை வழிபட்டார்க்குத் துன்பத்தைப் போக்குதலும் வழிபடாதார்க்கு ஆக்குதலும் செய்பவர். [8] சிறுமியரான எம்மிடத்து. [9] தெரிவிப்பது. [10] கணவர். [11] வாயூறும்.

3. [1] விருந்துக்கு அழைப்போம். [2] மிகுதலால். [3] மயிலிறகின் அடிபோன்ற பல். [4]சிரித்தோம். [5] யானை. [6] பூதத்தின் வயிறுபோன்ற பெருத்த வயிறும். [7]வளைந்த. [8] குறுகிய பாதங்களின். [9] வேதம். [10] நெருங்கி.

திருந்துங் கலைசைச் செங்கழுநீர்ச் சிறுவா சிற்றில்
சிதையேலே
தெள்ளித் தெளிந்தோர்க் கள்ளூறுஞ் செல்வா சிற்றில்
சிதையேலே.

**சிறுபறைப் பருவம்**

4. [1]குறுகுறு நடந்தெய்தி யெம் [2]பிரான் திருமேனி [3]குழையமே
லேறி [4]வேணிக்
கொத்தினைக் [5]கோட்டினிற் கோத்தலைத் துதறிவான்
குளிர் [6]புனல் [7]புழைக்கை [8]யெற்றிப்
[9]பொறியரவு [10]தலைமாலை வெள்ளென்பு [11]கைம்மாப் புலிச்
[12]சரும முதலணி யெலாம்
[13]பொள்ளென வெடுத்தெடுத் தங்கை [14]யனலிற்பெய்து
போக்கியிள மதியை [15]வன்றி
[16]யெறுழுலவை யொன்றப் பொருத்தித் திருக்கை மா [17]னிடை
வைத்து [18] முற்று மதிசெய்
திருவிசும் [19]புய்த்துவான் [20] றருத்தரும் [21]பேரணிகொ
[22]டெங்கணு மலங்கரித்துச்
[23] சிறுமையிலை யினியென வசைக்குங் கரங் கொண்டு
சிறுபறை முழக்கி யருளே
[24]தென்கோ விருந்தநகர் [25]உற்பல விநாயகன்
சிறுபறை முழக்கி யருளே.

---

4. [1] குறுகக் குறுக அடியிட்டு நடந்து. [2] சிவபெருமான். [3] துவள. [4] சடைக் கற்றையை. [5] கொம்பினால். [6] கங்கைநீரை. [7] உள் துளையுள்ள கை; துதிக்கை. [8] அடித்து. [9] படப்புள்ளி. [10] தலைகளாலாகிய மாலை. [11] யானை. [12] தோல். [13] விரைவாக. [14] நெருப்பிலிட்டு. [15] பன்றியின். [16] வலிய கொம்புடன். [17] அவ்விரண்டுக்குநடுவில் வைத்து. [18] கலைநிரம்பிய. [19] செலுத்தி. [20] கற்பகதரு. [21] அணிகலங்களால், [22] சிவபெருமானுடைய வேணி முதலிய எல்லாவிடங்களும். [23] இழிவு இல்லை. [24] தொட்டிக்கலை யென்னும் ஊர். [25] செங்கழுநீர் விநாயகக்கடவுளே.

குமரகுருபரரியற்றிய

## முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

* சப்பாணிப்பருவம்

1\. [1]விண்ணென் கடற்[2]புவன[3]முடவுப் படத்தேந்து
[4]வேந்துபொலி [5]பாந்தள்வைப்பும்
[6]விரிநீர் [7]வரைப்பு மெழில்[8]விஞ்சைய ரிருப்புமுகை
[9]விண்டுநறை விரி[10]முண்டகக்
கண்ணன் றிருப்[11]பதமு நான்முகக் கடவுள்பூங்
[12]கஞ்சமுங் [13]குலிசப் பிரான்
கற்பகக் காவுநின் றொண்டர்க [14]டொழும்புக்கோர்
[15]காணியா வைத்துமற்றத்
[16]திண்ணென் றடக்கைவெஞ் சிலைவேடர் குடிகொண்ட
[17]சீறூரு மூரூர்தொறுஞ்
செந்தினைப் புன[18]மூடு தண்சாரல் பிறவுமாஞ்
[19]சீதனக் காணிபெற்றத்
[20]தண்ணென் குறிஞ்சித் தலந்[21]தலை யளிப்பவன்
சப்பாணி கொட்டியருளே
[22]தையனா யகிமருவு தெய்வநா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே.

---

* (சப்பாணி கொட்டும்படி குழந்தையிடம் கூறுவதாக அமைத்துப்பாடுவது. சப்பாணி = கையோடு கைசேர்த்துக் கொட்டுதல்.)

1\. [1] விண் என்னும் ஒலியைச் செய்கின்ற; (பி-ம்) "விண்ணெண்" [2] நிலவுலகத்தை. [3] வளைந்த. [4] ஆதிசேடன். [5] நாகருலகம். [6] கடல். [7] பூவுலகம். [8] வித்தியாதார் உலகம். [9] விரிந்து. [10] தாமரைக் கண்ணனாகிய திருமால். [11] வைகுந்தம். [12] தாமரைத் தவிசும். [13] வச்சிரப்படையையுடைய இந்திரன். [14] தொண்டுக்கு. [15] காணியாட்சியாக; உரிமையாக. [16] உறுதியான. [17] சிற்றூரும். [18] நிறைந்த. [19] பெண்வழிச் சொத்து. [20] குளிர்ந்த. [21] காப்பவனே. முருகன் குறிஞ்சிக் கடவுளாதலின் இங்ஙனங் கூறினார். [22] தையல் நாயகி வைத்திய நாதர் என்பன, வைத்தீசுவரன் கோயிலில் வீற்றிருக்கும் அம்மை அப்பர் திருப்பெயர்கள்.

## *அம்புலிப்பருவம்

2. கங்கைமுடி[1]யடிகட்கோர் கண்ணா[2]யிருத்தியக் கண்ணினுண்
மணியிவன்காண்
[3]கலைகள்சில நிறைதிபின் குறைதியிவ னென்றுமொண்
[4]கலைமுழுது நிறையநின்முன்
எங்கு[5]மிர வோனெனத் திரிதியிவ னடியவர் எவர்க்குமிர
வினையொழித்தான்
இருநிலத் த[6]ங்குரிக் கும்பயிர் வளர்த்தியிவன்
எவ்வுயிரும் வாழச்செய்தான்
பொங்கமுத ம[7]முதாச னர்க்குதவி னாயிவன்
[8]புத்தி[9]முத்தியுமளித்தான்
[10]புவனம் படைத்தவிவ னின்னின்[11]மிக் கானெனப்
புகல்வ[12]தோர் பொருளன்றுகாண்
[13]அங்கண்மறை [14]யோலிட் டரற்றநின் றவனுடன்
அம்புலீ யாடவாவே
அழகுபொலி[15]கந்தபுரி தழையவரு கந்தனுடன்
[16]அம்புலீ யாடவாவே.

---

*சந்திரனைக் குழந்தையோடு விளையாட வாவென்று அழைத்தலைக் கூறுவது.

2. [1] சிவபெருமானுக்கு. [2] இருக்கின்றாய். [3] கிரணங்கள். [4] வேதாகமங்கள் முதலான நூல்களெல்லாவற்றினும். [5] இரவினையுண்டாக்குவோன்; யாசிப்பவன் என்பது மற்றொரு பொருள். [6] முளைக்கும் ஓரறிவுயிராகிய பயிர்களை. [7] அமுதத்தை யுணவாகவுடைய தேவர்கட்கு. [8] இவ்வுலக இன்பம். [9] வீட்டுலக இன்பம். [10] உலகம். [11] மேலானவன். [12] ஒரு பெரியதான காரியமன்று; அவன் பெருமைக்கு ஏலாது என்றபடி. [13] அழகிய அறிவைத் தரும். [14] முறையிட்டு அரற்றும்படி. [15] வைத்தீசுரன் கோயில். [16] சந்திரனே; விளி.

***சிற்றிற்பருவம்**

3. கானக்[1]குறப்பெண் குடியிருந்த[2] கன்னிப் புனத்துத் தினைமாவுங்
கமழ்தேன் றெளிவு முண்டுசுவை கண்டா யென்றே
மதுவல்லால்
மீனத் தடங்கண் அவண்[3]மிச்சில்[4]மிசைந்திட் டதுவு[5]நசை மிக்கு
[6]விரைத்தீங்[7]குமுதத் தமுதடிகள் விருந்தா டியதும்
[8]விண்டோமோ
கூனற் பிறையின்[9]கோடுரிஞ்சும் கொடிமா டத்து வெயில்
விரிக்குங்
[10]குருமா மணியாற்[11]சுரநதியிற் கொழுந்தா மரைகள்
[12]முறுக்குடைந்து
[13]தேனக் கலருஞ் சோணாடா சிறியேஞ் சிற்றில்[14]சிதையேலே
செந்நெற் பழனப்[15]புள்ளூரா சிறியேஞ் சிற்றில்
சிதையேலே.

---

*சிறுமியர் சிறுவீடு கட்டி விளையாடுங்கால் பாட்டுடைத்தலைவர் அவற்றை யழிக்கும்போது எம் சிற்றிலை அழியாதொழிகவென வேண்டுவது.

3. [1] வள்ளியம்மையார். [2] இளங்கொல்லை. [3] எச்சிலை. [4] தின்றதுவும். [5] விருப்பம். [6] நறுமணம். [7] செவ்வாம்பல் மலரையொத்த வாயிலூறும் நீர். [8] சொன்னோமோ. [9] நுனி. [10] நிறம். [11] கடவுட் கங்கையாறு. [12] கட்டவிழ்ந்து. [13] தேனோடு விளங்கி விரிதற்கிடமான. [14] அழிக்காதே. [15] புள்ளிருக்கும் வேளூர் ; வைத்தீசுரன்கோயில். மேல் மாடத்துப் பதித்த மணியினொளியை வெயிலென்று கருதித் தாமரைகள் மலருமென்றதனால் மாடத்தினுயர்வும் செல்வமிகுதியுங் கூறப்பட்டன.

4. [1]மடல்வா யவிழ்ந்த குழற்பேதை[2]யொருத்தி திருத்தும் [3]பகிரண்ட
மணற்சிற் றிலையோர் கணத்தின்கண்[4]மட்டித் தாடு [5]மைந்தனருள்
[6]விடலாய் தமியேஞ் சிற்றில்முற்றும் விளையாட் டாக வொருநீயும்
[7]வீட்டா நிற்பத் தொடங்கினை[8]யால்[9]வித்து முளையும் வேறன்றே
[10]கடமா மருப்புஞ் சுடர்மணியுங் கதிர்[11]நித் திலமு மகளிர் [12]நகிற்
[13]களபத் தொடுகுங் குமச்சேறுங்[14] கரைத்து விடுத்[15]தக் கடற்குட்டந்
[16]திடராச் செயுங்கா விரிநாடா சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் பழனப் புள்ளூரா சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

---

4. [1] பூவின் இதழ். [2] உமையம்மை. [3] வெளியண்டங்களாகிய. [4] அழித்து. [5] வன்மையுடைய சிவபெருமான். [6] விடலையே. [7] அழிக்க. [8] ஆதலால். [9] வித்தும் அதிலிருந்து முளைத்த செடியும். மகனறிவு தந்தையறிவு என்றபடி. [10] யானை. [11] முத்து. [12] கொங்கை. [13] கலவைச் சாந்தோடு. [14] கரைத்து விட்டு. [15]. அக்கடலாகிய பள்ளத்தை. [16] மேடாகச் செய்கின்ற.

## சிவஞானமுனிவர் இயற்றிய

## அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்*

### விநாயக வணக்கம்

1. [1]மணிகொண்ட[2]கோ[3]டார்ரு மருங்குண்மை யாற்[4]பெண்மை
வடிவென்று [5]மஃ தின்மையோர்
மருங்குண்மை யாலாண்மை வடிவென்று[6]மீதுகீழ்
மாறிய திருக்காட்சியால்
அணிகொண்ட வுயர் திணைய தென்றுமஃ றிணையென்றும்
யார்க்குங் [7]கிளக்கவரி தாம்
ஐங்கரச் [8]சிந்துரத் தின்[9]கழற் செஞ்சரண மஞ்சலித்
துத்துதிப்பாம்
[10]பணிகொண்ட[11] துத்திப் படத்திற் [12]கிளைத்தவிர்
[13]பருஉமணி [14]விளக்கினொருபாற்
[15]பாயிருட் படலஞ் [16]செறிந்தொளிர்வ தென்னவப்
பாம்பணை கிடக்கு[17]மொருவன்
[18]திணிகொண்ட மல்லற் புயக்குவடு [19]விம்மத் [20]திளைக்குமகள்
வாணிபிரியாத்
தென்[21]குளந் தாபுரி யிருந்தவமு தாம்பிகை
செழுந்[22]தமிழ்க் கவிதழையவே.

---

1. [1] அழகு; முத்துமாம். [2] கொம்பு. [3] இடப்பக்கம். [4] கொம்பைக் கொங்கையாகக் கருதுவதனால் பெண்மை வடிவென்றார். [5] அக்கொம்பு இல்லாமை, [6] மேற்பாகம் யானைத்தலையாகவும் கீழ்ப்பாகம் மக்களுடலாகவும் வேறுபட்டிருக்கின்ற. [7] சொல்ல. [8] யானை; விநாயகரையுணர்த்திற்று. [9] வீரக்கழல். [10] பாம்பு; ஆதிசேடன். [11] புள்ளிகளையுடைய. [12] தோன்றி விளங்கும். [13] பருத்த. [14] ஒளியினால். [15] பரந்த இருட் கூட்டம். [16] ஒருபாற் செறிந்து ஒளிர்வதென என்க. [17] திருமால். [18] திண்மை. [19] பூரிக்க. [20] தழுவுந்திருமகள். [21] குளத்தூர்; தொண்டைநாட்டிலுள்ளது. [22] தமிழாற் பாடுகின்ற பிள்ளைத் தமிழ் என்னும் நூல். *கவிதழைய அஞ்சலித்துத் துதிப்பாம் என்க.

### *தாலப்பருவம்

2. [1]மதுரங் கொழிக்குங் கொழுந்[2]தேறல் மடுத்துச் [3]சுரும்ப
ரடைகிடக்கும்
மலர்ப்பூந்[4]தடத்தைக் காண்டலுஞ்செம்
மணி[5]கால்[6]குடுமிப் [7]பணியுலகம்
[8]இதுவு [9]மரவந் தனக்கிடமா யிருக்குங் கொல்லோ
வென்[10]றழுக்கா
றெய்தித்[11]தன்கீழ்ப் படத்தாழ்த்தும் இயல்பை[12]யறிந்தா
லெனக்கரைக்கட்
[13]பொதுளி [14]யுறவு கொண்ட நறும் [15]பொதும்பர்[16]நாக
ருலகெனு[17]மொப்
புமையாற் [18]புலவோர் [19]பதிதாழ்த்திப் பொற்று
துதிர்க்குந் திருக்குளந்தைப்
பதியின் மகிழு நறியசுவைப் பாகே தாலோ தாலேலோ
[20]பணில முயிர்த்த தரளநகைப்
பாவாய் தாலோ தாலேலோ.

---

*குழந்தையைத் தொட்டிலிலிட்டு மகளிர் நாவினாற்பாடும் பாட்டுடன் அத் தொட்டிலை யாட்டும் பருவம். தால்—நா. தாலாட்டுப்பருவமென்றது தாலப் பருவமெனவாயிற்று.

2. [1] இனிமை. [2] தேனையுண்டு. [3] வண்டு; இறதிப் போலி. [4] பொய்கையை. [5] வெளிப்படுத்தும். [6] உச்சியையுடைய. [7] நாகலோகம். [8] இத்தடாகமும். [9] பாம்பு. [10] பொறாமை. [11] தனக்குக் கீழாகத் தாழச் செய்யும். [12] அறிந்தாற் போல. [13] நெருங்கி. [14] அப்பொய்கையோடு நட்புக் கொண்ட. [15] சோலை. தனக்கு உறவாகிய பொய்கையைத் தன் கீழ்ப்படுத்திய நாகலோகத்தைத் தாழ்த்த முடியாமை கருதி என வருவிக்க. [16] கீழுள்ள பாம்புலகத்திற்கும் மேலுள்ள தேவர் உலகத்திற்கும் இப்பெயர் பொது. [17] பெயர் ஒற்றுமையால். [18] தேவர். [19] அமராவதி நகரைத் தாழச் செய்து. [20] சங்கு.

பொய்கையின் ஆழம் நாகலோகத்திற்குக் கீழுள்ளதென்றும், சோலையின் உயர்ச்சி உம்பருலகத்திற்கும் மேலுள்ளதென்றுங் கூறப்பட்டன.

***சப்பாணிப்பருவம்**

3. [1]உருப்பொலி மணிப்[2]புன [3]லுடுக்கைப் [4]புவிக்கொடி யுரத்திற்
குலாவுமாக்கள்
[5]உருத்தொன்றை யாற்றினெதிர் பத்தாற்று வோமெனு
[6]முரைக்கிலக் கியமாகவொண்
[7]குருப்பொலி [8]விரற்செறி செறித்துப் பொலந்தொடிகள்
[9]கொளுவித் தனைப்[10]பரிவினுற்
கொண்டாடு நின்றிருத்[11]தாகைகிளை யொன்றைக்
[12]குழைத்துப் பணித்தவிறைவன்
திருப்பொலி[13]கடுக்கைதழை [14]தோட்குவடு பத்தையுஞ்
செழுந்[15]தழும் பாக்குழைத்துத்
[16]திறல்கொண்ட நறுமலர்க் காந்தளங் கைத்தலஞ்[17]சேந்தழ
கெறிப்பவிமையோர்
தருப்பொலி மலர்த்தொடைக் கூந்தலமு தாம்பிகை சப்பாணி
கொட்டியருளே
தண்டமிழ்ச் சுவைகண்ட தென்குளத் தூரம்மை சப்பாணி
கொட்டியருளே.

---

*குழந்தை கையொடு கை பொருந்தக் கொட்டும்படி கூறும் பருவம்.

3. [1] நிறம் விளங்குகின்ற. [2] கடல்; ஆகுபெயர். [3] ஆடை. [4] நிலமகளின் மார்பில்; பூமியின்மேல். [5] வெகுண்டு. [6] நீயொன்று செய்தால் பத்துச் செய்வோமென்பது பழமொழி. [7] நிறம். [8] மோதிரம். [9] பூட்டி. [10] அன்பினுல். [11] இமவானின் சுற்றமாகிய மேரு மலை. [12] வில்லாக வளைத்து. [13] கொன்றை. [14] புய மலைகள். [15] தழும்பு உண்டாக. [16] வெற்றி. [17] சிவந்து.

### *வாரானைப்பருவம்

4. [1]தெய்வச் சுருதி தமிழ்க்கன் றித்[2]தீட்டா நிலைமைத் தெனவுலகில்
[3]தெரிக்குங் [4]காழித் [5]திருஞானச் செம்மற் குழவிக்
கருண் ஞானம்
[6]பெய்து குழைக்க வோ[7]நகிலாம் பெரிய மலை[8]வா யுறுத்து
மென்றே
பெருமான் றனையுங்[9]குழைத்தவலிப் பெற்றி யறிந்து
தடுத்தோபூங்
[10]கையீ லிலகு நகக்குறிபற்[11]கதுவ நோமென் றேதீம்பால்
கறந்து கொடுத்தா யெனச்[12]சகிமார் கனிந்து பாட[13]நகை
முகிழ்க்கும்
[14]வைவைத் தமைத்த மதர்வேற்கண் வாழ்வே வருக வருகவே
வளங்கூர் குளந்தைப் பதியமுத வல்லி வருக வருகவே.

---

* குழந்தை நடந்து வரும்படி விரும்பியழைக்கும் பருவம்.

4. [1] கடவுட்டன்மை வாய்ந்தமறை. [2] (பிறமொழிகளால்) எழுத முடியாத இயல்பினை யுடையது. [3] தெரிவித்த; நான்மறையின் மெய்ப்பொருளைத் தேவாரப் பாடல் களாக அருளிச் செய்தமையைக் குறிக்கும். [4] சீகாழி. [5] திருஞானசம்பந்தப் பிள்ளையார்க்கு. [6] கலந்து. [7] கொங்கையாகிய. [8] பிள்ளையின் வாயைத் தன்புறத்தும். [9] குழையும்படி செய்த வன்மைத் தன்மை. [10] சிவபெருமா னுடைய திருக்கரம். [11] பற்ற. [12] தோழியர். [13] புன்முறுவல் அரும்புகின்ற. [14] கூர்மை.

குமரகுருபரசுவாமிகள் இயற்றிய

## மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

### தாலப்பருவம்

1. [1]தென்னந் தமிழி னுடன்பிறந்த [2]சிறுகா லரும்பத் [3]தீயரும்புந்
தேமா நிழற்கண் டுஞ்சுமிளஞ் செங்கட் [4]கயவாய்ப்
[5]புனிற்றெருமை
இன்னம் பசும்புற் கறிக்கல்லா இளங்கன் றுள்ளி மடித்தலநின்
றிழிபா லருவி [6]யுவட்டெறிய எறியுந் திரைத்தீம் புனற்
பொய்கைப்
பொன்னங் கமலப் [7]பசுந்தோட்டுப் பொற்றூ தாடிக்
கற்றை[8]நிலாப்
பொழியுந் [9]தரங்கம் பொறையுயிர்த்த பொன்போற்
றெடுதோ லடிப்பொலன்சூட்
டன்னம் பொலியுந் தமிழ்மதுரைக் கரசே தாலோ தாலேலோ
அருள்சூற் கொண்ட வங்கயற்கண் அமுதே
தாலோ தாலேலோ.

---

1. [1] தெற்கின்கண் வழங்கும் அழகிய தமிழ்; தென்னற்றமிழ் எனவும் பாடம்: [2] இளந்தென்றல். [3] நெருப்புப்போலச் சிவந்த தளிர்விடுகின்ற; தென்றல் வீசுங்காலத்து மாமரம் தளிர்த்தல் இயல்பு [4] பெரியவாய்; ஆழமானவாய் எனினுமாம். [5] ஈன்றணிமையுள்ள எருமை. [6] பெருக்கெடுப்ப. [7] மெல்லிய இதழ்களிலுள்ள பொன் நிறமான மகரந்தங்களில் திளைத்து. [8] வெண்ணிற மான ஒளியை வீசும். [9]பாற்கடல்பெற்ற திருமகள்.

எருமை தன் கன்றை நினைந்து சொரிந்த பாலால் பொய்கை பாற்கடலை யொத்துத் தோன்ற, பொற்றாமரைப் பூந்தாதில் திளைத்துப் பொன்னிறம் பெற்று அம்மலரில் இருக்கும் அன்னம் திருமகளையொத்துத் தோன்றிற்று.

“ தாலோ தாலேலோ ” என்பது பிள்ளைகளைத் தாலாட்டுவார் கூறும் ஒரு வகை வாய்பாடு. நாவை ஆட்டிப் பாடுவதனால் தாலாட்டு என்னும் பெயர் வந்தது. தால்—நா. தாலாட்டுப் பருவம் என்பது தாலப் பருவம் என நின்றது

### * முத்தப்பருவம்

2. காலத் தொடு[1]கற் பனைகடந்த [2]கருவூ லத்துப் [3]பழம்பாடற்
கலைமாச் [4]செல்வர் தேடிவைத்த கடவுண் மணியே யுயி[5]ரால
வாலத் துணர்வு நீர்பாய்ச்சி வளர்ப்பார்க் கொளிபூத் தளி
பழுத்த
மலர்க்[6]கற் பகமே யெழுதாச் சொல் [7]மழலை ததும்பு
பசுங்[8]குதலைச்
சோலைக் கிளியே யுயிர்த்துணையாந் [9]தோன்றாத் துணைக்கோர்
துணையாகித்
துவாத சாந்தப் பெருவெளியிற் றுரியங் கடந்த பரநாத
மூலத் தலத்து முளைத்தமுழு முதலே முத்தந் தருகவே
முக்கட் சுடர்க்கு விருந்திடும் முலையாய் முத்தந் தருகவே.

### † வருகைப் பருவம்

3. தொடுக்குங் கடவுட் [1]பழம்பாடற் றொடையின் பயனே
[2]நறைபழுத்த
[3]துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ் சுவையே [4]யகந்தைக்
கிழங்கையகழ்ந்
தெடுக்குந் [5]தொழும்ப ருளக்கோயிற் கேற்றும் விளக்கே
வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும் இளமென் பிடியே
யெறிதரங்கம்

---

* குழந்தையை முத்தந்தாவென்று தாயரும் பிறரும் வேண்டுவதாகக் கூறுதல் மரபு.

2. [1] பாவனை. [2] பொருளுறையில்லம். [3] வேதம். [4] ஞானியர். [5] பாத்தி. [6] அம்பிகையைக் கற்பகமாக உருவகஞ் செய்ததற்கியையப் பாத்தி நீர் பாய்ச்சல் முதலிய செயல்கள் கூறப்பட்டன. [7] எழுத்து வடிவம் பெற்றுத் தோன்றும் இளைய சொல். [8] எழுத்து வடிவம் பெறாத சொல். [9] தோன்றாத் துணை— இறைவன்.

(பி - ம்) "கருகூலத்து" "உணர் வின்னீர் பாய்ச்சி" "அருள் பழுத்த"

† தளர்நடையிட்டுவருங் குழந்தையை வாவென்று அழைப்பதாகக் கூறுவது இப்பருவச் செய்தி.

3. [1] வேதம். [2] தேன். [3] அகமும் புறமுமாகிய துறைகள். [4] ஆணவமலத்தின் வேரை. [5] அடியார்.

உடுக்கும் புவனங் கடந்துநின்ற [6]ஒருவன் றிருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கும் [7]உயிரோ வியமே
[8]மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள வஞ்சிக் கொடியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு வாழ்வே வருக வருகவே.

### * அம்புலிப்பருவம்

4. [1]கண்டுபடு குதலைப் பசுங்கிளி [2]யிவட்கொரு [3]கலாபேத மென்ன
நின்னைக்
கலைமறைகண் முறையிடுவ கண்டோ வலாதொண்
[4]கலா நிதி யெனத்தெரிந்தோ
வண்டுபடு தெரியற் றிருத்[5]தாதை யார்மரபின் [6]வழிமுத
லெனக்குறித்தோ
வளர்சடை முடிக்[7]கெந்தை தண்ணறுங்[8]கண்ணியா
வைத்தது கடைப்பிடித்தோ
[9]குண்டுபடு பாற்கடல் வருந்[10]திருச் சேடியொடு கூடப் பிறந்த
தோர்ந்தோ
கோமாட்டி யிவணின்னை [11]வம்மெனக் [12]கொம்மெனக்
கூவிடப் பெற்றுயுனக்
[13]கண்டுபடு சீரிதன் றுதலா லிவளுடன் அம்புலீ யாடவாவே
[14]ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ யாடவாவே.

---

3. [6] சிவபெருமான். [7] உயிருள்ள சித்திரம். [8] வண்டு. நான்மறையின் பயன், தீந்தமிழின் சுவை, உளக் கோயிற்கு விளக்கு, பொருப்பில் விளையாடும் பிடி, இறைவன் உள்ளத்து உயிரோவியம், கூந்தற் காட்டை யேந்துக்கொடியென்று கூறப் பெற்றவை அறிந்து இன்புறத்தக்கன.

*சந்திரனைக் குழந்தையோடு விளையாட வாவென்று அழைத்தலைக் கூறுவது. (இதன்கண், அம்பிகை சந்திரனிடத்து அன்பு செய்தற்குரிய காரணங்கள் கூறப்படும்.)

4. [1] கற்கண்டு. [2] தடாதகைப் பிராட்டிக்கு. [3] உடம்பின் கூறு; இறைவனுக்குரிய அட்டமூர்த்தம் இறைவித்கும் உண்டு ஆதலின் சந்திரனைக் கலாபேத மென்றார். [4] கலைகளுக்கு இருப்பிடம்; கலை - வித்தை, கிரணம். [5] மலையத் துவசர். [6] குலமுதல்வன். [7] சிவபெருமான். [8] தலையிற் சூடும் மாலை. [9] ஆழம். [10] திருமகளாகிய தோழி. [11] வாவென்று. [12] விரைவாக. [13] பொருந்திய. [14] மாற்றுயர்ந்த பொன்மயமான மலை.

மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் இயற்றிய

## திருவிடைமருதூர் உலா

### மங்கைப்பருவம்

[1]திரையிற் பிறவாத தெள்ளமுதம் [2]ஓங்கல்
வரையிற் பிறவா வயிரந்—தரையிற்
பிறந்த மதியமைந்தர் பேராசை கொள்ளச்
சிறந்த பசுங்[3]காம தேனு—[4]வுறந்த
[5]புரிகுழல் கட்டவிழ்க்கும் போதா டவர்த
மரியமன முங்கட் டவிழ்ப்பா—டெரிய[6]முடி
செய்துமயிர் சேர்த்துச் செருகும்போ தே[7]பனித்தல்
செய்[8]யுயிருஞ் சேர்த்துச் செருகுவாள்—வெய்யவிடம்
[9]உண்டா னுமிழ்ந்தான்கொல் லோவென்று மால்பிரமன்
கண்டா னடுங்குமிரு கண்ணினாள்—[10]தண்டாமை
கொண்டமைந்தர் நெஞ்சங் குடிபுகுந்தா டப்பொன்னாற்
[11]கண்ட திரு [12]வூசலெனுங் காதினா—ளண்டம்
[13]வளைத்தாள் கதிர்மதிய மாக்[14]களங்க மாற்றி
முளைத்தா லனைய முகத்தாள்—[15]திளைத்தபெருங்
[16]காமரச மெல்லாங் [17]கமழ வடைத்தசிறு
[18]தாமச்[19]செப் பென்னுந் தனத்தினாள்—[20]நாமமறத்
[21]தன்னை யறிந்து[22]பரந் தானேயென் பான்[23]பொருவத்
தன்னை யறிந்து தருக்குவாள்—[24]கொன்னே
பெருத்து முலைகணமைப் பின்பு வருத்தத்

---

1 கடல்; ஆகுபெயர். 2 உயர்ந்த மலையில். “மலையிடைப் பிறவா மணியே யென்கோ, அலையிடைப் பிறவா அமுதே யென்கோ.” (சிலப். 2. 77-8) என்றல் காண்க. 3 ஓர் தெய்வப் பசு. 4 செறிந்த “விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவே” என்பது தொல்காப்பியம். 5 கட்டமைந்த கூந்தலை. 6 முடித்து, கொண்டையிட்டு. 7 நடுக்கம். 8 “முருகிற் சிவந்த கழுநீரும் முதிரா விளைஞர் ஆருயிரும், திருகிச் செருகுங் குழல் மடவீர்” (கலிங்—கடை) என்றல் காண்க. 9 சிவபெருமான். 10 விட்டு நீங்காமையை. 11 செய்த. 12 ஊஞ்சல். 13 (வலமாகச்) சுற்றிவந்து ஆளுகின்ற. 14 கறுப்பு. 15 நுகர்தற் கேற்ற. 16 மதனவின்பம். 17 மணம் நாற. 18 ஒளி; மாலையுமாம். 19 ஒரு வகைப் பாத்திரம். 20 அச்சம் நீங்க. 21 உயிரின் இயல்பைத் தெரிந்து. 22 பரம் பொருள். 23 ஒப்பாக. 24 வீணை.

[25]திருத்துமெனத் தேர்ந்த விடையாள்—[26]மருத்துப்
பொதியமலை நின்றுவரப் போயேற்பாள் [27]பின்னர்
[28]உதியமைதீப் போல்வ துணராண்—மதியு
மெழுந்துவரக் கண்டுவெப்பு ளீதே [29]வடவைக்
கொழுந்துவொரு மென்றாட் [30]குறியாள்—செழுந்[31]தாளக்
கோவை புனைந்து [32]குவட்டருவி யொத்ததென்று
[33]பூவை யொருத்திசொலப் [34]புந்திசெய்வா—டாவிக்
கரைகட வாத கடல்போல வன்னை
யுரைகட வாமே யுறைவாள்—வரையின்
[35]பகையிந்தி ராணி பணைமுலைதோய் காலந்
தகையினுளங் கொள்ளுந் தகையாள் [36]நகைசெய்
[37]மனைமுகப்பி லெண்ணின் மடவாரோ டெய்தி
நினையு நிலாமுற்ற நின்று—புனையு
[38]முலைப்பகை யாகி முளைத்த துணர்ந்து
[39]தலைப்பகை கொண்டுசெங்கை தாக்கு—நிலைப்பெண்ணைப்
பந்தடித்து [40]முத்தம் பலமுகத்து நின்றுதிரச்
[41]சந்தத் தனத்து[42]முத்தந் தாம்பிறழ—[43]நந்த
விளையாடு போதில் விரும்புதாய் வந்து
[44]வளையாடு செங்கைமட மாதே—யிளையர்
[45]இயங்கு தலைமாற்று மெண்ணமோ மேலாய்

---

25 இருக்கச் செய்யும் 26 தென்றற்காற்று. 27 மருதீசருடைய பவனிகண்ட பின்பு. 28 கொல்லன் உலைத் துருத்தி. 29 ஊழித் தீயின் சுவாலை. 30 நினையாள். 31 முத்துவடம். 32 மலையுச்சியினின்றும் வீழருவி. 33 நாகணவாய்ப்புள்போல்வாள். 34 நினைந்து பார்ப்பாள். 35 இந்திரன் 36 ஒளி வீசுகின்ற. 37 வீட்டின் முன்வாயில். 38 கொங்கைக்கு உவமையாகக் கூறப்படும் பொருள்களில் பந்தும் ஒன்றாதலின், அது, கொக்கைக்குப் பகைமையாய். 39 குழலுக்குப் பகையான கூந்தற் பனையின் மட்டையைக்கொண்டு; கூந்தற் பனைச்சாம் மகளிர் கூந்தலுக்குவமை. பனைமட்டையைக்கொண்டு பந்தடித்து விளையாடுதல் அக்காலத்து வழக்கம். இன்றும் பந்தடிமட்டையென்பர். 40 முத்துப்போன்ற வேர்வைத் துளிகள் பல. 41 சந்தனக் குழம்பு; அழகும் நிறமும் ஆம், 42 முத்துமாலை. 43 மிக. 44 வளையல். 45 உலாவுதலை.

[46]வயங்கு துறவுமடி யாதோ—[47]பயங்கொள்
கருப்புவில்லி காணிற் கனகமய மான
[48]பொருப்புவில்லி யோடு [49]பொரவோ—விருப்பார்
[50]திருமங்கை கண்டறிஞர் செந்நா வகத்த[51]
மருமங்கை யாதன் [52]மதித்தோ—[53]வருமந்த
பொன்னே மணியே புறவே பசுமயிலே
மின்னேயிவ் வாடல் விடுகென்றாள்.

சிவக்கொழுந்துதேசிகர் இயற்றிய

தஞ்சைப்பெருவுடையாருலா

**பேதைப்பருவம்**

[1]பெண்களெழிற் [2]றிலக மென்னவளர் [3]பேதையுயர்
தெண்கடலிற் றோன்றாத [4]சிற்றமுதம்—திண்கருத்தை
நாட்டலின்றிக் [5]கையறியாப் பேதையர்செய் நற்றொழில்போல்
கூட்டி [6]முடித்திடாக் கூந்தலாள்—[7]ஈட்டமுடன்
அண்டரெல்லாம் போற்றும் [8]அளகா புரேசனெழிற்
[9]கண்டவிடம் போலிருக்குங் கண்ணினாள்—வண்டினங்கள்
பூமருவு [10]கா[11]மயிலைப் [12]பூம்பாவை யென்றுரைக்குந்
தேமொழிபோற் [13]சென்றுவந்த சீறெயிற்றாள்—[14]ஏமமிலாக்
[15]குஞ்சரக்கன் றின்வாயிற் [16]கோடடங்கி மன்னுதல்போல்

---

46 விளங்குகின்ற துறவறத்தார் ஒழுக்கம். 47 அச்சம். 48 சிவபெருமானோடு. 49 போர் செய்யவோ. முன்னம் சுடப்பட்டமையால் அச்சமுற்ற மன்மதன் இம்மங்கையைத் துணைக்கொண்டால் சிவபெருமானுடன் போர் செய்யத் துணிவான் என்பதாம். 50 திருவாகிய மங்கை; இலக்குமி. 51 தங்கியிருக்குங் கலைமகளாதலை; இலக்குமியும் இவள் வடிவழகைக்கண்டால் வெட்கி உடல் விளர்ப்பளென்பது கருத்து. 52 எண்ணியோ. 53 அருமையான; அருமருந்தன்ன என்பதன் மரூஉவாகக்கொண்டால் அமுதத்தை யொத்தவென்க.

1 பெண்களில். 2 நெற்றியிலிடும் பொட்டு; ஈண்டு மேலானவள் என்னும் பொருளையுணர்த்தும். 3 பருவப் பெயர். 4 விலக்குருவகவணி; பருவ நோக்கிச் சிறுமையடை கொடுக்கப்பட்டது. 5 செய்யு முறைமையறியாத அறிவிலிகள். 6 தொழிலுக்கு:—முற்றுப்பெறாமை; கூந்தலுக்கு:—கொண்டையிடப்படாமை. "பொய்படும் ஒன்றோ புனைபூணுங் கையறியாப், பேதை வினைமேற்கொளின்" என்ற குறட்கருத்து வந்துள்ளது. 7 கூட்டம். 8 சிவபெருமானை யுணர்த்திற்று. 9 கழுத்திலுள்ள நஞ்சு; செயலற்றிருத்தல் ஈண்டு உவமை. 10 சோலை. 11 மயிலாப்பூர். 12 ஒரு வணிகப்பெண்; இறந்து பின் சம்பந்தரால் உயிர் பெற்றவள். 13 விழுந்து முளைத்த. 14 பாதுகாப்பு இல்லாத. 15 யானைக்கன்று. 16 கொம்பு.

[17]மஞ்சணியா கத்தடங்கு மாமுலையாள்—[18]அஞ்சலென்னே
[19]நீடிமரப் பாவை விளையாட நீவருகென்
றா[20]டி நிழலை யழைத்திடுவாள்—கூடிமுலைப்
[21]பாலுண் கிலதெனது பாவைமருந் [22]தூட்டுமென்று
[23]சேலுண்க [24]ணன்னையர்பாற் செப்புவாள்—கோலமுறு
[25]பூவைக்கு மின்னார்சொல் போதித்தல் கண்டெதிரே
[26]பாவைக்குத் தன்சொல் பயிற்றுவாள்—மேவுமிவள்
[27]ஆதிதனை யன்னையர்கள் [28]அஞ்சலிக்க வஞ்சலித்துத்
[29]தாதிவர்பூங் கொன்றையரைத் தான்பார்த்துச்—சோதியணி
[30]மின்னேர் [31]சடாமகுட வெண்பிறையை[32]யென்னிதென்றாள்
[33]மன்னேர் மருவு மதியென்றார்—பின்னர்
வலங்கையினி லோங்கு மழுவையென்னி தென்றாள்
இலங்கி யிடும்[34]பரசி தென்றார்—நலங்கொ[35]ளிடந்
தன்னில் வளரு[36]முழை தன்னையிது வென்னென்றாள்
கன்னி யிதுகலைமான் கன்றென்றார்—இன்னதனை
வாங்கியெனக் கிப்போது வண்பாவை தன்னுடனே
தாங்கிவிளை யாடத் [37]தருகென்றாள்—[38]ஆங்கவரும்
மாங்குயிலே யிம்மான் [39]வனமா னினமல்ல

---

17 அழகையணிந்தமார்பில். 18 அஞ்சுதற்குக் காரணம் யாது. 19 மரப் பாவையை வைத்து நீண்ட நேரம் விளையாடுதற்கு. 20 கண்ணாடியிற்றோன்றும் தன்னுடைய பிரதி பிம்பத்தை. 21 எனதுபாவை பாலுண்கிலது எனக் கூட்டுக. 22 நீங்கள் ஊட்டுங்கள்.

23 கெண்டைமீனையொத்தகண். 24 ஐவகைத்தாயர். 25 நாகணவாய்ப் புள்ளுக்கு 26 மரப்பாவைக்கு. 27 பெருவுடையாரை. 28 கைகூப்பித்தொழ. 29 மகரந்தம் மிக்குள்ள. 30 மின்னலையொத்த. 31 சடையாற் கட்டப்பட்ட முடி. 32 இதுயாது. 33 நிலைபெற்ற அழகு. 34 இதுமழுவாயுதம். 35 இடது திருக்கரத்தில். 36 மான். 37 இப்போது தருக எனக் கூட்டுக. 38 தாயர்; ஒருசொல் நீர்மைத்து. 39 காட்டில் திரிகின்ற மான்.

ஓங்கு[40]முனிவரர்க [41]ளோமத்தில்—ஆங்கெழுந்து
தேனையுற்ற பூங்கொன்றை [42]வேணிச் சிவ[43]பெரு
மானையன்று பாய்வதற்கு வந்ததுகாண்—[44]ஆனநெடு
[45]வன்கண்மை யுள்ளதிவர் மாமலர்க்கை[46] போலவே
நின்கை யினிலடங்கி நிற்குமோ—[47]என்குறித்தாய்
வாங்கி யளித்தவுடன் மன்னு முனையுமுன்றன்
பாங்குற்பொற் பாவையையும் பாய்ந்திடுங்காண்—நாங்களினி
வானத் தெழுந்து வருங்[48]கலைமா னைப்பிடித்துத்
தானிற்றை நாளே தருகின்றேம்—தேனேவா
என்ன [49]வெடுத்தா ரிவளிருகண் [50]முத்துதிர்த்தாள்
அன்னவரு மின்சொலா லாற்றினார்—கன்னல்விற்
[51]பஞ்சசர னாதியோர் [52]பாங்கு வரத்தஞ்சைச்
[53]செஞ்சடையா னந்தத் தெருவகன்றான்.

சிவப்பிரகாசர் இயற்றிய

**திருவெங்கை யுலா**

**மடந்தைப்பருவம்**

[1]கஞ்சம்
அடங்கு [2]பொகுட்டி னமர்[3]திருவிற் கோடி
மடங்கு [4]கவின்கூர் மடந்தை—[5]நுடங்கு
[6]கொடிமின் னொழுக்காக் குளிர்[7]புயன்மே னின்ற
படிமன்னு கூந்தலுடைப் பாவை—[8]தொடிமன்னு

---

40 தாருகாவனத்து முனிவர்கள். 41 வேள்வியில். 42 சடை. 43 பெரிய மான் என்பது மற்றொரு பொருள். 44 அத்தகைய. 45 அஞ்சாமைக்குணம். 46 கையில் அடங்கியிருத்தல் போலவே. 47 என்ன நினைத்தாய். 48 கலைகளையுடைய சந்திரனிடத்துள்ள மானை; ஆண் மான் என்பது மற்றொரு பொருள். 49 எடுத்தவர்—தாய்மார். 50 நீர்த்துளிகளை. 51 ஐந்து அம்புகளையுடைய மன்மதன். 52 பக்கத்தில். 53 பெருவுடையார்.

1 தாமரைப்பூவினுள் அடங்கிய. 2 கொட்டையில். 3 இலக்குமியைப் பார்க்கினும். 4 அழகு மிக்க. 5 அசைகின்ற. 6 மின்னற்கொடியை ஒழுக விட்டு. 7 மேகம், அம்மின்னற்கொடிக்கு மேல்நின்றவாறுபோல. 8 வீரவளை.

செங்கைக் [9]குமாரவேள் [10]செவ்வேலை யொப்பாக்கச்
சங்கப் புலவர்க்குத் தானுரைப்ப [11]அங்கடுத்து
[12]மாரவே [13]ளம்பாக்கின் [14]வார்புருவக் கென்[15]சிலையும்
நேருமே யென்னு நெடுங்கண்ணாள்—சீருலாங்
[16]காரளகம் விண்ணுதல்வேற் கண் [17]குமிழ்மூக் [18]கூசல்கா
தாரமெயி ரும்பலித [19]மாடி [20]கவுள்—[21]வேரரோள்
காந்தளங்கை [22]யோதிகொங்கை [23]காயமிடை [24]வாழைதொடை
மாந்தளிர்செந் தாளென்று மாதரெனப்—போந்தவர்கள்
எல்லார்க்கு [25]மொப்ப [26]விசைப்பவற்றை [27]யொப்பாக்கல்
பொல்லா [28]தெனவுயர்ந்த புத்தமுதம்—தில்லாமல்
[29]மாதவர்கண் [30]மால்கொள்ள [31]மால்கொண்ட [32]பெண்ணுருவும்
[33]யாதுமழ கில்லையெனவந்தாள்—கோதில்
துறவறமொன் றுண்டென்று சொல்லுமுறை [34]தற்கண்
ணுறுமளவு மென்னு முருவாள் —[35]பொறியரவும்
மந்தர வெற்பு மறிகடலு [36]மின்றமுதந்
தந்தருளுஞ் செவ்வாய்த் தளிரியலாள்.

---

9 முருகக் கடவுள். 10 (தனது) செவ்விய வேற்படையை (இம்மடந்தையின் கண்களுக்கு) உவமையாக்கும்படி. 11 அப்புலவர்கள்பாற்சென்று. 12 மன்மதன். 13 என்னுடைய பாணத்தை உவமையாக்கினால். 14 நீண்ட புருவத்திற்கு 15 வில்லும் ஒப்பாகுமே. 16 மேகம். 17 குமிழம்பூ. 18 ஊஞ்சல். 19 கண்ணாடி. 20 கன்னம். 21 மூங்கில்.

22 மலை. 23 ஆகாயம். 24 வாழைத்தண்டு. 25 பொருந்த. 26 சொல்லுகின்றவற்றை. 27 இம்மாதினுடைய உறுப்புக்களுக்கு உவமையாக்கிக் கூறுதல். 28 என்று கூறும்படி. 29 தாருகாவனத்து முனிவர்கள். 30 மையல். 31 திருமால். 32 மோகினியின் வடிவமும். 33 சிறிதும். 34 தன்னைப் பார்க்குமளவும். 35 படப்புள்ளியையுடைய வாசுகியென்னும்பாம்பும். 36 இல்லாமலே.

ஒட்டக்கூத்தர் இயற்றிய

## இராச ராச சோழனுலா

### பெதும்பைப்பருவம்

மற்று [1]மொருத்தி வலம்புரி யாயிரஞ்
சுற்றுஞ் [2]சலஞ்சலம்போற் றோன்றுவாள்—கற்றுடன்
[3]அன்ன நடக்க நடந்தா ளருங்[4]கிள்ளை
பின்னா ருடன்பேசப் பேசினா—ளின்னிசை[5]யாழ்
பாட வதனுடனே பாடினாள் பைந்[6]தோகை
யாட வதனுடனே யாடினாள்—கூடிய
நல்லிள மானோ[7]ணுக்க நோக்கினா [8]ணிரம்பு
[9]முல்லை முகிழ்க்க[10]நகைமுகிழ்த்தாள்—கொல்லு
[11]மழகளிற்றின் கோடெழுச்சி யென்று [12]மரவக்
குழவி யெயிறெழுச்சி யென்றும்—பழகி
[13]யெறியு மழையெழுச்சி யென்றும் உலகம்
அறியு முலை[14]யெழுச்சி யன்னம்—செறியும்
[15]வரையேழி னுள்ள வயிரமும் [16]வாங்குந்
[17]திரையேழின் முத்தின் றிரளுந்—[18]தரையேழிற்

---

[1] பெதும்பைப் பருவத்தாள். [2] ஆயிரம் வலம்புரிச் சங்குகள் சூழ அவற்றின் நடுவில் சலஞ்சலமென்னும் சங்கு இருப்பதாகக் கூறுதல் கவி மரபு. [3] அன்னம் நடக்க அந்நடையைக் கற்று உடன் நடந்தாளென்க. [4] கிளி. [5] வீணையான து இசையை எழுப்ப. [6] மயில். [7] மருண்டு பார்க்க. [8] பூத்தற்குரிய காலம் நிரம்பிய. [9] முல்லைக்கொடிகள் அரும்புவிட. [10] பற்கள் வீழ்ந்து முளைக்கப் பெற்றாள். [11] யானைக்கன்றின் கொம்பின் தோற்றம். [12] பாம்புக்குட்டியின் நச்சுப்பல். [13] இடியை வீசுகின்ற. [14] எழுதலையுடைய. [15] அட்டகுல மலைகளில் கைலையொழிந்த ஏழு மலைகள். [16] விளைந்த. [17] ஏழு கடல்கள். [18] நாவலந்தீவு முதலிய ஏழு தீவுகள்.

பொன்னும் [19]பிலனேழிற் [20]போகா விருள்போக
மின்னுஞ்[21]சுடிகை வெயின்[22]மணியும்—பின்னும்
[23]பொழிலேழிற் போதும் [24]புனையும் [25]புனனாட்
டெழி[26]லேறு[27]நாளையே யென்னுக்—கழிய
[29]வுழப்போ மினியென் றுடலுள்ள போழ்தே
யெழப்போக வென்னு மிடையாண்—[29]மழைத்துப்
புடைபோ [30]யளகம் புதுக்குவதன் முன்னே
கடைபோ யுலகளக்குங் கண்ணு—ளுடையதன்
[31]சேரிச் சிறுசோறுஞ் சிற்றிலும்போய்ச்[32]சில்லணிபோய்ப்
[33]பேரிற் பெருஞ்சோற்றுப் பேரணியா—[34]ளோர்வயிற்
றன்[35]னுய நிற்பத் தனி[36]நா யகன்கொடுத்த
மின்னுயஞ் சேவிப்ப வீற்றிருப்பாள்.

*நெல்விடுதூது

மண்ணுலகோர்

நாடுகுடி யேறுதற்கும் [1]நாட்கால்கள் நாட்டுதற்கும்
வீடு குடிபுகுதும் வேளைக்கும்—[2]ஏடுபிடி
கல்விக்குப் போவார்க்குங் [3]கன்னியுங்காப் புந்தொலையச்
செல்வக் கலியாணஞ் செய்வார்க்கும்—நல்ல[4]துதிக்
கையாரைப் போற்றியிரு கையால் [5]நிறைநாழி

---

[19] அதலம் முதலிய கீழுலகங்கள் ஏழு. [20] செறிந்த இருள். [21] உச்சி. [22] மாணிக்கம். [23] ஏழு சோலைகளில் உள்ள மலரும். [24] அணிகின்ற ஏறு என்க. (13-17) இவ்வடிகளால் பாட்டுடைத் தலைவனது பரந்த ஆட்சி கூறப் படுகிறது. [25] சோழவளநாடு. [26] ஆண் சிங்கம் போன்ற இராசராசன். [27] (உலாப்போதல்) நாளைக்கே. [28] வருந்துவோம். [29] மேகத்தின் தன்மையை யுடையதாய்; இருண்டு. [30] கூந்தல். [31] தெருவில் சிறுசோறடுதலும் சிற்றி லிழைத்தலும் இலையாய். [32] சிலவாகிய அணிகள். [33] பெரிய வீட்டின் கணிருந்து பெருஞ்சோறுக்குதலும் பேரணிகலன்புனைதலும் உடையவள். [34] ஓர் இடத்தில். [35] மகளிர் கூட்டம். [36] தலைவன்.

* ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

[1] நல் ஓரையில் நாட்டப்படுந் தூண்கள். [2] சுவடி. [3] குமரித்தன்மையும் இற் செறிப்புமுதலியகாவலும். [4] யானைமுகக் கடவுள். [5] நெல்லை நிறைத்து வைத்தபடி.

வையாமல் [6]தெட்சணைமுன் வையாரே—தையலார்
வாசமணப் பெண்பேசி வாரவரும் உன்பேரைப்
பேசியல் லோபணத்தைப் பேசுவார்—[7]ஆசைமனு
நின்னைவிடப் பேசினபேர் நெல்லுடையார் வீடுதொறும்
பொன்னலையக் காதலையப் போயலைவார்—பின்னையுநீ
அந்தரங்க மாக [8]அடுக்களையிற் போய்ப்பணத்தைப்
பந்தலிலே யாடவிட்டுப் பார்த்திருப்பாய்—எந்தவித
ஆனாலும் பொன்னால் அமையாத காரியமுந்
தானாக நின்று தரியிடுவாய்—நீநாட்டிப்
போகாத காரியத்திற் போவாரார் பொன்னாலே
ஆகாத காரியத்துக் கண்ணனென்பாய்—ஓகோகோ
நேயவித்தை போலுலகில் நீயாடும் வித்தைவெகு
மாயவித்தை கண்டாய் வகைகாரா—தாயாக
ஏழுலகம் [9]ஈன்றருளி எண்ணான் கறம்வளர்த்து
வாழுமக மாயி[10]குழல் வாய்மொழித்தாய்—சூழ்பெருமை
அத்தனைக்குங் குற்றாலத் தையரளக் கும்படிதான்
நித்த மிருநாழி நெல்லன்றோ—உத்தமியார்
அவ்வளவு கொண்டே [11]யகிலாண்ட மும்வளர்த்தால்
எவ்வளவென் றுன்பெருமை யெண்ணுவேன்—[12]செவ்வியர்தாம்
உன்னைப் படியளந்தார் ஓங்குமலை யாய்வளர்ந்த
பொன்னைப் படியளக்கப் போகாதே.

* * * * *

---

[6] காணிக்கை. [7] பொன்னை ஈட்டும் நெறி கூறும் நூல்; பொருள் நூல். [8] சமையலறை. [9] பெற்று அவற்றையாள்பவள். [10] திருக்குற்றாலத்து உறையும் இறைவியின் திருப்பெயர். [11] எல்லா அண்டங்களையும். [12] சிவபெருமான்.

பொன்னும் பணமும் புலையன் படைப்பானே
அன்னம் படைப்பதுன்போல் ஆர்க்குவரும்—என்னதான்
தாயார்கைப் பொன்னிருந்துந் தன்கைத் தவிடாமோ
தோயாத பொன்னையுமுன் சொல்லுவதோ— பேயாபோ
எண்ணுமற் பொன்னை யிகழ்வாருண் டேயுலகில்
உண்ணுமல் வாழும் உயிருண்டோ.

*    *    *    *

உன்னை யுடையா ருலகுடையா ரல்லாமல்
பின்னை யுடையார் பிறருண்டோ—மன்னர்
பலகுடை நீழலுந்[13] தங்குடைக்கீழ்க் காண்பர்
[14]அலகுடை [15]நீழ லவரென்—றுலகுடைய
வள்ளுவர்தான் சொன்ன [16]மறைநூல் விதியதனைத்
தள்ளுவார் தாமுண்டோ தாரணியில்—[17]தெள்ளிமையாய்
[18]ஓதுவா ரெல்லாம் உழுவான் தலைக்கடைக்கென்
றேதுவாய்ச் சொன்னமொழி யேற்குமே.

*பணவிடுதூது

பாமாலை பெற்ற விலைக்குப் பதின்மடங்காச்
[1]சீமான் கொடுத்த [2]திரவியமே—[3]நாமம்
பணமே யெனப்படைத்த பாக்கியவா னே[4]வங்
கணமேயென் னுருயிரே கண்ணே—[5]குண நிதியே
[6]சாம்புநதி [7]தீரத்துஞ் [8]சாளக் கிராமத்தும்
மேம்படு[9]சித் தாதிகள்செய் வித்தையிலுந்—தேம்பொழியும்

---

13 தம் அரசன் குடைக்கீழ். 14 கதிர்; நெல்லையுணர்த்திற்று ஆகு பெயரால். 15 தண்ணளியையுடைய உழவர். 16 தமிழ்மறையாகியதிருக்குறள். 17 தெளிவாய்.

18 "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்" என்ற திருக் குறளோடு ஒப்பிடுக.

* இந்நூலை இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை.

1 வெங்கடேச மகிபன்; பாட்டுடைத் தலைவன். 2 செல்வமே. 3 பெயர். 4 என் உறவே. 5 குண நிறைந்தவனே. 6 மேரு மலைக்குத் தெற்கில் நாவற் பழச்சாறொழுகும் யாறு; இதில் விளையும் பொன் சிறந்தது. 7 கரை. 8 வடநாட்டுத் திருமால் திருப்பதிகளுள் ஒன்று; கண்டகிநதிதோன்றுமிடத்தி லுள்ளது; திருமால் அடையாளமுள்ள ஒருவகைக் கல் உண்டாகும் இடம். 9 அணிமா முதலான எண்வகைச் சித்திகளும் கைவரப் பெற்றவர்கள்.

பன்றி மலையினுநீ பண்டுபிறந் தாயங்கு
நின்றுலக மெங்கு நிறைந்திட்டாய்—ஒன்றுகேள்
ஈசனுக் கொப்பென்பா ரீசனையுண் டாக்கியவன்
பூசனைநீ செய்விப்பாய் புண்ணியா—பேசுங்கால்
[10]மூவர் கடவுளர்கண் மூவரிலொன் றானதனித்
தேவன் மகிமைதனைச் சென்றேத்தற்—காவதுபோல்
[11]சின்மயமா முன்னுடனே செம்புவெள்ளி சேர்ந்தாலும்
உன்மயமே யெங்கு முயர்ச்சிகாண்—[12]பொன்மகளை
மார்புதனின் மாயோன் வரிசையா வைத்ததுநின்
[13]பேர்மகிமை கண்டாய் பெரியோனே—பாருலகில்
ஆன்ற பலகோடி[14]யாத்மவர்க்க மத்தனையும்
ஈன்ற பிரமனு[15]நீ யீன்றமகன்—தோன்றுமொரு
நற்பொருளுண் டாங்கவன்றன் நாம[16]மிரணிய
கெற்பனென்று சொல்வதுநான் கேட்டிலனோ—[17]கற்பனையால்
ஆங்கவனுண் டாக்கு மகிலாண்ட கோடியெல்லாம்
தாங்குமக மேருவுநீ தானன்றோ— தீங்கின்றி
எண்ணான் கறம்வளர்த்தி ரட்சிக்குங் காந்திமதிப்
[18]பெண்ணா ரமுது பிறந்ததலம்—அண்ணலே
முந்[19]திமய மான முழுச்[20]சிமய வெற்பென்பார்
அந்தமலை யுன்றன்மய மல்லவோ—[21]எந்தையார்
முந்தப் பதஞ்சலிக்கு முன்னின்று கூத்தாடும்
அந்தக் கனகசபை யார்வடிவம்—நிந்தையிலா
உன்மரபு சொல்ல[22]வொரு கோடி நாட்செல்லும்
என்மனதில் வந்த தியம்புவேன்.

---

10 அயன், அரி, அரன் என்பவர். 11 அறிவுருவாகிய; இங்ஙனம் கூறியது உபசாரம். 12 திருமகளை.
13 திருமகளுக்குப் பொன் என்னும் பெயர் உண்மையால் மாயவன் அவளை மார்பில் தரித்தான் என்பது. 14 உயிர்த் தொகுதி. 15 பொன் என்பது, திருமாலின் மனைவியான இலக்குமிக்கும் பொன்னுக்கும் பெயராதலாலும், திருமாலின் உந்தித் தாமரையில் தோன்றியவன் பிரமனாதலாலும் நீ பெற்ற புதல்வன் என்றார். 16 பிரமன்; பொன்மயமான அண்டத்தின் நடுவில் இருப்பவன் என்பது பொருள். 17 கல்வியினால். 18 பெண்களுக்குள் அரிய அமுதுபோல்வாள். 19 இமயமான வெற்பு எனக் கூட்டுக. 20 சிகரம் 21 சிவன். 22 மிகப் பலநாள் என்பது கருத்து.

மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களியற்றிய

**திருவாவடுதுறை ஆதீனத்து**

## சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடு தூது.

[1]கண்டு நனி
[2]ஆசைப்பட் டேனெஞ்சே [3]யந்தோவக் காரணத்தா
[4]லாசைப்பட் டேனென நா னாயினேன்—[5]தேசுறமு
[6]ன்னன்னங்கா ணானைக்கண் [7]டாரா மயக்கம்பூண்
[8]டன்னங்கா ணாதவளே யாயினேன்—முன்னமொரு
[9]கோலங்கா ணானைக்[10]குறுகியிரு கைதொழுது
[11]கோலங்[12]கா ணாமை[13]குறுகினேன்—[14]சால
[15]வளையாழி மாற்கீந்த வள்ளலைக் கண்டு
[16]வளையாழி தோற்றுமனை வந்தேன்—[17]விளையுமொரு
[18]தாய்வெறுக்கப் பட்ட தகையானைக் கண்டடைந்து
[19]தாய்வெறுக்கப் பட்ட[20]தகையானே—னாயுந்
[21]தனியானைக் கண்டு[22]தனியாயி னேனென்
[23]றுனிதீர நெஞ்சே சொலக்கேண்—[24]முனியாமன்
[25]முன்னு மவனை [26]முயங்கும்வகை நீபுரிவாய்
மன்னுமுனைப் போன்றதுணை வாய்க்குமோ—[27]பன்னுபல
வேதாகமங்கள் விதித்த விதியனைத்தும்
[28]ஏதாகு நீயியைவ தில்லையெனின்—மீதாரும்

---

[1] (பாட்டுடைத் தலைவராகிய ஞானதேசிகர் பவனிவருங்கால் அவருடைய முடி முதல் அடிவரை யெல்லாவுறுப்புக்களையும்) பார்த்து. [2] ஆசைகொண்டேன். [3] ஐயோ. [4] இக்காரிய ஆடையை யுடுத்தேன் என்னும்படி. [5] ஒளியுருவாய் நிற்க. [6] பிரமனாகிய அன்னப்பறவை. [7] நிரம்பாத; மேல்மேல் வளர்கின்ற. [8] உணவில் வெறுப்புள்ளவளானேன். [9] திருமாலாகிய பன்றியால். [10] அணுகி. [11] உடல் வனப்பு. [12] பார்க்கமுடியாதபடி. [13] குறைந்தேன். [14] மிகவும். [15] வட்டவடிவான சக்கரத்தை. [16] வளையலையும் மோதிரத்தையும் இழந்து. [17] எல்லாம் தோன்றுதற்கிடமான. [18] மாயையால் ஒதுக்கப்பட்ட; மாயையைக் கடந்த என்றபடி. [19] அன்னையால் வெறுத்துத் தள்ளப்பட்ட. [20] தகையுள்ளவளானேன். [21] ஒப்பற்றவனை. [22] (பிறர் துணையின்றித்) தனிமைப் பட்டேன். [23] துன்பம் நீங்க. [24] வெகுளாமல். [25] கருதப்படும். [26] தழுவும் வகையை. [27] சொல்லுகின்ற; ஆராய்கின்ற என்றலும் ஆம். [28] என்ன பயனுடையதாகும்.

[29]யோக மிருநான்கு முன்னே வயப்படுத்தற்
காக [30]முயலுவன வல்லவோ—[31]போகமுறு
தன்மைக்குஞ் செய்யுந் தவத்திற்குங் [32]கற்றுணரு
நன்மைக்குங் கொள்ளுமொரு நட்பிற்கும்—வன்மைக்கு
[33]மீகைக்கு [34]மோர்த னியல்புணர்ந்து முத்திபுண
[35]ரோகைக்கு நீயே [36]யுறுதுணைகாண்—[37]ஆகையுறு
மில்லறத்தா ரைத்துறவி லேற்றுவிப்பாய் மெய்த்துறவா
நல்லறத்தா ரைக்கீழ் நணுகுவிப்பாய்—சொல்லு
மறத்தைமற மாக வமைப்பாய் கொடிய
மறத்தையற மாக்குதற்கும் வல்லாய்—சிறப்பி
[38]னொடுக்குதலே முத்தி யுனைப்[39]பொறிவா யோட
விடுக்குதலே [40]பந்தவினை மேலு—[41]நடுக்குதலற்
றுன்னு லுயர்ந்தவரை யுன்னு லிழிந்தவரை
யென்னு லளவிடுதற் [42]கேயுமோ—பன்னுளு
[43]மெம்மேனி யேனு மெடுத்[44]தந்தி வானநிகர்
[45]செம்மேனி யாளிவரச் செய்குவாய்

---

29 இமயம், நியமம், ஆசனம், வளி நிலை, தொகை நிலை, பொறை நிலை, நினைதல், சமாதி எனும் எட்டு வகையான யோகநெறிகளும். 30 முயன்று செய்யப்படுவன. 31 ஐம்புல இன்பங்களை ஆரத்துய்க்கும் இயல்புக்கும் 32 நூல்களைக் கற்று அவற்றின் உண்மைப் பொருளையறிகின்ற. 33 கொடுத்தற்கும். 34 ஒப்பற்ற சிவத்தின் இயல்பையோர்ந்து 35 பெருமகிழ்ச்சிக்கும். 36 சிறந்த துணை. 37 மேன்மேல் வளர்தலுற்ற. 38 உன்னை அடக்குதலே. 39 ஐம்பொறிகளின் வழியே. 40 கட்டுப்படுதற்கு ஏதுவாகிய செயல். 41 அசைதலின்றி. 42 பொருந்துமோ. 43 எவ்வடிவமேனும். 44 மாலைப் பொழுதிற்றோன்றும் செவ்வானம் 45 சிவபெருமான்.

## *தமிழ்விடுதூது

[1]கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தகவென்ற—சொற்குள்ளே
எல்லார்க்கும் புத்தி யியம்பிக் கரையேற்ற
வல்லா யுனைக் [2]குறைக்க வல்லனோ—சொல்லியவுன்
[3]ஈரடிக்குள் ளேயுலக மெல்லா மடங்குமெனின்
[4]நேரடிக்கு வேறே நிலனுண்டோ—[5]ஓரடிக்கோர்
ஆயிரம் பொன்னிறைக்கு மையரை வீதியிலே
போயிரந்து [6]தூதுசெல்லப் போக்கினோ—யாயிருந்தும்
மாண்பாயோர் தூதுசொல்லி வாவென்பே னென்வருத்தம்
காண்பாயென் [7]பெண்மதிநீ காணாதே—[8]ஆண்பனைநற்
பெண்பனையா யாக்கினையாற் பெண்களிலே [9]காரைக்கால்
வண்பதியா ரெளவையென வந்துதித்தாய்—நண்பார்

---

*இந்நூலாசிரியர் பெயர் தெரியவில்லை

[மதுரைச் சோமசுந்தரக் கடவுள்பாற் காதல்கொண்ட ஒரு மாது வேட்கை நோயால் வருந்தித் தமிழை அவர்பால் தூதுவிட்டதாக இயற்றப்பெற்றது.]

1 "கற்க .... தக" திருக்குறள். 2 அறிவுறுத்த வல்லமையுடையேனோ. 3 இரண்டடிகளா லமைந்த திருக்குறளினுள்ளே. "வள்ளுவர் தங்குறள் வெண்பாவடியால் வையத்தார் உள்ளுவவெல்லாம் அளந்தா ரோர்ந்து" என்றது காண்க. 4 நான்கு சீரையுடைய அடி; ஈண்டு நாலடியாரை யுணர்த்தும். 5 உலாப்போந்தருளுங்கால் அடிக்கு ஆயிரம் பொன்னளிப்பவர் திருவாரூர்த் தியாகப்பெருமான். 6 சுந்தரர்க்காகப் பரவையாரிடம் தூது போக்கியது தமிழ் என்பது கருத்து. "தொண்டர்நாதனைத் தூதிடை விடுத்ததும்......கன்னித் தண்டமிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்" என்றார் பரஞ்சோதியார். 7 பேதைமை. 8 ஆளுடைய பிள்ளையார் திருவோத்தூரில் ஓரன்பர் பொருட்டு மாற்றியமைத்தது. 9 காரைக்காலம்மையார்.

திலகவதி யாருடனே [10]சென்மித்தாய் மாடக்
[11]குலதவதி யானத்தர் கூடல்—பலதவஞ்சேர்
மேனியார் [12]கண்டிகையும் வெண்ணீறுங் கண்டுருகும்
[13]மானியார் [14]தேசிகனை வந்துதித்தாய்—[15]ஞானியார்
[16]துங்க மகவாகத் தோன்றி [17]வனப்பகைக்குஞ்
சிங்கடிக்குந் தாதையாய்ச் சீர்செய்தாய்—இங்குநீ
பெண்களெல்லாம் வாழப் பிறந்தமையா லென்மனத்திற்
புண்களெல்லா மாறப்[18]புரி[19]கண்டாய்—ஒண்[20]கமலத்
தன்னந் தனைவிடுப்பே னன்னந்தா [21]னங்கவரை
இன்னந்தான் [22]கண்டறியா தென்பரே—மன்[23]னெந்தாய்
[24]அப்பாலோர் வண்டை யனுப்பி னவர்[25]காமஞ்
செப்பாதே யென்றுற் றிகைக்குமே—தப்பாது
மானைப்போய்த் தூதுசொல்லி வாவென்பேன் [26]வல்லியப்பூந்
தானைப் பரமர்பாற் சாராதே—ஏனைப்பூங்
[27]கோகிலத்தை நான்விடுப்பேன் கோகிலமுங் காக்கையினம்
[28]ஆகி[29]வலியானுக் கஞ்சுமே—ஆகையினால்
இந்தமனத் தைத்தூதா யேகென்பே னிம்மனமும்

---

[10] பிறந்தாய்; இது திருநாவுக்கரசரைக் குறித்தது. [11] சிறந்த தவத்தையும் தியானத்தையும் உடையவர் வாழும் மாடக்கூடல் என்க. [12] உருத்திராக்க மாலையும். [13] மங்கையர்க்கரசியார். [14] ஞானாசிரியன்; திருஞானசம்பந்தர். [15] இசைஞானியார். [16] உயர்வு. [17] கோட்புலிநாயனார்க்குப் புதல்வியராகிய இவ்விருவரையும் தம் மக்களாகக் கருதி வனப்பகையப்பன் சிங்கடியப்பன் எனத் தம்மைக் கூறிக்கொண்டவர் சுந்தரமூர்த்திகள். [18] செய்வாய். [19] முன்னிலையசை. (10–20) இவ்வடிகளால் தமிழானது மகளிர்பால் இரக்கங்காட்டுதற்கேற்ற தொடர்பு கூறப்பட்டது. [20] தாமரை. [21] சோமசுந்தரக்கடவுளை. [22] நான்முகன் அன்னவடிவமாய்ச் சென்று இறைவன் திருமுடியைக் காணாமை குறித்தது. [23] என் தந்தையே; தன்னுடன் பிறரையும் உளப்படுத்தி எம்தாயே என்றதாகவுங் கொள்ளலாம். [24] அதன்பின். [25] "கொங்கு தேர் வாழ்க்கை யஞ்சிறைத்தும்பி, காமஞ் செப்பாது கண்டது மொழிமோ" என்னும் இறையனார் செய்யுளை நினைந்து கூறியது. [26] புலித்தோலாடை. [27] குயிலை. [28] ஆதலால்; குயில் காகத்தால் வளர்க்கப்படுவதால் இனமாயிற்று. [29] கரிக்குருவிக்கு; இது சோமசுந்தரப்பெருமானால் உபதேசம்பெற்று அவன் அடிநிழலடைந்ததென்பது வரலாறு.

அந்த[30]மனோ தீதர்பா லண்டாதே-எந்தவிதம்.
என்றென் றிரங்கினே னென்கவலை யெல்லாம்பொற்
[31]குன்றனையா யுன்னுடனே[32]கூறுகேன்—சென்றாலும்
பண்ணிய[33]பத்தொன் பதினா யிரத்திருநூற்
றெண்ணியதொண் ணூற்றொன் றெனுந்தொடையாய்
—[34]நண்ணீ
ஒரு[35]தொடை*வாங்கி யுதவாயோ.

## வருணகுலாதித்தன்மடல்

## கொங்கை வருணனை

[1]சீதவன சத்தரும்பைச் செப்பலாம் அவ்வரும்பும்
[2]ஆதவனைக் கண்டால் அலருமே—சூதாடு
[3]வட்டென் றுவமை மதிக்கலாம் வட்டதனை
[4]வெட்டென்று சொல்ல விதியுண்டே—[5]நெட்டுடலச்
[6]சக்கரவா கத்தைச் [7]சரியுரைக்க லாமதுவும்

---

30 மனத்திற் கெட்டாதவர். "மாற்றமனங்கழியநின்ற மறையோன்" (திருவாசகம்) "சிந்தனைவாக்கிற்கெட்டாச்சிவன்" (திருவிளை) என்பன காண்க 31 அளக்கலாகா அளவும் பொருளுந், துளக்கலாகா நிலையுந் தோற்றமும், வறப்பினும் வளந்தரும் வண்மையுமுடைமைபற்றிக் குன்றனையாயென்றார்; நிலைபேறுடைமை கருதியுமாம். 32 சொல்வேன். 33 செய்யுளில் வழங்குந் தொடைகள்; அவை 19291 என்பதனைத் தொல்காப்பியச் செய்யுளியல். 101-ம் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையாலறிக. பேராசிரியர், 13708, எனவும் உரையாசிரியர் 13699 எனவுங் கூறுவர். 34 பொருந்திய நீ. 35 மாலை.

*இந்நூலை ஆக்கியவர் இன்னாரெனத் தெரியவில்லை.
இப்பகுதியில் கொங்கைக்கு உவமையாகக் கூறப்படும் பொருள்களிற் பலவற்றை எடுத்துக்கூறி அவையொப்பாகாமைக்குத் தனித்தனி காரணங்காட்டி விலக்குந் திறன்படித்து இன்புறுதற்குரியதாம்.

1 குளிர்ந்த தாமரை யரும்பை. 2 சூரியன். 3 கருவி. 4 அவ்வாட்டத்தில் பிழைபட்டபோது விலக்குதற்குரியதை வெட்டு என்று கூறுதல் வழக்கு. 5 நீளமான உடலையுடைய. 6 ஓர் பறவை. 7 ஒப்பு.

மிக்க சிறகுடைத்தாய் விட்டதே—ஒக்குமெனப்
பாரப் பருவநலப் பச்சிளநீ ரென்னலாம்
ஆரப் [8]புளகம் அரும்பாதே—வீர[9]மதன்
வண்ணமுடி யென்று மதிக்கலா மம்மகுடந்
[10]தண்ணெனவும் வெச்சனவுந் தாராதே—பண்ணரிய
[11]சித்ரமணிச் [12]செப்பென்று செப்பலாம்—அச்செப்பு
[13]புத்தமிர்த போகம் பொசியாதே—சுத்தநதிச்
சுந்தரஞ்சேர் [14] புற்புதத்தைச் சொன்னாற்[15] பனிநீருஞ்
சந்தனமுங் குங்குமமுந் தாங்காதே—[16]விந்தைசெறி
அந்தநறுங் கோங்கி னரும்பெனலா மவ்வரும்புக்
கிந்த[17]முகக்கருமை யெய்தாதே—[18]சந்தமிகும்
பூரணகும் பங்களெனப் போற்றலா மக்கும்பந்
[19]தாரணியும் ஒண்சுணங்குந் தாராதே—சீரணியும்
மா[20]கனக வெற்பெனலா மற்றந்த வெற்பரனார்
[21]கோகனகக் கையாற்[22]குனிந்ததே—[23]வாகுசெறி
[24]பந்திணைக ளென்று பகரலாம் அப்பந்தும்
[25]இந்துநுத லார்கைக் [26]கிடைந்தெழுமே—[27]கந்தமிகும்
[28]பூங்கொத் திணையாப் புகலலாம் பூங்கொத்தும்
தேங்குதென்றல் வீசச் [29]சிதறுமே—மாங்கனியின்

---

8 மயிர்சிலிர்த்தல். 9 மன்மதன். 10 வேனிற்காலத்தில் தட்பமும் குளிர்காலத்தில் வெப்பமும். 11 அழகு. 12 ஒருவகைப் பாத்திரம். 13 பாலும் இன்பமும் கசிந்து ஊட்டாது. 14 நீர்க்குமிழி. 15 பன்னீர். 16 வியப்பு. 17 முகத்திற் கறுப்பு; கொங்கைக்கண் கறுத்தலைக் கூறிற்று. 18 அழகு. 19 மலர்மாலையணியப்படுமாயினும் அழகிய தேமலைத்தராது; உம்மை அசை. 20 பொன்மலை. 21 தாமரை. 22 வில்லாகவளைந்தது. (பி.ம்.) "குனித்ததே" வளைக்கப்பட்டதென்க. 23 அழகு; ஒழுக்குமாம். 24 இரண்டு பந்துகள். 25 பிறை. 26 தோற்று எழும்பும்; கையால் அடித்து விளையாடுதலைக் கூறிற்று. 27 நறுமணம். 28 இரண்டு பூக்கொத்து. 29 சிதைந்துபோம்.

[30]பக்குவமா மென்று பகரலா மக்கனியும்
மிக்ககிளி [31]கோதியிடின் [32]வீறுதே—தக்கபெரு
வாகுமத யானையிரு [33]மத்தகமென் றோதலாம்
பாகர்சிறு [34]கொந்தாற் பயந்ததே—ஆகையினால்
வானோ முதலிந்த மண்டலத்தி [35]னோரின்றித்
தானே தனக்குச் சரியாகி—ஞானமெலாம்
[36]மொண்டெடுத்த[37]மோன[38]முனிக்குறும்பெ லாமடக்கத்
[39]தண்டெடுத்து வந்த தனுமாரன்–கொண்டலெனும்
மட்டவிழும் பூங்கோதை மாதுரதிக் குந்தனக்கும்
இட்ட[40]வினைக் கூடார மென்னலாம்—வட்டத்
திடங்கொண்டு [41]பூரித்[42]திறுமாந்து முத்து
வடங்கொண்டு மேன்மேல் வளர்ந்து—தடங்கொண்ட
வட்டவிரு மந்தரத்தை மார்பிற் பதித்திறுகக்
கட்டு[43]மணி யாணிபோற் கண்கறுத்துக்—கிட்டரிய
[44]பாளித[45]லேப[46]படீர'முலா[47]வுப
லாளித[48]மோகன ராச[49]சம்–மேளம[50]
ஞேகர காமவி[51] ஞேத[52]விகாரவ[53]
சீகர [54]கோமள சீதள—மாகி
யரும்பி விரும்பி யசைந்து[55]தசைந்து
திரம்பி நெருங்கி நெகிழ்ந்து—பரந்து

---

[30] தகுதி. [31] அலகினல் கிழித்துவிட்டால். [32] சிறப்படையாது. (பி.ம்.) "மீறுது"
[33] நெற்றியின்மேற்புடைத்த பாகம். [34] கொத்தினல். [35] ஒப்பில்லாமல்.
[36] முகர்துகொண்ட. [37] மௌனவிரதத்தை மேற்கொண்ட. [38] முனிவர்களாகிய குறும்பர்களெல்லோரையும். [39] படையெடுத்துவந்த. [40] இரண்டுபடாம் வீடு. [41] பருத்து. [42] திமிர்ந்து. [48] நீலமணி.
[44] பச்சைக் கருப்பூரம். [45] கலத்தல். [46] சந்தனக்குழம்பு. [47] மிக்க அழகு.
[48] அறிவை மயக்குந் தலைமைவாய்ந்த [49] கூடிய. [50] மகிழ்ச்சியைத் தருகின்ற.
[51] விளையாட்டு. [52] ஆசைநோய். [53] வயப்படுத்துதல். [54] இளமை. [55] தசைபருத்து.

[56]சுணங்கு நிறைந்து[57]சுகந்த[58]கதம்ப
மணங்குடி கொண்டு[59]வயங்கி—யிணங்கி
யருந்தவர் சிந்தை யடங்கி மடங்கி
வருந்த நெருங்கி வளர்ந்து—திருந்தியொரு
தீதுங்கொள் ளாத செழுந்தா மரை[60]முகையின்
மோதுஞ் சிறு[61]திவலை மொய்த்தனபோல்—ஓதமரா
வாழக் கடல்கடைந்த மாயோன் மணிமகுடஞ்
சூழத் தெரித்த [62]சுதைத்துளிபோல்—ஏழுலகும்
[63]மெச்சுங் கலைமதியின் வெண்ணிலா வீசுமுத்தின்
கச்சுப் புனைந்த கனதனத்தாள்.

காளமேகப்புலவரியற்றிய

**சித்திரமடல்**

[1]குழற்கீதச் சொல்லீர் குளிர்காவி லிந்த
நிழற்செய்த மாதவமோ நின்றீர்—[2]தழையும்
வடமேந்து கொங்கை[3]யுரோ மாவலி [4]மாயன்
குடமேந்தி நின்றாடுங் கூத்தோ—[5]வடுவார்ந்த

மெய்தோட்டுப் பயிறல்

[6]நஞ்சங்கே [7]பாம்பிங்கே [8]நத்தங்கே [9]முத்திங்கே
[10]மஞ்சங்கே [11]மின்னிங்கே மாதரீர்—[12]செஞ்சொல்

---

56 தேமல். 57 நறுமணம். 58 வாசனைப்பொடி. 59 விளங்கி. 60 அரும்பில்
61 நீர்த்துளி 62 அமுதத்துளி. 63 கொண்டாடும்.

1 வேய்க்குழலின் இசை. 2 செழித்த. 3 வயிற்றின்மயிரொழுங்கு. 4 மாயவன் ஆடிய கூத்து குடக்கூத்து என்று பெயர்பெறும்; மயிரொழுங்கு மாயனுக்கும் மேலுள்ள கொங்கை அவன் தலையில் தாங்கிய குடத்திற்கும் உவமை. 5 மாவடுவின் றன்மைபொருந்திய. 6 விடத்தையொத்தகண் அங்கேயுள்ளது. 7 பாம்பின் படம்போன்ற அல்குல் இங்கேயுள்ளது. 8 சங்கு; ஈண்டுக்கழுத்து. 9 பல். 10 மேகம்; கூந்தல். 11 இடை. நஞ்சும் பாம்பும், நத்தும் முத்தும்; மஞ்சும் மின்னும் ஆகிய இவை இவ்விரண்டாய் ஒருங்கு நிற்றற்குரியன பிரிந்து நிற்கக் காரணமென்னையென வியப்பான்போன்று மெய்யைத் தீண்டினன் என்க. 12 வேதம்.

அடுக்கின்ற [13]வேதா [14]அடுக்கைக் குலைத்துப்
படைக்கின்ற போதோ [15]படைத்தான்—வடக்கொங்கை
[16]அந்தரத்தே நிற்குமோ [17]வார்க்கும் பரமடியேன்
சந்தேகம் விட்டுமெள்ளத் [18]தாங்கவோ—பைந்தொடியீர்
[19]கோலா கலவல்குற் [20]கோளரவா ஞல்நெடிய
[21]மாலா மெனைத்தாங்க மாட்டாதோ—மேலான
முத்தனே கஞ்சேர் [22]முகைக்கைலா யந்தணிலே
[23]பித்தனேன் சேரிற் பிழையாமோ—வித்தார
[24]ஓடைகொண்ட தண்சுழிபோல் உந்திச் சுழியிருக்க
[25]வோடை கொண்ட யான்குளிக்க வேண்டாவோ—
[26]ஏடுகொண்ட
[27]கொந்திருந்த பைந்தார்க் [28]குழன்மேகத் தூடுநான்
[29]இந்திரன்போல் வந்திருந்தா லேற்காதோ—
[30]அந்திகொண்ட
கண்ணன் செவ்விக் கருங்குவளைக் கேயடியேன்
பண்ணார் சுரும்பாய்ப் [31]படியேனே—விண்ணில்

---

[13] நான்முகன். [14] ஒன்றின்மேல் ஒன்றாயடுக்கப்பட்ட மூன்றுலகங்களையும்; "அடுக்கிய மூவுலகுங் கேட்குமே," என்றார் பிறரும்.
[15] இங்ஙனம் வேறாகப் படைத்தான். [16] ஆகாயம்; நுண்ணிய இடையில் நிற்குமா என்பது பொருள். [17] நிறைந்த சுமையை. [18] ஏந்தலாமா? என்பது. [19] உள்ளக்களிப்பு. [20] பாம்பின் படமாஞல். [21] காமமயக்கங்கொண்ட என்னை; திருமாலைத்தாங்குவது பாம்பு என்றதையுட்கொண்டு கூறியது. [22] கொங்கையாகிய வெள்ளியங்கிரியில்; பல முத்துமாலைகள் சேரப்பெற்றமையால் நிறம்பற்றி வெள்ளிமலையாக உருவகிக்கப்பட்டது. [23] காமப்பித்துப்பிடித்த யான்; பித்தனெனப்பட்ட இறைவனுக்குக் கைலை உரிய இடமாதலறிக. [24] நீரோடை. [25] காமவெப்பம். [26] பூவிதழ். [27] பூங்கொத்து. [28] கூந்தலாகிய மேகத்தின் நடுவில். [29] இந்திரன் மேகவாகனனாதலறிக. [30] மாலைப்பொழுதில் மலர்தலைக்கொண்ட. [31] பொருந்தமாட்டேனே.

அடுத்துவருந்[32] தானவர்கள் ஆரமுதுண் ணாமற்
[33]றடுத்தவருந் [34]தேவரீர் தாமோ—எடுத்தமுகம்
நாலே படைத்து [35]நகைபடைத்துப் [36]பங்கயத்தோன்
[37]மாலே படைத்ததுவு[38] மாலேயோ—சால
மருவியுமைச் சேர்ந்திருந்து வாழாம லன்றோ
பொரு[39]விசயன்[40]பேடியாய்ப் போனான்—திரிபுரத்தைச்
[41]செற்றவனுங் [42]கொல்லிச் செழும்பாவை யுந்நகைக்கக்
[43]கற்றதுவு முந்நகையைக் கண்டேயோ—முற்றுலகில்
[44]பாவையர்போற் காமப் பசிதணிக்க மாட்டாதீர்
[45]கோவையமு தத்தையேன் கொண்டிருப்பீர்—[46]ஓவியமென்
றெல்லாரு மெண்ணாமல் என்னுள்ளந் தேறவொரு
சொல்லாகி லுந்தெளியச் சொல்லிடீர்—கல்லான
நெஞ்சுமக்குத் தந்த நெடும்[47]பாதகம் [48]பலித்தோ
[49]கஞ்சமுனி போர்வழங்கக் காண்கிலேன்—[50]தஞ்சமுடன்

---

32 அசுரர்கள். 33 மோகினியாய் வந்து தடைசெய்தவரும். 34 உயர்வைப் புலப்படுத்துஞ்சொல். 35 இகழ்ச்சியைப்பெற்று. 36 பிரமன். 37 காமமயக்கம். 38 உம்மால்தானே; திலோத்தமை என்னும் தெய்வமகளை நான்முகன் படைத்து அவள் அழகில் ஈடுபட்டு மயங்கி அவள் சென்ற திசைதோறும் ஒவ்வொரு முகங்கொண்டு நோக்கி, இகழ்ச்சி எய்தினான் என்பது வரலாறு. 39 அருச்சுனன். 40 அவனுக்குப் பேடியுருவம் ஊர்வசி சாபத்தாலாயது. 41 சிவபெருமான். 42 தேவர் முனிவர் வேண்டுகோட்கிணங்கித் தெய்வத்தச்சனால் ஒரு பெண்வடிவாகச்சமைத்துக்கொல்லிமலையின்மேல் வைக்கப்பெற்றதொருபாவை. இஃது அசுரர் முதலானவரை நகைத்து மயக்கி அவருயிரைக்கவரும் இயல்பினதென்ப. 43 (பி.ம்) "கற்றதெல்லாம் இந்த நகை கண்டேயோ" 44 மகளிர். 45 கொவ்வைக்கனிபோன்ற அதரத்தில் ஊறும் நீரை; பசிதணிக்க மாட்டாத நீர் அமுதத்தை யேன்கொண்டிருந்தீர் என்பது பிறிதுபொருள். 46 சித்திரம். 47 தீயசெயல். 48 வாய்த்ததோ. 49 பிரமன். 50 எளிமையுடன்.

நந்தாத [51]ஊழியங்கள் நான்செய்ய வோவதற்கு
வெந்தான காமனையேன் வேண்டுவீர்—முந்தக்
குலவியகூற் றென்று[52]விழிக் கூற்றமிரண் டானல்
உலகதனிற் கூற்றமூன் றுண்டோ—கலவியிலோர்
[53]பெண்ணைச்சேர்ந் தாயிரங்கண் பெற்றான் [54]குலிசனுன்
[55]கண்ணுற்று லும்மிலக்கங் கண்பெறுவான்.

சிவப்பிரகாசர் இயற்றிய

## திருவெங்கைக்கலம்பகம்

1 [1]வல்லெனு மா[2]நகிற் கோதைய ராசை மறந்தவர்க்கே
[3]ஒல்லையி னீகுவன் [4]கம்புமுன் னாழி யுடையன்றங்கை
[5]நெல்லிரு நாழி கொளக்கொடுத் தோனெடு வான்[6]கதிரின்
பல்லுக மோதிய வெங்கைப் பிரான்றன் பதாம்புயமே.

---

[51] குற்றேவல்கள். [52] "கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல், நோக்கம் இம்மூன்று முடைத்து" என்பது திருக்குறள். [53] அகலிகை. [54] இந்திரன். [55] உம்மைக்கண்டால்; அகலிகையைச் சேர்ந்து ஓராயிரங்கண்பெற்றவன் உம்மைக்கண்டால் நூறாயிரங்கண்பெறுவான் என்பதாம்.

1. [1] சூதாடுகருவி. [2] கொங்கை. [3] விரைவாக. [4] சங்கும் கருதப்படுகின்ற சக்கரமுமுடைய திருமாலுக்கு இளையவளான உமையவள். [5] இருநாழி நெற்பெற்று முப்பத்திரண்டு அறங்களையும் செய்தாளென்பது வரலாறு. [6] சூரியனுடைய பல்லுதிர அடித்தது தக்கன் யாகத்தில். பிரான் தன் திருவடிமலரை மறந்தவர்க்கு ஈகுவன் என்க. முந்நாழி கம்புடையவன் தங்கைக்கு இருநாழி நெற் கொடுத்தவன் என்பது மற்றொருபொருள்.

சம்பிரதம்

2 பல[1]வரைகள் கரத்தடக்கிக் காட்டு வோநீர்
பார்ப்பவநே கங்[2]கடலை யருந்து வோநாம்
இலகுறநும் [3]மனையிடத்தி னுலோக மெல்லாம்
இக்கணமே காட்டிடுவோ முலகி [4]லெண்ணில்
கலையறிவோ மொருகாலும் பொய்ம்மைபகர்ந் தறியோங்
[5]கண்ணனெனு மவன்வாயின்[6] மண்விழுமுன் னருளால்
அலையிலெழுங் கடுமிடற்றி னடக்கு மீசன்
அமர்ந்ததிரு வெங்கையினின் றடைந்து ளோமே.

3 [1]என்னடிகள் [2]வெண்குறளே ரடியி ரண்டும்
என்றலையி லிருத்துமிறை வெங்கை நாட்டில்
முன்னடிக ளிரண்டு[3]நெடி லடிகள் பின்னர்
[4]முயங்கடிக ளிரண்டு[5]நே ரடிக ளாகப்
[6]பன்னடிக ளொருநான்கு கொடுந டக்கும்
பழுதகல்வெண் டுறைபோலப் [7]படர்த லாலே
பின்னடிக ளெங்கடிரு[8] வடிகள் முன்னர்ப்
பெயர்ந்தவடி யெழிலிளஞ்[9]சே யடிக ளாமே.

---

2. [1] மலைகள்; இரேகைகள். [2] கடல் நீரை; கடலையென்னும் ஒருவகைப் பயறை. [3] வீட்டின்கண்ணே எல்லாவுலகங்களையும்; வீட்டிலுள்ள பொன் வெள்ளி முதலிய எல்லா உலோகப் பொருள்களையும். [4] அளவிறந்த நூல்கள்; ஓரளவு பட்ட ஆடைவகைகள் அல்லது மான்வகைகள். [5] திருமால். [6] இறப்புநேரு முன் என்றபடி.
இவற்றுள் முன்னர்க்கூறியன செய்தற்கு அரியனவும் பின்னர்க் கூறியன எளியனவும் ஆதல்காண்க. இந்திரசாலம் முதலிய மாயைவித்தையில் வல்லவர் தமது சிறப்பைத் தாமே எடுத்துக் கூறுவதாகச் செய்யுள் செய்வது சம்பிரதமென்னும் உறுப்பின் இலக்கணம்.

3. [1] என்னுடைய கடவுள். [2] குறள்வெண்பாவுக்கு நிகரான இரண்டு திருவடிகளும்; உமையொரு கூறனும் நிலையில் வலப்பாலடி பெரிதாயும் இடப்பாலடி சிறிதாயும் இருத்தல்பற்றி, முதலடி நேரடியாயும் இரண்டாமடி சிந்தடியாயும் முற்றுப்பெறும் குறள்வெண்பா உவமையாயிற்று. [3] ஐஞ்சீரடிகள். [4] அவற்றின் பின் தழுவியுள்ள. [5] நாற்சீரடிகளாக. [6] சொல்லப்படுகின்ற. [7] செல்லுதலால். [8] திருமகள்போன்ற மகளுடைய அடிச்சுவடுகள். [9] முருகனை நிகர்த்த அவன் காதலன் அடிச்சுவடுகளாகும்.

4 [1]அரியானை வேதன் றலை[2]யரி வானை யரிய[3]மறைப்
பரியானை யெங்க ளிடைப்[4]பரி வானைப் பழுதில்வெங்கைப்
[5]புரியானை யெவ்வுல கும்[6]புரி வானைப்[7]பொதுநடனந்
[8]திரியானை யையங் கொளத்திரி வானைச்[9] செறிகுவனே

குமரகுருபரர் இயற்றிய

## மதுரைக்கலம்பகம்

1 தேன முதசி லைக்க ரும்பு[1]கொ லைக்க ரும்பொரு[2]வேம்பெனும்
தேம்பு யத்தணி[3]வேம்பி னைக்கனி தீங்[4]க ரும்பெனு மிவ்வணம்
[5]மான முதம ழைக்க ணங்கையு [6]மாறி யாடத்தொ டங்குமால்
[7]மாறி யாடுநின் வல்ல பந்தொழ வந்த போர்க்கும்
வருங்கொலோ
[8]கான முதசு ருப்பு நாண்கொள்[9]கருப்பு வில்லியைக்
காய்ந்தநாட்

---

முன் இரண்டடிகள் நெடிலடியாயும் பின் இரண்டடிகள் நேரடியாயும் முடிவது வெண்டுறையெனப்படும். "மூன்றிழிபேழுயர்வாய், ஆன்றடி தாஞ்சில அந்தங்குறைந்திறும் வெண்டுறையே" என்பது அதற்குவிதி.

உடன்போக்கின்கண் முன்சென்ற தலைவனுடைய அடிச்சுவடுகள் பெரியனவாகவும் அவனைப் பின்பற்றிச் சென்ற மகளின் அடிச்சுவடுகள் அவ்வளவிற் சிறியனவாகவும் இருத்தலைக்கண்டு செவிலி வெண்டுறைப் பாட்டை அவற்றிற்கு உவமையாக்கிக் கூறினள். சுவடு கண்டிரங்கல் என்னுந்துறையாம்.

4. [1] யாவர்க்கும் அரியவனை. [2] நகத்தாற்கிள்ளியெடுத்தவனை. [3] வேதமாகிய குதிரையுடையவனை. [4] இரக்கம் செய்பவனை. [5] நகரில் இருப்பவனை. [6] படைப்பவனை. [7] பொதுவில்; அம்பலத்தில். [8] மாறாது நடிப்பவனை. [9] அடைவேன். இவற்றுள் அரியானை அரிவானை என்றற்றொடக்கத்தன தம்முண் மாறுபடுவனபோல் காணப்படினும் பொருள் நோக்கில் அம்மாறுபாடின்மையின் முரண்விளைந்தழிவணியாம்.

1. [1] செவிலி கூற்று; தோழிகூற்றுமாம்.

[1] கொலைத்தொழில் செய்தற்குத் தோன்றிய. [2] வேம்பென்று கூறி வெறுப்பாள். [3] வேப்பமலர்மாலையை; இது சுந்தரபாண்டியராகிய காலத்து அணிந்தது. [4] கரும்பென்று கூறி விரும்புவாள். [5] மான்கண்ணின் தன்மை நீங்காத கண். [6] இயற்கைக்கு மாறாகிப்பேச. [7] கால்மாறியாடும் நின்வலிமை. ஆடல், கூத்தாடுதல்; பேசுதல் என இருபொருள்படும். [8] மணம். [9] மன்மதன்

கைப்[10]ப தாகை[11]கவர்ந்து கொண்டதோர் காட்சி யென்ன
வெடுப்பதோர்
[12]மீன் றுதவ டற்ப தாகை விடைப்ப தாகையு டன்கொளும்
வீர சுந்தர மாற [13]மாறடும் வெள்ளி யம்பல வாணனே.

மடக்கு

2 [1]ஐய மணிக்[2]கல [3]மென்பணியே அன்பணி யக்[4]கொள்வ
தென்பணியே
மெய்யணி[5]சாந்தமும் வெண்[6]பலியே[7]வேண்டுவ துங்கொள
வெண்பலியே
எய்ய வெடுப்பதோர் [8]செம்மலையே ஏந்தி யணைப்பதோர்
[9]செம்மலையே
வையகம்[10]வாய்த்த வளம்[11]பதியே வாழ்வது கூடல்[12]வளம்
பதியே.

---

10 கொடி. 11 வென்றவர் தோற்றவர்கொடியைக் கைக்கொள்ளுதல் மரபு. 12 மீனக்கொடி ; மன்மதனுக்கும், பாண்டியர்க்கும் உரியது. 13 பகையைக் கொல்லும்.

2. 1 வியக்கத்தக்க ; அழகிய எனினுமாம். 2 ஆபாணம். 3 எலும்புப்பூண். 4 ஏற்றுக்கொள்வது என்னுடைய பணிவிடை. 5 சந்தனம். 6 திருநீறு. 7 கொளவேண்டுவதும் எளிமையையுடைய பிச்சை. 8 செம்பொன் வடிவான மேருமலை. 9 முருகக்கடவுளை. 10 பெற்றவளாகிய உமையம்மை. 11 கணவர். 12 வளப்பம்பொருந்திய நகரம்.

சம்பிரதம்

3. [1]மட்டறுக டற்புவிய ணேத்து [2]மொரி மைப்பினின்ம
றைத்துடன்வி டுத்திடுவ[3]னேற்
[4]றெட்டுவரை யைக்கடலை முட்டியுள டக்கிடுவன்
இத்தனையும் வித்தையலவாற்
[5]றுட்டமத னைப்[6]பொடிப டுத்திமது ரைக்குளுறை
சொக்கர்[7]குண மெட்டிஞெடுமா
[8]சிட்டர்கடு தித்திடும்[9] கத்துவம னைத்து[10]மொரு
செப்பினுள டக்கிடுவனே.

---

3. சம்பிரதம்—இந்திரசால முதலிய மாயவித்தை வல்லவர் தமது சிறப்பைத் தாமேயெடுத்துக்கூறுவதாகச் செய்யுள் செய்வது. செய்தற்கெளிய செயல்களையும் அரியனவாகக் கருதுவதற்கு ஏற்றசொல் அமைதி இதன்கட் காணப்படும்.

[1] அளவு. [2] ஒருமுறை கண் இமைக்குங் காலவெல்லைக்குள் மறையச் செய்து உடனே வெளிப்படுத்துவேன். [3] தாங்கி. [4] எட்டுமலைகளையும் சமுத்திரத்தையும் மூடியகைக்குள் அடக்கிவைப்பேன் (பி-ம்) "மற்றெட்டுவரையை" [5] கொடிய மன்மதன். [6] சாம்பராக்கி. [7] தன்வயத்தனாதல் முதலிய எண் குணங்கள். [8] பெரியோர்கள். [9] மகிமை யெல்லாம். [10] ஒரு சொல்; பிரணவம். இவை சம்பிரதத்திற் கேற்பக் கூறிய அரிய செயல்கள்.

செம்பொருளாவன :— ஒரு முறை இமைத்தலினால் மறையச் செய்து உடனே இமைத்தலை விடுவிப்பேன். கண்ணை இமைக்கும் போது உலகம் மறைதல் இயல்பு. என்றுவரை கடலை யென்பவற்றைக் கைப்பிடியுள் அடக்குவேன். செப்பு என்னும் ஒருவகைப் பாத்திரத்தில் அடக்குவேன்.

4 [1]தமரநீர்ப் புவன முழுதொருங் [2]கீன்றாள்
　　　தடாதகா தேவியென் ெறாருபேர்
தரிக்கவந் ததுவுந் [3]தனிமுத லொருநீ
　　　சவுந்தர [4]மாறனா னதுவும்
குமரவேள் [5]வழுதி யுக்கிர னெனப்பேர்
　　　கொண்டதுந் தண்டமிழ் [6]மதுரங்
[7]கூட்டுணா வெழுந்த வேட்கையா லெனிலிக்
　　　கொழிதமிழ்ப் பெருமையா ரறிவார்
[8]பமரம் [9]யாழ் மிழற்ற [10]நறவுகொப் பளிக்கும்
　　　பனிமலர்க் [11]குழலியர் [12]பளிக்குப்
பாணிலா முன்றிற் [13]றூநிலா முத்தின்
　　　பந்தரிற் கண்ணிமை யாடா
[14]தமரர்நா டியரோ டம்மனை யாட
　　　[15]ஐயநுண் ணுசுப்பள வலவென்
றமரரு மருளுந் தெளிதமிழ்க் கூடல்
　　　அடல [16]ரா அலங்கல்வே ணியனே.

---

4. முதல் இரண்டடிகளில் தமிழின் பெருமை கூறப்படும். [1] ஒலி. [2] உமை யம்மை. [3] ஒப்பற்ற முழுமுதற்கடவுளாகிய நீ. [4] பாண்டியன். [5] உக்கிர குமார பாண்டியன். [6] இனிமையை. [7] கொள்ளை கொண்டுண்ண.

" உலகம் யாவையும் ஈன்றவள் உம்பரு ளுயர்ந்த
திலகநாயகி பாஞ்சுடர் சேயென மூன்று
தலைவரால் முறை செய்த நாடு ".(திருவிளையா—)

என்பது ஈண்டு நோக்கத்தக்கது.

[8] வண்டு; பிரமரம் என்பதன் சிதைவு. [9] யாழிசைபோலப்பாட. [10] தேன். [11] மதுரையிலுள்ள மகளிர். [12] பளிங்குக்கற்கள் பரப்பிய முற்றம்; பால் போலும் நிலாவீசும் முற்றம். [13] தூய நிலாவொளியைக் காலும். [14] தேவருலகத்து மகளிர். [15] " ஐயநுண்...........மருளும்" உண்டோ இல்லையோ என்ற ஐயம் முன்பு இடையளவில் இருந்தது. இப்போது கண் இமைத்தல் இல்லாமையும் கட்டழகும் தம்மகளிரொடு விளையாடலும் ஆகிய இவைகள் வேற்றுமையுணராது தேவர்களும் மயங்குதற்கு ஏதுவாயின. [16] அரா அலங்கல்—பாம்பாகிய மாலை.

குமரகுருபரர் இயற்றிய

## காசிக்கலம்பகம்

### *பிச்சியார்

1 [1]தண்ணு லாம்பொழிற் காசித் தெருவினீர் தரித்தி டுந்தவக்
[2]கோலமுஞ் சூலமும்
[3]பெண்ணொ டாடும்[4] பிச்சனுக் கொத்தலால் பிச்சி
யாரெனும் பேர்தரித் தாடுவீர்
வெண்ணி லா[5]முகிழ்க் குங்[6]குறு மூரலால் வீணி லேயெம்
[7]புரத்[8]தெரி யிட்டநீர்
கண்ணி னாலு[9]மிக் காமனைக் காய்ந்திடிற் கடவுள்
நீரென் றிறைஞ்சுதுங் காணுமே.

2 [1]முயலாம லேதவ முத்தித்[2] திருவை முயங்கநல்குங்
கயலார் பெருந்[3]தடங் கண்ணிபங் காரருட் காசியிலே
செயலாவ தொன்றிலை வாளா[4]நெடுந்துயில் செய்யுமுங்கள்
[5]பயலாக வே[6]பணி செய்வார் புவனம் படைப்பவரே.

---

[*சைவவேடந்தரித்துப் பிச்சைக்கு வருமகளிர்; இவரைக்கண்டு காமுற்றானொருவன் தன்வேட்கை தோன்ற அவரை முன்னிலைப்படுத்துக் கூறுவதாகச் செய்யுள் செய்வது மரபு.]

1. [1] குளிர்ச்சிபொருந்திய சோலை. [2] வேடத்தாலும் மூவிலை வேலாலும் என்க. [3] இறைவி. [4] இறைவன். [5] அரும்புகின்ற. [6] புன்சிரிப்பால் [7] உடம்பில் [8] காமத்தீ. [9] இங்கு நின்று எய்யும் மன்மதனைச் சுட்டெரித்தால். இறைவன் திரிபுரத்தில் எரியிட்டது தேவர்க்கு நலம்பயந்தது. இங்குப் புரத்தில் எரியிட்டதால் நன்மையின்றித் தீங்கு விளைந்தமையின் அது வீண் எனப்பட்டது. காமனைச் சுட்டெரித்தால் பெரும்பயன் விளையுமென்பது கருத்து.

2. [1] ஒரு தவமும் செய்யாதிருக்கவே. [2] பெண்; செல்வமும் ஆம். [3] விசாலாட்சி யென்பதன் தமிழ்ப்பெயர். [4] பேருறக்கம் செய்யுங்கள். [5] ஆளாக இருந்து. [6] நீங்கள் ஏவிய ஏவல். காசிப்பதியில் இறந்தோர் இறைவன் திருவுருப்பெறுவர் என்னுந் துணிவால் இவ்வாறு கூறினர்.

ஊர்

3. [1] படுத்த பாயுட னேபிணி மூழ்கினும்
பல்வி ழுந்து நரைத்[2]தற மூப்பினும்
[3] அடுத்த திங்கிவர்க் கேபெரு வாழ்வெனும்
அப்பெ ரும்பதி யெப்பதி யென்பிரேல்
விடுத்து விட்டிந் திரதிரு வும்புவி
வெண்கு டைக்கு ளிடுமர சாட்சியுங்
[4] கடுத்த தும்பு களத்தரைத்[5]தேடுவார்
காத லித்து வருந்திருக் காசியே.

4. [1]கூற்றடிக் கஞ்சிக்[2]குலையுநெஞ் சே[3]யஞ்சல் [4]கோச்செழியன்
[5]மாற்றடிக் [6]கஞ்சு மிடப்பா கனை[7]மள்ளர் கொன்றகருஞ்
[8]சேற்றடிக் [9]கஞ்ச மலர்வயற் காசிச் சிவக்கொழுந்தைப்
[10]போற்[11]றடிக் கஞ்சலி செய்[12]பற்று வேறு புகலில்லையே.

---

3. [1] படுத்த படுக்கையோடிருந்து நோயில் அழுந்தினாலும். [2] மிகவும் மூப்படைந்தாலும். [3] இவ்வுலகில் இவர்களுக்கே பேரின்பவாழ்க்கை அடுத்தது எனக் கூட்டுக. [4] நஞ்சுபொருந்திய கண்டத்தையுடையவர். [5] முற்றத்துறந்த முனிவரர்; இந்திர செல்வத்தையும் வெண்குடைக்குள் புவியிடும் ஆட்சியையும் வெறுத்துவிட்டுத் தேடுவார் என்றதனால். இஃது ஊர் என்னும் உறுப்பாம்.

4. [1] இயமன் அடித்தற்கு. [2] நடுங்கும். [3] அஞ்சாதே. [4] அரிமர்த்தன பாண்டியன். [5] பிரம்படிக்கு. [6] இறைவியின்கூறு ஆதலால் அஞ்சுதல் கூறப்பட்டது. [7] மள்ளர்கள் உழுத. [8] சேற்றின்கீழ் [9] தாமரை. [10] துதி. [11] திருவடிக்கீழ்க் கைகூப்பு. [12] பற்றுக்கோடாக.

*அழகர்கலம்பகம்

1. [1]அவனிவனென் றெண்ணி யலையா [2]திருத்தி
[3]யவனிவனி தைக்கா மழகன்—[4]கவடார்
[5]மருதிடந்தா னேகடவுண்[6]மற்றில்லை நெஞ்சே
[7]யொருதிடந்தான் சொன்னே னுனக்கு.

தவம்

2. [1]தேறாது வனம்போ[2]யௌவனமும் போனீர்
சிறு[3]கிழங்கைக் கொண்டுபெருங்[4]கிழங்கைக் கொண்டீர்
[5]ஏறாத பலஞ்சுவைத்தோர்[6]பலமுங் காணீர்
[7]இலைமேய்ந்தும்[8]பேறிலையே [9]யிதுவோ யோகம்
மாறாது [10]சருகுதின்று [11]சருகு பட்டீர்
[12]வாயுநுகர்ந் தீர்வாயு [13]மௌன மானீர்
[14]ஆறாத தீயினிற்பீர் [15]தீய ரேநும்
[16]அருந்தவமே தவமழகர்க் [17]காட்ப டீரே.

---

*இந்நூலாசிரியர் கவிகுஞ்சர பாரதியார் என்பர்.

1. [1] அவனே கடவுள் இவனே கடவுள் என்று பலவாறாக நினைந்து. [2] ஒரு நிலையாய் நிற்பாயாக. [3] பூமிதேவிக்குக் கணவனாகிய. [4] கிளைகள். [5] மருத மாத்தை முறித்தவனே. [6] வேறேகடவுளில்லை. [7] ஓர் உறுதிப்பொருள். யான் சொன்னபடி அவனையே நினையென்பதாம். அழகர் என்பது திருமாலிருஞ் சோலைமலையில் கோயில்கொண்ட திருமாலின் பெயர். இது திருமாலிருஞ்சோலைமலைக் கலம்பகம் எனவும் பெயர் பெறும்.

2. (தவம் = மனம்பொறிவழிபோகாது நிற்றற்பொருட்டு விரதங்களால் உண்டி சுருக்கல் முதலாயின)

[1] நற்கதி பெறுதற்கு ஆம் நெறியை ஆராய்ந்தறியாமல். [2] இளமைப்பருவம். [3] கிழங்குகளை உணவாகக்கொண்டு. [4] முதுமைப்பருவத்தை யேற்றுக் கொண்டீர். [5] மிகுதியில்லாத (சிலவாய) பழங்கள்; மாமேறிப்பறிக்காத (உதிர்ந்த) பழமுமாம். [6] ஒரு பலனையும். [7] இலைகளைத்தின்றும்; மேய்ந்து என்றது இகழ்ச்சிக் குறிப்பு. [8] நற்கதிபெறுதல் இல்லை. [9] இதுதானோ யோகத்தின் தன்மை. [10] உலர்ந்து உதிர்ந்த இலைகள். [11] உடல் சருகின்தன்மையடைந்தீர். [12] காற்று. [13] பேசாத விரதத்தை மேற்கொண்டீர். [14] வெப்பந்தணியாத நெருப்பின் நடுவில் நின்று தவஞ்செய்பவர்களே. [16] கொடியவர்களே, உடம்பை அன்பில்லாமல் வருத்துதலால் கொடியரெனப்பட்டார். [16] நும் அரிய தவமே தவம் என்றது இகழ்ச்சி. உமது அரிய தவம் என்ன பயன்படும்? வீண் என்றுரைப்பினுமாம். [17] அடிமைசெய்து ஒழுகுங்கள்.

3. [1]வைக்குமிடத் தன்புவையா மாந்தர் கா[2]ளம் மறலிகதை
யறியீரோ [3]வருமே நாளை
தக்க[4]கதை புகுமேநுங் குணமும் போமே[5]சரமும்போ
மேயெடுத்த[6]தனுவும் போமே
[7]திக்கிலைவே றிக்கணமே சோலை வெற்பிற்[8]சீதரசஞ்
சீவிதனைத் தேடிக் கொள்ளும்
துக்கமறு [9]நமனோடத் [10]துரப்பீர் யார்க்குந்[11] தோற்றிடீர்
ஒருகாலுந் [12]தோற்றி டீரே.

4. [1]ஆராம வெற்பி லழகர்[2]சுரு திக்குமெட்டா
வேரார் பதந்தீண்ட வெத்தவங்கள் செய்தனவோ
[3]சூரான வன்சிலையுந்[4] துந்துபி[5]யென் புஞ்[6]சகடுங்
[7]காராய கட்டையும்வெங்[8]காளியப்போர் நாகமுமே.

---

3. [1] அன்புவைக்கவேண்டுமிடமாகிய திருமாலிடத்து. [2] அந்த இயமனது வரலாற்றை. [3] நாளைக்கே வருவான். [4] அவனது தண்டாயுதம். [5] மூச்சுக் காற்றின் இயக்கமும். [6] உடம்பும். [7] வேறுபுகலிடமுமில்லை. [8] திருமகளை மார்பில் தரித்த திருமாலாகிய சாவாமருந்தை. [9] இயமன். [10] துரத்திவிடுவீர். [11] தோல்வியுறமாட்டீர். [12] பிறக்கமாட்டீர்.

கூற்றுவனது தண்டாயுதம் வந்தால் அதற்கு முன்னிற்கமாட்டாது, வில்லின் நாணும் (குணமும) அம்பும் (சரமும்) வில்லும் (தனுவும்) தொலைந்துபோம் என வேறு பொருளுந் தோன்றுதல் காண்க.

4. [1] சோலை மலை. [2] வேதம். [3] தெய்வப் பெண்ணாகிய வலிய கல்லும் (அகலிகையும்) [4] ஓர் அசுரன். [5] எலும்பும். [6] வண்டி; கண்ணனைக் கொல்லவந்த ஓர் அசுரன். [7] கருகிய ஊன் பிண்டம்; அசுவத்தாமனால் ஏவப்பட்டதொரு கணைக்கணை அபிமன்னன் மனைவியான உத்தரையின் வயிற்றுக் கருவைச் சுட்டு வெளிப் படுத்தியது. அதனைக் கண்ணன் திருவடியால் தீண்டவே அக்கரு மீள உருப்பெற்றுப் பரீட்சித்து என்னும் அரசகுமாரனாயிற்று என்பது வரலாறு. [8] காளியன் என்னும் பெயர் பெற்ற பெரும் பாம்பு. அகலிகை முதலானவர் வரலாற்றை விரிந்த நூல்களிற் காண்க.

யானும் அவர் திருவடி தீண்டப் பெறுந்தவஞ் செய்திலேனே யென இரங்கிக் கூறியது.

கடிகை முத்துப்புலவரியற்றிய

## *சமுத்திரவிலாசம்

### கடைமடக்கு

1. உள்ள[1]திருக்கை கா[2]ணீரே
[3]உறங்கா திருக்கை காணீரே
ஓசைக் கடலைப்[4]பொருமலையே
ஒழியேன்[5]விரகப் பொருமலையே
[6]கள்ள றுதாங் குவளைகளே
[7]கழலுங் கரந்தாங் குவளைகளே
கரையிற்[8]படராத் துப்பீரே
கலந்த [9]துடலத் துப்பீரே
[10]அள்ள லளையுங் [11]களிக் கரையே
அழைப்பார் மாதர் க[12]ளிக்கரையே
[13]ஆறு வகுப்புக் காற்றேனே
[14]ஆழிப் புடைப்புக் காற்றேனே
வெள்ள மூறும் [15]பானத்தே
விரும்பா திருந்தேன்[16] பானத்தே
வெங்க டேசு ரெட்டனையே
[17]மேவத் [18]தடுக்கு மெட்டனையே.

---

*இஃது, எட்டையபுரத்து மன்னனாகிய வெங்கடேசுர எட்டப்பனைப் பாட்டுடைத்தலைவனாகக்கொண்டு பாடப்பெற்றது.

1. [1] திருக்கையென்னும் மீன்களே. [2] நீங்கள். [3] யான் துயிலாதிருத்தலை. [4] மோதுகின்ற அலைகளே. [5] காம நோயின் வீக்கத்தை. [6] தேன் நீங்காதாகிய. [7] கழன்று விழும் கையில் தரித்த வளையல்கள். [8] பாவுதலையுடைய பவளங்களே [9] உடம்பில் பசலை. [10] சேறு கலந்த. [11] களிமண்ணாலாகிய கரையே. [12] கருப்பு வில்லையுடைய மன்மதனையே. [13] ஆறு பிரிவான கால்களையுடைய வண்டே. [14] கடலோசைக்குச் சகித்திலேன். [15] வெண்ணிறமான சங்கே. [16] பால் முதலிய பருகுவனவற்றில். [17] அணைய. [18] தடை செய்வான் நெருங்கிய அன்னை.

அடியுங்கடையுமடக்கு

2. [1]காரி யனைய கொடைக்கு[2]ழுப
காரி தமிழ்[3]பா ராட்டும்[4]விப
காரி மதி[5]யோ சனையாலுங்
[6]காரி யகரு மம்பகர்வோன்
[7]வேரி வனசத் திருமாதை
விழியு ளிருத்திப் பகையனைத்தும்
வென்ற்ோன் வெங்க டேசுரெட்டன்
மேவு [8]மிளசைக கடற்றுறைவாய்
[9]வாரி முகட்டி [10]லெழுகலமே
[11]வளைபோ னதுவு [12]மெழுகலமே
[13]வந்தால் வரு[14]மீ சுரப்பாறே
மைய லெனக்குஞ் [15]சுரப்பாறே
நீரி [16]ழூறு மீன்[17]புலவே
நெடுநாட் செலுமோ நான்[18]புலவே
[19]நெய்தற் படரு்ங் [20]கொடியாரே
[21]நேய ரனைமார் கொடியாரே.

---

2. [1] வள்ளல்களில் ஒருவன். [2] உதவி செய்பவன். [3] புகழும். [4] வழக்காளி. [5] ஆழ்ந்த சிந்தனை. [6] பயன்தரத்தக்க செயல்கள். [7] மணம். [8] இளவாசனேந்தல் என்னும் ஊர். [9] கடலினுச்சியில், [10] உதிக்கும் இரேவதி நாளே. [11] கைவளை. [12] எழுகலம் அளவாகும். [13] காற்றினால். [14] மிக விரைவான மரக்கலமே. [15] நீர் ஊறுகின்ற யாற்றையொக்கும். [16] தோன்றும். [17] புலால் நாற்றமே. [18] தழுவ. [19] நெய்தல் நிலத்தில். [20] கொடிகளே. [21] அன்புடையாராய் இருந்த தாய்மார்.

## கடலுக்குந் தலைவிக்கும் சிலேடை

### அடிமடக்கு

3. [1]கச்சங் கடக்க வடங்காக்கொங்
கைக்கும் [2]பசலை பொருந்தி [3]யனங்
கைக்கும் படிக்கு மிருந்து [4]மடல்
கைக்குந் தரிக்க வெண்ணி [5]மதி
யுச்சம் பார்க்கு மடவார்கள்
உள்ளங் கவரக் காமனைப்போல்
உதித்தோன் வெங்க டேசுரெட்டன்
உலாவப் பார்த்தேன் பெருங்கடலே
[6]அச்சங் கூரு முன்னிடத்தில்
[7]அச்சங் கூரு மென்னிடத்தில்
[8]அம்பா லசைவாய் நீயு[9]மதன்
அம்பா [10]லசைவு மெனக்குண்டே
[11]மச்சங் கடவா துன்னையுங்[12]கா
மச்சங் கடவா தெனக்குமுண்டாம்
[13]வணங்கா ராகு முனக்கெனக்கும்
[14]வணங்கா ராகுஞ் சிலதியரே.

---

3. [1] நகிற்கட்டு (ரவிக்கை) தனக்குள் ஒடுங்கியிருக்கச் செய்ய. [2] காம நோயாலுண் டாகும் நிற வேறுபாடு, [3] உணவு கசக்கும்படிக்கும். [4] பனைமடலாற் செய்யுங் குதிரையைக் கைப்பற்ற. [5] சந்திரன் உச்சியில் வருவதைப் பார்க்கின்ற. [6] அந்தச் சங்குகள் ஊர்ந்து செல்லும். [7] அஞ்சுதல் மிகும். [8] நீரால். [9] மன்மத பாணத்தால். [10] சோர்வும். [11] மீன். [12] மன்மதன் செய்யும் வருத்தமான போர். [13] நிறங்கருமையாகும். [14] பணிதல் செய்யார் தோழியர் என்க.

முன் மன்மதனுக்கும் வையையாற்றிற்கும் சிலேடை

**பின் கடலுக்கும் தலைவிக்கும் சிலேடை**

அடிமடக்கு

4. [1]காலி லேறி [2]யப்பர்குளக்
கண்ணி லடங்கி [3]மொத்துண்டு
[4]கரையு முருவு மானதனுற்
காட்டும் [5]போக நடத்துமதன்
போலும் வையைத் துறைக்கதிபன்
புகழ்சேர் வெங்க டேசுரெட்டன்
புலவர் தமக்குப் புரிகருணை
போலே நிறைந்த பனிக்கடலே
[6]மாலி னுலுங் [7]கலக்கமுற்றாய்
[8]மாலி னுலுங் [9]கலக்கமுற்றேன்
[10]வைய முடுக்க வருவை [11]யனை
வைய முடுக்க வருவேனுன்
நீ[12]லங் கையிலுந் தொடுவைமதன்
[13]நீலங் கையிலுந் தொட்டிடுவான்
[14]நேமித் திடர்நீ யுன்னை [15]யென்போல்
நேமித்[16]திடர்நா னுரைத்தேனே.

---

4. 1 மன்மதனுக்கு :-[1] தென்றலாகிய தேரில். [2] சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணில். [3] தாக்கப்பட்டு. [4] அழிந்த வடிவமும். [5] இன்பம்.

2 வையையாற்றுக்கு :-[1] வாய்க்காலில். [2] நீர்நிரம்பிய குளத்தின் மதகில்; அப்பு-அப்பர். இறுதிப்போலி; அப்பர் குளமென்பது ஒரு குளத்தின் பெயராகவும் இருக்கலாம். [3] மோதி. [4] பேரொலி செய்யுந் தோற்றமும். [5] விளைவு. [6] திருமால். [7] கடையப்படுதல். [8] காமமயக்கம். [9] மனக்கலக்கம். [10] நிலமகள் உடையாகத் தரிக்க. [11] தாய் ஏசவுந் தூாத்தவும். [12] இலங்கை நகரிலும் தொட்டு நிற்பாய். [13] குவளை மலர்ப் பாணத்தை. [14] பூமியாகிய இடரை நீங்கி நிற்கின்ற. (நீ - நீத்தல் என்பதன் முதனிலை) [15] என்னைப்போல் கருதி. [16] துன்பத்தை.

மாம்பழக் கவிச்சிங்க நாவலர் இயற்றிய

**சந்திர விலாசம்**

**சிவனுக்கும், கொல்லிமலைக்குஞ் சிலேடை**

அடிமடக்கு

1. [1]கங்கை யேந்தி [2]மாதங்கங்
கலந்து [3]சூலந் [4]தலையணிந்து
[5]கடுக்கை காட்டிக் [6]கலைவளைத்துக்
[7]கனத்தே வரைமுன் பரித்தலினாற்
செங்கை தோன்று [8]மழுவினன்போற்
றிகழுங் கொல்லி மலைக்கதிபன்
செயபொற் புய[9]வே லப்பதுரைச்
சிங்க மகிழுஞ் செழுநிலவே
[10]தங்கை யா[11]மற் புதத்திரு[12]நித்
தங்கை யாமற் குடியிருக்குந்
[13]தானங் [14]கடுத்தாய் மதன்குடையாய்த்
தா[15]னங் கடுத்தாய் தமியேனைக்
[16]கொங்கை யேற்ற மலர்[17]புலரக்
[18]கொங்கை யேற்ற முற[19]வலிமை
கொடு[20]மை யலவா வெழுக்[21]கொதித்தாய்
[22]கொடுமை யலவா குறிக்கினிதே.

---

1. 1 சிவனுக்குக் கூறுங்கால் :-[1] ஓர் யாறு ; கம், கை எனப் பிரித்து நான்முகன் தலையோட்டைக் கையில் எனலுமாம். [2] உமையம்மையை ஒரு பாகத்தில். [3] முத்தலை வேல். [4] இடம். [5] நஞ்சைத் தன்னிடத்தே. [6] மானைத் (கையில்) தடுத்து. [7] பெருமைவாய்ந்த தேவர்களை முன்னாளிற் காத்தமையால் என்க.

2 கொல்லிமலைக்குக் கூறுங்கால் :-[1] கருந்தினையை (கங்கு - கருந்தினை) கம்-கை எனப் பிரித்து, மேகத்தை தன்னிடத்தே யெனலுமாம். [2] யானை. [3] சதுரக்கள்ளி ; சூற்கொண்ட மேகமுமாம். [4] இடம் ; உச்சியுமாம். [5] கொன்றை; உயர்ச்சியுமாம். [6] முசுவென்னும் ஒருவகைக் குரங்கைத் தங்கச்செய்து ; சந்திரனைத் தடுத்து என்றலும் பொருந்தும். [7] பெருமையுடையதாய் மூங்கில்களை முன் இடங்களில் சுமத்தலினால் ; பெருமைவாய்ந்த கடவுளரைத்தன்னிடத்தே தாங்கியிருத்தலினால் எனக் கொள்ளுதலும் ஆம். [8] சிவபெருமான். [9] பாட்டுடைத் தலைவர் ; வேலப்ப கவுண்டர். சேலம் ஜில்லாவைச் சார்ந்த வேளுக்குறிச்சி ஜமீன்தார். [10] (உனக்குப்) பின்பிறந்தாளாகிய. [11] அழகிற் சிறந்த திருமகள். [12] நாடோறும் வெறுப்பின்றி. [13] உறைவிடமாகிய தாமரைப்பூவை. [14] வெகுண்டு அழித்தாய். [15] அவன்பால் சார்ந்தாய். [16] மணத்தை ; தேனை ; பூந்தாதை எனினுமாம். [17] வாட. [18] நகில்கள் விம்முதலடைய. [19] வன்மையால். [20] மயக்கமும் ஆசையும். [21] சுடுகின்றாய். [22] குறிக்கின் இது கொடுமை அல்லவா ? என முடிக்க.

முன் குமரக்கடவுளுக்கும் கொல்லி மலைக்குஞ் சிலேடை

பின் சந்திரனுக்கும் திருமாலுக்குஞ் சிலேடை

2. [1]ஆறு முகங்கொண் [2]டயனகத்தை
யடக்கிக் [3]கனிவாய்க் குஞ்சரிவேட்
[4]டண்டத் தினையா தரித்தருளி
[5]யங்கே கயமேற் பொலிதலினால்
[6]வீறு கதிர்வேற் கரகுமர
வேளாங் கொல்லி மலைவேந்தன்
[7]வேளைப் பதிவே லப்பதுரை
மெச்சும் புதிய வெண்ணிலவே
[1]கூறு ததியி லுற்பவித்துக்
குலவிச் [2]செய்ய வல்லிதழீஇக்
[3]கூர்கட் கஞ்சங் கெடுத்து[4]ரிய
கோல மானை முனங்காட்டித்
தேறு புகழ்[5]மா லாயிருந்துந்
தினமு [6]மாலா யிருக்குமெனைச்
[7]சினப்ப தறனன் றுனக்குனைத்தான்
சிரியா ரோபின் பெரியாரே.

---

2. குமரக்கடவுள் :-[1] ஆறு திருமுகங்களை, [2] நான்முகனது அகங்காரத்தை. [3] கொவ்வைக்கனி போன்ற வாயினையுடைய தெய்வயானையம்மையை மணந்து. [4] உம்பருலகத்தை. [5] அழகிய மயிலின்மீது.

கொல்லிமலை :-[1] வழியைத் தன்னிடத்தில் கொண்டு (யாறுமாம்). [2] பக்க மலைகளை. (நகம் - மலை) [3] பழங்கள் வாய்க்கப்பெற்ற மலைச்சாரல்களைத் தழுவி. (சரி - மலைச்சாரல்) [4] நெருக்கும்படி தினைப் பயிர்களை. [5] அவ்விடத்து யானைகள் தன்மீது ; கயம் - நீர்நிலையுமாம். [6] பிறிதொன்றற்கில்லாத அழகு. [7] வேளுக்குறிச்சி.

சந்திரன் :-[1] சொல்லப்படுகின்ற பாற்கடலில் தோன்றி (உததி - கடல்) [2] செவ்வாம்பல் மலரை. [3] மிக்க தேனையுடைய தாமரைப்பூவைச் சிதைத்து. [4] உரிமையான அழகிய மானென்னுங் களங்கத்தை முன்னே காண்பித்து.

திருமால் :-[1] சொல்லப்படுகின்ற தயிரையுடைய (நந்தகோபன்) இல்லத்தில் பிறந்து. [2] சிவந்த நிறமுள்ள திருமகளை. [3] கூர்மையான வாள், சங்கு என்னுமிவற்றைத் தாங்கி. [4] உரிய வடிவத்தை யானையின்முன்னே காண்பித்து. [5] திருமாலுக்கு ஒப்பாய். [6] மயக்கமாய். [7] வெகுண்டு சுடுவது உனக்கு அறன் அன்று.

முன் ஆதிசேடனுக்கும் கொல்லிமலைக்குஞ் சிலேடை
பின் சந்திரனுக்கும் பாலுக்குஞ் சிலேடை

3. [1]அகிலந் தலைமேற் சுமந்தே[2]காற்
றுர மிசைந்து [3]கொடியவிட
மடக்கி [4]முனைகாட் டும்பல்படைத்
தடுக்கு [5]மாலைப் புறத்தேந்தி
மகிழுங் [6]கலைதே ரனந்தனென
வளருங் கொல்லி மலைக்கதிபன்
வரிசைத் துரைவே லப்பதிட
வள்ளற் கமுதாய் வருநிலவே
[1]துகளின் றியவான் றணிலுதித்துத்
[2]துன்னற் கடந்தா ழியிற்புகுந்து
[3]சுருங்கி நிரம்பு முறைதழுவித்
துதியெண் டிசையு [4]மதியெனவே
பகரும் பொருளாய் [5]விலையுமுறும்
[6]பாந்த மதனு லனைவருக்கும்
பாலை நிகர்த்த நீயெனக்குப்
[7]பாலை நிகர்த்த பரிசென்னே.

---

3. ஆதிசேடன் :-[1] உலகத்தை. [2] காற்றை நிரம்பவுண்டு. [3] கொடுமையான நஞ்சை யடக்கிவைத்து. [4] கூர்மையைக் காட்டும் பற்களைப் பெற்று. [5] திருமாலை.
கொல்லிமலை :-[1] அகில் மரங்களை. [2] தன்னிடத்ததாகிய சந்தன மரத்தைப் பொருந்தி. (கால் - இடம்) [3] கொடிகளை அந்த இடத்தில் சேர்த்து. [4] போர்ச் செயலைக் காட்டும் யானைகளைப் பெற்று. [5] மேகத்தை. [6] கல்வியில் தேர்ந்த ஆதிசேடன்.
சந்திரன் :-[1] குற்றமில்லையான வானத்தில் தோன்றி. [2] செறிந்த இருளை வென்று கடலில் புகுந்து. [3] தேய்ந்து வளரு முறைமையை மேற்கொண்டு. [4] மதி (மதுவையுடையது) என்று சொல்லப்படும் பொருளாகி. [5] ஒளி; தனு ராசியுமாம். [6] ஒழுங்கு.
பால் :-[1] குற்றமில்லையான பசுவினிடத்தில் பிறந்து. [2] நெருங்கிய நல்ல குடம் தாழி இவற்றிற் புகுந்து. [3] குறைவாயிருந்து (காய்ச்சுங்கால்) பொங்கிவரும் இயல்பைப் பொருந்தி; சுருங்கிப் பின் பெருகுதற்கு ஏதுவான மோர்த்துளி பொருந்தப்பெற்று எனலுமாம். (உறை - பிரை) [4] கடைவாய் என்று சொல்லத்தகும் தயிரென்னும் பொருளாகி (மதித்தல்-மத்தித்தல்; கடைதல்) [5] விற்றலையும் பொருந்திய. [6] ஒழுங்கினால். [7] பாலைநிலம்.

முன் கோபுரங்களுக்கும் இராமனுக்குஞ் சிலேடை

பின் வயித்தியனுக்குஞ் சந்திரனுக்குஞ் சிலேடை

4. [1]தூணி வரக்கார் முகந்தழுவித்
[2]தொலையா வடிவா ளிகள்படைத்துச்
சூழ்[3]மா கவசந் தொட்டுநின்று
தொடருந் [4]தான வரையடக்கி
[5]ஆணி மணிக்கோ புரங்களெல்லாம்
அயோத்திக் கரச னெனப்பொலியும்
அருமை [6]வேளை வளம்பதிகாத்
தருள்வே லப்ப மகிபனெனைப்
[7]பாணி பிடித்தா [8]லனம்பிடிக்கும்
[9]பரிசி தோரார் [10]பழியூரார்
[1]பற்ப வகை[2]சிந் தூரத்திறெடு
[3]பலமாத் திரையு [4]மடுத்துவந்து
வீணி லெவர்க்கும் [5]பண்டிதமே
மிகக்காட் டினையிங் கெனக்குமட்டும்
[6]விரக சுரத்தைத் தணிக்காத
விதமே துரைப்பாய் வெண்மதியே

---

4. கோபுரம் :-[1] தூண்கள் உயர்ந்து நிற்ப மேகத்தைத் தம்மிடத்தே பொருந்தி. [2] நீங்காத சிங்க உருவங்களைப் பெற்று. [3] ஆகாயத்தினிடத்தை. [4] யானைகளை; (தானம் - மதம்) உம்பருலகத்தின் எல்லையை என்னலுமாம். (தானம் - சுவர்க்கம்).

இராமன் :-[1] அம்புக்கூட்டையும் சிறந்த வில்லையுந் தழுவி. [2] கெடாத கூரிய அம்புகளைப் பெற்று. [3] சிறந்த உடற் பாதுகாப்பான சட்டை. [4] அசுரரை; இராக்கதரை எனலுமாம். [5] உயர்ந்த. [6] வேளுக்குறிச்சி. [7] கைப்பற்றினல். [8] உணவு ஏற்கும். [9] பரிசு இது ஓரார் - இத்தன்மையை யுணர்ந்திலர். [10] அலர் தூற்றுகின்ற ஊரவர்.

வயித்தியன் :-[1] பஸ்பத்தின் கூறுபாடுகள். [2] சிந்தூரங்கள். [3] பலன் தரும் குளிகைகள். [4] நிறைத்துவந்து. [5] மருத்துவத் தொழிலையே.

சந்திரன் :-[1] தாமரைப் பூக்களின் வகைகள். [2] கெடுதற்குக் காரணமான வலிமையோடு. [3] பல பெரிய அலைகளையும். [4] சார்ந்து தோன்றி. [5] முன்னைய இன்பத்தையே. [6] காம நோயால் நேர்ந்த உடல் வெப்பத்தை.

## *முக்கூடற் பள்ளு

### மூத்தபள்ளி தன் நாட்டு வளங்கூறல்

1. [1]கறைபட் டுள்ளது வெண்கலைத் [2]திங்கள்
[3]கடம்பட் டுள்ளது [4]கம்பத்து வேழம்
[5]சிறைபட் டுள்ளது விண்ணெழும் புள்ளு
[6]திரிபட் டுள்ளது நெய்படுந் தீபம்
[7]குறைபட் டுள்ளது [8]கம்மியர் அம்மி
[9]குழைபட் டுள்ளது வல்லியங் [10]கொம்பு
[11]மறைபட் டுள்ள(து) அரும்பொருட் செய்யுள்
வளமை [12]யாசூர் வடகரை நாடே

### இளையபள்ளி தன் நாட்டு வளங்கூறல்

2. [1]காயக் கண்டது [2]சூரிய காந்தி
[3]கலங்கக் கண்டது வெண்டயிர்க் [4]கண்டம்
[5]மாயக் கண்டது நாழிகை வாரம்
[6]மறுகக் கண்டது வான்சுழி வெள்ளம்
[7]சாயக் கண்டது காய்க்குலைச் செந்நெல்
[8]தணிப்பக் கண்டது தாபதர் உள்ளம்
[9]தேயக் கண்ட(து) உரைத்திடுஞ் சந்தனம்
[10]சீவல மங்கைத் தென்கரை நாடே

---

* முக்கூடல் என்பது மூன்று யாறுகள் கூடும் இடத்திலுள்ள ஓரூர். தாமிர பன்னியின் வடகரையிலுள்ளது. இப்போது சீவலப்பேரி என வழங்கும். ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

1. [1] களங்கமுடைத்தாயிருப்பது. [2] சந்திரன். இஃதன்றி அந்நாட்டு மக்கள்பால் கறைபடுதல் இல்லையென்க. கறை - குற்றம். இஃது ஒழித்துக்காட்டணி. இப்பாட்டிலும் அடுத்த பாட்டிலும் இரண்டாவதாகக் காட்டும் பொருளை இவ்வாறே கூறிக்கொள்க. [3] மதம்; கடன். [4] கட்டுத்தறி. [5] சிறகு; சிறைச்சாலை. [6] பஞ்சு முதலியவற்றால் திரித்தது; அலைதல். [7] உளி நுனியாற் கொத்துதல்; உடற்குறை முதலியன. [8] கல்வேலை செய்வோர். [9] தளிர்; அச்சத்தாலுண்டாகிய பணிவு; குழப்பமுமாம். [10] மரக்கிளை. [11] எளிதிற் புலப்படாமை; மறைந்துபோதல். [12] முக்கூடல்நகரை யுள்ளடக்கிய நாடு ஆசூர் வடகரை நாடெனப்படுமென்பர். [13] நாட்டின்கண்.

2. [1] சுடக்கண்டது; கோபிக்கக் கண்டது. [2] சூரியனுடைய ஒளி. [3] (மத்தினால்) சிதற; மனக்கலக்கமடைய. [4] கட்டி. [5] கழிந்துபோக; அகால மரணமடைய. [6] சுழல; மனச் சுழற்சியடைய. [7] தலை வணங்கிக் கிடப்ப; வாட்டமுற. [8] பற்றற்றிருப்ப; புலம்புதலுற. [9] குறைய; உடல் மெலிய. [10] மருதூரை யுள்ளடக்கிய நாட்டின் பெயர்.

பண்ணைக்காரனிடம்போய் மூத்தபள்ளி முறையிடுதல்.

3. [1]ஏச்சுக்குப் பிறந்தான்—வரவரக்
[2]கூச்சத்தை மறந்தான்—இளையவள்
இளமையைக் [3]குறித்தான்—[4]முதிருமென்
வளமையைப் [5]பறித்தான்
[6]நீச்சுக்கு மேலே—நிலைப்பென்ன
பேச்சுக் கையாலே—[7]உழச்சற்றே
நினைப்பது மில்லை—எனைத்தேடிக்
கனைப்பது மில்லை
[8]தீச்சுட்ட தாறும்—பழித்திடும்
நாச்சுட்ட தேறும்—அவனைமுன்
[9]சீயென்று போட்டேன்—நானினி
வாயொன்றுங் காட்டேன்
[10]பேச்சிட்டுப் பாரும்—மரக்கணு
[11]வாச்சிக்குத் தீரும்—[12]பயப்படப்
[13]பிடித்தது பிடியாய்—[14]குட்டையில்
அடித்திடு [15]மாண்டே.

---

3. [1] பழிச்சொல்லுக்கு. [2] இழிந்த கருமங்களில் உள்ள மொடுங்குதல். [3] கருதினன். [4] ஆண்டு முதிர்ந்த. [5] தொலைத்தான். [6] நீந்திச்செல்லும் பெரு வெள்ளத்திலேயகப்பட்டுக்கொண்டு தரையில் காலூன்றி நிற்கவேண்டுமென்று பேசுதல் பயனற்றது ;அதுபோல; பள்ளன், இளையாளுடைய மோகவலையில் சிக்குண்டு மூத்தபள்ளியாகிய என்னை மறந்தான். இனி அதை நினைப்பதால் பயன் ஒன்றுமில்லையென்பது கருத்து.
[7] உழவுத் தொழில் செய்ய. [8] "தீயினாற் சுட்டபு ணுள்ளாறும் ஆறாதே, நாவினாற் சுட்ட வடு" என்பது காண்க. [9] இகழ்ச்சிக் குறிப்பு. [10] நீரோயவனிடம் பேசியறிந்துகொள்ளும். [11] மரத்தைச் செத்துங் கருவி. [12] அச்சமுற. [13] விடாப்பிடியாய். [14] தொழுமாத்தில். [15] ஆண்டவரே என்பதன் திரிபு.

## * கதிரைமலைப்பள்ளு.

பள்ளன் தொழுவில் மாட்டுண்டு கிடக்க மூத்தபள்ளி வந்துகண்டு கூறுதல்.

1. ஒன்று நான்சொல்ல வொன்பதுஞ் சொல்லி
[1]உறுக்கி யேவை [2]துரப்பி [3]வெருட்டிக்
[4]கன்று காலியும் விற்றுக்கள் ளுஞ்[5]சுள்ளும்
கள்ளப் பள்ளியா ரோடு குடித்து
என்றும் பண்ணை வயல்தனில் வாராமல்
எடுத்துப் பேச்சில் வெருட்டி [6]யுருட்டி
நின்று [7]மிண்டுகள் தான்பண்ணு கின்ற
[8]நெளிப்பெங் கேசொல் புலைப்பள்ள னாரே.

அவன் அவளை மன்னித்தல் கேட்க வேண்டுதல்.

2. கன்னி யாக வுனைக்[1]கைப் பிடித்துநான்
கண்ணைப் போலக் கருதி நடந்தேன்
முன்னை வல்வினை யாலே யுனைவிட்டு
[2]மோச மாக [3]அவளிடம் போனேன்
[4]அன்னை பின்மனை யாளென் றெவருக்கும்
அவனி யோர்சொலு மப்படிப் போலே
என்னை நீருங்க [5]ளாண்டைக்குச் சொல்லி
இருகை கூப்பி விடுவித்துக் கொள்ளும்.

அவள் அவனை மீட்கவேண்டிப் பண்ணைத் தலைவனைப் பரவல்.

3. கான வேடரைக் கண்டுநின் றங்கே
[1]கனகம் போல மலர்ந்தொரு வேங்கை
தான தாய்நின்ற தென்[2]கதி ரைப்பதிச்
சண்மு கன்குகன் தன்பண்ணை தன்னில்
போன மாடுங் கலப்பை நுகமும்
[3]பொதுக்கில் லாமலே நா[4]னொப்புத் தாறேனே
ஆன செந்நெல் பயிர்செய்து தாறேன்
அடியேற் காக விடும்பள்ள னாரை.

---

* கதிர்காமத்தலத்துக் கல்யாணமடத்தை நிறுவிய முத்துலிங்க அடிகளாரின் ஆதரவில் இயற்றப்பட்டது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

1. [1]சினந்து. [2]அதட்டி. [3]அச்சுறுத்தி. [4]கன்றுகளையும் ஆனிரைகளையும். [5]கருவாடு, [6]புரட்டி; பொய் கூறி. [7]மிடுக்குகள். [8]இறுமாப்பு.
2. [1]மணமுடித்து. [2]தவறாக. [3]இளையபள்ளி. [4]தாய்க்குப்பின் தாரம் என்பது பழமொழி. [5]எசமான்; ஆண்டான் என்பதன் மரூஉ.
3. [1]பொன்போலப் பூத்து. [2]கதிர்காமம் என்னும் தலம். [3]மறைத்தல் இன்றி. [4]உடன்பட்டுத் தருகிறேன்; தருகிறேன் என்பது தாறேன் என மருவிற்று.

குமரகுருபரரியற்றிய

## சிதம்பரச்செய்யுட்கோவை

1\. [1]வரத்திற் பிறப்பொன் றருள்கெனினும் [2]வள்ளல்
கரத்திற் [3]கபாலத்தைக் காணாப்–[4]புரத்தை
இரும்[5]புண்ட ரீகபுரத் தெய்தினார்க் கீயான்
அரும்புண்ட ரீகத் தயன்

2\. வாழி திரு[1]மன்றங் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான் புகழ்கேட்ட வார்செவிகள்
வாழி யவனை வணங்கு முடிச்சென்னி
வாழியவன் [2]சீர்பாடும் வாய்

3\. அருவருக்கு முலகவாழ் [1]வடங்க நீத்தோர்க்
கானந்தப் பெருவாழ்வா மாடல் காட்ட
மருவருக்கன் மதிவளிவான் [2]யமானன் றீநீர்
மண்ணெனு[3]மெண் வகையுறுப்பின் வடிவு கொண்ட
[4]ஒருவனுக்கு [5]மொருத்திக்கு முருவொன் றுலவ்
வுருவையிஃ தொருத்தனென்கோ வொருத்தி யென்கோ
[6]இருவருக்கு முரித்தாக [7]வொருவ ரென்றோர்
இயற்சொலில தெனின்யான்மற் றென்சொல் கேனே

---

1\. [1] வேண்டுகோள்; பிறப்பு ஒன்று வரத்தின் அருள்க என மாற்றுக. "மனித்தப் பிறவியும் வேண்டுவதே" "இன்னம் பாலிக்குமோ விப்பிறவியே" என்று வேண்டுவோரும் உளராதல்பற்றி இங்ஙனங் கூறினார். [2] முத்திச் செல்வத்தை வழங்கும் சிவபெருமான். [3] பிரமனது தலையோடு. [4] உடம்பை: [5] விராட் புருடனது இதயகமலமாகிய சிதம்பரம். அயன்புரத்தை ஈயானென்க.

2\. [1] பொன்னம்பலம். [2] கீர்த்தி. கண்முதலிய உறுப்புகட்கு இக்காட்சி முதலியவற்றின் மேம்பட்ட பேறு வேறின்மையின் அவற்றை வாழியென்றார். தமக்கும் பிறர்க்கும் பொதுப்படக் கூறியவாறு.

3\. [1] முற்றும். [2] உயிர். [3] அட்டமூர்த்தம். [4] சிவபெருமான். [5] உமாதேவி. [6] இறைவனுக்கும் இறைவிக்கும் உரித்தாகப் பாற்பொதுமையின் அமைந்த. [7] ஒருவர் என்னும் சொல். "ஒருவரென்ப துயரிருபாற்றாய்ப் பன்மை வினைகொளும் பாங்கிற்றென்ப" என்னும் சூத்திரம் இங்குக் கருதத்தக்கது.

திரிகூடராசப்பக் கவிராயர் இயற்றிய

## திருக்குற்றாலக் குறவஞ்சி

வசந்தவல்லி திரிகூடநாதரைக்கண்டு மையல்நோய் கொண்டு வருந்துதலைப்பார்த்து அவள் தோழிமார் புலம்பல்

1. நடைகண்டா லன்னந் தோற்கு [1]நன்னகர் [2]வசந்த வல்லி
[3]விடைகொண்டா னெதிர்போய்ச் [4]சங்க வீதியிற்
[5]சங்கந் தோற்றாள்
சடை கொண்டா [6]னுடை [7]தான் கொண்டு தன்[8]னுடை
கொடுத்தா ளையன்
[9]உடைகொண்ட வழக்குத் தானோ [10]ஊர்கின்ற
தேர்கொண் டாளே

குறத்தி நாட்டு வளங்கூறுதல்

2. [1]அந்த லார்மொழி தன்னைப் பழித்ததென்
றூடவர் [2]மண்ணில் மூடுங் கரும்பு
[3]துன்னி மீள வளர்ந்து மடந்தையர்
தோளை வென்று சுடர்முத்த மீன்று
பின்னு [4]மாங்கவர் [5]மூரலை வென்று
[6]பிரியுங் காலத்திற் [7]பெண்மையை வெல்லக்
[8]கன்னல் வேளுக்கு வில்லாக வோங்கும்
[9]கடவு [10]ளாரிய நாடெங்கள் நாடே

---

1. [1] திருக்குற்றால நகர். [2] இந்நூலில் கூறப்படுந் தலைவியின் பெயர். [3] இடப வாகனத்தில் உலாவரும் திரிகூடநாதர். [4] சங்கின் வடிவாக அமைக்கப்பட்ட தெரு. [5] வளையல். [6] திக்கு ஆடை; நிருவாணம். [7] தலைவி. [8] ஆடையை யிழந்தாளாகி. [9] தன் உடையைக் கவர்ந்துகொண்ட வழக்குப்பற்றியோ. [10] (அவர்) நடத்துகின்ற தேராகிய பூமியைக் கைப்பற்றிக்கொண்டாள்; சேலையையிழந்துவிட்டமையால் மானங்காக்கும்பொருட்டுப் பூமியிற் குப்புற விழுந்து கிடந்தாளென்பதாம். (பி-ம்.) கொடுத்தான்; இப்பாடத்திற்குத் திரிகூடநாதர் வசந்தவல்லியின் ஆடையை முதலிற் கவர்ந்துகொண்டு பின் தன்னுடைய திகம்பரத்தைக் கொடுத்தாரென்க.

2. [1] அழகின் நன்மையையுடையமகளிர். [2] பூமியில் புதைத்த; நட்டுவைத்த. [3] நெருங்கி. [4] அம்மகளிர்; ஒரு சொல். [5] பல்லை. [6] கணவரைப் பிரிந்திருக்கும் பொழுதில். [7] நாணம் மடம் முதலிய பெண்மைக் குணங்களை. [8] கற்கின்ற நல்ல வேள்; வெல்லக் கற்குமென்க. [9] தெய்வத்தன்மை வாய்ந்த. [10] பாண்டி நாட்டின் உட்பிரிவாகிய நாடுகளில் ஒன்று ஆரிய நாடு.

### சிங்கன் குளுவனைப் பார்த்துக் கண்ணி கொண்டுவரச் சொல்லுதல்

**இராகம் : கல்யாணி தாளம்—சாப்பு**

பல்லவி

3. [1]கண்ணி கொண்டுவாடா-குளுவா-கண்ணி கொண்டுவாடா

அநுபல்லவி

கண்ணி கொண்டுவாடா பண்ணவர் குற்றாலர்
காரார் திரிகூடச் சாரலிலே வந்து
பண்ணிய புண்ணியம் எய்தினாற் போலப்
பறவைக ளெல்லாம் பரந்தேறி மேயுது (கண்ணி)

சரணம்

மீறு[2]மிலஞ்சிக் குறத்தியைக் கொண்டசெவ்
வேட்குற வன்[3]முதல் வேட்டைக்குப் போனநா
[4]ளாறுநாட் கூடி யொரு[5]கொக்குப் பட்ட
தகப்பட்ட கொக்கை [6]யவித்தொரு [7]சட்டியிற்
[8]சாறாக வைத்தபின் வேதப் பிராமணர்
தாமுங்கொண் டார்சைவர் தாமுங்கொண் டார்தவப்
பேறு முனிவரு மேற்றுக்கொண் டாரிதைப்
[9]பிக்குச் சொல்லாமலே கொக்குப் படுக்கவே.

---

* குறி சொல்ல வந்த குறத்தியின் கணவன் பெயர். அவள் பெயர் சிங்கி யென்பது. குளுவன்-குறவரில் ஒரு பிரிவினன். பறவைகளைப் பிடித்தற்குக் குள்ளமான வேடந் தரித்து நடிப்பவன் எனவுங் கூறுப.

3 [1] புட்படுக்குங் கயிறு; வலையுமாம். [2] திணைப்புனம்; இலஞ்சியென்னும் ஊரென்பது பிறிது பொருள். [3] கன்னி வேட்டை; வேட்டைக்குப் போன நாள் முதல் எனவுமாம். [4] ஆறுநாட் சென்றபின். [5] (சூரபன்மனுடைய) மாமரம். (ஒரு பறவை) [6] கெடுத்து (வேகவைத்து). [7] ஆருந்தியில் (ஒருவகைப் பாத்திரத்தில்). [8] திருவிழாவாக (குழம்பாக). [9] பிசகு.

சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய

## சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்

### * மன்மதனைப் பழித்தல்

**பத்துவராளி ராகம்—திசிரதாளம்**

1. [1]பிரபவ னாகிப் [2]பிரஜோற்பத்தி செய்கின்ற
மன்மதா—இன்று
பேதையேன் றன்னைப் [3]பரிதாபி யாக்கலென்
மன்மதா
பரவுங் கடலினைத் [4]துந்துபி யாக்கொண்ட
மன்மதா—நீயும்
[5]பாவைமார் களுக்கு[6]வி ரோதியா யினதென்ன
மன்மதா
வானின்மேற் [7]கோடுந்துன் மதியைக் குடையாக்கி
மன்மதா—காற்றும்
வடக்கோடுந் [8]தேர்கொண்டா யிதுவென்ன [9]காலயுத்தி
மன்மதா
[10]மீனகே தனத்தினல் [11]விஜயம் பெறலாமோ
மன்மதா—யார்க்கும்
[12]விகுருதியா காதிருந்தான் மிகவும் [13]ஜயமாமே
மன்மதா

---

* [சரபோஜி மன்னன் பவனி கண்டு மையல்கொண்ட மதனவல்லி விரகத்தால் துன்புற்று மன்மதனைப் பழித்துக் கூறுதல்.]

1. [1] புகழையுடையவன்; பிரபாவன் என்பதன் திரிபு. [2] மக்களையுண்டாக்குதல். [3] துன்பமுடையவள். [4] முரசு. [5] பெண்கள். [6] பகைவன். [7] வளைந்த கெட்ட சந்திரனை; மேற்கு ஓடும் எனப் பிரித்து மேற்கே செல்லும் எனவும் ஆம்: [8] தென்றல். [9] என்ன காலத்திற்கேற்ற அறிவு. [10] மீனக்கொடி. [11] வெற்றி. [12] வேறுபாடான இயல்பு. [13] வெற்றி.

தேனார் மலரம்பா [14]லானந்த மடைகின்றாய்
மன்மதா—[15]சீறும்
திறவம்பொன் றுளதாயிற் [15]பிரமாதி யாவையே
மன்மதா
மானோர் கரமுற்ற ஈசுரன் முன்னாளின்
மன்மதா—உன்னை
வாட்டிய காலையிற் காட்டுங் [17]குரோதி யல்லை
மன்மதா
தெரியுமிவ் வுலகத்தி [18]லெவர்கீ லகத்தினால்
மன்மதா—என்மேல்
[19]சித்திர பானுவைப்போன் மெத்தவுங் காய்கிறாய்
மன்மதா
சரபோஜி மகராஜர் தமைநான் [20]மருவச்செய்
மன்மதா—நீ
[21]சருவஜித் தாகிமே [22]லக்ஷய னாகுவாய்
மன்மதா.

---

[14] மகிழ்ச்சி. [15] வெகுளுந்திறத்தையுடைய கணை. [16] மிக்க வலிமையுடையவன்; பிரமன் முதலியோர் என்றுமாம். [17] கோபமுடையவன். [18] யாவர் செய்த கலகத்தால். [19] நெருப்பு. [20] தழுவும்படி செய். [21] எல்லாவற்றையும் வெல்பவனாகி. [22] அழிவற்றவன்.

இப்பாட்டில் பிரபவ என்பது முதலாக 19 வருடப் பெயர்கள் அமைந்திருத்தலும் பிரபவன் என்று தொடங்கி அக்ஷயன் என முடித்தலுங் காண்க.

சயங்கோண்டார் பாடிய

## † கலிங்கத்துப்பரணி

### * கடை திறப்பு

1. [1]விடுமி னெங்கடுகில் விடுமி னென்று[2]முனி
வெகுளி [3]மென்குதலை துகிலினைப்
[4]பிடிமி னென்றபொருள் [5]விளைய [6]நின்ற[7]ருள்செய்
[8]பெடைந லீர்[9]கடைக டிறமினோ

2. [1]முனிபவ [2]ரொத்திலராய் [3]முறுவல் கிளைத்தலுமே
[4]முகிணகை [5]பெற்றமெனு [6]மகிணர் மணித்[7]துவர்வாய்
[8]கனிபவ ளத்தருகே [9]வருதலு [10]முத்துதிருங்
[11]கயல்க ளிரண்டுடையீர் கடை[12]திற மின்திறமின்

---

† கலிங்க நாட்டில் நிகழ்ந்த போர் வென்றியை யுணர்த்தும் பரணியென்னும் நூல்.

* தம் அரசனாகிய குலோத்துங்கனும் அவன் படைத்தலைவனான கருணாகரத் தொண்டைமானும் அடைந்த கலிங்க வெற்றியைப் பாடுதற்குத் தலைநகரத்துள்ள பல்வேறு மகளிரும் நாட் காலையே யெழுந்து தந்தோழியர் வாயிற் கடைமுன் நின்று அவரைத் துயிலெழுப்புவது.

1 [1] எங்கள் ஆடையை விடுங்கள் விடுங்களென்று. [2] வெறுப்போடு கூடிய கோபத்தாலுண்டான. [3] மெல்லிய மழலைச் சொற்களை. [4] விடாதே பிடியுங்கள். [5] தோன்றும்படி. [6] இடம்விட்டுப் பெயராமல் நின்று. [7] சொல்லுகின்ற [8] அன்னப்பேடைபோன்ற பெண்களே. [9] வாயிற்கதவைத் திறப்பீர். அடுக்கு வெகுளியின்கண் வந்தது.

2. [1] (ஊடலால் கணவரை) வெறுப்பவர். [2] நமக்கு நிகராவார் வேறு ஒருவரும் இல்லாதவராயிருந்து. [3] (அவ்வூடல் நீங்கியபின் நம்பால்) சிரிப்புத் தோன்றிய அளவில். [4] புன்முறுவலை. [5] அடைந்தேமென்று. [6] கணவருடைய [7] சிவந்த வாயானது, [8] கனிந்த பவளம் போன்ற நும்வாயின் பக்கத்தே. [9] முத்தமிடுதற்கு வந்தவுடன். [10] உவகைக் கண்ணீர் சிந்தும். [11] கெண்டைமீன்போன்ற இரண்டு கண்களையுடையீர். [12] அடுக்கு விரைவுபற்றியது. இது ஊடல், உணர்தல், புணர்தல் மூன்றுங் கூறியதாம். இனி ஊடலால் கணவரை வெறுத்து நிற்கின்ற நும்மிடத்து அதற்கு ஒவ்வாத நகை தோன்றவே அவ்வெகுளி நகையை உவகையாலெழுந்ததெனக்கொண்டு அவர் நும் அருகில் வர அதனைப் பொறாது கலுழுங் கண்களை யுடையீர் எனப் பொருள்கோடலுமாம்.

3. [1]இத்துயின் மெய்த்துயிலே யென்று[2]கு றித்தி[3]ளைஞர்
[4]இது[5]புல விக்குமருந் தெனமனம் வைத்[6]தடியிற்
கைத்தலம் வைத்தலுமே பொய்த்துயில் கூர்[7]நயனக்
கடைதிற வாமடவீர் கடைதிற மின்றிறமின்

4. தண்கொடை [1]மானதன் மார்புதோய்
[2]தாதகி மாலையின் மேல்விழுங்
[3]கண்கொடு [4]போம்வழி [5]தேடுவீர்
கனக நெடுங்கடை திறமினோ

5. [1]கலவிக் களியின் மயக்கத்தாற்
[2]கலை[3]போ யகலக் கலைமதியின்
[4]நிலவைத் துகிலென் [5]றெடுத்துடுப்பீர்
நீள்பொற் [6]கபாடந் திறமினோ

6. [1]மெய்யே [2]கொழுநர் பிழை[3]நலிய
[4]வேட்கை [5]நலிய [6]விடியளவும்
[7]பொய்யே [8]யுறங்கு [9]மடநல்லீர்
புனைபொற் கபாடந் திறமினோ

---

3. [1](நீங்கள் செய்யும்) இப்பொய்யுறக்கத்தை. [2]எண்ணி. [3]இளம்பருவத்தரான நம் கணவர். [4]இச்செயல் (அடிவருடல்). [5]ஊடலைத் தீர்த்தற்கு மருந்தாகு மென்று. [6]நம்பாதங்களில் கையை வைத்து வருடவும்; அடி - இடக்கர் உறுப்பு என்பாருமுளர். [7]கடைக்கண்ணையும்.

4. [1]விசயதரன். [2]ஆத்திமாலை. [3]கண்களால். [4]அவன் சென்ற வழியை. [5](மீண்டு எப்போது வருவானென்று) தேடுகின்றவர்களே; கண்களையுடையீராயிருந் தும் மயக்கத்தால் நீவிர் செல்லும் நெறியை யறியாது தேடுகின்றவர்களே யென்றலுமாம்.

5. [1](நும் கணவருடன்) கூடுதலாற் பிறந்த இன்ப மயக்கத்தால்; கலவியாகிய கள் ளுண்டு களித்தமையாலான மயக்கமுமாம். [2]உடுத்த ஆடை. [3]உடலை விட்டு நீங்க. [4]ஒளியை. [5]கையாற் பற்றியுடுக்க முயலுகின்றவரே. [6]கதவு.

6. [1]உண்மையாகவே. [2]கணவர் செய்த தவறு. [3]ஒருபால் வருத்தவும். [4]அவர்பா லுண்டான விருப்பம். [5]மற்றொருபால் துன்புறுத்தவும். [6]விடியும்வரையும். [7]பொய்யாக. [8]துயில்வதுபோல் கண்ணை மூடிக்கொண்டு கிடக்கின்ற. [9]இளமை.

7. [1]போக [2]வமளிக் [3]களிமயக்கிற்
[4]புலர்ந்த தறியா தேகொழுநர்
[5]ஆக வமளி மிசைத்துயில்வீர்
அம்பொற் கபாடந் திறமினோ

8. [1]ஆளுங் கொழுநர் [2]வரவுபார்த்
தவர்தம் வரவு காணுமல்
[3]தாளு மனமும் [4]புறம்பாகச்
[5]சாத்துங் கபாடந் திறமினோ

9. [1]உந்திச் சுழியின் முளைத்[2]தெழுந்த
[3]உரோமப் பசுந்தா ளொன்றிலிரண்
[4]டந்திக் கமலம் [5]கொடுவருவீர்
அம்பொற் கபாடந் திறமினோ.

10. [1]மீனம்புகு கொடி[2]மீனவர் [3]விழியம்புக வோடிக்
[4]கானம்புக [5]வேளம்புகு மடவீர்கடை திறமின்

11. [1]மழலைத்திரு மொழியிற்[2]சில வடுகுஞ்[3]சில தமிழுங்
[4]குழறித்தரு [5]கருநாடியர் [6]குறுகிக்கடை திறமின்

---

7. [1] இன்பமாகிய [2] படுக்கையில். [3] கள்ளுண்டு களித்த மயக்கத்தால்; போகக் களி மயக்கம் எனக்கூட்டுக. [4] பொழுது விடிந்ததையும். [5] மார்பாகிய படுக்கையின்மேல்.

8. [1] அன்பினல் உம்மை ஆட்கொள்ளும். [2] வருகையை எதிர்பார்த்து. [3] கால்களும் உள்ளமும். [4] இல்லத்தின் வெளியே நிற்ப. [5] உள்ளிருந்து மூடிக்கொண்ட. கொழுநரைத் தேடிக் காணுங் கருத்துடையராய் உட்புகுந்தனர் என்பது கருத்து.

9. [1] கொப்பூழாகிய நீர்ச்சுழியில். [2] மேல்நோக்கி யெழுந்த. [3] மயிரொழுங்காகிய ஒரு தண்டில். [4] மாலை நேரத்தில் காணப்படும் தாமரை மலரை; கொங்கைகளை. [5] சுமந்துகொண்டு.

10. [1] மீனின் வடிவம் பொருந்திய. [2] பாண்டியர்; இடுகுறியளவாய் நின்றது. [3] கண்களினின்று நீரொழுக. [4] காட்டிற் புகுதலால். [5] வேள்மாடத்திற் புகுந்த. மாற்றூர் மகளிரைக் கவர்ந்து வந்து பணிப்பெண்களாக்கி அவருறைதற்கு அரசரால் அமைத்துக்கொடுக்கப்பட்ட தனியிடம் வேளம் எனப்படும்.

11. [1] அழகிய குதலைச் சொற்களால். [2] சில தெலுங்குச் சொற்களையும். [3] சில தமிழ்ச் சொற்களையும். [4] குழறிப் பேசுகின்ற. [5] கன்னட நாட்டுப் பெண்களே. [6] வாயிலை யணுகி.

வடுகுந் தமிழுங் கலந்துண்டாயது கன்னட மொழியென்பது கருத்து.

12. [1]தழுவுங் கொழுநர் பிழை[2]நலியத்
[3]தழுவே லென்னத் தழுவிய[4]கை
வழுவ [5]வுடனே மயங்கிடுவீர்
மணிப்பொற் கபாடந் திறமினோ

13. [1]முருகிற் [2]சிவந்த கழுநீரு [3]முதிரா [4]விளைஞ [5]ராருயிருந்
[6]திருகிச் செருகுங் குழன்மடவீர் செம்பொற்
கபாடந் திறமினோ

14. [1]உபய தன[2]மசையி [3]லொடியு மிடை[4]நடையை
[5]ஒழியு மொழியுமென வொண்[6]சிலம்
பபய மபய [7]மென [8]வல்ற நடைபயிலும்
அரிவை மீர்கடைக டிறமினோ

15. [1]வாயிற் சிவப்பை விழிவாங்க
மலர்க்கண் வெளுப்பை வாய்வாங்கத்
[2]தோ[3]யக் கலவி யமுத[4]ளிப்பீர்
[5]துங்கக் கபாடந் திறமினோ

16. [1]காஞ்சி யிருக்கக் [2]கலிங்கங் குலைந்த
கலவி மடவீர்[3]கழற்சென்னி
[4]காஞ்சி யிருக்கக் [5]கலிங்கங் குலைந்த
[6]களப்போர் பாடத் திறமினோ

---

12 [1] மார்போடு அணைக்கும். [2] வருத்துதலால். [3] அணைக்கவேண்டா என்று பிணங்கிக் கூற. [4] கணவர் கைகள் நழுவ. [5] அப்பொழுதே.

13. [1] நறுமணத்தையுடைய. [2] செங்கழுநீர் மலர்களையும். [3] பருவ நிரம்பாத. [4] இளையவரான நுங்கணவருடைய [5] சிறந்த உயிரையும். [6] முறுக்கி முடிக்கின்ற.

14. [1] இரண்டு கொங்கைகளும். [2] அசைந்தால். [3] உங்கள் இடை முறிந்துவிடும். [4] (ஆதலால் நீங்கள்) நடத்தலை. [5] விடுங்கள் விடுங்கள் என்று சொல்வது போலவும். [6] பாதசிலம்புகள். [7] என்று முறையிடுவது போலவும். [8] ஒலிக்கும்படி.

15. [1] உங்கள் அதரங்களிலுள்ள சிவந்த நிறத்தை. [2] தழுவுகின்ற. [3] அப்புணர்ச்சியின்பமாகிய அமுதத்தை. [4] நுங்கணவர்க்கு ஊட்டுபவர்களே. [5] உயர்வு. கலவிக்காலத்து இதழ் வெளுத்தலும் கண் சிவத்தலும் இயல்பு.

16. [1] (நீங்கள் அணிந்த) காஞ்சியென்னும் இடையணி குலையாமலிருக்க. [2] உமது ஆடை குலைதற்குக் காரணமான. [3] வீரக்கழல் அணிந்த விசயதரன் என்னும் சோழ மன்னன். [4] காஞ்சிபுரத்திலிருக்க. [5] கலிங்க நாடு அழிந்துபோதற்குக் காரணமான. [6] போர்க்களத்தின் சிறப்பை.

17. இலங்கை யெறிந்த [1]கருணா கரன்றன்
[2]இகல்வெஞ் சிலையின் வலிகேட்பீர்
[3]கலிங்க மெறிந்த [4]கருணா கரன்றன்
களப்போர் பாடத் திறமினோ

18. [1]பேணுங் கொழுநர் பிழைக ளெல்லாம்
[2]பிரிந்த பொழுது நினைந்[3]தவரைக்
காணும் பொழுது மறந்திருப்பீர்
கனப்பொற் கபாடந் திறமினோ

19. [1]நேயக்[2]கலவி மயக்கத்தே
[3]நிகழ்ந்த மொழியைக் கிளி[4]யுரைப்ப
[5]வாயைப் புதைக்கு மடநல்லீர்
மணிப்பொற் கபாடந் திறமினோ

20. வருவார் கொழுந ரெனத் [1]திறந்தும்
வாரார் கொழுந ரெனவடைத்துந்
[2]திருகுங்[3]குடுமி விடியளவுந்
தேயுங் கபாடந் திறமினோ.

---

17. [1] கருணைக்கு இருப்பிடமாகிய இராமபிரானுடைய. [2] வலிமை. [3] கலிங்கநாட்டை யழித்த. [4] கருணாகரத் தொண்டைமானுடைய.

18. [1] (உம்மால்) விரும்பப்பட்ட. [2] அவர் உம்மை விட்டுப் பிரிந்திருக்குங் காலத்தில். [3] அவரைக்கண்ட காலத்தில். "காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால், காணேன் தவறல் லவை" என்னுந் திருக்குறள் ஒப்பு நோக்கத்தக்கது.

19. [1] அன்புண்டாக்கும். [2] கூட்டத்தாலாகிய இன்பமயக்கத்தில். [3] உமக்கும் உங்கணவர்க்கும் இடையே நடந்த. [4] (பகற்பொழுதில் பிறர் கேட்குமாறு) சொல்ல. [5] அதன் வாயை நும் கைகளால் மூடும்; நும் வாயைக் கைகளால் மறைத்துக்கொள்ளு மெனவுமாம்.

20. [1] திறப்பதாலும். [2] சுழல்கின்ற, [3] மூளை; கதவின் ஒருறுப்பு. "தாய ரடைப்ப மகளிர் திறந்திடத், தேயத் திரிந்த குடுமியவே" என்பது முத்தொள்ளாயிரம்.

மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் இயற்றிய

## சீகாழிக்கோவை

ஐயம்

1. [1]வெள்ளாம்ப லான்கொல்செந்[2] தாமரை யான்கொலொண் [3]மேனிகருங்
கள்ளாங் குவளையன் னான்கொனங்[4]காழிக் கடவுள்[5]வெற்பின்
உள்ளாம்[6] இவரடி[7]தோய்தவ முன்னம்[8] உஞற்றுலக
[9]நள்ளாங் குடிகொண் டரசா டவஞ்செய்[10] நலத்தினனே.

துணிவு

2. நாமகள் [1]மாமகள் சேர்காழி நாதர் நகு[2]மிமயக்
கோமகள் பாகர் [3]விடைப்பாகர் தென்கழுக் குன்றத்[4]தொப்பி
லாமகள் [5]கோதைநம் போல்வா டலி[6]னிமை யாடலிற்[7]றாள்
[8]பூமகள் சூடலின் ஐயமின் றாலிவள் [9]பூமகளே.

---

[இம்மாது தேவம்களிருள் யாரோவென்று தலைவன் ஐயுற்றுக்கூறுதல்]

1. [1] (ஐராவதமென்னும்) வெள்ளை யானையையுடைய இந்திரனோ. [2] நான்முகனோ. [3] திருமேனி கருங்குவளையை யொத்தவனாகிய திருமாலோ. [4] சீகாழிப்பதியிலுள்ள சட்டைநாதர். [5] மலையினிடத்துத் தோன்றும். [6] இந்நங்கையாருடைய. [7] பொருந்துதற்கேற்ற தவத்தை. [8]செய்த. [9] விருப்பமாகிய குடியிருப்பை மேற்கொண்டு. [10] நல்வினைப்பேறுடையான்.

இவர் பாதம் படுதற்கேற்ற தவஞ்செய்த வுலகில் குடியிருந்து அதனையாளும் நல்வினையுடையான் இந்திரனோ நான்முகனோ திருமாலோ என்றான். இதனால் இவள் சுவர்க்கம், சத்தியலோகம், வைகுந்தம் என்னுமிடங்களில் வாழும் தெய்வமகளிருள் யாரோவென ஐயுற்றான்.

இந்திரன் முதலிய மூவரையும் ஆம்பல் தாமரை குவளை யென்னும் மலர்களாற் குறித்தது ஒரு நயம்.

[மாலை வாடுதல் முதலியவற்றால் இம்மாது மானிட மகளென்று தலைவன் துணிதல்]

2. [1] திருமகள். [2] இமவான் புதல்வியான பார்வதியை. [3] இடபத்தை ஊர்தியாக நடத்துபவர். [4] (தனக்கு) நிகராவார் யாருமில்லாத. [5] மலர்மாலை. [6] கண்ணிமைத்தலாலும். [7] பாதங்களை. [8] பூமிதேவி தரித்தலாலும். [9] இப்பூமியிலுள்ள மானிட மகளேயாவள்.

நீடு நினைந்திரங்கல்

3. அருளாற் பரமர் [1]புகலியிற் [2]பாலுண்ட [3]வையர் [4]தென்னற்
கருளாற் புகுத்திய [5]நோா [6]யவ ரேயொழித் தாங்கி [7]வரெற்
கருளாற் புகுத்திய [8]நோயிவ ரே [9]தெற லன்றிமற்றோ
ரருளாற் புகன் [10]மந் திரமாதி யானொழி யாததுவே.

பயந்தோர்ப்பழிச்சல்.

4. [1]கழிபடு வெண்டலை மாலையன் [2]காழிக் கடவுள்வெற்பின்
மொழிபடு நான்முக [3]னாயுள் [4]வடதிசை மூர்த்திசெல்வம்
[5]விழிபடு மேனியன் போகமிம் மூன்றும் விராயெனக்கோர்
வழிபடு [6]தெய்வந் [7]தந் தார்நீடு வாழ்கவிம் மாநிலத்தே.

---

[தலைவியின் செய்கையால் காலம் நீட்டித்தலையறிந்து தலைவன் வருந்துதல்]

3. [1] சீகாழிப்பதி. [2] ஞானப்பால். [3] திருஞானசம்பந்தர்; புகலியிற் பரமர் அருளால் பாலுண்ட ஐயரென்க. அருள்—அருட்சத்தியாகிய அம்பிகையெனினுமாம். [4] நின்றசீர்நெடுமாறற்கு. [5] வெப்பு நோயை. "அமணர் கொளுவுஞ் சுடர், பையவே சென்று பாண்டியற்காகவே" என்றமையால் நோய் அருளாற் புகுத்தியதாயிற்று. [6] பிள்ளையாரே. [7] இத்தலைமகளார். [8] காம நோயை. [9] கெடுத்தல்; நீக்குதல். [10] மந்திரம் மணி மருந்துகளால்.
"பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை, தன்னோய்க்குத் தானே மருந்து" என்னும் பொதுமறை காண்க.

[தலைவியின் தாய் தந்தையர்களைத் தலைவன் வாழ்த்தல்]

4. [1] உடம்பினின்றும் நீங்கிய; மிகுதியாகப் பொருந்திய எனினுமாம். [2] சீகாழிப்பதி. [3] கற்பகாலம். [4] குபேரசம்பத்து. [5] இந்திரபோகம். [6] தலைவி.
"வழிபடு தெய்வம் கட்கண்டாஅங்கு.........நின் நலமென் பணைத்தோ ளெய்தினம் (நற்றிணை 9)" என்றது ஒப்பு நோக்குக.
[7] தாய்தந்தையர். தந்தார் இம்மூன்றும் விராய்நிலத்து நீடுவாழ்க எனக்கூட்டுக.

பாங்கனை நின்குறையாக இதுமுடிக்கவேண்டுமென்றல்

5. [1]மயில்கா [2]யியலி னடந்தவெங் காமம் [3]வரம்பொருவி
[4]வெயில்கா யறைவெண்ணெய் போலப் [5]பரந்தது மேனி யெங்கும்
[6]எயில்காய் நகையர் தகையர் புகலி யிறைவர்வெற்பிற்
[7]குயில்கா யெழிலியி [8]னீகாயின் [9]மாயுமக் கோளினதே.

தலைமகன் மயங்கல்

6. [1]சேவென் றுரைக்கத் திருமாலைச் செய்த சிவபரனே
[2]கோவென் றுரைக்க வெனக்கருள் வோன்[3]வெங் குருவரைவாய்ப்
போவென் றுரைக்கப்[4]பயின்றது போலவிப் [5]பூங்கொடிவாய்
வாவென் றுரைக்கப் பயிலாமை யான்செய்த [6]வல்வினையே.

---

[நின்னால் இன்றியமையாப் பொருளாக இது முடிக்கவேண்டுமென்று தலைவன் பாங்கனை வேண்டுதல்]

5. [1] மயிலை வருத்துகின்ற. [2] சாயலையுடைய தலைமகளால். [3] எல்லையைக் கடந்து. [4] வெயில் வெப்பத்தால் சுடுகின்ற பாறையில் வைத்த. [5] உடல் முழுதும் பரவியது. [6] திரிபுரத்தை. [7] குயிலை வாட்டுகின்ற மேகத்தைப்போல. [8] நீகழற்றுரையால் என்னை வருத்தமுறச் செய்யின். [9] (அதனால்) கெட்டுவிடும் அக்கொள்கையையுடையதோ; மேலும் பெருகுமென்பதாம். "இடிக்குங் கேளிர் நுங்குறையாக, நிறுக்கலாற்றினோ நன்றுமற்றில்ல, ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற், கையிலூமன் கண்ணிற்காக்கும், வெண்ணெயுணங்கல் போலப், பரந்தன் றிந்நோய் நோன்றுகொளற் கரிதே" (குறுந்தொ. 58) என்பது இக்கருத்துடையது.

6. [1] இடபமென்று சொல்ல. [2] முழுமுதற் கடவுளென்று சொல்லும்படி. [3]காழிப்பதி. [4] பழகியது. [5] தோழியின் வாய். [6] தீவினை.

கோழி குரல்காட்டுதல்

7. [1]கோழிக்கு வேளுட [2]னீருக நோக்கு[3] குழகர் [4]கொம்பில்
கோழிக்கு நாயகர் [5]மேவிய [6]வீழிக்குங் [7]கூடலுக்குங்
[8]கோழிக்கு [9]மன்புடை யார்[10]வரும் போது [11]குரலெழுப்புங்
கோழிக்கு நான்செய்த தீங்கெவ னோசொல் [12]கொடியிடையே.

அலர்பார்த்துற்ற அச்சக் கிளவி

8. நல்லா [1]ரொருவர்[2]கற் றூற்றவு [3]மாற்றிய நம்புகலி
[4]வல்லா [5]ரொருவ [6]ரலர்தூற்ற [7]வாற்றிலர் மற்றவரும்
பல்லார் களுந[8]னி தூற்றலர் யானெப் படிப்பொறுப்பேன்
[9]வில்லார் மதிநுத லாய்நினை தோறெழும் [10]வெய்துயிர்ப்பே.

தலைவன் தலைமகளை உவந்தலர் சூட்டி உண்மகிழ்ந்துரைத்தல்

9. [1]மையோ வெனுங்களத் தார்காழி நாதர் வழங்கருளாற்
[2]பொய்யோ வெனுமிவ் [3]விடைகூந்தன் [4]முன்செய்[5]புத்
தேடன்கையோ

---

[இரவுக்குறி இடையீடுபடுதற்கு ஏதுவான தாய் துஞ்சாமை முதலியவற்றுள் இஃதும் ஒன்று]

7. [1] கொழுமையான கரும்பு வில்லையுடைய. [2] சாம்பராக. [3] பேரழகுடையவர். [4] கோழி என்பதன் முன்னுள்ள இரட்டைச் சுழியைக் கோவென்றும் கொம் பென்றும் கூறுதல் வழக்கு; அஃதில்லாத கோழி, காழியாம் ஆதலால் சீகாழிக்குத் தலைவரென்க. [5] எழுந்தருளியுள்ள. [6] திருவீழிமிழலைக்கும். [7] நான்மாடக்கூடலுக்கும். [8] உறையூர்க்கும். [9] தலைவர். [10] இரவுக் குறி யிடத்து வரும்பொழுது. [11] கூக்குரலிட்டுத் துயில்வாரை யெழுப்பும். [12] தோழியே.

[பலர் கூறும் பழிமொழியை யறிந்து தான் கொண்டுள்ள அச்சத்தைத் தலைவி கூறுதல்]

8. [1] சாக்கிய நாயனர். [2] கற்களைத் தூவவும். [3] பொறுத்திருந்த. [4] இறைவர். [5] மன்மதன். [6] மலர்ப்பாணங்களைச் சிதற. [7] பொறுத்திலர். [8] மிகவும் பலரறியக் கூறும் பழிமொழிகளை. [9] ஒளி பொருந்திய. [10] வெப்பமாகிய பெரு மூச்சு,

ஒருவர் எறிந்த கல்லை ஏற்றுக்கொண்ட இறைவர் மற்றொருவர் தூவிய அலரைப் பொறுத்தாரில்லை. அங்ஙனமிருக்கப் பலரும் என்மேல் அலர் தூற்றுவராயின் யான் ஆற்றுமா றெங்ஙனம் என்பதாம்.

[அலர்சூட்டி—மலர்களைப் பறித்துச் சூட்டி]

9. [1] மேகமோ; அஞ்சனமோ எனினுமாம். [2] இல்லையோ உண்டோ என்ற ஐயம். [3] தலைவியின் கூந்தலை. [4] முன்பு படைத்த. [5] பிரமன் கைகளோ.

வையோவக் கூந்தன்[6] முடித்துமென் பூவு[7]மணிதல் செய்யென்
கையோ சிறந்தன யாருரைப் பாரிந்தக் கானகத்தே.

சிவப்பிரகாசர் இயற்றிய

## திருவெங்கைக்கோவை

மெய்தொட்டுப் பயிறல்

1. [1]மன்னிசை வெங்கை யுடைய பிரான்வரை [2]மா[3]னுசுப்பைப்
[4]பொன்னிசை கொங்கை யொடித்தாலு நிந்தை பொருந்துநுமை
[5]மின்னிசை மென்குழ [6]லேறன்மின் னீவிர் விளங்கிலிரோ
வின்னிசை வண்டினங் காள்[7]காக தாலிய மென்பதுவே.

கிழவோன் வேட்கை தாங்கற்கருமை சாற்றல்.

2. [1]பாலார் மொழியுமை பங்காளர் வெங்கையம் [2]பாவைதந்த
[3]மாலாழ் தருமெனை [4]வெவ்வுரை யானண்ப வாட்டுகின்றாய்
[5]காலாழ் களரி னமிழ்ந்தவெங் கோட்டுக் களிற்றையொரு
வேலா லெறிபவர் போலே [6]யிதுவென் விதிவசமே.

---

6 கொண்டையிட்டு. 7 சூட்டிய.

[தலைவன் தலைவியின் உடலைத் தீண்டி நெருங்குதல்]

1. 1 நிலைபெற்ற கீர்த்திவாய்ந்த. 2 தலைமகள்; உவம ஆகுபெயர். 3 இடையை. 4 தேமல்; ஆபரணம், அழகு எனினும் பொருந்தும். 5 மின்னுதல் பொருந்திய. 6 ஏறாதீர்கள். 7 காகதாலியமென்னும் நியாயத்தை; அது காகமேறப் பனம்பழம் வீழ்ந்ததென்பது.

கொங்கைச் சுமைதாங்காமல் இடை முறிந்தாலும் அப்பழி நும்மை வந்தெய்துமாதலால் நீவிர் இவள் குழலில் ஏறாதீர் என வண்டுகளை விலக்குவான் போன்று தலைவன் தலைவியின் தோளைத் தீண்டினான்.

இத்துறை, வண்டு முன்னிலையாகப் பாடுதல் மரபு.

[தலைவன் தனது காம வேட்கையை இனிப் பொறுத்தற்கியலாதென்று பாங்கனிடங் கூறல்]

2. 1 பாலையொத்த. 2 பாவைபோல்வாள். 3 மையற் கடலில். 4 வன்சொற்களால்; கழற்றுரையால். 5 கால்கள் அழுந்துகின்ற சேற்று நிலத்தில். 6 இவ்வாறு நீ வருத்துதற்குக் காரணம். நண்ப, எறிபவர்போலே வெவ்வுரையால் வாட்டுகின்றாய் என்க.

பாங்கி குலமுறை கிளத்தல்

3. [1]பொய்ம்மே வரும்[2]புனங் காவலர் யாங்கள்[3] புனநடுவின்
வம்மே வுறுமது காப்பவ னீ[4]வளை சூழ்வதெம்மூர்
நம்மே லருள்வைத் தளிப்பார் திருவெங்கை நாட்டிலுன்னூர்
[5]கம்மேல் வரும்வளை செய்காட் டுவதொண்
[6]குலோத்துங்கனே.

தலைமகன் மறுத்தல்

4. [1]தாமக் குழலை [2]வரைந்துகொண் டேவெங்கைத்
[3]தாணுவெற்பிற்
காமக் கனலைத் தணிப்பாயென் றோதிய காரிகைநீ
[4]நாமக் கிணை[5]றகழ்ந் [6]தந்நீர் கொடுநன் னகரிற்பற்றி
[7]வேமக் கனலை யவிப்பாயென் பார்களின் வேறல்லையே.

பாங்கி ஆற்றுவித்து அகற்றல்

5. [1]ஆனுக் களித்த கொடியாளர் வெங்கை யணி[2]நகராய்
[3]பானுக் களித்து வருங்காலை நீவிரிற் பைந்தொடிக்கைத்
[4]தேனுக் களிக்கு மலர்த்தொடை வார்குற் றேமொழி[5]யெம்
மானுக் களித்துக் [6]கலைகாக் குவனுன்கை வண்டளையே.

---

[தோழி, தலைவி தலைவருடைய குலத்தின் இயல்பைக் கூறி மணமறுத்தல்]

3. [1] பொய்யொழுக்கம் பொருந்ுதல் இல்லாத. [2] தினைக்கொல்லை. [3] புனத்தின் நடுவில் வகரம் பொருந்தியது புவனமாம்; உலகம் காப்பவன் நீயென்பது பொருள். [4] குகை. [5] குகரம் மேல்வந்த, வளை, குவளை; குவளை மலர்களை வயல் காட்டும் மருத நிலத்து ஊர். [6] குலத்தால் உயர்ந்தவனே.

[தலைவியை உலகியற்படி மணந்து பின்பு தழுவாயென்று தோழி கூறியதைத் தலைவன் மறுத்தல்]

4. [1] மலர்மாலையணிந்த கூந்தலையுடையவளை. [2] மணஞ்செய்துகொண்டு. [3] சிவபெருமான். [4] அச்சத்தைத் தருகின்ற. [5] தோண்டி. [6] அக்கிணற்று நீரைக் கொண்டு. [7] எரிகின்ற அந்த நெருப்பை.

அவர்களுக்கும் உனக்கும் வேற்றுமை இல்லை என்பதாம்.

[தலைமகன் வருந்தக்கண்ட தோழி நாளைவா என அவனைத் தேற்றி அகற்றல்]

5. [1] இடபத்திற்கு. [2] நகரத்தில் வாழ்பவனே. [3] சூரியன் மகிழ்ந்து உதிக்குங் காலைப் பொழுதில். [4] வண்டிக்கு [5] எம் தலைவிக்கு. [6] உனது கல்வியறிவைக் காப்பேன்; அவளது கலை (ஆடை) நெகிழாமற் காப்பேன் என்றலும் பொருந்தும்.

உன் கைத்தழையைப் பெண்மானுக்குக் கொடுத்து ஆண்மானைக் காப்பேன் என்ற பொருளுந்தோன்றும்.

பாங்கி தலைமகள் அவயவத்து அருமைசாற்றல்

6. [1]மந்தா கினியணி [2]வேணிப்[3]பி ரான்வெங்கை மன்னவநீ
[4]கொந்தார் [5]குழன்[6]மணி மேகலை நூனுட்பங் கொள்வ
[7]தெங்ஙன்
[8]சிந்தா மணியுந் [9]திருக்கோ வையுமெழு திக்கொளினு
[10]நந்தா வுரையை யெழுதலெவ் வாறு நவின்றருளே.

பாங்கி என்னை மறைப்பது என்னெனத்தழால்

7. [1]மேலிலை யென்ன வுயர்ந்தார் திருவெங்கை வெற்பி[2]லுள
மாலிலை யென்ன[3]வெனைமறைத் தாய்திரு மாலுறங்கும்
ஆலிலை யன்ன வயிற்[4]றணங் கேயருந் தாய்க்கொளித்த
[5]சூலிலை நெஞ்சறி யா[6]வஞ் சகமிலைச் சொல்லுதற்கே.

---

[தலைவியின் உறுப்புக்களைப் படத்தில் எழுதுதல் உன்னால் இயலாதென்று தோழி கூறல்]

6. [1] கங்கை. [2] சடை. [3] உபகார குணமுள்ள இறைவன். [4] பூங்கொத்து. [5] தலைவி. [6] மணிகள் கோக்கப்பட்ட மேகலையணிந்த நூல் போன்ற இடையினது. [7] எவ்விதம். [8] சிதறாத முத்துப்போலும் பற்களையும். [9] அழகிய கொவ்வைக் கனிபோன்ற அதரத்தையும். [10] கெடாத சொல்லை. மணிமேகலையென்னும் நூலின் நுட்பங்களைத் தெரிந்துகொள்ளுதல் எவ்வாறு எனவும், சிந்தாமணி திருக்கோவையார் என்னும் நூல்களை எழுதினும் அவற்றின் உரைகளை யெழுதுதல் இயலாதெனவும் வேறுபொருள் தோன்றுதலுங் காண்க.

[தலைவி தன் களவொழுக்கத்தை மறைத்ததுகண்ட பாங்கி நீ எனக்கு மறைத்ததற்குக் காரணம் யாதெனத் தழுவிக்கொள்ளுதல்]

7. [1] தமக்கு மேலாக ஒரு கடவுள் இல்லை என்னும்படி. [2] உன் உள்ளத்தில் காமவேட்கை. [3] எனக்கு ஒளித்தாய். [4] தெய்வப் பெண்போல்பவளே. [5] கருப்பம். [6] சூழ்ச்சி.

தாய்க்கொளித்த சூலும் நெஞ்சையொளித்த வஞ்சகமும் இல்லையாதல்போல என்னை மறைத்த நின் ஒழுக்கமில்லை; அதனை யானறிவே னென்பதாம்.

கூட்டத்தால் மகிழ்தல்.

8. [1]மற்றின்ப [2]முண்டெண்ப தன்று [3]லிவடர [4]வந்தவின்பஞ்
[5]சிற்றின்ப மென்பது தென்வெங்கை வாணர்[6] திருநடன
முற்[7]றின்பஞ் செய்யுஞ் [8]சிதாகாசந் தன்னை யுணர்வுடைமை
பெற்றின்ப மெய்தினர் [9]சொல்வர்சிற் றம்பலப் பேர்புனைந்தே.

பாங்கிதலைவியைச் சார்ந்து கையுறை காட்டல்

9. [1]நஞ்ச மமுதுசெய் வெங்கைபு ரேசர்நன் ஞடனையாய்
[2]அஞ்ச முற[3]வளி யெல்லா மடக்கி[4]யமுதவொளி
விஞ்சு[5]மதிகண் [6]டிதழ்மூடி யோகம் விளைத்ததனுற்
[7]கஞ்ச மிது[8]முக சாரூபம் பெற்றது[9]கைக்கொள்கவே.

---

[பாங்கியின் உதவியால் தலைமகளைத் தழுவப்பெற்ற தலைமகன் மகிழ்ந்து கூறுதல்]

8. [1] பேரின்பம். [2] (ஒன்று) உள்ளது என்பது கருதியன்று. ஆல்—அசை. [3] இவள் தருதலால். [4] எமக்குக் கிடைத்த இன்பம். [5] சிற்றின்பமென்று சொல்லப் படுவது. [6] திருக்கூத்து ஆடி. [7] கண்டார்க்குப் பேரின்பத்தையுண்டாக்கும். [8] ஞான வெளியை; சிதம்பரத்தை. [9] சிற்றம்பலமென்னும் பெயரிட்டு வழங்குவர்.

ஞான வெளியாகிய பேரம்பலத்தைச் சிற்றம்பலமென்று வழங்குதல்போல, இவளாற்பெற்ற இன்பமும் சிற்றின்பமெனப்படுமன்றி இதனின் வேறாகப் பேரின்பம் ஒன்றுண்டு என்பது கருதியன்று என்பது தலைவன் உட்கோள்.

[குறியிடத்துய்த்து நீங்கிய தோழி தான் கொணர்ந்த மலரைக் கையுறைபோன்று காட்டுதல்]

9. [1] நஞ்சைத் திருவமுது செய்த; நஞ்சை அமுதமாக்கிய எனினுமாம். [2] அம்ச மந்திரம் பொருந்த. [3] வாயு முழுதும். [4] அமுத கிரணம் மிகுந்த. [5] சந்திர மண்டலம். [6] கண்ணிமைகளை. [7] தாமரை மலராகிய இது. [8] நின் முகத்தின் சாரூப்பிய பதவியை. [9] (ஆதலால் இதனை) ஏற்றுக்கொள்வாயாக. இது யோகிகட்கு ஏற்பப் பொருளுரைக்கப்பட்டது.

இனித் தாமரைக்கேற்பக் கூறுங்கால், அன்னப்பறவை பொருந்த, வண்டுகளைத் தன்னுளடக்கி, அமுதவொளி மிகுந்த முழுமதியைக் கண்டு, இதழ்களைக் குவித்து, நீரில் ஒற்றைக் காலால் நின்றதாகக் கொள்க.

சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய

## *கோடீச்சுரக்கோவை

### இடம்பெற்றுத் தழாஅல்

1. படந்திகழ் [1]பூண்புனை கோடீச் சுரவள்ளல் பைம்பொன் வெற்பில்
[2]மடந்தை நற்[3]பொன்னெனு நீயுந்தண் சோலை வளநிழலும்
[4]தடம்பெறு மாரன் கணையுமிங் கேய்ந்திடச் சார்ந்தனன்யான்
[5]இடம்[6]பொரு [7]ளேவல ரெல்லா முளவெனக் [8]கென்குறையே.

### பயந்தோர்ப்பழிச்சல்

2. [1]பந்தா டுமைபங்கர் கோடீச் சுரநித்தர் பைம்பொன்வெற்பில்
வந்தா[2] கவஞ்செயும் [3]வேள்வெங் கணைகளை மாற்றியென்றன்
[4]சிந்தா குலந்தீர்த் தினிதாண் டருளிய [5]தேமொழியைத்
[6]தந்தார்கண் [7]மாமனு [8]மாமியு மாகுக [9]தாரணிக்கே.

---

* (கொட்டையூர் என்னும் சிவதலம்)

[உரிய இடத்தைப் பெற்றுத் தழுவுதலைத் தலைவன் விரும்பிக் கூறுதல்]

1. [1] பாம்பாகிய அணிகலம். [2] விளி. [3] திருமகள். [4] பெருமை. [5] சோலை நிழல். [6] தலைவி. [7] அம்பாகியமலர்; ஏவல் செய்பவர். [8] யாதுங் குறையில்லை.
இடம் பொருள் ஏவல் உள்ளவர்களுக்குக் குறையொன்றுமில்லை யென்பது குறிப்பு.

[தலைவியின் தாய்தந்தையரைத் தலைவன் வாழ்த்துதல்]

2. [1] இஃது இத்தலத்திலுள்ள அம்பிகையின் திருப்பெயர்; கந்துகக்கிரீடாம்பிகை என்பர் வடமொழியாளர். [2] போர்; ஆகவமெனப் பிரிக்க. [3] மன்மதன். [4] உள்ளக் கவலை; சிந்தா ஆகுலம் என்க. [5] தலைவியை; அன்மொழித் தொகை. [6] பெற்ற தாய் தந்தையர். [7] திருமகள் தலைவனாகிய திருமாலும். [8] திருமகளுக்கு மேற்பட்டவளும். [9] பூமியின்கண்.
பெண் கொடுத்தாரைக் கூறும் முறைப் பெயரில் வைத்தே உயர்த்திக் கூறியது நயமாதல் காண்க.

கிழத்தி மாலையம்பொழுது கண்டிரங்கல்

3. பொருந்திய [1]மால்விடைக் கோடீச்சு ரேசர் புகழ்க்கிரிமேல்
அருந்திறல் வேள்விடு [2]முல்லைமென் பூஞ்சரம் [3]ஆற்றலனாய்
[4]வருந்திடு வேற்[5]குரு நீடுமிச் [6]செவ்வந்தி மாலையினைத்
[7]திருந்திழை யீண்டு வரவிட்ட தார்பின்னுஞ் செப்புகவே.

தலைமகன் மயங்கல்

4. [1]காவென் றுரைக்குமுன் வாவென் றழைத்துக் கதியருளும்
[2]தேவென் றுரைசிவன் கோடீச் சுரவள்ளல் செஞ்சிலம்பிற்
போவென்ப தேபுக[3]லின்னு ளொரு[4]புயல் போற்[5]றதன்மேல்
[6]தாவெண் [7]மதிக்கதி ரன்னாள் சுகநாஞ் [8]சகோரமதே.

---

[தலைமகள் மாலை நேரத்தைக்கண்டு ஆற்றாமல் வருந்துதல்]

3. [1] திருமாலாகிய இடபம். [2] மெல்லிய முல்லை மலராகிய அம்புக்கு. [3] பொறேனாகி. [4] வருந்துகின்ற எனக்கு. [5] அச்சம் மிக்க. [6] சிவந்த அந்திவானத்தையுடைய மாலைப் பொழுதை. [7] தோழியை விளித்தது.

சிறிய வடிவத்தையுடைய முல்லைப் பூவால் தொடுத்த ஒரு சரத்திற்கே ஆற்றாது வருந்துமெனக்கு நீண்டவுருவத்தையுடைய செவ்வந்தி மலர்களாலாகிய பெரிய மாலையை வரவிட்டவர் யார் எனப் பிறிதொரு பொருளுந் தோன்றுதல் காண்க.

[பாங்கி வரவு விலக்கியதை ஆற்றாத தலைவன் வருந்திக் கூறல்]

4. [1] காப்பாய். [2] தெய்வம். [3] தோழி; துன்பஞ் செய்பவள் என்ற பொருளும் தோன்றுகிறது. [4] மேகமாவாள். [5] அம்மேகத்தின்மேல். [6] விரைந்து செல்கின்ற. [7] தலைவியாற் பெறும் இன்பம்மதிக்கதிராம் என்க. [8] நிலவொளியை யுண்ணும் ஒரு பறவை.

மதிக்கதிரைச் சகோரம் உண்ணுதபடி மேகம் மறைப்பதுபோலத் தலைவியின் இன்பத்தை யான் நுகராதவாறு தோழி தடை செய்கிறாளென்பது கருத்து.

வாவென்று கூவி வழங்கும் வள்ளல் மலையில் போவென்று புகலல் பொருத்தமின்று என்பதாம்.

தலைமகள் அவலம் பாங்கி தணித்தல்

5. [1]தகரக் குழல்பங்கர் கோடீச் சுரநம்பர் [2]சையநெடுஞ்
சிகரத் துதித்த [3]நதியின்பின் னேகிய தேமலரை
[4]வகரமுன் மேவுங் குளத்திடை நோக்கினன் வண்பொழிற்கட்
[5]புகரணி யார்முலை மாதே தவிர்நின் [6]பருவரலே.

பிறர்வரைவு உணர்த்தல்

6. நின்னூர் தனக்கன்று நீபோன பின்பு நெடு[1]வளத்தின்
மன்னூர முத்தமிழ்க் கோடீச் சுரநம்பர் மால்வரைமேல்
[2]பொன்[3]னூர் வரைதனிற் கொண்டெமர் பாலிப் [4]புலவரெலாம்
[5]நன்னூ லிடையெழிற் [6]காரிகை கேட்க நணுகினரே.

---

[இரவுக் குறியிடையீடுபட்டமையால் தலைவியடைந்த துன்பத்தைப் பாங்கியாற்றுவித்தல்]

5. [1] மயிர்ச் சாந்து. [2] சையமலை. [3] காவிரி; இதன்பின்எழுத்து நீங்கிய மலர் காவி. [4] வகரத்தை முன் பெற்ற குளம், வகுளம்; மகிழமரம். [5] புகழ்ந்து சொல்லப்படும் அணிகள் பொருந்திய. [6] துன்பம்.

இரவுக்குறியின்கண் தலைவியைக் காணாமையால் மீளுந்தலைவன் தான் கொணர்ந்த நீல மலரை மகிழமரத்தில் வைத்துச் சென்றானாக, அடுத்த நாட்காலையில் அதனைக் கண்ணுற்ற தோழி தலைவிக்கு அறிவித்து அவள் வருத்தந் தணித்தல். யாற்றின்பின் ஏகிய மலரைக் குளத்திற் கண்டேன் என்பது நயம். இதில் எழுத்துச் சுருக்கம் எழுத்துப் பெருக்கம் என்னும் சொல்லணிகள் அமைந்துள்ளன.

[தலைவியை அயலார் மணந்துகொள்ள முயல்கின்றாரெனத் தோழி தலைவனுக்கு அறிவித்தல்]

6. [1] வளத்தால் நிலைபெற்ற ஊரனே. [2] பொன்னை. [3] யானை. [4] கல்வியறிவுடைய பெரியோர். [5] நல்ல நூல்போன்ற நுசுப்பு. [6] தலைமகளை மணம்பேச.

ஒரு பெண்ணை மணம் பேசுதற்குக் கல்வியறிவுடைய பெரியோர்களை முன்னர் விடுத்தல் மரபு.

முத்தமிழ்க் கோடீச்சுரர்வரையில் புலவரெல்லாம் நன்னூல் பாடங்கேட்டு வருதற்கு இடையில் காரிகை யென்னும் நூலையும் கேட்க எமர்பால் வந்தார் என்பது வேறு பொருள்.

ஆற்றுத்தன்மை ஆற்றக்கூறல்

7. [1]செய்[2]வண் டுலவுறு கோடீச் சுரநம்பர்[3] தென்வரை[4]வேள்
எய்[5]வண்டு [6]கொண்டு[7]மின் கை[8]வண்டு சோரு மிருங்[9]கட்கடல்
[10]பெய்வண் டுளிகள் கொடுவண் [11]பயோதரம் பெய்யநிற்கும்
மொய்வண் டுறு[12]தொடை யாரு ரெதுவெனு[13]முன்னரசே.

மேகத்தோடு சொல்லல்

8. [1]இல்லென் றவர்க்கருள் கோடீச் சுரநம்ப [2]ரேமவெற்பிற்
[3]செல்லென் றுனையறிந் தோர்சொல்ல நீமுன்னர்ச் செல்லுகின்றாய்
நில்லென்று நான்சொல்லி னிற்பைகொல் லோசென்று நேர்முகிலே
[4]வல்லென்ற [5]கொங்கை வருந்தா துரைநான் வருந்திறனே.

---

[தலைவியின் பொறுக்க முடியாத தன்மையைப் பாங்கி தலைவனுக்கு மிகவும் எடுத்துச் சொல்லுதல்]

7. 1 வயல்களில். 2 சங்கு. 3 பொதியமலை. 4 மன்மதன். 5 அம்பு. 6 மூன்றும் வேற்றுமைச் சொல்லுருபு. 7 தலைவி. 8 வளையல் கழலாநிற்கும். 9 கண்ணாகிய கடல். 10 சிந்துகின்ற வளவிய நீர்த்துளிகள். 11 பாலைத் தரிப்பது; கொங்கை. 12 மாலையணிந்தவருடைய. 13 கருதுவாயாக.

வளைசோர்தல் கண்ணீர்விடல் பதிவிறுதல் என்பன பிரிவாற்றாமையால் நிகழ்வன.

கட்கடலின் துளியைக்கொண்டு மேகம் பெய்ய நிற்கும் என்பது மற்றொரு பொருள். கட்கடல் எழு கடல்களில் ஒன்று. 11 நீரைத்தரிப்பது; மேகம். இதன்கண் சொற்பின் வருநிலையணியும் திரிபு என்னும் சொல்லணியும் அமைந்திருத்தல் காண்க.

[வினைமுற்றி மீளுந்தலைவன் மேகத்தை நோக்கிக் கூறல்]

8. 1 ஒன்றும் இல்லையென்று இரந்தவர்க்கு. 2 இன்பந்தரு மலையில்; பொன்மலையில் எனினுமாம். 3 மேகம்; செல்வாய் என்பது மற்றொரு பொருள். 4 சூதாடு கருவியையொத்த; வன்மையான எனினுமாம். 5 தலைவி.

முகிலே சென்று வருந்திறனை வருந்தாது உரையென்க.

தோழி ஆற்றுவித்தல்

9. [1]அசைஞா யிறுதிங்கட் கண்ணன்[2]செவ் வாயின [3]னற்புதன் [4]விண்
மிசைவாய் புகழ்த்திருக் கோடீச் சுரவண்ணல் வெற்பிடத்தில்
[5]இசைவா வியாழஞ்சொல் [6]வெள்ளியற் கோற்றொடி யிப்பொழுதுன்
[7]நசைவாய்ந்து பொய்[8]வ சனியாத மன்னிங்கு[9]நண் ணுறுமே.

பொய்யாமொழிப்புலவர் இயற்றிய

**தஞ்சைவாணன் கோவை**

இல்வயிற் செறித்தமைசெப்பல்

1. [1]தன்போல் உலகம் புரக்கின்ற[2]வாணன் தமிழ்த்[3]தஞ்சையார்
[4]மன்போல் எவர்க்கும்[5]வழங்கியுண் ணுதவர் [6]வைத்திழக்கும்
பொன்போல்[7] இறுகப் பொதிந்துகொண் டாள்அன்னை [8]பூவைஎன்மேல்
[9]வன்போ தியமட வார்[10] அலர் தூற்றிய வாறுகண்டே.

---

[பிரிந்த தலைவர் விரைந்துவருவரெனக் கூறித்தலைவியின் துன்பத்தைத் தோழி தணித்தல்]

9. [1] திரிகின்ற ஞாயிற்றையும். [2] சிவந்த வாயினையுடையவன். [3]ஞானமே திருமேனியாகவுடையவன். [4] விண்ணுலகத்தில் வாய்ந்த. [5] இசை பரவுகின்ற யாழோசையையொத்த அழகிய சொல்லையும்; மூற்றியலுகரம் யகரம் வர இகரமாயிற்று. [6] வெண்ணிறம் பொருந்திய திரண்ட வளையலையும் உடையவளே. [7] அன்பைப் பெற்று. [8]கூறாத தலைவன். [9] வந்துசேருவான்.

மன் இங்கு இப்போது நண்ணுறும் என ஆற்றுவித்தாள். இதன்கண் ஞாயிறு முதலிய வாரங்கள் ஏழும் முறையே அமைந்துள்ளன.

[தன்னை வீட்டில் அடக்கிவைத்தமையைத் தலைவி தோழிக்குக் கூறுதல்)

1. [1] தன் உயிரைக் காத்தல்போல. [2] பாட்டுடைத்தலைவன்; சந்திரன் என்பது தந்தை பெயராதலின் இவன் சந்திரவாணன் எனவும் வழங்கப்படுவன். [3] தஞ்சாக்கூர் என்பதன் மரூஉ; பாண்டி நாட்டிலுள்ளது. [4] அரசன். [5] கொடுத்து. [6] இறுகப்பிணித்துவைத்து. [7] வெளிச்செல்லாதபடி வீட்டில் அடக்கிவைத்துக்கொண்டாள். [8]நாகண வாய்ப்புள்; பாங்கியை விளித்தது (உவமையாகுபெயர்). [9] பொல்லாங்கு கூறிய. [10] பழிமொழி.

மடவார் தூற்றியவாறுகண்டு அன்னை பொன்போல் பொதிந்துகொண்டாள் என்க. தலைவி உடன் போக்கு நினைவினளாதலின் அன்னை தன்னை இழப்பள் என்பதனை உவமையாற் பெறவைத்தாள்.

"கொன்னே, வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ; இழந்தானென்றெண்ணப்படும்" என்றது காண்க.

கற்புமேம்பாடு தோழிகூறல்

2. [1]செந்நாண் மலரில் திருவன்ன கோலத்[2]தெரிவையர்க்கு
மெய்ந்நாண் உயிரினும்[3]மிக்கதென் றால்[4]விர வாவரசர்
தந்[5]நாண் முறைமை தவிர்த்தருள் வாணன் தமிழ்த்தஞ்சை [6]நாட்
[7]டந்நா ணமுமட வாய்கற்பு நோக்க [8]அழகிதன்றே.

ஆற்றிடை முக்கோற் பகவரை வினாதல்

3. ஒருவெண் குடை[1]யிரு நீழல்[2]முக் கோல்கொண் டொழுக்கத்தினால்
[3]அருவெங் களரியைந் [4]தா றுசெல் வீ[5]ரரு ளீரெழு[6]பார்
மரு[7]வெண் டிசைபுகழ் வாணன்தென்[8]மாறையென் வஞ்சியன்னாள்
பொருவெஞ் சுடரிலை வேலொரு[9]காளைபின் போயின[10]ளே.

---

[கற்பின் சிறப்பைத் தோழி தலைவிக்குச் சொல்லுதல்]

2. [1] செம்மைமான அன்றலர்ந்த தாமரைப் பூவிலுள்ள. [2] பெண்களுக்கு. [3] சிறந்ததென்றால். [4] பகையரசருடைய. [5] வாழ்நாளையும் அரசியலையும். [6] நாட்டில். [7] அவ்வுயிரினும் மேம்பட்டதாகக் கூறப்படும் நாணமும். [8] சிறந்ததன்று.

"உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று" என்பது தொல்காப்பியம்.

[தேடிச்சென்ற செவிலிவழியில் எதிர்ப்பட்ட திரிதண்ட அந்தணரை வினவுதல்]

3. [1] பெரிய நிழலில். [2] திரிதண்டம்; அயன் அரி அரனென்னும் மூவரும் ஒருவரே யென்னுங் கொள்கையைப் புலப்படுத்தற்குத் தாங்குவது என்பர். [3]செல்லுதற்கரிய வெப்பமான களர் நிலத்தில் பொருந்தி. [4] வழிச்செல்லும் அந்தணர்களே. [5] அருள்கூர்ந்து சொல்லுங்கள். [6] உலகம். [7] எட்டுத் திக்கிலுள்ளவர்களும். [8] மாறை நாடு பாண்டி நாட்டின் ஒரு பகுதி. [9] காளைப் பருவத்து ஆண் மகன். [10] ஏகாரம் வினா.

ஆறு செல்வீர் அன்னாள் போயினளே அருளீர் என முடிக்க.

அவர், புலம்பல்தேற்றல்

4\. யான்கண்ட [1]அண்ணலும் எண்ணருங்[2]காதலின் ஏகியவென்
மான்[3]கண் டனகண்[4]மயில்கண்ட[5] மாதரும் மாதருமந்
தான்கண்ட தண்ணளிச் [6]சந்திர வாணன் [7]தரியலர்போங்
[8]கான்கண்ட [9]மெய்குளி ரப்பொய்கை சூழ்[10]தஞ்சை
காண்பர்களே.

அங்கு அவர் யாரையும் அறியேன் என்றல்

5\. [1]மன்னும் [2]புலவியை மாற்றியும் [3]தேற்றியும்[4]வல்லவண்ணம்
இன்னும் தெளிந்திலை [5]என்னேயென் னேயென்செய்
கே[6]னிதற்கு
[7]முன்னம் படிந்து முழுகும்நன் னீர்க்கங்கை முன்னுறையும்
அன்னம் [8]படியுங்கொல் லோ[9]வுவ ராழியி லாரணங்கே.

---

[கலந்து உடன்வரும் காதலர் இருவரும் செவிலியைத் தேற்றிக் கூறல்]

4\. [1] தலைவனும். [2] விருப்பத்தால். [3] கண்டாற்போன்ற. [4] காதலி. [5] அழகுடைய அவளும். [6] சந்திரனுக்கு மகனாகிய வாணன். [7] பகைவர். [8] காட்டை. [9] உடல். [10] தஞ்சாக்கூரை.

கற்பென்பது இருபாலார்க்கும் பொதுவாதலின் தன் காதலியையன்றிப் பிற மாதரைக் காண்டலும் இழுக்கெனக் கருதி என்மயில்கண்ட மாதரும் என்றான்.

[அவ்விடத்து நீ குறிக்கும் பரத்தையர் எவரையும் யான் அறியேனென்று தலைமகன் தலைவியிடம் கூறல்]

5 [1] உன் உள்ளத்தில் நிலைபெற்ற. [2] ஊடலை. [3] தெளியச் செய்தும். [4] என்னாலியன்றவரையில். வல்லவண்ணம் மாற்றியுந் தேற்றியுமென்க. [5] அடுக்கு வியப்பு மிகுதியை யுணர்த்திற்று. [6] இவ்வுணர்த்த வுணராவூடலைப் போக்குதற்கு எவ்வுபாயத்தை மேற்கொள்வேன் எனக் கூட்டுக. [7] முதலிற் குளித்து. [8] குளிக்குமோ. கொல்-அசை. [9] உப்புநீர்க் கடல்.

ஒழுக்கத்திற்சிறந்த நினது தூய இன்பத்தைத் துய்த்த யான் இழிந்த பரத்தையரது அருவருக்கத்தக்க முயக்கத்தைப்பெற முயலேன் என்பது பெறப்படுதலால் பின் இரண்டடிகளில் நுவலா நுவற்சியணி அமைந்துள்ளது.

"ஊற்றுநீர்க், கூவல்வாய் வெண்மணல் குறுகச் செல்லுமே, மேவிப் பூங் கங்கையுள் விழைந்த வன்னமே" என்னும் சிந்தாமணிப் பகுதி இக்கருத்தை மற்றொருபடியாகக் கூறியதாம்.

* காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தல்

6. போயே தெருவில் தனிவிளை யாடும் [1]புதல்வற்புல்ல
நீ[2]யே திலையல்லை நின்மக னேயிவன் நீயுமிவன்
தாயே வரு[3]கெனச் [4]சேயன்ன வாணன் றமிழ்த்தஞ்சை[5]மான்
[6]ஏயே யென நிற்ற லான றிந் தேன்[7] தன்னை [8]எங்கையென்றே.

மணந்து அவன்போயபின் வந்தபாங்கியோடு இணங்கிய மைந்தனை இனிதிற் புகழ்தல்

7. [1]இருமையி லேயும் பயன்களெல் லாந்தன்னை ஈன்றநமக்
[2]கொருமையி லேவந் துறத்[3]தகைந் தான்மைந்த
ஞெண்[4]சுடர்போல்
வரு[5]மயி லேகொண்டு[6]மாதடிந் தானன்ன வாணன்றஞ்சைத்
திருமயி லேயனை யாய்புன [7]லூரனைத் தேருடனே.

தலைவி தலைவனைப்புகழ்தல்

8. [1]கொண்டாணிற் [2]றுன்னிய கேளிர்மற் றில்லைக்[3]குறிப்பி
னென்று
[4]தண்டா தவர்சொன்ன[5]சால்புகண் டேன்றலம் ஏழ்புரக்கும்
வண்டார் மலர்ப்புயன் வாணன்றென் மாறை[6]மகிழ்நர்
[7]முன்னுள்
உண்டா கியபழங்[8] கேண்மையிந் நாளும் [9]ஒழிந்திலரே.

---

[*குலப்பரத்தை மகளாய்க் காமங்காரணமாகத் தலைவனால் மணஞ் செய்யப்பட்டவள்]

6. [1] மைந்தனைத் தழுவியெடுப்ப. [2] அயலாயல்லை. [3] என்று கூறியழைக்க, [4] முருகக்கடவுள். [5] காமக்கிழத்தியாய பரத்தை. [6] நாணத்தால் ஏயே யென்று. [7] அவளை. [8] என் தங்கை.
"காமக்கிழத்தி தன்மகத்தழீஇ, ஏமுறு விளையாட்டிறுதிக் கண்ணும்" (தொல். களவி. சூ. 6) தலைமகள் கூற்று நிகழுமென்றார் தொல்காப்பியர்; 16-ம் அகப்பாட்டு ஈண்டு நோக்கற்குரியது.

[அவன் - தலைவன்]

7. [1] இம்மை மறுமைகளில். [2] இவ்வொரு பிறப்பிலே. [3] பரத்தையர் சேரிக்குச் செல்லவொட்டாது தடுத்தான். [4] சூரியன். [5] வேற்படையால். [6] சூரபதுமனாகிய மாமரத்தை வெட்டினவனாகிய முருகக்கடவுள். [7] மருத நிலத்தலைவனை. மைந்தன் ஊரனைத் தேருடனே தகைந்தான் என்க.

8. [1] (பெண்டிர்க்குக்) கணவனைப் பார்க்கிலும். [2] நெருங்கிய உறவினர். [3] ஆராய்ந்து பார்த்தால். [4] அறிவில் நீங்காத பெரியோர். [5] நிறைந்த தன்மை. [6] கணவர். [7] களவுக்காலத்தில். [8] நட்பை. [9] விட்டிலர். தோழி முன்னிலை எச்சம். ஒழிந்திலர் (ஆதலால்) சால்பு கண்டேன் என்க.

தலைமகள் இயற்படமொழிதல்

9. [1]மாகப் புயல்மண்ணில் வந்தன்ன வாணன்றென் [2]மாறை[3]முந்நீர்
[4]நாகப் [5]புகர்ச்செய்ய புள்ளிப்பைங் கால்[6]ஞெண்டு [7]நாகிளந்தண்
[8]பூகக் குளிர்நிழற் [9]பேடையோ டாடும் [10]புலம்ப[11]ரின்னா
ஆகக் கருதி[12]னல் லா[13]யினி யா[14]ரினி யாருளரே.

வீர ஆசுகவிராயர் இயற்றிய

**அரிச்சந்திர புராணம்**

நகர்நீங்கிய காண்டம்

1. [1]தலமுழுதுந் தவ[2]முனிவன் தனக்களித்தே மினியுறைதல் தகுதி யன்றென்
றிலகுமணி மண்டபமு மெழின்மணிச்சிங் காதனமு மிழிந்து போந்து
பலவரச ருடனமைச்ச ரமூதுடன்போய்[3]பரிதவிக்கப் [4]பதாதி மொய்க்கக்
குல்[5]மகனு மட[6]மயிலு முன்னடக்கப் பின்னடந்தான் கொற்ற வேந்தன்.

---

[தலைவி, தலைவன் நற்குணமுடையவன் என்பது தோன்றக் கூறுதல்]

9. [1] வானத்திலுள்ள மேகம். [2] மாறைநாடு [3] கடலருகிலுள்ள. [4] புன்னை மரத் தடியிலிருக்கும். [5] பழுப்பு நிறத்தோடுகூடிய. [6] (ஆண்) நண்டு. [7] மிக்க இளமை. [8] கமுகு. [9] பெண் நண்டு. [10] நெய்தனிலத் தலைவரை. [11] துன் பம் விளைப்பவராக. [12] தோழியே. [13] நல்லவர். [14] பின்பு யார் இருக்கின்றனர்.

புன்னைமர நிழலிலிருக்கும் ஆண்நண்டு பாக்குமர நிழலில் இருக்கும் பெண் நண்டோடு கூடி விளையாடும் என்றதனால், நெய்தனிலத்தலைவன் வந்து குறிஞ்சி நிலத் தலைவியைக் கூடுவன் என உள்ளுறையுவமம் எய்திற்றேனும் அங்ஙனங் கூட்டம் பெறாமல் தலைவி பிரிந்து வருந்துதலின் இஃது இறைச்சியிற் பிறக்கும் பொருளாயிற்று.

" இறைச்சியிற் பிறக்கும் பொருளு மாருளவே
திறத்தியல் மருங்கிற்றெரியுமோர்க்கே " (தொல், பொரு. சூ. 230)

என்னும் சூத்திர உரையாலறிக.

1. [1] கோசல நாடு முழுதையும். [2] கௌசிகன். [3] துன்பமடைய. [4] சேனைகள். [5] தேவதாசன். [6] சந்திரவதி.

2. [1]தொடைதுறந்து முடிதுறந்து [2]பணிதுறந்து துடிமுரசந்
துறந்து [3]தாமக்
குடைதுறந்து வெண்கவரிக் குழாந்துறந்து கரிபரிதேர்க்
[4]குழாந் துறந்து
[5]கடைதுறந்து [6]மறுகணைந்த காவலன்றன் றிருமுகத்தைக்
கண்டோ ரெல்லாம்
[7]அடையமன மழிந்துருகி யவரவரே முகத்திலறைந்
தழுவா ரானார்.

3. மயிரோடுஞ் [1]சிறையிழந்த [2] போகில்போல் வேலியொடு
[3]வரம்பி ழந்த
பயிரேபோற் [4]கரமிழந்த கரியேபோற் [5]பொறியிழந்த பாவை
யேபோல்
உயிரேபோய்ப் பரிதவிக்கு முடலேபோல் மத்தா[6]லுள்
ளுடைந்த லம்புந்
தயிரேபோல் தளர்ந்தலைந்து தத்தமக்கு நிகழ்ந்தவெலாஞ்
சாற்ற லுற்றார்.

4. கொடி[1]மீது செறிதேருங் [2]குஞ்சரமும் பொற் [3]சிவிகைக்
குழாமும் இன்றிப்
[4]படிமீது நடந்திடவும் [5]படித்தனவோ பார்வேந்தன் பாத
மென்பார்
அடிமீது தொழுமரசர் முடிமீது [6]மடிமீது மன்றிச் சுட்ட
[7]பொடிமீது நடந்திடவும் பொறுத்தனவோ குல[8]குமரன்
பொற்றா ளென்பார்.

---

2. [1] மலர் மாலை. [2] அணிகலங்கள். [3] வெற்றிமாலை; ஒளியுமாம். [4] கூட்டம்.
[5] வாயிலைக்கடந்து. [6] தெருவில்வந்த. [7] ஒருசேர.

3. [1] சிறகு. [2] பறவை. [3] வரப்பு. [4] துதிக்கை. [5] இயந்திரம்; ஆட்டுங்கயிறு.
[6] தாழியினுள்ளே உடைபட்டுச் சிதறும்.

4. [1] மேலே கட்டப்பட்டுள்ள. [2] யானை. [3] பல்லக்கு. [4] பூமியின்மேல்.
[5] கற்றிருக்கின்றனவோ. [6] வயிறு. [7] புழுதி. [8] தேவதாசன்.

5. [1]அஞ்சாயல் மடவன்னத் தனி[2]தூவி யதனாலும் அனிச்சத்
தாலும்
பஞ்சாலும்[3]பதைபதைக்கும்[4]பதத்தாட்குக்[5] கானடையோ
[6]பலித்த தென்பார்
[7]செஞ்சாலிக் கோசலமும்[8]இராசகுல வளநாடுந் தேவர்நாடும்
அஞ்சாமற் காத்தருளெம் பெருமானுக் கிதுவோவந்
தடுத்த தென்பார்.

6. [1]கச்சைக்குத் திள[2]நகிற்சந் திரவதிதன் கணவனொடு
[3]கழூமி யேகக்
[4]கொச்சைக்[5]கு வலயமயில் கொற்றவனை விட்டுமுனிக்
கூட்டம் [6]வேட்டாள்
[7]இச்சைக்[8]கி தம்பேசி யீந்தாரைப்[9]பாராட்டி யீவார் தம்பாற்
பிச்சைக்கு வந்தவரோ[10] பெண்ணுக்கு மணவாளப் பிள்ளை
யென்பார்.

7. கொண்டிருந்த வளநாடுங் குறையாத பெருந்திருவுங்
கொடித்திண் டேரும்
பண்டிருந்த[1]மாளிகையும்[2]பரிசனமுந் தமக்களித்துப்
பாலனோடும்
வண்டிருந்த தாரானும் வாணுதலும் வறியவர்போல்
வனத்தே போகக்
கண்டிருந்தும் விலக்காத கௌசிகனார் தன்மனமுங் கல்லோ
வென்பார்.

---

5. [1] அழகிய மென்மைவாய்ந்த. [2] இறகு. [3] நடுநடுங்கும். [4] பாதங்களையுடைய சந்திரவதிக்கு. "அனிச்சமும் அன்னத்தின் தூவியு மாதர், அடிக்கு நெருஞ்சிப் பழம்" "பஞ்சிகொண் டூட்டினும் பையெனப் பையெனவெண், றஞ்சிப் பின்வாங்கும் அடி" என்பன காண்க. [5] காலால் நடத்தலோ; காட்டின்கண் நடத்தலோ எனவுமாம். [6] வாய்த்தது. [7] செந்நெல் விளையும். [8] ஏனையரசர்களுடைய வளம்பொருந்திய நாடுகளும்.

6. [1] இரவிக்கையை. [2] கொங்கை. [3] சேர்ந்து. [4] இழிவான. [5] நிலமகள். [6] விரும்பினாள்; உலகம் முனிவனுக்கு உரிமையாயிற்று என்பதாம். [7] விரும்பும்படி. [8] இன்சொற்கூறி. [9] புகழ்ந்து. [10] அக்கொடுப்பவரின் பெண்ணுக்கு. இது திருவிளையாடற் புராணத்திற் கௌரியின் வரலாற்றை நினைவூட்டுகிறது.

7. [1] அரண்மனையும். [2] ஏவலாளரும்.

8. [1]செம்மையினு லுலகமெலாந் தனக்களித்துச் செறிவனத்தே
[2]தேம்பிச் செல்வோர்
தம்மைவர வழைத்திருத்தி யொருமனைக்குத்[3]தலமீயாத்
[4]தறுகட் [5]பாவி
நம்மையெலாங் காத்தளிக்க வல்லவனோ வெனக்கரங்க
ணடுக்கி மாறா
வெம்மையினால் [6]வெய்துயிர்ப்பார் [7]மின்னும லிடிவந்து
வீழ்ந்த தென்பார்.

9. என்ற[1]லமந் தனைவோரும்[2]வயிறலைத்து விழுந்தேங்கி
யிரங்குங் காலைக்
கன்றினொடும் பிடியினொடுங் [3]கிளையினொடும் வனம்புகுதும்
[4]களிறே போல
இன்[5]றளித்த தருண்முனிவர்க் [6]கேற்றனவோ வேற்றிலவோ
வென்று வேங்கிக்
குன்றனைய மதில்கடந்தே தனிநடந்து[7]சரயுவினைக் குறுகி
னானே.

10. [1]வரைக்கனக புயத்தினனும் மலர்க்காவில் விரிமணன்மேல்
வந்தி ருந்தான்
[2]விரைக்கரும்பூங் குழலாளுந் திருமகனு மிருபாலும்
வீற்றி ருந்தார்
திரைக்கடலுட்[3] பொறானெனப்போய்ச் செங்கதிரோன்
சென்றனனச் சென்ற காலை
உரைப்பனவும்[4]விளைப்பனவும் அறிதுமெனு முனிவனும்வந்
[5]தொளித்தி ருந்தான்.

---

8. 1 செவ்விய குணத்தால். 2 வாட்டமுற்று. 3 இடங்கொடுக்காத. 4 வன்கண்மை. 5 முனிவன்; வெறுப்பினாற் பாவியென்றார். 6 பெருமூச்சு விடுவார். 7 எதிர் பாராமல் உண்டாய பெருந் துன்பத்திற்கு இஃது உவமையாயிற்று.

9. 1 மனச் சுழற்சியடைந்து. 2 வயிற்றில் அடித்துக்கொண்டு. 3 இனத்தோடும். 4 ஆண் யானை. 5 கொடுக்கப்பட்டதான நாடுநகர் முதலிய எல்லாச் செல்வமும். 6 உடன்பாடாயினவோ. 7 அயோத்தியையடுத்துச் செல்லும் ஓர் யாறு.

10. 1 பொன்மலை; கனக வரையென மாற்றுக. 2 நறுமணம். 3 இவர்கள் துன்பத்தைக் காணப் பொறாதவனைப் போல. 4 செய்வனவும். 5 (அச்சோலையின் ஒருபால்) மறைவாயிருந்தான்.

11. [1]அக்காலத் தமைச்சரெலாம் [2]அடல்வேந்த னடிபோற்றி யரசே நீ[3]மீண்
டெக்காலம்[4] எழுந்தருள்வ தென்றுரைக்க [5]ஆங்கவரை யிருக ணோக்கி
[6]முக்காலங் களுமுணரு முனிவனுக்கின் றியான்கொடுத்த [7]மூதூர் தன்னில்
எக்கால மும்வருவ தில்லையென்றா னமைச்சரெலா மேங்கி வீழ்ந்தார்.

12. முன்செய்த தீவினையோ[1]முனிசெய்த வுபகார முன்னுண் டாகப்
[2]பின்செய்த கைம்மாறோ பேரரசு கொடுத்தகன்று பெருங்கா டெய்தல்
மின்செய்த நெடுவேலாய் மெய்த்தவனை யாந்[3]துரந்து விட்டே மாகில்
என்செய்வா னெனவுரைப்பார்[4]யாம்போது மவன்போருக் கெதிர்க்க வென்பார்.

13. சடைபிடித்துங் கரம்பிடித்துந் தாள்பிடித்து[1]மரவுரியால் [2]தகைந்துடுத்த
உடைபிடித்து [3]மீர்த்தவனை யுயர்வனத்தி லிப்பொழுதே யோட்டுகின்றோம்
[4]மடைபிடித்த வயல்சூழும் வளநாடு நீபுரக்க வருவா யென்று
படைபிடித்த மலர்க்கரத்தாற் [5]பதம்பிடித்து விறல்வேந்தர் பணிந்து வீழ்ந்தார்.

---

11. 1 அப்பொழுது. 2 வெற்றி. 3 திரும்பி. 4 வருவது. 5 அவ்வமைச்சரை; ஒரு சொல் நீர்மைய. 6 இறப்பு நிகழ்வு எதிர் வென்னு மூன்று காலங்களையும். 7 பழமையான நகரினுள் (அயோத்தி).

12. 1 முனிவன், முன்பு ஓர் உதவி செய்திருப்ப. 2 அதற்கு எதிராகப் பின்பு செய்த உதவியோ; எய்தல், தீவினையோ கைம்மாறோ என்க. 3 (வேண்டாமென்று) துரத்தி விட்டோமானால். 4 யாம் செல்லுவோம்.

13. 1 மரத்தினின்றும் உரித்தெடுத்த நாரினால். 2 மறைத்து. 3 இழுத்து. 4 நீர் பாயும் வழிகளையுடைய. 5 கால்களைப் பற்றிக்கொண்டு.

14. [1]படிபுரக்கு மன்னவன்கேட் டிருகரத்தாற்[2]செவிபுதைத்துப்
[3]பாவம் அந்தோ
[4]குடிகெடினும் உயிர்கெடினுங் கொடுத்ததுவாங்
கேனென்று கூறு மெல்லைக்
[5]கடிபொழிலிற் காத்திருந்த கௌசிகனும் வந்தெதிர்ந்தான்
கண்ட போதே
அடியிணைதன் முடிசாத்தி யிருகரத்தா லுறப்பூண்டான்
அரசர் கோமான்.

15. [1]வெய்தாநீ வேடுவரால் விலங்கனைத்துங் கொல்வித்தாய்
வெருண் [2]டேனத்தை
எய்தாயென்[3]மக்களையும்[4]இசைகேட்டுத்[5]துரத்தடித்தா யின்று
மென்னை
வைதாய்நீ யெனக்களித்த மண்டலத்தை யான்தரநீ வாங்கா
யாகிற்
[6]செய்தாயின் றிவருரைத்த தீமையெல்லாம் என்னமுனி
செப்பி னானே.

16. [1]சிறுத்தவர்கள் அறியாமற் செய்தபிழை யத்தனையுஞ் [2]செவ்வி
யோய்நீ
பொறுத்தருளா யாமாயிற்[3]பொறையென்னு[4] முறையென்னும்
[5]புலமை யென்னும்
[6]ஒறுத்திடினும் வெறுத்திடினும் உனக்களித்த வரசுரிமை
யொருகா லத்தும்
[7]மறுத்தினியான் வாங்கேனென் றெடுத்துரைத்தான் மன்னன்
முனி வாட்ட முற்றான்.

---

14. [1] நிலவுலகத்தைக் காக்கும். [2] காதுகளை மூடிக்கொண்டு. [3] ஐயோ ஈதென்ன பாவம்; இரக்கக் குறிப்பு. [4] என் குடி கெட்டாலும். [5] மணங்கமழுஞ் சோலையில்.

15. [1] கொடுமையாக. [2] பன்றியை. [3] பெண் மக்களையும். [4] பாடலைக்கேட்டு. [5] துரத்தியடித்தாய். [6] இன்று இவர் உரைத்த தீமையெல்லாம் செய்தாய் ஆவாய் என்க.

16. [1] சிறியவர்கள். [2] செம்மையான குணத்தையுடையவனே. [3] பொறுமைதான் என்ன பயனைத் தரும். [4] நீதி. [5] கல்வியறிவு. [6] துன்புறுத்தினாலும். [7] திரும்ப.

17. பொன்கேட்கப் பொன்னளித்தான் புவிகேட்கப்
புவியளித்தான்[1]போதா தென்று
[2]என்கேட்கி னுந்தருவ தில்லையெனும் புன்மையிவன்
இடத்தில் இல்லை
[3]முன்கேட்ட பொருளாலே[4]மொழிவழுவந் தெய்தும்[5]அது
முடக்க மானால்
பின்கேட்டா ரிகழ்வார்கள்[6]யாம்பொறுத்து மெனநினைந்து
பேச லுற்றான்.

18. [1]ஒன்றுரைக்க நீகேளாய் உண்மைக்கும் வண்மைக்கும்
உரியோய் என்னை
இன்றுரைத்த பிழைபொறுத்தேன்[2] அழல்வேள்வி
முடித்திடுதற் கீவே னென்றங்
கன்றுரைத்த பொருளதனை[3]யளிப்பாயோ அளியாயோ
அரச வென்றான்
என்றுரைத்த கௌசிகனை அடிதொழுது வாய்புதைத்தங்
கீது ரைப்பான்.

19. உன்னுடனே யுரைத்தபொருள் உனக்கடியேன் உகந்தளித்த
[1]உரிமைச் செல்வந்
தன்னுடனே[2]போனதெனா வுணர்ந்தேனா யினு[3]முனிவால்
[4]தருவ லென்றே
நின்னுடனே யானுரைத்த[5]சபதமினி மாறுவனோ நீ[6]யாள்
விட்டால்
பொன்னுடனே தருவனென்றான்[7] புகரோனை யவனழைத்துப்
[8]பொருத்தி னானே.

---

17. [1] (அவை) பற்றாதென்று. [2]யாது கேட்டாலும் கொடுப்பது. (இவனுக்கு இயற்கையாயுள்ளது) [3] முன்பு வேள்வி செய்தற்கென்று நாம் கேட்க இவன் கொடுப்பதாக ஒப்புக்கொண்ட பொருளினால். [4] சொல் தவறுதல் உண்டாகும். [5] அப்பொருள் கொடுக்க முடியாமல் தடைப்படுமானால். [6] (ஆதலால்) யாம் இப்போது பொறுத்துக்கொள்வோம்.

18. [1] ஒரு சொல். [2]நெருப்பு வளர்த்துச் செய்யும் வேள்வி. [3]இனிக்கொடுப்பாயோ. அப்பொருளினளவு :—யானை மேனின் றெறிந்த கவண்சிலை, போனதூரம் பொருள் குவிப்பாயெனில், மோன வேள்வி முடித்திடலாம் என்று கேட்கப்பட்டது.

19. [1] நாடு நகர் முதலிய அரசியற் செல்வம். [2] அடங்கிற்று. [3] உன் வெகுளியால். [4] கொடுப்பேனென்று. [5] சூளுரை. [6] ஓர் ஆளை (என்னுடன்) விடுத்தால். [7] சுக்கிரனை, [8] உடன் செல்லும்படி ஒருப்படுத்தினான்.

20. [1]உள்ளியதீ வினையனைத்துந்[2] தனித்திருத்தி வகைவகையே
யுரைத்து நீபோய்
[3]அள்ளியிடும் பொருள்கவரா [4]தானையின்மேற் கவண்சிலைபோ
மளவுந்[5]தந்தால்
கொள்ளுதிநீ[6] பின்போன கூலியையும் பெறுதியெனுக்
கூறித் தீய
வெள்ளிதனை யுடன்கூட்டி மீண்டுமழைத் தொருவாய்மை
விளம்ப லுற்றான்.

21. [1]துன்றுபசிக் [2]கடகுகனி தேடும்போ தெமக்கினிய சோறு
வேண்டும்
[3]என்றுமொழி தந்திடினும்[4] ஏலாது வேண்டா[5]வென்
னிவனூண் பெற்றால்
அன்றுபொருள் தருமு[6]னுணற் ககலேல்[7]நில் லெனத்தடு
[8]நம் மவதி வந்தால்
நின்றவரைக்[9] கரிகுறித்து மறுதினத்தில் நில்லாமல் நீவா
வென்றான்.

22. [1]அடுத்திருத்தி மனங்கலக்கி முனிக்களித்த மொழிமாறி
யளியே னென்று
எடுத்துரைக்கி லுன்னரசை யான்வாங்கித் [2]தருவேனென்
இசைந்தா னாகில்
[3]தடுத்தழைத்து வருதிநமக் கதுபோதும் எனப்பலவுஞ்
சாற்றிக் கூட்டி
விடுத்தனன்விட் டரசனுக்கு விடைகொடுத்து மாமுனிவன்
மீண்டு போனான்.

---

20. [1] தான் செய்யக்கருதிய தீச்செயல்கள் எல்லாவற்றையும். [2](சுக்கிரனை) தனியே ஒரு பக்கத்தில் இருக்கச்செய்து. [3] அள்ளிக்கொடுக்கும். [4] யானையின்மேல் ஒருவன் நின்று கவணில் வைத்து எறிந்த கல் எவ்வளவு உயரம் செல்லுமோ அவ்வளவு உயரம் வரையும். [5] பொருளைக் குவித்துக்கொடுத்தால். [6] அவன் பின் சென்றதற்கு உள்ள கூலிப்பொருளையும்.

21. [1] மிக்க பசிக்கு. [2] இலை. [3] என்று சொல். [4] ஏற்றுக்கொள்ளாமல்; என் வயிற்றுக்குப் பற்றாது எனினுமாம். [5] என்று சொல். [6] உண்ணுதற்குச் செல்லாதே. [7] நிற்பாயென்று தடுத்துக் கூறு. [8] நாம் கொடுத்த கால வெல்லை. [9] சான்று கூறி.

22. [1] பக்கலில் இருக்கச்செய்து. [2] தருவேனென்று சொல். [3] (அயல்நாடு செல்லாதபடி) தடைசெய்து.

23. முனியேக மன்னவனு[1] மூரிநெடுஞ் சேனைதனை முனிவன் றன்னோ
டினி[2]யேகும்[3] அவற்கினியார் எனக்கினியா [4]ரெனவமுதங் கியாரு மீண்டார்
[5]பனியேகு முனமெழுந்து பைந்தொடியு மன்னவனும் பாலன் றானுந்
தனியேகக் கண்டமைச்சன் சத்தியகீர்த் தியுமவர்கள் தம்பிற் சென்றான்.

24. வருகின்ற மந்திரியை மன்னவனுங் கண்டு[1]விழி வழிநீர் வார
உருகினிய வன்பினுட [2]னீபோந்தான் மறைமுனிவற்[3]குறுந ருண்டோ
அருகிருந்து புவிநடத்த நின்போலங் கறிவுடையா ராரு மில்லை
திருநகர்க்கே மீண்டேகென் றுரைத்திடலு மமைச்சர்பிரான் செப்ப லுற்றான்.

25. கோதிலாப் பெருங்குணத்தாய் குற்றேவல்[1] இந்நெடுநாள் கொடியேன் செய்தேன்
ஆதலால் நீயேகும் அருஞ்[2]சுரத்திற்[3]பணித்தபணி யார்தான் செய்வார்
மாதரா ருடனேக மகனேக நின்னுடன்யான் வாரே னாகில்
[4]ஏதிலான் ஆனேனன் என்[5]றிடியே றுண்டமர மென்ன [6]வீழ்ந்தான்.

---

23. [1] வலிமை. [2] செல்லுங்கள். [3] அம்முனிவனுக்கு நல்லவர்கள் எனக்கு நல்லவர்கள் ; அவனுக்கு இன்பம் செய்யாதவர் எனக்கும் இன்பஞ்செய்யாதவரே யென்றுமாம். [4] என்று கூற. [5] பனி நீங்குமுன்னே ; வைகறையில் என்றபடி.

24. [1] கண்களிலிருந்து. [2] நீ (என்னுடன்) வந்தால். [3] உற்றவர்.

25. [1] இவ்வளவு நெடுங்காலமும். [2] காட்டில். [3] நீர் ஏவிய ஊழியத்தை. [4] அயலான் ஆயினேன். [5] இடியேறுவிழுந்த. [6] விழுந்து அழுதான்.

26. இடிவீழ்ந்த மரம்போல வீழ்ந்தரற்று மந்திரியை யெடுத்து [1]மேனிப்
பொடிதுடைத்து [2]முடிதடவிப் பொழிவிழிநீர் தனைமாற்றிப் [3]பொருமல் ஆற்றிக்
[4]கடிநகரில் இவனைவிடி லுயிர்விடுவ னெனக்கதறிக் கலங்கிக் [5]காமர்
வடிவழுங்க மனங்கருக வுயிர்நடுங்க வருந்தேல்நீ வருதி யென்றான்.

புகழேந்திப்புலவர் இயற்றிய

**நளவெண்பா (கலிதொடர் காண்டம்)**

கலி நளனைச் சேர்தற்குக் காலம் பார்த்திருத்தல்

1. [1]ஆண்டிரண்டா றெல்லை யளவுந்[2] திரிந்தேயுங்
[3]காண்டகைய [4]வெங்கலியுங் காண்கிலான்—நீண்டபுகழ்ச்
[5]செந்நெறியால் பார்காத்த செங்கோல் [6]நிலவேந்தன்
தன்னெறியால் வே[7]றோர் தவறு.

கலி நளனிடம் சேர்தல்

2. [1]சந்திசெயத் [2]தாள்விளக்கத் [3]தாளின்[4]மறுத் தான்கண்டு
புந்தி மகிழப் புகுந்துகலி—[5]சிந்தையெல்லாந்
தன்வயமே யாக்கித்[6]தமைய னுடனிருந்தான்
[7]பொன்னசல [8]மார்பற் புகைந்து.

---

26. [1] அவன் உடம்பிலுள்ள புழுதியைத் துடைத்து. [2] தலையைத் தடவி. [3] ஏங்கிய முதலையும் போக்கி. [3] காவல். [5] அழகிய உன் உடம்பு கெட.

1. [1] பன்னிரண்டு வருடகாலம் வரையும். [2] (நளன் சென்ற இடங்களுக்கெல்லாம் சென்று) அலைந்துகொண்டிருந்தும். [3] பார்க்கத்தகுந்த. [4] கொடுமையை யுடைய கலிபுருடனும்; இவன் கலியுகத்திற்குத் தலைவன்; பாவத்திற்குரிய கடவுள்; ஒழுக்கந் தவறுவோரை வருத்துபவன்; சனிக்கோளின்கூறு எனக் கூறுப. [5] செம்மையான ஒழுக்கத்தால். [6] நளன். [7] ஒரு குற்றத்தையும். கலி ஓர் தவறுங்காண்கிலான் என்க.

2. [1] பகலும் இரவும் சந்திக்கும் காலை மாலையிரண்டற்கும் பொது; இச்சொல் அக்காலங்களிற் செய்யப்படும் வழிபாட்டைக் குறித்தது; சந்தியாவந்தனம் என்ப. [2] (நளன் தன்) பாதங்களை நீரால் கழுவ. [3] ஒரு பாதத்தில். [4] நீர் படாது மாசு படிந்திருத்தலை. [5] அரசனுடைய அறிவு முழுதையும். [6] (நளனுக்கு) அண்ணன் முறையான புட்கரனுடன். [7] மேரு மலை. [8] நளனை வெகுண்டு.

நளனிடத்தில் கலிசேர்ந்தவிதம்.

3. [1]நாராய ணாய நமவென் றவனடியிற்
சேராரை வெந்துயரஞ் சேர்ந்தாற்போல்—பாராளுங்
கொற்றவனைப்[2]பார்மடந்தை கோமானை வாய்மைநெறி
கற்றவனைச் சேர்ந்தான் கலி.

கலி புட்கரனை அழைத்தல்

4. [1]நன்னெறியில் சூதால் நளனைக்[2]களவியற்றித்
தன்னரசு வாங்கித் தருகின்றேன்—[3]மன்னவனே
[4]போதுவா யென்னுடனே யென்றான் [5]புலைநரகுக்
கேதுவாய் [6]நின்றான் [7]எடுத்து.

புட்கரன் நளனோடு சூதாடச் செல்லல்

5. புன்னை நறுமலரின் [1]பூந்தா திடை[2]யொதுங்குங்
[3]கன்னி யிள[4]மேதிக் காற்குளம்பு—பொன்னுரைத்த
[5]கல்லேய்க்கு [6]நாடன் [7]கவறாடப் போயினான்
[8]கொல்லேற்றின் மேலேறிக் கொண்டு.

6. [1]வெங்கட் சினவிடையின் மேலேறிக்[2]காலேறிக்
கங்கைத் திரைநீர் [3]கரையேறிச்—[4]செங்கதிர்ப்[5]பைம்
பொன்னொழியப் [6]போதும் [7]புறம்பணைசூழ் நன்னாடு
[8]பின்னொழியப் போந்தான் [9]பெயர்ந்து

---

3. [1] நாராயணனுக்கு வணக்கமென்று சொல்லி. [2] பூமிதேவிக்குத் தலைவனாகிய திருமாலை நிகர்த்த நளனை.

4. [1] நல்ல வழியில்லாத. [2] வஞ்சனை செய்து. [3] புட்கரனே. [4] வருவாய். [5] இழிவான நரகத்துன்பத்திற்கு. [6] கலி. [7] குரலையுயர்த்தி.

5. [1] மகரந்தங்களுக்கு நடுவில். [2] நடந்து செல்லும். [3] ஈனாததாகிய. [4] எருமை. [5] உரைகல்லையொக்கும். [6] நாட்டையுடைய புட்கரன். [7] சொக்கட்டான் ஆடுதற்கு. [8] (எதிர்த்தாரைக்) கொல்லும் எருத்தின்மேல். கலிபுருடனே எருதாகிப் புட்கரனைச் சுமந்துவந்தான் என்ப.

6. [1] வெவ்விய கண்களையும். [2] வாய்க்கால்களிற் பாய்ந்து. [3] கரையிலும் ஏறிப் புரண்டு. [4] செந்நிறமான கதிர்களிலுள்ள. [5] பசும்பொன்போன்ற நெற்கள் முழுகும்படி. [6] செல்லும்; நீர் போதுமென்க. [7] மருத நிலம். [8] பிற்பட. [9] கடந்து. விடையின்மேலேறி நாடு பின்னொழியப் பெயர்ந்து போந்தான் என்க.

நளன் புட்கரனை வினவல்

7. அடற்கதிர்வேல் [1]மன்னன் [2]அவனேற்றின் முன்போய்
[3]எடுத்தகொடி [4]யென்னகொடி யென்ன—[5]மிடற்சூது
[6]வெல்லுங் கொடியென்றான் வெங்கலியால் [7]அங்கவன்மேற்
செல்லுங் [8]கொடியோன் [9]தெரிந்து.

நளன் அவனைச் சூதாட அழைத்தல்

8. [1]என்றோம் [2]இதுவாயின் மெய்ம்மையே யெம்மோடு
வான்றோய் மடற்[3]றெங்கின் [4]வான்றேறல்—தான் [5]தேக்கி
[6]மீதாடி [7] வாளைவயல் வீழ்ந்துழக்கு [8]நன்னாடன்
[9]சூதாட வென்றான் [10]துணிந்து.

அமைச்சர் முதலானோர் நளனைச் சூதாடலாகாதெனத் தடுத்தல்

9. [1]காதல் [2]கவறாடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல்
[3]ஈதன் மறுத்தல் இவைகண்டாய்—[4]போதில்
[5]சினையாமை வைகுந் திருநாடா [6]செம்மை
நினையாமை பூண்டார் [7]நெறி

---

7. 1 நளன். 2 புட்கரனுடைய. 3 நீ உயர்த்துப் பிடித்தகொடி. 4 எதற்காக எடுக்கப்பட்ட கொடி. 5 வலிமை. 6 யாவரையும் வெல்லுதற்கு அறிகுறியான கொடி. 7 நளன்மேல். 8 தீயவனான புட்கரன். 9 (நளனுடைய கருத்தை) உணர்ந்து.

8. 1 (சூது விளையாடுவதற்கு) இசைந்தோம். 2 இஃது உண்மையாயிருக்குமானால்; இது மெய்ம்மையே ஆயின் என மாற்றுக. 3 தென்னை மரத்தினின்று வடியும். 4 சிறந்த மதுவை. 5 நிறையப்பருகி. 6 மேலே துள்ளி விளையாடி. 7 வாளை மீன். 8 நல்ல நிடத நாட்டையுடைய நளன். 9 சூதாடுவாயாக; அகரவீற்று வியங்கோள். 10 உறுதிகொண்டு.

9. 1 பெண்ணாசை. 2 சூதாடல். 3 கொடுப்பதைத் தடுத்தல். 4 தாமரைப்பூவில். 5 கருவுற்ற ஆமைகள். 6 நீதியைக் கருதாமையை. 7 ஒழுக்கம்.

10. [1]உருவழிக்கும் [2]உண்மை யுயர்வழிக்கும் [3]வண்மைத்
திருவழிக்கு [4]மானஞ் சிதைக்கும்—மருவும்
[5]ஒருவரோ டன்பழிக்கும் [6]ஒன்றல்ல சூது
[7]பொருவரே [8]தக்கார் [9]புரிந்து

11. [1]ஆயம் பிடித்தாரும் அல்லற் [2]பொதுமகளிர்
நேயம் பிடித்தாரு [3]நெஞ்சிடையே–[4]மாயம்
பிடித்தாரின் வேறல்லர் என்றுரைப்ப தன்றே
[5]வடித்தா[6]ரின் னூலோர் [7]வழக்கு

12. அறத்தை[1]வேர் கல்லும் அருநரகிற் [2]சேர்க்கும்
திறத்தையே கொண்டாருளைத் தேய்க்கும்–[3]மறத்தையே
பூண்டுவிரோ தஞ்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்
[4]தீண்டுவரோ வென்றார் தெரிந்து.

நளன், அமைச்சர் சொற்கேளாமை

13. [1]தீது வருக [2]நலம்வருக [3]சிந்தையால்
சூது பொர[4]விசைந்து சொல்லினோம்–[5]யாதும்
விலக்கலீர் நீரென்றான் [6]வராலேற மேதி
[7]கலக்கலைநீர் நாடன்[8]கனன்று.

---

10. [1] அழகு. [2] வாய்மையின் மேம்பாடு. [3] ஈகையையுடைய செல்வம். [4] பெருமை. [5] ஒருவரிடத்து உண்டான. [6] இன்னும் பல என்றபடி [7] எதிர்ப்பாரோ. [8] மேன்மக்கள் [9] விரும்பி.

11. [1] சூதாடுகருவி. [2] பரத்தையருடைய. [3] உள்ளத்தில். [4] தீமையைக்கொண்டவரின் வேறாகார். [5] நன்மை தீமைகளை ஆராய்ந்த மேலோரியற்றிய. [6] இனிய நூல்களைக் கற்றவருடைய. [7] பேச்சு.

12. [1] வேருடன் தோண்டும். [2] அடைவித்தற்குரிய வலிமையையே. [3] வெகுளியை. [4] கையால் தொடுவதுஞ் செய்வாரோ.

13. [1] (சூதினால்) தீமையே வரட்டும். [2] (அல்லது) நன்மையே வரட்டும். [3] உள்ளத்தால். [4] உடன்பட்டு. [5] சிறிதும் தடுக்காதீர். [6] வரால் மீன்கள் ஏறிப் பாய்வதனால். [7] கலக்குகின்ற அலைகளையுடைய. [8] வெகுண்டு.

### நளன் மனைவி மக்களுடன் நகரத்தைவிட்டுப் புறப்படல்

14. மென்காற் சிறையன்னம் வீற்றிருந்த [1]மென்மலரைப்
புன்காகங் [2]கொள்ளத்[3]தான் [4]போனாற்போல்—[5]தன்கால்
[6]பொடியாடத் [7]தேவியோடும் போயினா னன்றே
[8]கொடியானுக் கப்பார் கொடுத்து

### நகரத்து மக்கள் இரங்குதல்

15. [1]ஆருயிரின் தாயே [2]அறத்தின் பெருந்தவமே
பேரருளின் கண்ணே பெருமானே—பாரிடத்தை
[3]யார்காக்கப் [4]போவதுநீ யாங்கென்றார் தங்கண்ணின்
நீர்வார்த்துக் [5]கால்கழுவா நின்று.

16. [1]வேலை கரையிழந்தால் வேத[2]நெறிபிறழ்ந்தால்
ஞால முழுது[3]நடுவிழந்தால்—[4]சீலம்
ஒழிவரோ [5]செம்மை யுரை[6]திறம்பாச் செய்கை
அழிவரோ செங்கோ லவர்.

---

14. [1] மெல்லிய தாமரைப் பூவை. [2] தனக்கிடமாகப் பற்றிக்கொள்ள. [3] அவ்வன்னம். [4] அதைவிட்டுச் சென்றாற்போல. [5] தன் பாதங்களில். [6] புழுதி படியும்படி. [7] தமயந்தி. [8] புட்கரனுக்கு.

15. [1] (அன்பினால்) அரிய உயிர்களுடைய தாயாயிருப்பவனே. [2] அறக்கடவுளாற் செய்யப்பட்ட பெரிய தவத்தின் வடிவமாயிருப்பவனே; அறம் இவனால் நிலைபெறுவது என்றபடி.

" தாயொக்கு மன்பிற் றவமொக்கும் நலம்பயப்பின் " என்றார் கம்பர்.

[3] எவன் காக்கும்படிவிட்டு. [4] நீ எங்கே செல்வது. [5] தம் கால்களைக் கழுவிக் கொண்டு; கால்கள் நனையும்படி கண்ணீர்விட்டு அழுதனர் என்பதாம்.

16. [1] கடல் எல்லையைத் தாண்டினாலும். [2] ஒழுக்கந்தவறினாலும். [3] நடு நிலைமையைக் கைவிட்டாலும். [4] நல்லொழுக்கத்தினின்றும். [5] வாய்மைமொழி. [6] மாறுபடாத செயல்கள்.

குழந்தைகளுடன் உன் தந்தை வீட்டிற்குச் செல்வாயென்ற நளனைப்பார்த்துத் தமயந்தி கூறுதல்

17. குற்றமில் [1]காட்சிக் [2]குதலைவாய் மைந்தரையும்
பெற்றுக் கொளலாம் பெறலா[3]மோ—கொற்றவனே
[4]கோக்கா தலனைக் [5]குலமகளுக் கென்றுரைத்தாள்
[6]நோக்கால் [7]மழைபொழியா நொந்து.

நளன் பிள்ளைகளின் உயர்வைத் தமயந்திக்குக் கூறுதல்

18. [1]கைதவந்தான் நீக்கிக் கருத்திற் [2]கறையகற்றிச்
செய்தவந்தான் எத்தனையுஞ் செய்தாலும்—[3]மைதீர்
மகப்பெறு மானிடர்கள் [4]வானவர்தம் ஊர்க்குப்
புகப் பெறுர் [5]மாதராய் [6]போந்து.

19. பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
[1]றென்னுடைய ரேனும் [2]உடையரோ—[3]இன்னடிசில்
புக்[4]களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்.

---

17. [1] தோற்றம். [2] மழலைச் சொற்கள் பேசும் வாய். [3] ஓகாரம் எதிர்மறைப் பொருளது. [4] சிறந்த ஆசைக்குரிய கணவனே. [5] உயர் குடியிற் பிறந்த கற்புடைய பெண்ணுக்கு. [6] கண்களால். [7] மழைபோன்ற கண்ணீரைச் சொரிந்து.

கணவனை யிழந்தோர்க்குக் காட்டுவதில்லென்
றிணையடி தொழுது வீழ்ந்தனளே மடமொழி. (சிலப். வழக்கு) என்றல் காண்க.

18. [1] வஞ்சகம். [2] குற்றம். [3] குற்றந்தீர்தற்கு ஏதுவாகிய மக்களைப் பெறுத. [4] உம்பருலகத்திற்கு. [5] அழகிற் சிறந்த தமயந்தியே. [6] சென்று.

19. [1] எவ்வகைச் சிறப்புக்களை யுடையராயினும். [2] அவற்றையுடையவராவரோ. [3] இனிய சோற்றில். [4] துழாவுகின்ற. இல்லாதவர் உடையரோ என்க.

"படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்களை யில்லோர்க்
பயக்குறை யில்லைத்தாம் வாழு நாளே." (புறநானூறு 188)

"அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
சிறுகை யளாவிய கூழ்." என்பன ஈண்டு நோக்கத்தக்கன.

20. [1]சொன்ன [2]கலையின் துறையனைத்துந் [3]தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தாம் [4]இன்முகத்து—முன்னங்
[5]குறுகுதலைக் [6]கிண்கிணிக்காற் [7]கோமக்கள் [8]பால்வாய்ச்
[9]சிறுகுதலை கேளாச் செவி.

அதிவீரராமபாண்டியர் இயற்றிய

## நைடதம்

### * நளன் தூதுப்படலம்

1. அன்னமுரை செய்தவெழில் [1]ஆயிழையை நெஞ்சத்
[2]துன்னி[3]யயர் வோடுமுயிர் [4]உண்டிலைகொ லென்னக்
[5]கன்னன்மத னங்கணை [6]கருத்திடை குளிப்ப
மன்னவர்கள் மன்னன்[7]மதி மாழ்கியயர் காலை.

2. [1]பூகமடல் கீறியிள வாளைபுனல் காலும்
மேகமிசை தாவிடும் [2]விதர்ப்பநகர் மன்னன்
ஓகையொட ளித்த[3]வுயி ரோவியநி கர்க்கும்
[4]தோகைமண வோலைகொடு தூதுவ ரடைந்தார்.

---

20. [1] உயர்த்துக் கூறப்பட்ட. [2] நூல்களின் ஒழுக்க நெறிகள் பலவற்றையும். [3] படிந்தாலும்; கேட்டிருந்தாலும். [4] இனிய முகத்துடன். [5] நெருங்கி வருதலைச் செய்கின்ற. [6] சதங்கையணிந்த கால்களையுடைய. [7] சிறந்த பிள்ளைகளின். [8] பால் மணம் நாறும் வாயிலிருந்து உண்டாகின்ற. [9] மெல்லிய மழலைச் சொற்களை.

குதலை கேளாச்செவி பலநூற் கேள்வியுடையதாயினும் ஒரு பயனுமுடையதாகாது என்பது கருத்து.

* இந்திரன் முதலிய தேவர் பொருட்டுத் தமயந்தியினிடம் நளன் தூது சென்றமை கூறப்படும்.

1. [1] தமயந்தியை; அன்மொழித் தொகை. [2] நினைந்து. [3] சோர்வுடன். [4] உண்டோ இல்லையோ என்னும்படி; கொல் என்பதை முன்னுங் கூட்டுக. இஃது ஐயம். [5] கரும்புவில். [6] உள்ளத்தில் தைக்க; வேள் கணைவிடும் இடங்கள் வெவ்வேறாயினும் வருத்தமுறுவது கருத்தே யாதலின் இங்ஙனங் கூறினர். [7] அறிவுமயங்கி.

2. [1] கமுகம்பாளை. [2] விதர்ப்ப தேசத்து அரசனாகிய வீமன்; தலைநகர் குண்டினபுரம். [3] உயிருள்ள சித்திரம். [4] தமயந்தி.

3. [1]முடங்கலின் வரைந்தவுரை முற்று[2]முண ராமுன்
தடம்புயம்வ ளர்ந்தனவ ரைக்[3]குவமை சாலக்
[4]குடங்கையினை கன்ற[5]விழி [6]கோநகரி செல்வான்
மடங்கலனை யானுளம கிழ்ச்சியொடெ ழுந்தான்.

4. விரிகதி[1]ரெ றிக்குமதி வெண்குடை நிழற்றத்
[2]தரளநகை மாதர்பலர் சாமரையி ரட்ட
எரிமணி[3]யி மைக்குமுடி மன்னவரி றைஞ்சத்
திருவளரு மார்பனுயர் தேரின்மிசை போனான்.

5. பொற்றடந் தேர்மிசைப் போலிந்து தோன்றிய
[1]மற்றடந் தோளினான் வனப்பு நோக்கினார்
உற்றதோர் வியப்பினுக் குள்ள மீந்துதாம்
[2]வெற்றுடம் பாயினார் [3]விண்ணு ளோரெலாம்.

6. [1]மாயிரு ஞாலத்து வந்து மன்னர்கோன்
ஏயபே ரழகுகண் [2]டிமைப்பில் நாட்டமோர்
ஆயிரம் [3]பெற்றபே றடைந்து ளேனெனச்
[4]சேயுயர் விசும்பினுக் கிறைவன் செப்பினான்.

7. [1]மண்டமர் கடந்தவேல் மன்னர் மன்னனைக்
கண்டுமற் றொருவர்தோள் காமுற் [2]றீர்ந்தொடை
[3]தொண்டைவாய் மட[4]மயில் சூட்டு மோவெனாத்
தெண்டிரைக் [5]கனைகடற் [6]செல்வன் கூறினான்.

---

3. [1] அவ்வோலைச் சுருளில். [2] வாசித்து அறியுமுன்பே. [3] உவமையாகப் பொருந்த; முன்பு வரை உவமையாயிற்று. [4] உள்ளங்கையைப்போல். [5] தமயந்தியினுடைய. [6] குண்டினபுரம்.

4. [1] வீசுகின்ற. [2] முத்து. [3] ஒளி செய்யும்.

5. [1] மற்போர் செய்யும் பெரிய தோளையுடைய நளன். [2] உயிர் நீங்கிய உடல்போல் ஆனார்கள். [3] இந்திரன் முதலிய நால்வரும். அவன் பேரழகில் உள்ளம் ஈடுபட்டு மயங்கி நின்றனர் என்பதாம்.

6. [1] மிகப் பெரிய நில உலகத்தில். [2] இமைத்தல் இல்லாத கண்கள். [3] பெற்றதன் பயனை. [4] மிகவுயர்ந்த. இதுகாறும் இத்தகைய வனப்புடையானைக் கண்டதில்லை என்பது கருத்து.

7. [1] நெருங்கிய போரை வென்ற. [2] குளிர்ந்த மணமாலையை. [3] கொவ்வைக்கனி. [4] தமயந்தி. [5] ஒலி. [6] வருணன்.

8. [1]பாந்தள்மேற் கிடந்தபார் [2]பரிக்குந் திண்டிறல்
வேந்தனுக் கேதொடை [3]வேய்ந்தி லாளெனில்
[4]ஏந்திழை [5]யெழில்நலம் [6]என்கொ லாமெனக்
காந்துவெங் [7]கதழெரிக் [8]கடவுள் சாற்றினன்.

9. [1]கழைசுளி [2]புகர்முகக் களிநல் யானையான்
[3]இழைசுடர் எறிப்ப[4]வந் திறுத்த தேந்திழை
[5]விழவினுக் காயின்யாம் மீண்டு போதலே
[6]அழகிதென் [7]றந்தகன் அறைந்திட் டானரோ.

10. போர்த்தொழில் [1]வயிரவாட் பொருவி [2]லண்ணல்[3]செந்
தார்ப்பசுங் கிளியனாள்[4]தார்பெ றுதுபோய்க்
கார்க்குழ லரம்பையர் கமல வாண்முகம்
பார்ப்பதெவ் வாறெனப் [5]பரிவிற் கூறினன்.

11. [1]அரத்தமுண் டொளிரும்வாள் [2]அவுணர்ச் செற்றுநந்
[3]திருத்தகு செல்வமுஞ் சிறப்பு நல்கிய
விரைத்[4]துணர் [5]அலங்கலான் வீர சேனன்போன்
றிருத்தலா லிவனள னென்ன வேண்டுமால்.

12. [1]சேற்றிதழ்த் தாமரை மலரத் தெண்கடல்
தோற்றுசெங் கதிரெனத் தோன்று நின்னையாம்
[2]ஏற்றநல் லோரையில் எழுந்த தாலன்றே
[3]ஆற்றெதிர்ப் பட்டனம் அலங்கல் வேலினாய்.

---

8. [1] ஆதிசேடன். [2] சுமக்கும். [3] சூட்டாளாயின். [4] தமயந்தியின். [5] அழகின் நன்மை. [6] என்ன பயனுடையதாகும்; கொல் - அசை. [7] விரைவு. [8] அங்கியஞ் செல்வன்.

9. [1] கரும்பை முறிக்கின்ற. [2] புள்ளி. [3] அணிகலங்கள். [4] வந்து தங்கியது. [5] திருமணத்திற்கானால். [6] அழகினையுடையது. [7] இயமன்.

10. [1] வச்சிரப்படை. [2] இந்திரன். [3] கழுத்திலுள்ள சிவந்தவரை. [4] மணமாலை. [5] வருத்தத்துடன்.

11. [1] குருதிநீர். [2] அசுரர்களைக்கொன்று. [3] மேன்மைக்குத்தக்க, [4] பூங்கொத்து. [5] மாலையையுடையவனாகிய வீரசேனன் என்க. நளனுக்குத் தந்தையாகிய இவன் அசுரரைக் கொன்று அவர் கைப்பற்றிய அரசு முதலிய எல்லாச் செல்வங்களையும் இந்திரனுக்கு வழங்கினனென்று தெரிகிறது.

12. [1] சேற்றில்முளைத்த. [2] தகுதியான நல்ல இலக்கினத்தில். [3] வழியில் எதிர்ப் பட்டோம்.

13. இவனழற் கடவுள்மற் றிவன்வெங் கூற்றுவன்
உவனெறி கடற்கிறை [1]யொழிந்து நின்றயான்
[2]கவனவாம் பரி[3]யுள முணருங் காவல
அவிரொளி மணிமுடி யமரர் வேந்தனே.

14. [1]உன்னுழை [2]வேண்டுவ தொன்றுண் டாங்கது
பின்னர்யாங் கூறுது மென்று [3]பெட்புறும்
பொன்னகர்க் கிறையவ னிருந்த போதினில்
[4]மன்னவ னவரடி வணங்கி னானரோ.

15. [1]உண்ணெகிழ்ந் திறைஞ்சிய [2]வுலங்கொள் தோளினான்
[3]விண்ணுல காள்பவர்க் கரிய [4]மேம்பொருள்
மண்ணுல [5]காள்பவர் மாட்டு வைகுமோ
[6]எண்ணின்மற் றிவருளம்[7]யாவ தாங்கொலோ.

16. [1]குறிப்பறிந் தீதலே [2]கொடைமற் [3]றின்றெனா
மறுத்தலே கேட்டபின் [4]வழங்க லாதலிற்
பெறற்கரும் [5]ஆவியும் [6]பெட்பி னீகுவன்
[7]திறப்பட விவருளந் தெரிந்த தில்லையால்.

---

13. [1] இவர்கள் ஒழிய நின்ற. [2] விரைவு. [3] கருத்தையறியும்; நளன் குதிரைநூற் பயிற்சியிற் சிறந்தவன்.

14. [1] உன்னிடத்தில். [2] யாம் விரும்புவதாகிய ஒரு காரியம். [3] விருப்பமுற்ற. [4] நளன்.

15. [1] உள்ளங்குழைந்து. [2] திரண்ட கல்லின் தன்மையைக் கொண்ட; ஒத்த எனினுமாம். [3] பொன்னுலகமெனக் கொள்க. [4] மேம்பட்ட பொருள். [5] ஆள்பவரிடத்து. [6] ஆராய்ந்து பார்த்தால். [7] யாதாகுமோ; ஐயம்.

16. [1] (ஒருவருடைய) கருத்தை (அவர் கூறுமுன்) தெரிந்து. கொடுத்தலாகும்; அஃது "இல்லென்னும் எவ்வம் உரையாமை யீதலாம்." [3] இல்லையென்று தடுத்துக் கூறியதேயாகும். [4] கொடுத்தல்: கேட்குங்காலத்து உண்டாகும் மானமழிதல் அஞ்சுதல் முதலியன, இல்லையென மறுத்தபோது உண்டாகும் துன்பத்திற்கு நிகராதலின் இவ்வாறு கூறப்பட்டது. [5] "இன்னுயிரேனும் கொள்வது தீது கொடுப்பது நன்று" என்றார் கம்பர். [6] விருப்பத்துடன். [7] உறுதியாக.

17. [1]ஒளிமுக மிழப்பவந் துற்ற நாண[2]மீக்
கிளர்தர [3]வில்லெனக் கிளக்கு [4]மூர்ச்சனை
தெளிதர முகத்தினில் தெளித்தற் [5]கன்றுகொல்
[6]நளிபுனல் பொருளொடு நல்கு கின்றதே.

18. ஐந்தரு நீழலின் அரசு வைகிய
இந்திரன் முதலினோர் [1]ஈகென் றென்னுழை
வந்[2]துயர் பெரும்புகழ் வழங்கி னாிவர்
சிந்தனை மகிழ்வுற [3]என்கொல் செய்வதே.

19. [1]உரவுநீர்க் கருங்கட லுடுத்த மாநிலத்
தருளுடன் [2]இம்மையின் அளித்த [3]வான்பொருள்
மருவிய மறுமையில் வழங்கு பான்மையால்
[4]இரவலர் [5]தமரினும் இனிய ராவரே.

20. [1]உடைப்பெரும் பொருளினை யுலகி[2]லூதியம்
கிடைப்பதற் [3]களித்தலிற் கிளர்[4]நி ரப்பினால்
அடுத்துவந் தேற்குநர்க் கார்வ மீதுறக்
கொடுக்கில் [5]ஒன் றேபல கோடி யாகுமால்.

---

17. [1] முகமானது ஒளியை நீங்க. [2] மேலாக விளங்க. [3] (எனக்கு) இல்லையென்று சொல்லுவதாலுண்டாகும். [4] மயக்கம். [5] அல்லவா. [6] குளிர்ந்த நீரை, விதிப்படி தாரைவார்த்துக் கொடுத்தலே, மயக்கந்தெளிதற்கென்று கூறியது தற்குறிப்பு.

18. [1] கொடுப்பாயென்று. [2] ஈவார்மேல் நிற்கும் புகழ் ஏற்பார் தகுதி நோக்கி உயர்பெரும் புகழெனப்பட்டது. [3] அவர் விரும்பியது கொடுத்தாலல்லது அப் புகழ் நிலைபெறுதாகையால் யாது செய்வதென்றான்.

19. [1] உலாவுகின்ற. [2] இப்பிறப்பில். [3] சிறந்த பொருளை. [4] ஏற்பவர். [5] சுற்றத்தாரினும். "அற்றாரழிபசி தீர்த்தல் அஃதொருவன், பெற்றான் பொருள்வைப் புழி" என்றார் தெய்வப்புலவர்.

அறம், பொன்றுங்காற் பொன்றாத் துணையாய்த் தொடர்ந்து மறுமைக்கண் உதவுதலே, இரவலர் வழங்குவரென உபசரித்தார் எனினுமாம்.

20. [1] தமதாக உடைய. [2] இலாபம். [3] கொடுப்பதிலும். [4] வறுமையால். [5] தன் செல்வம் நல்வழிப்படுதல் குறித்து மனமகிழ்ந்து செய்யாளுறைவாளாதலின் ஒன்றே பலகோடியாமென்றார்.

21\. என்றுமற் [1]றினையன வெண்ணி [2]வண்ணவான்
குன்றெனப் [3]பணைத்துயர் [4]குவவுத் தோளினன்
வன்றிறல் வாசவன் வதன நோக்கிமற்
[5]றொன்றுநீ [6]கேட்டியென் [7]றுரைத்தல் மேயினன்.

22\. என்னருந் [1]தவத்தினன் றெனது தொல்குல
[2]முன்னையோ ரருந்தவ முயன்ற பான்மையாற்
பொன்னகர் துரந்துநீர் [3]போதப் பெற்றனன்
சொன்னவை மறுக்கிலன் சொல்க வென்றனன்.

23\. ஆங்கது கேட்டவா னரசன் [1]பொற்பினால்
வீங்குதோள் [2]மாரனை வென்ற நீயலால்
[3]யாங்குளர் அவன்தொடுத் தெய்யு [4]மின்னறுப்
பூங்கணை யால்வருந் துயரம் போக்குவார்.

24\. [1]வெயில்விரி மணிமுடி வீம னல்கிய
மயிலியல் மதர்விழி வளைக்கை மங்கைபாற்
[2]செயிரறு தூதுநீ செல்ல வேண்டுமென்
[3]றுயிரிரப் போரினும் [4]உளையக் கூறினன்.

25\. [1]திருத்தகு செவியிடைச் [2]சிவையி னூடுற
உருக்கிய செம்பினை யூற்றி னலென
[3]மருத்துவன் தீமொழி கேட்டு மன்னர்கோன்
கருத்தழிந் தாருயிர் கலங்கி னனரோ.

---

21\. [1] இத்தன்மையானவற்றை. [2] அழகிய. [3] பருத்து. [4] திரட்சி. [5] விரும்பிய தொன்றை. [6] கேட்பாய். [7] சொல்லத் தொடங்கினன்.

22\. [1] தவத்தினால் அன்றாகும். [2] முன்னோராகிய பெரியோர்கள். [3] வரப்பெற்றேன். தன்னின் மிக்கவர் வரவிற்குத் தன்தவம் போதாமையின் முன்னையோர் தவத்தைக் காரணமாகக் கூறினன்.

23\. [1] அழகினால். [2] மன்மதனை. [3] எவ்விடத்திலுள்ளார். [4] இனிய தேனையுடைய.

24\. [1] ஒளிபரந்த. [2] குற்றமற்ற. [3] உயிரைக் கொடுவென்று கேட்போரைப் பார்க்கினும். [4] மனம் வருந்த. தன் ஆருயிரினுஞ் சிறந்தாளாகத் தமயந்தியை மதித்திருந்தானாதலின் அவள்பால் தூதுபோகவேண்டுமென்றது மிக்க வருத்தந்தருவதாயிற்று.

25\. [1] அழகுபொருந்திய. [2] கொல்லன் உலையினிடத்து. [3] இந்திரன்.

26. [1]முற்றிழை வனநகில் [2]முயங்கு நன்னலம்
பெற்றில னெனினும்வேள்*பெய்யும் வாளியால்
மற்றுயி ரிறப்பினும் வான வேந்தொடு
[3]சொற்றது மறுக்கில னென்று சொல்லுவான்.

27. [1]எப்பொரு ளாயினும் யாவ ருள்ளமுங்
[2]கைப்படு நெல்லியங் கனியிற் காணுநீர்
துப்பிதழ் மடந்தைபால் தூது போகெனச்
செப்பியீ தெவன் கொ[3]லெஞ் சிந்தை யோர்ந்துமே.

28. [1]வழங்கிய நும்முரை மறாது சென்றியான்
மொழிந்தன ளாயினு முன்ன ரே[2]யெனை
விழைந்தவத் [3]தளிரியல் [4]வெள்கு றாதுளங்
குழைந்துநும் பால்[5]மணம் பொருந்தல் கூடுமோ.

29. என்னவேந் [1]திசைத்தலும் இசைத்த சொன்மறா
நின்னைமெய்ப் [2]பரதனை நிகரில் [3]பார்த்தனை
[4]முன்னினு நினைத்தவை யனைத்து முற்றுமால்
அன்னநீ யேகினே தரிய தாகுமே.

---

26. [1] தமயந்தி. [2] தழுவுவதாலுண்டாகும். [3] சொல்லியதை. தவத்தொடுதானஞ் செய்வாரிற்றலையாய வாய்மை தவறாமை, இம்மை இன்பத்தினும் சிறந்த மறுமையின்பம் பயப்பதாகலின் இவ்வாறு கூறினன்.

27. [1] எந்தப்பொருளானாலும். [2] உள்ளங்கையிற் பொருந்திய. [3] என் உள்ளம் அவள்பாலும் அவள் உள்ளம் என்பாலுமாக மாறிப்புக்கு இயைந்தன என்பான் பன்மையாற் கூறினன்; ஒருதலைக் காமமுடைய நமக்கு யான் செல்லுந்தூது பயன்படாதென்பது கருத்து.

28. [1] சொல்லிய. [2] என்னை விரும்பிய. [3] தமயந்தி. [4] நாணமல். [5] மணத்திற்கு உடன்படுவாளோ; யான் விழைந்த அளவினன்றி அவளும் என்னை விழைந்தவளாதலின் இந்நிலையில் அவள் என்பால் நாணாது எதிர்மொழி கொடுத்தலும் நும் மணத்திற்கு இயைதலும் யாங்ஙனமென்பதாம்.

29. [1] சொல்லவும். [2] சகுந்தலை புத்திரனாகிய பரதனையும். [3] கார்த்த வீரியார்ச்சுனனையும். [4] நினைத்தாலும்.

30. [1]இனையன வாசவ னியம்பு மெல்லையில்
வனைமலர்க் [2]கோதைதன் [3]வயத்த னாகியுந்
தனி[4]யற னிழுக்குறாத் [5]தகைய னாதலின்
அனையதற் கிசைந்தனன் அலங்கல் வேலினான்.

*அரசகேசரியார் இயற்றிய

## இரகுவம்மிசம்

### $குறைகூறுபடலம்

1. வடுவின்மறைப் பெருந்[1]தவநின் னருடினமு[2] மறையோர்க்கு
வளங்கொள் சோதி
[3]படு[4]கனக கிரியதனி னுதவுகினுங் [5]குறையாத படியே யாக
நெடுநிலவைப் பினி[6]னரசு நெறி[7]வாரி யிடையறா நேரி[8]லேற
[9]விடுநெதியப் பெருக்க [10]தண்டக் [11]காப்பினோன்
வயின்றுயரோன் [12]றிறுத்த தன்றே.

---

30. [1] இத்தன்மையவான சொற்களை. [2] தமயந்தியின். [3] வசப்பட்டவனாயிருந்தும். [4] அறத்தினின்றும் வழுவாத. [5] பெருங்குணமுடையோன்.

*இந்நூலாசிரியர், சிறிதேறக்குறைய 550 ஆண்டுகட்குமுன் யாழ்ப்பாணத்து நல்லூரிலிருந்து ஆட்சிபுரிந்த பரராசசேகரர் என்னும் அரசரின் மருகராவர்; வடமொழி தென்மொழியிரண்டிலும் வல்லுநர். காளிதாசர் வடமொழியில் இயற்றிய இரகு வம்மிசத்தின் மொழிபெயர்ப்பாக இந்நூல் அவரால் யாக்கப்பட்டது. இரகுவம்மிசம் என்பது இரகு என்னும் சூரிய குலத்து அரசனுடைய குல முறையைக் கூறும் நூல் என்று பொருள்படும்.

$ குறைகூறுபடலம் :—அயோத்தியிலிருந்து ஆண்டுவந்த திலீபன் என்னும் பேரரசன் தனக்குப் புதல்வற்பேறின்மை குறித்து வருந்தித் தன் மனையாளான சுதக்கணையுடன் வனத்திற்கேகி ஆண்டுத் தவப்பள்ளியிலிருந்த தன் குலகுருவாகிய வசிட்டரைக்கண்டு வணங்கித் தனக்கு மகப்பேறில்லாக் குறையைக் கூறுவது. இப்படலத்தின்கண் திலீபனுக்கு மகப்பேறு இன்மைக்குக் காரணமும் அதனை நீக்கும் உபாயமும் முனிவராற் கூறப்படும்.

1. [1] தவத்தையுடையவரே; வசிட்டரை விளித்தது. [2] முனிவர்களுக்கு. [3] உண்டாகின்ற. [4] பொன் மலையினும் மிகுதியாக. [5] எம்மிடத்தும் குறைவின்றியே உண்டாதலால்; அருள் உண்டாதலால் என்க. [6] அரசின் முறை. [7] கடலினிடத்தும் இடையறவின்றி. [8] செல்லுதலால். [9] இடுகின்ற செல்வப்பெருக்கானது; அது பகுதிப் பொருள் விகுதி. [10] வந்து அடையும்படி. [11] காவல் செய்யும் என்னிடத்து. [12] தங்கிற்று.

2\. [1]சமைவில வெம்[2]மிடற்றுணை[3]மகதர்கோன் றருமிந்தத்
[4]தைய லாள்பால்
[5]எமைநிகர வருமகவொன் றின்மையினான் [6]அகப்பெரிய
[7]ஏழ்தீ பத்தின்
[8]கமையுலவும் [9]புவிமடந்தை நவமணியின் றளிப்பவு[10]முட்
கரந்து[11]வீடா
[12]அமைவிலள்நன் மகவாசைப் [13]பெருக்கழுத் துயர்
[14]மீக்கொண் டழிகின் றேனே.

3\. [1]செருகுமுவ கைய[2]வாழ்த்து வாய்மைதரு[3]தென்புலத்தார்
சிறியே னுள்ளம்
உருகு[4]தகை யொடும்[5]புனித நிலைகூடித்[6]தருப்பிக்கு மூதக
மேற்றுப்
பருகுதொறு [7]மெதிர்கால நிலையுள்ளா[8]நினைப்பெனுந்தீப்
பற்ற [9]வெய்தாய்ப்
பெருகு[10]நெடி துயிர்ப்பதனால் [11]வெய்துறினிங்
[12]கென்யான்செய் [13]பெற்றி தானே.

---

2\. 1 முடிவு; அழிவு. 2 வலிய சேனை. 3 மகத தேயத்து அரசன். 4 சுதக்கனை யிடத்து. 5 எம்மையொப்ப. 6 அகத்தே விரிவான. 7 ஏழு தீவுகளின். 8 பொறை. 9 நிலமகள். 10 மனம் மழுங்கி. 11 அழிந்து. 12 அமைதியுற்றிலன் (பி - ம்) "அமைவில நன்மகவாசை" 13 மிகுதியினால். 14 மேற்கொண்டு. இன்மையினால் அமைவிலன்; அழிகின்றேன் என்க.

3\. 1 அடைந்த. 2 வாழ்த்தாகிய சொற்களை. 3 பிதிரர். 4 தகுதி. 5 தூய நிலையை யடைந்து. 6 தருப்பணஞ்செய்யுநீரை. 7 வருங்காலத்து நிலையை. 8 நினைப்பாகிய நெருப்பு. 9 வெப்பமுடையதாய். 10 நெட்டுயிர்ப்பால். 11 (அந்நீர்) வெப்பமடையுமாயின். 12 என்ன பயனுடையதாம். 13 தன்மை. எதிர்கால நிலை:—தமக்கு, பின் தருப்பணநீர் தருவாரில்லாத நிலை. பருகு தொறும் வெய்துறின் யான்செய் பெற்றியென் என இயைக்க.

4. பெறத்தகுமைந் தரையிலவாம் பெற்றியினுல் மாசடைந்தேன்
[1]பெரிய யாகத்
திறத்[2]தமல மாயினேன் ஆதலின்[3]மின் னுக்குழுவிற்
[4]சேண்போய்ச் சுற்றும்
[5]உறத்தகைய[6]பெருஞ்சுடரை[7]யுட்படுத்திட்[8]டுணர்வதனுக்
[9]குலப்பி லாத
புறத்திருளைத் தரித்துடைய பொன்னேமி வரையினையும்
போன் றுளேனே.

5. [1]தேக்குபுகழ்த் திற[2]லிக்கு வாகுமர பினர்[3]நினைவிற் றிருவை
யெல்லாம்
ஆக்குவதும் பெறற்கரிய தளிப்பது[4]நீ யன்றேவென் னகத்து
[5]ளாரப்
பூக்குமரும் பெருந்துயர[6]வன்னோயை நின்கருணைப்
பொலிவா [7]னெய்தின்
நீக்குதியென் றடல்வேந்த [8]னிரப்பமுனி தனியோக
நிலையிற் சேர்ந்தான்.

---

4. [1] பெரிய வேள்வியின் பகுதிகளைச் செய்தமையால். [2] உள்ளத்தில் அழுக்கு நீங்கிய யான்; ஆயினேன் அடைந்தேன் என இயைக்க. [3] மின்னற் கூட்டங்களைப் போல. [4] ஆகாயம்; தூரமுமாம். [5] மிகத்தகுதிவாய்ந்த. [6] சூரியன் முதலான ஒளிப்பிழம்புகளை. [7] உள்ளிடத்தே பெற்று. [8] அறிவுக்கு. [9] முடிவு போகாத; உலப்பிலாத இருளைப் புறத்துத் தரித்துடைய என்க. சக்கிரவாளகிரி அகத்தே ஒளியும் புறத்தே இருளும் பெற்றிருத்தல்போலப் பல வேள்விகளைச் செய்து உள்ளத் தூய்மையுற்றயான் மைந்தரையின்மையின் புறத்தே ஒளியிழந்தேன் என்றான்.

5. [1] நிறைந்த கீர்த்தி. [2] இக்குவாகு என்னும் அரசன் வழித்தோன்றல்களாகிய தன் முன்னோர். [3] எண்ணத்தின்படி. [4] நீ அல்லவா? [5] மிகப்பொலிந்த. [6] வலிய நோயை; இது மகப்பேறின்மையான் ஆயது. [7] எளிதாக; விரைவாக எனினுமாம். [8] வேண்ட.

மகப்பேறின்மைக்குக் காரணம் இன்னதெனெ முனிவர் கூறுதல்

6. [1]முற்பக லொன்றின்[2] மன்ன முகிற்[3]கிறை பாற்போய்த் தேவர்
உற்பவ [4]நகரி னின்றும் உவந்[5]துவள் [6]பூப்பை யுன்னு
அற்பொடு விரைவின் மீளும் [7]அந்நெறிக் [8]காம தேனுக்
கற்பக தருவி னீழற் கவினுறக் கிடந்த தன்றே.

7. [1]சந்ததித் தரும நோக்கித் [3]தரிப்பிலா [3]ததனைப் போற்றும்
[4]வந்தனைத் தொழில்செய் யாது மறப்பொடு [5]வழிப்பட்
டாயாற்
சிந்தையிற் [6]கனன்றத் தேனுச் [7]சேயினு லன்றோ வெம்மை
[8]நிந்தனைப் படுத்தா னென்னு நெஞ்சுற நினைந்த தன்றே.

8. ஆதலின் மகப்பே றின்மை யானதிங் [1]கதுவு முள்ளக்
காதலின் வருணன் வேள்வி கலந்ததவ் வேள்வி காணிற்
பாதலத் துளதங் கேகிற்[2]பஃறலைப் பாந்தட் காப்பிற்
போதலுக் கரிது வேறோர் [3]பொருளுள [4]புகறு [5]மன்னோ.

9. உகந்தவத் தேனுத் தந்த வுயர்பெருஞ் [1]சுரபி யிங்கெம்
[2]மகந்தழைத் திடநின் றுள்ள [3]திதனை நீ மகிழ்வின் [4]வல்லே
[5]இகந்தவக் கொடிய தீய[6] இன்னலை யிட்ட பொல்லா
[7]அகந்தப [8]வுரிமை யோடும் [9]ஆதரித் திடுதி யென்றான்.

---

6. [1] முன்னொரு நாளில். [2] விளி. [3] இந்திரன். [4] சுவர்க்கம். [5] சுதக்கணை. [6] பூத்து நீராடியதை நினைந்து. [7] அவ்வழியில். [8] தெய்வப்பசு; விரும்பிய வற்றைத் தரும் இயல்பினது.

7. [1] மகப்பேறு குறித்தோர், தம் மனைவியர் பூத்து நீராடியபின் ஈராறு நாளும் பிரிந் திருத்தலாகாது என்னும் அறநூல்விதி. [2] காலந்தாழ்க்காது. [3] அக்காம தேனுவை. [4] வழிபாடாகிய தொழில். [5] வந்துவிட்டாய். [6] வெகுண்டு. [7] மகவினாலன்றோ. [8] இழிவுசெய்தான்.

8. [1] அக்காமதேனுவும். [2] பல தலைகளையுடைய பாம்புகளின் காவலால். [3] உபாய முண்டு. [4] சொல்லுதும். [5] அசை.

9. [1] பசு; நந்தினியென்னும் பெயருடையது. [2] வேள்வி. [3] இப்பசுவை. [4] விரைவாக. [5] வரம்புகடந்த; முன்னம் வழிபடாது சென்ற என்றுமாம். [6] துன்பத்தைத்தந்த. [7] பாவம் நீங்க. [8] உன் மனைவியோடும். [9] பூசனை செய்வாய். வல்லே அகந்தப உரிமையோடும் மகிழ்வின் ஆதரித்திடுதி என்க.

10. என்றினி துரைக்கும் வேலை யெறிபுனற் [1]கரசன் யாக
நின்றுள [2]சுரபி[3]தேவ நிலையினா லுணர்ந்து பாச
வன்றுயர்ப் [4]பகைஞன் [5]சிந்தை செய்தலின் [6]வந்திட் டாங்குத்
[7]துன்றுசெஞ் சுடர்[8]சேண் சுற்றச் [9]சூழுறத்
[10]தோன்றிற் றன்றே.

11. [1]புனைந்தன தொடையற் [2]கங்கைப் புரவலன் றாளைச்[3]சென்னி
வனைந்தவம் முயற்சி யேவ மருது[4]நல் வினைகொண் [5]டார
[6]இனைந்[7]தெதிர் இரப்ப மன்னர் [8]இதயவா ரிசத்தி[9]னேன்று
நினைந்தவப் பலன்முன் னாக நின்றதும் போன்ற தன்றே.

12. ஆங்கினி ததனை [1]நோக்கா அருண்முனி யரச நீயுட்
டாங்கிய துயர மெல்லாந் [2]தபுதனிச் சயமிவ் வேலை
யீங்கிது வரலா லென்னா [3]விரந்[4]தத னுள்ளத் [5]தேற
ஓங்கருள் பெறுமா றெல்லா முவந்தினி துரைக்கு மன்றே.

---

10. [1] வருணன். [2] காமதேனு. [3] தெய்வத்தன்மையால். [4] வசிட்ட முனிவர். [5] நினைத்தலால். [6] வந்தாற்போல. [7] (உடம்பிற்) செறிந்த செவ்வொளி. [8] தூரத்திற் சூழ. [9] (முனிவர்) ஆராயும் வண்ணம். [10] அதன் கன்றாகிய நந்தினி வனத்தினின்றும் ஆங்குவந்து காணப்பட்டது.

11. [1] அணிந்த மாலையையுடைய; பெயரெச்சமுற்று. [2] கங்கைநாட்டரசனாகிய பாராசசேகரன். [3] தலையில் சூடிய. [4] நல்வினைகொண்டுவந்து. [5] நிறைவிக்க. [6] வருந்தி. [7] எதிர் நின்றுவேண்ட. [8] உள்ளத்தாமரையில். [9] முயன்று.
காமதேனுவை நினைந்த அளவில் அதன் கன்றாகிய நந்தினி முன்வந்து நின்றது, பாராசசேகரனைப் பணிந்த மன்னர் கருதிய பயன் அவர்க்கு முன்வந்து நிற்றல்போன்றது என்பதாம். பாராசசேகரன் வடநாட்டு ஆரியர் வழித் தோன்றலாதலின் கங்கைப் புரவலன் எனப்பட்டான்.

12. [1] பார்த்து. [2] கெடுதல். [3] வேண்டி. [4] அப்பசுவினுடைய. [5] பதியும்படி (ஏவல் செய்து). என்று உரைக்குமென்க.

13. [1]தலாதிப தகு[2]மெய்ஞ் ஞானத் தன்மையிற் றழுவி [3]வெம்மைக்
[4]கலாதியி [5]னமைதி காமங் [6]கைக்குதி [7]சாக மூல
பலாதிக டுய்த்தி மாசில் [8]பவித்திரத் தாதி[9]பாசப்
புலாதிகள் காத்தி யாவைப் பூசனை புரிதி பின்னர்.

14. [1]நிற்றியா னிற்கிற் செல்லிற்[2]சேறி[3]நீர் துற்றி னீயுந்
துற்றியா கிடக்கி னங்ங னிருத்திநேர் துணிந்த[4]நேசப்
பெற்றியா [5]லூறொன் றெய்தா வகையினிற் பெரிது காத்தி
[6]மற்றிலா யாதி[7]யானுண் மகிழ்ந்திடுங் காறு மன்றே.

15. நின்பெருந் தேவி தானு மருச்சனை [1]நெறியிற் செய்திங்
கென்பெருந் [2]தானத் தெல்லை யேகிமீண் டந்த வெல்லை
மன்பெருந் தேனு மீளி [3]னெதிர்செலீஇ மலரிட் டேத்திப்
[4]பின்படர்ந் தொழுக றானே [5]கடனெனப் பெரிது சொன்னான்.

16. [1]இறையுறு திருவு[2]முற்றி லெண்ணமு [3]மீறு மாகிக்
குறையுறா யுவும்பெ றாது வாழ்கென வாசி கூறிக்
[4]கறையறு [5]பன்னசாலை காட்டிடக் காவ லா[6]னம்
மறையவ [7]னருள்கைக் கொள்ளா மாதொடு வணங்கிப் புக்கான்.

---

13. [1]நிலவுலகிற்கு அரசனே. [2]உண்மை ஞானத்தின் இயல்போடு கூடி. [3]விரும்பப் படுகின்ற. [4]கலை முதலியவற்றைப்போல. [5](பயன் தரும்படி அப்பசுவிற்குப் பணிபுரிதலில்) அமைந்து ஒழுகுதி. [6]வெறுப்பாய். [7]இலையும் கிழங்கும் பழமு முதலியவற்றை. [8]புனிதத் தன்மையில் பொருந்துவாய். [9]பாசமாகிய புலன் முதலியவற்றை.

14. [1]ஆன் நிற்கில் நிற்றியென்க. [2]செல்வாய். [3]நீர் அருந்தினால். [4]அன்பின் தன்மையால். [5]இடையூறு சிறிதும். [6]வேறு ஒரு தொழிலும் இல்லாதவனாய். [7]நந்தினி.

15. [1]முறைப்படி செய்து. [2]ஆச்சிரமத்தின் எல்லைவரையும். [3]எதிர்சென்று. [4]பின் சென்று. [5]அவட்குக் கடமையாகுமென்று.

16. [1]சிறுமையான செல்வத்தையும். [2]முற்றுப்பெறாத எண்ணத்தையும். [3]அழிவுடையதாய்க் குறைவைப் பொருந்திய ஆயுள் நாளையும் அடையாமல் வாழ்வாய்; நிறைந்த செல்வமும், எண்ணிய எண்ணியாங்கெய்தலும், நீண்ட வாழ்நாளும் பெற்று வாழ்வாயென்று வாழ்த்துக் கூறியதாகக் கொள்க. [4]குற்றம். [5]இலைகளால் வேயப்பெற்ற தவப்பள்ளி. [6]அந்த வசிட்ட முனிவருடைய. [7]கட்டளையை.

## * தேனுவந்தனப் படலம்

17. [1]வானை விட்டிடா [2]மகேசன [3]தாணையும் [4]வழுவா
[5]கானை விட்டிடாத் [6]தவத்தினன் யாகமுங் கலையா
[7]ஆனை விட்டென தடலையே யருந்துதி யென்றான்
[8]தேனை விட்[9]டடி கழுவுதா [10]ருரத்[11]தடந் திறலோன்.

அரியேறு புகலுமாற்றம்

18. கந்த வேணிகர் இளமையு நறுமலர்க் கணைக்கை
யந்த [1]வேள்பர வழகு[2]முற் றுடையைநீ டயனார்
தந்த பாருல களிப்பதை நீத்திவண் [3]டந்த
சிந்தை யேதுகொல் [4]நீகொலோ [5]கற்றறி சிறியோன்.

19. இறத்தல் நீசெயின் உய்யு[1]மீ தொன்று[2]மே னையவாம்
[3]பிறத்த லாகிய வுயிரெலாந் துயருறல் பெரிதால்
[4]அறத்து [5]நேரிஃ தாய்ந்துணர் பெரி[6]தம ராடும்
[7]மறத்தும் [8]ஆருயி ரடாது[9] வென் கண்டிடும் வழக்கோய்.

20. [1]ஊழி னன்பசு வொன்[2]றழ முனி[3]கதத் துகு[4]தீ
யாழி சூழுல கேழையு மடுமென வஞ்சேல்
[5]ஏழி னேடிரு கோடியா னுதவுதி [6]யிசையால்
வாழி மாசற வுயர்தி[7]சூழ்ந் தளப்பரும்[8]வரத்தோய்.

---

* நந்தினி என்னுந் தெய்வப் பசுவை வழிபட்டதைக்கூறும் படலம்.
சிங்கம் ஒன்று அப்பசுவைப் பற்றிக்கொண்டு தன் வரலாறு அனைத்துங் கூறக் கேட்ட திலீப மன்னன் அச்சிங்கத்தினை இரந்து கூறுதல்.

17. 1 சிவலோகத்தை. 2 சிவபெருமான். 3 (எதிர்ப்பட்ட வுயிரையுண் என்று இட்ட) கட்டளையும். 4 வழுவாது. 5 காட்டினை. 6 வசிட்ட முனிவன். 7 இப் பசுவைவிட்டு. 8 தேனை ஒழுகவிட்டு. 9 பாதங்களைக் கழுவுகின்ற. 10 மார்பு. 11 மிக்க வலியையுடைய திலீபன்.

18. 1 மன்மதனும் துதிக்கத்தக்க. 2 பொருந்தியுள்ளாய். 3 உன்னை எனக்கு உணவாகக்கொடுத்த. 4 நீதானோ. 5 படித்தறிந்த மூடன்.

19. 1 இப்பசுவொன்றும். 2 மற்றையவாகிய. 3 உடம்பொடு தோன்றிய. 4 அறநூல் நெறியில் நின்று. 5 நேர்மையாக இதனையாராய்ந்தறிவாய். 6 போராடுகின்ற. 7 மறத்துறையிலும். 8 உயிர்களைக் கொல்லாமல். 9 புறங் காண்கின்ற.

20. 1 ஊழ்வினையால். 2 (கொலைத்தீங்கில் அகப்பட்டு) அழுதலால். 3 வெகுட்சியால். 4 சாபத்தீ. 5 ஒன்பதுகோடி பசுக்களை; பல என்பது கருத்து. 6 புகழ். 7 ஆராய்ந்து. 8 மேன்மையையுடையவனே.

21. [1]திரத்து விண்ணவர் நகரினுஞ் சிறந்தொரு [2]திருவின்
வரத்து யர்ந்திடு [3]நகருளாய் வழக்கினு னின்னை
[4]யிரத்தும் பல்லுயிர்க் கிரங்கினின் [5]புரத்தினை யினிதே
புரத்த லேகட னென்றிட வென்றியம் புகழோன்.

22. [1]வெடித்த டங்கயற்[2]கண்ணியர் [3]மைந்தர்வே தியர்[4]கோ
[5]நெடிற்கொ டுங்கொலை சூழ்ந்திட [6]நீக்கருந் தீதிற்
[7]படிற்ற னுண்மையிற் [8]காப்பது காத்தது [9]பலியா
விடிற்ற னுவியை விடுத்திடா வேந்துமோர் வேந்தோ.

23. [1]முன்னை யா[2]னெம குலத்துக்கு [3]முதல்வனோர் [4]மைந்தன்
றன்னை யானிளங்[5]கன்றினுக் களித்தனன்[6]தலைநாட்
பின்னை யா[7]னது பிழைப்பதோ பிறங்குசீ [8]ரானிற்
கென்னை யானளித் திடுவது மெங்குலத் தியல்பால்.

24. [1]கேட்டி யிப்பசு வப்பெருஞ் [2]சுரபியே [3]கேட்டை
[4]யீட்டி ருங்கொலை[5]தற்படா தென்னினு மியல்பால்
[6]வீட்ட ரும்பெரு வலியினர் [7]புரத்திடை வெந்தீ
[8]யூட்டி னன்றன [9]தாணைக்குந் தடையிடை யுளதோ.

25. [1]கைப்[2]பு ரந்தரு முன[3]தகட் டங்கியுங் [4]கனலா
திப்பெ ருந்துய ரானுமுய்ந் திடுமென [5]திசையா
[6]மெய்ப்பு ரந்தனி விளங்குமா செய்துமேல்[7]விளியிப்
பொய்ப்பு ரந்தனை[8] யயிறிநீ யென்றுபின் புகலும்.

---

21. 1 உறுதியான. 2 செல்வச் சிறப்பால். 3 அயோத்தி. 4 வேண்டுதும். 5 உடலை.

22. 1 தாவுகின்ற. 2 மகளிர். 3 சிறுவர். 4 பசுக்கள். 5 பெரிய. 6 விலக்குதற்கரிய. 7 அகப்பட்டால், 8 காக்கவேண்டும். 9 பயன்படாவிட்டால்.

23. 1 முன்னுள்ளவன். 2 எம் குலத்துக்கு. 3 மனுநீதிகண்ட சோழன். 4 வீதிவிடங்கன். 5 கன்றைக் கொன்ற குற்றத்தின்பொருட்டு, 6 முற்காலத்தில். 7 அம்முறையில் தவறலாமோ. 8 இப்பசுவைக் காத்தற்பொருட்டு.

24. 1 கேட்பாய். 2 காமதேனுவே, 3 கெடுதலை. 4 ஆக்குகின்ற. 5 தன்னைப் பொருந்தாது. 6 அழித்தற்கரிய. 7 முப்புரத்தின்கண். 8 சிவபெருமான். 9 (எதிர்ப்பட்ட உயிர்களெல்லாம் உண்பாய் என இச்சிங்கத்தை நோக்கி இறைவன் இட்ட) கட்டளை.

25. 1 சிறுமையை. 2 உடம்பிற்கு. 3 வயிற்றுத்தீயும். 4 சுடாது. 5 புகழாகிய. 6 உண்மையுடம்பை. 7 அழிகின்ற. 8 உண்டுபசி தீர்வாய்.

26. [1]தாக்கு பேருவ கைக்கடல் தழுவு[2]சற் சங்கம்
வாக்கி னான்[3]மொழி யெதிர்சொல வருவதே[4]வழக்கால்
நீக்க லாதிவ [5]ணெம்மொடு மினிதுநேர் பட்ட
போக்க லாதபே [6]ரளியைநீ பிரிப்பதும் புகழோ.

27. [1]அரச கோளரி[2]யின்னணம் இரப்ப நின் றரியே
[3]றுரைசெ யாதொளிர் தன்[4]றலை சாய்த்தலு முயர்தார்
[5]வரைசெய்[6]வாகுபந் தந்தனி தீர்ந்தது வரி[7]விற்
றரைசெ யாவெதிர் வீழ்ந்தன[8]னுவகையின் றலையான்.

28. [1]ஆழ்தலைக் கருது மாவிட் டரிய[2]தன் மெய்யி [3]லாளி
[4]வீழ்தலைக் [5]கருதி னான்றன் [6]புறத்திடை வீழா [7]நின்ற
[8]தாழ்தலைக் கருதா [9]மேலோர் தடக்கையால் விசும்பி னின்று
[10]வாழ்தலைக் கருதி வீழ்த்த கற்பக மலர்ப்பூ மாரி.

29. [1]தவப்பயத் துற்ற தோர்நந் [2]தலைக்கன்று [3]வருதி தாழ்வில்
[4]அவப்பயத் துறாத [5]செல்வத் தரும்பொருள் வருதி யெண்ணில்
[6]நவப்பயத் தளிக்குந் தெய்வ நன்மணி வருதி யென்னப்
[7]பவப்பயத் தரிய தேனுப் பரிந்தினி தழைத்த தன்றே.

---

26. [1] பார்த. [2] பெரியோர் கூட்டுரவு. [3] சொற்களை முன்னின்று பேசுதலால். [4] தொன்று தொட்ட முறை. பெரியோர் உறவு உரையாடுதலால் நிகழுமென்பது முறை. [5] (உன்னுடன் இத்துணையும் உரையாடிய) எம்முடன். [6] நட்பை.

27. [1] திலீபன். [2] இவ்வாறு நின்று வேண்ட என்க. [3] பின் ஒன்றுங்கூறாமல். [4] தலையைச் சாய்த்த அளவில். [5] மலையையொத்த. [6] தோட்கட்டும். [7] வில்லை நிலத்திலிட்டு. [8] மகிழ்ச்சியிற் சிறந்தவனாய்.

28. [1] இறத்தல். [2] தன் உடம்பில். [3] சிங்கம். [4] விழுந்து உண்ணுதலை. [5] திலீபன். [6] முதுகில். [7] முற்றும். [8] மேன்மையைக் கருதுகின்ற. [9] தேவர். [10] அவன் நல்வாழ்வைக் கருதி: பூமாரி வீழா நின்ற எனக் கூட்டுக.

29. [1] தவப்பயனால் அடைந்ததான. [2] தலையீற்றுக் கன்றே. [3] எழுந்துவருவாய். [4] பயனற்ற நெறியில். [5] செல்வத்துட் செல்வமே [6] புதிய பயன்களை. [7] (தன்னை வழிபட்டாரை) பாவமாகிய பயனில் விடுதல் இல்லாத.
உவப்பினால் திணை மயங்கிற்று.

30. [1]துடித்தன னெழுந்து[2]மாற்ற நல்கிய துணிவாற் றன்னைப்
பிடித்[3]தயின் றிடுவான் வேட்ட பெரும்பசிச் சிங்கங் காணான்
[4]செடிச்சிறு செம்பொற் கிண்ணந்[5]தேக்குபா லூட்டச் [6]சேயை
யடித்தினி திரங்கி நின்ற[7]வன்னையி னாவைக் கண்டான்.

31. [1]கண்பிரித் தியன்ற[2]மாயக் காட்சியு[3]மெனதே [4]வேறென்
[5]றெண்பிரித் துணரே லென்னா[6]லென்பெறற் [7]கிசைந்தா யென்ன
[8]நண்பிரித் திடாத தேனு நவிறலுங் [9]கலியை நாளும்
[10]மண்பிரித் தளிக்கு மாறோர் மைந்தனைத் தருதி யென்றான்.

32. [1]காய்ப்புற வுள்ளத் துள்ளே[2]கனல்படக் கிடந்த [3]சிந்தை
[4]நீட்புற வெனது தீம்பால் துய்க்குதி நிருப வென்ன
[5]ஏய்ப்புற நின்ற கன்று நுகர்ந்தபி னியைந்து கொண்ட
[6]வாய்ப்புறும்[7]யாக சேடம்[8]வாங்குபு நுகர்வ னென்றான்.

33. [1]புறநிலை புகாது[2]நீதி புல்லுபு பொலிந்து [3]பொய்யா
[4]அறநிலைப் பால தாய அம்மொழிக் [5]கமைந்து போகா
[6]விறனிலைக் கதிர்வேற் [7]கண்ணி பூசனை கொண்டு [8]வேதத்
திறநிலைத் தகைய வேள்விச் சாலைவாய்ச் சேர்ந்த தன்றே.

---

30. 1 துடிப்புற்று; முற்றெச்சம். 2 வருதியென்று அழைத்த துணிவினால் துடித்து எழுந்து என்க. 3 உண்ணுதற்கு விரும்பிய. 4 ஒளி. 5 நிறைந்த பாலை. 6 புதல்வனை. 7 தாயைப்போல்.

31. 1 (உன்னுடைய) கட்பார்வையை வேறுபடுத்தி. 2 மாயையின் தோற்றமும்; என்னைப்பற்றியதாகக் காணப்பட்ட சிங்கவுருவமும். 3 என்னுடைய செயலே 4 யான் வேறு சிங்கம் வேறு என்று. 5 உள்ளத்தால் பிரித்து உணராதே. 6 யாது பெறுதற்கு. 7 (இவ்வழிபாட்டிற்) பொருந்தினாய். 8 நட்பைக் கெடுத்துவிடாத 9 வறுமையை. 10 பூமியினின்றும் விலக்கி.

32. 1 தழும்பேறவும். 2 சுட்டு வருத்தும்படியும். 3 நினைவு; புதல்வற் பேறின்மையால் உள்ளத்துள்ளே உற, பட, கிடந்த நினைவு என்க. 4 நீங்க. 5 (உண்ணுதற்குப்) பொருந்திநின்ற. 6 எற்றதான 7 வேள்விக்குப் பயன்படுத்தி யெஞ்சியது. 8 (வசிட்டர்தரப்) பெற்று.

கன்று குடித்தும் வேள்விக்குப் பயன்படுத்தியும் எஞ்சிய பாலை வசிட்டர் தரப் பெற்று நுகர்வேன் என்றார்.

33. 1 பர்வத்திற்புகாது. 2 நீதியைப் பொருந்தி. 3 உண்மையான. 4 அறநெறியின் பகுதியான. 5 உடன்பட்டுச் சென்று. 6 வெற்றிபொருந்திய. 7 சுதக்கணை. 8 வேத விதி நிலைபெற்ற.

கன்றுண்டபின் நுகர்தல் புறநிலை புகாததும், யாகசேடம் வாங்குபு நுகர்தல் அறநிலைப் பாலதும் ஆயின.

34. [1]முறிபெற்ற நிறத்த தேனு வருளினை [2]முறையிற் போற்றி
[3]நெறிபெற்ற வாற்றை யெல்லா நெடுந்தவற் குரைத்த லோடும்
[4]குறிபெற்ற முறையிற் றீம்பால் கொள்கெனக் கொடுத்தா னுண்டு
[5]வெறிபெற்ற தாரி னானும் [6]விஞ்செழிற் சாலை மீண்டான்.

சிவப்பிரகாசரியற்றிய

**பிரபுலிங்க லீலை**

கைலைச்சிறப்பு

1. கண்பிசைந் தொரு[1]சே யின்னுங் [2]கலுழினுந் [3]தனைக் [4]கொடுப்பன்
மண்பிசைந் துண்ட மாயன் [5]மறுத்திட வலிய னல்லன்
நண்பிசைந் திறைவ னுக்கே நாமிட மாவ மென்று
[6]பண்பிசைந் [7]தலைதி ரண்ட பரிசினின் றிடுமக் குன்றம்.

2. ஒழுகுறு மருவி யீட்டம் ஒலியினால் நகுவெண் டிங்கள்
பழகுறு முடற்க ளங்காற் [1]பாகசா தனன்கூர்ங் கோட்டு
மழ[2]களி றுமிழ்ம தத்தால் மலர்மிசைக் கடவு [3]ளூர்தி
யழகுறு நடையா லன்றி யறிதரப் படாவக் குன்றில்.

---

34. [1] இளந்தளிர் போன்ற. [2] முறையாகத் துதித்து. [3] வழியில நடந்த வரலாறு முழுவதையும். [4] குறித்த முறைப்படியே. [5] நறுமணம். [6] மிக்க அழகு.

1. [1] உபமன்னிய முனிவர். [2] அழுதாலும். [3] (பாற்கடலாகிய) தன்னை. [4] சிவபெருமான்) கொடுத்துவிடுவான். [5] தடுக்க. [6] தன் குணத்தொடு பொருந்தி. [7] பாற்கடல்; ஆகுபெயர். உபமன்னிய முனிவர் குழவிப் பருவத்தே பசி பொறாது அழுதல்கண்டு இறைவன் அவர்க்குப் பாற்கடலை உண்பித்தனர் என்பது வரலாறு. "பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப் பாற்கட லீந்த பிரான்" என்ற திருப்பல்லாண்டு காண்க.

2. [1] இந்திரன். [2] ஐராவதம். [3] அன்னம். அருவி முதலிய நான்கும் வெண்ணிற முடையன ஆதலின் அவை ஒலி முதலியவற்றாலன்றிக் கைலைமலையில் அறியப் படாவென்பதாம். இது மறையாமையணி; பொதுக் குணத்தினால் ஒற்றுமை யுடைய இரண்டு பொருள்களுக்கு ஒரு காரணத்தால் வேற்றுமை தோன்றக் கூறுதல் இவ்வணியின் விதியாம்.

விளவல நாட்டுச் சிறப்பு

3. [1]பொறைக்க யிற்றிற் புகழையின் சொல்லெனும்
[2]விறற்க யிற்றின் விருந்தைக் குரவர்சொல்
[3]மறைக்க யிற்றின் மனத்தைத் திருவைநல்
அறக்க யிற்றின் [4]அசைப்பவ [5]ரெங்குமே.

4. வறிய னாவன் வடதிசை [1]மன்னவன்
அறிவி லாளன் [2]அனந்தனா மாவ[3]னோர்
சிறிய னாவன் சிலைமதன் பூம்[4]பொழில்
வெறியு லாவும் விளவலத் தெய்தினே.

வனவசை மாநகரச் சிறப்பு

5. தாழ்ந்தோ ருயர்வ ரென்றுமிக வுயர்ந்தோர் தாழ்வ ரென்று[1]மறஞ்
சூழ்ந்தோ ருரைக்கு முறைகண்டாம் மதில்சூழ் கிடந்த தொல்லகழி
[2]தாழ்ந்தோ ரனந்தன் மணிமுடிமேல்[3] நின்றன் றுயர்ந்து [4]தடவரையைச்
சூழ்ந்தோர் [5]வரையின் உதிப்பவன்றாட் கீழ்நின் றது போய்ச் சூழெயிலே.

---

3. [1] பொறுமையாகிய கயிற்றினால்; "பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்" என்றது காண்க. [2] வெற்றி. [3] மந்திரம். [4] கட்டுபவர். [5] யாண்டுமுள்ளனர். பொறுமையால் புகழையும், இன்சொல்லால் விருந்தையும், குரவர் அறிவுறுத்திய மறைமொழியால் உள்ளத்தையும், அறத்தாற் பொருளையும் அந்நாட்டு மக்கள் பிணிப்பரென்க.

4. [1] குபேரன். [2] ஆதிசேடன். [3] அழகு. [4] சோலையின் மணம். அந்நாட்டு மக்கள், குபேரன், அனந்தன், மன்மதன் என்பவரினும் சிறந்த செல்வமும் கல்வியும் அழகும் உடையாராவர் என்பதாம்.

"உருவின் மைந்தரில் வேனில்வேட் குடைகுந ரில்லை
பொருளி லார்களில் தனதனைப் பொருவிலா ரில்லை
தெருளின் மாக்களிற் சேடனிற் றாழ்குந ரில்லை
அருளி லார்களில் ஐந்தரு நிகர்க்கலா ரில்லை. (நைடதம்; நகர—68)

என்ற பாடலை ஒப்புநோக்குக.

5. [1] நீதி நூல்களை ஆய்ந்தவர். [2] கீழ்நோக்கிச் சென்று. [3] நின்றது. [4] மேருமலை. [5] உதயகிரியிற்றோன்றும் சூரியன்.

அகழி நாகருலகம்வரை ஆழ்ந்துள்ளதென்றும் மதில் சூரிய மண்டலம்வரை யுயர்ந்துள்ளதென்றும் கூறியவாறும். வேற்றுப் பொருள் வைப்பணி.

6. சொற்போர் புரிவர் [1]நான்மறை[2]யா றங்க முணர்ந்த
[3]தொழுகுலத்தோர்
விற்போர் புரிவர் நெடியசிலை யிராம னனைய விறல்வேந்தர்
[4]பொற்போர் புரிவர் பிறர்பொருளுந் [5]தமபோற்
பேணிப் புரிவணிகர்
நெற்போர் புரிவர் அந்நகரில் வேளாண்
குலத்து நெறியினரே.

7. உடுப்போர்க் குடுக்குந் துகில்களால் உண்போர்க்
குண்ணும் பொருள்களால்
தொடுப்போர்க் கெடுக்கு மலர்களால்
அணிவோர்க் கணியுஞ் சுடரிழையால்
அடுப்போர்க் கடுக்கு மணிகளால் குறைபா டுடைய
தன்றிதுதான்
கொடுப்போர்க் கிரப்பா ரில்லாத குறையொன்
றுளது கூறுங்கால்.

---

6. [1] இருக்கு முதலியன. [2] கற்பம். சந்தம், கணிதம், நிருத்தம், சிட்சை, வியாகரணம். [3] அந்தணர். [4] பொன் குவியல். [5] தம்முடைய பொருள்போலக் காத்து; "வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப், பிறவுந் தமபோற் செயின்" என்ற குறட் கருத்து வந்துளது.

7. அந்நகர், இரப்போர் இல்லாத குறையுடையதன்றி உடை உணவு முதலியவற்றாற் குறைபாடுடையதன்று என்பதாம்.

8. ஈச னளித்த வொருகோட்டி[1]யானைக் [2]கியாங்க ளிணையாயின்
[3]வாச வனைத்தாங் கீரிருகோட் டி[4]யானை யெம்மை
[5]மானுமெனும்
[6]பாச வுரற்கா லியானையொடு[7]பாண்டி லிழுக்கும் [8]பகடுயரில்
[9]தேசி னிரதப் பரி[10]சிறந்த வென்னும் பரிகள் தெருவகலா.

மோகினி தன் மகள் மாயையை வளர்த்தல்

9. மிடிய [1]ஞெருசெய் யாளனச்செய் விளையக் காக்குஞ்
செயல்போலப்
படியில் கல்வி விரும்பினேன் பாடம் போற்று மதுபோல
[2]ஒடிவில் செங்கோல் மனுவேந்தன் உலகம் புரக்கு
முறைபோலக்
[3]கொடிய நோன்பு செய்தீன்ற [4]கொடியை வளர்த்தாள்
மோகினியே.

---

8. [1] யானைமுகக் கடவுளுக்கு. [2] (இரண்டுகொம்புடைய) யாங்கள். [3] இந்திரனை. [4] ஐராவதம். [5] ஒக்குமென்று சொல்லுகின்ற. [6] கயிறு. [7] வண்டி. [8]எருமைக் கடாக்கள் (சூரியன் தேர்க் குதிரைகளினும்) உயர்ச்சியுறுமானால். [9] சூரியன் தேர்க்குதிரைகள். [10] எம்மினுஞ் சிறந்தனவாகும்.

ஒருகொம்பு யானை இருகொம்பு யானை நான்கு கொம்பு யானையெனக் கூறப்பட்ட மூன்றனுள் இந்நகர வீதியில் திரியும் இருகொம்பு யானைகள், ஒருகொம்பு யானையை யாங்கள் நிகர்ப்பேமாயின் நான்கு கொம்பு யானை எங்களை நிகர்க்கும். யாங்கள் அதனை ஒவ்வேமாயின் நான்குகொம்பு யானையும் எங்களை ஒவ்வாது என்று கூறுகின்றன. இவ்வாறே, வண்டியை இழுத்துச் செல்லும் எருமைக் கடாக்கள், சூரியன் தேர்க்குதிரைகள், ஒரு வேலையுமின்றி வீதியில் திரியும் குதிரைகள் எனப் பிற்பகுதியிலும் மூன்றுவகை கூறப்பட்டுள்ளன. அவற்றுள், இரண்டு சக்கரங்களையுடைய வண்டியை இழுத்துச் செல்லும் இரண்டு எருமைக்கடாக்கள், ஒற்றைச் சக்கரத்தையுடைய சூரியன் தேரையிழுக்கும் எழு குதிரைகளைக்காட்டினும் உயர்வெய்துமானால் அக்குதிரைகள் எம்மினுஞ் சிறந்தனவாகும். அக்கடாக்கள் அக்குதிரைகளினும் உயர்ச்சியுறுவாயின், அக்குதிரைகள் எம்மினும் சிறந்தனவாகா; ஒருவேலையுமின்றித் திரிகின்ற யாமே அவற்றினும் மேம்பாடுடையமாவேம் என்று தெருவில் திரியும் குதிரைகள் கூறுகின்றன.

இத்தகைய யானைகளும் குதிரைகளும் வேலையின்றித் தருக்கித் தெருவில் திரிகின்றன என அந்நரத்தின் செல்வமிகுதி கூறியவாறு.

9. [1] ஒரு வயலையுடையவன். [2] கெடுதலில்லாத. [3] (உடலை) வருத்துதற்கு ஏதுவான. [4] பூங்கொடிபோன்ற மாயையை. “வையக மனைத்தையும் வறிஞன் ஓம்புமோர், செய்யெனக் காத்தினி தாசு செய்கின்றான்” (கம்பராமா) என்ற செய்யுட் கருத்து இதன்கண் அமைந்துள்ளது.

மாயை வளர்தல்

10. [1]குழலும் யாழும் இனியவெனக் கூறு வண்ண மென்[2]கனிவாய்
[3]மழலை மொழிந்தும் உடற்கின்பம் மருவ வோடி
மேல்விழுந்தும்
[4]விழையு மமிழ்[5]தின் மிகவினிமை விளைய நுகருஞ்
சுவை[6]யடிசில்
செழிய சிறுகை யா[7]லளைந்துஞ் [8]செய்தாள் மோகம்
ஈன்றோரை.

மாயை பெதும்பைப்பருவமடைதல்

11. [1] அன்ன நடையும் [2]அன்னமிலா [3]ஐயர் நடையுந்
தளர்வெய்தக்
கன்னி நடக்கு நடைகற்றாள் கரும்பு கசக்கு மொழிபெற்றாள்
மன்னு மலர்வீழ் [4]சுரும்பனைய மைந்தர் பார்வைக்
குறிப்புணர்ந்தாள்
தன்னை [5]யரிய ளெனவறிந்து தானே மனத்திற் றருக்குற்றாள்.

12. இந்தக் [1]கன்னி [2]மதிமுழு[3]நோக் கெய்திச் செவ்வாய்
வலியடைந்து
சந்தச் [4]சிங்கந் தனையடுத்த தக்க[5]வரவின் வலிசார்ந்து
[6]முந்தைக் [7]கொடிமீ னத்தலைவன் முனிவ ராகும்
பகைவெல்லக்
கந்தப் [8]பகழி பல[9]வேழக் கருப்புச் சிலையிற் றொடுத்தனனால்.

---

10. [1] குழலிசையும் யாழின் இசையும். [2] கொவ்வைக்கனி. [3] எழுத்துவடிவம்பெறாத் தோற்றும் மென்சொல். [4] விரும்பும். [5] உறழ்பொருளது. [6] சோற்றை. [7] துழாவியும். [8] ஆசைவிளைத்தாள். "குழலினிது யாழினிது" "மக்கள் மெய்தீண்டல்" "அமிழ்தினும் ஆற்ற இனிதே" என்ற குறட்கருத்துக்கள் அமைந்திருத்தல் காண்க.

11. [1] பறவை. [2] சோறு. [3] முனிவரர் ஒழுக்கமும். [4] வண்டு. [5] (பிறமகளிரில்) சிறந்தவளென்று.

12. [1] மாயை. [2] சந்திரன்போன்ற முகம். [3] கட்பார்வை. [4] சிங்கத்தின் இடை போன்ற இடை. [5] பாம்பின் படத்தையொத்த அல்குல். [6] முதன்மை. [7] மீனக்கொடியையுடைய மன்மதன். [8] மலர்ப்பாணங்கள். [9] இருபெயரொட்டு.

கன்னி ஓரையிலுள்ள சந்திரனது முழுப்பார்வையும், செவ்வாயும் சிங்க ஓரையிலுள்ள இராகுவும் வலுப்பெற்றிருத்தலும் ஆகிய கோசாரபலம் பார்த்துப் போர்க்குச் செல்லும் அரசர் செய்தி மன்மதன் மேலேற்றிக் கூறப்பட்டது.

. அடைமொழி ஒப்புமையாற்றலால் அல்பொருட்செய்தி தோன்றப் புகழ் பொருட்செய்தியைச் சொல்லுதலால் இது சுருங்கச் சொல்லலணியாம்.

மாயைக்கு அணிகலம் பூட்டுதல்

13. [1]அடுத்து மாதவம் அழிமினென் றணங்கவேள் [2]தமக்கு
விடுத்த [3]வோலையைக் கண்கள்தம் மேற்பழி விளம்பிற்
கொடுத்த வேண்மிசை நிந்தைகூ றுத்தற்குவைத் திருத்தல்
[4]கடுத்து வாழ்தர வொருத்திபொன் [5]குழைகா தணிந்தாள்.

14. தன்னை [1]நிந்தைசெய் வெண்[2]ணகை மேற்பழி சார
மன்னி [3]யங்கது நிகரற வாழ்[4]மனை வாய்தன்
முன்னி றந்திடு வேனென [5]ஞான்றுகொள் முறைமை
யென்ன வெண்[6]மணி [7]மூக்கணி பொருத்திநின் றிட்டாள்.

15. [1]கன்னி யத்தம்வந் தினமணிக் கற்கட கத்தின்
மன்னி யுற்றதற் புதமென [3]வளைபல காக்க
வின்னு தற்கருங் கண்மட மாதுகை விளங்கப்
பொன்னி னற்கட கம்புனைந் தனளொரு பூவை.

16. ஆயு [1]மின்சுவை [2]தரச்செலுங் கையுட [3]னடுத்து
வாயி னெண்கவின் [4]காணிய [5]மருவுறு மாபோல்
மாயை தன்கையிற் பொற்கட கத்தின்முன் வனைந்தாள்
தூய செம்பவ ளங்களைக் கோத்தொரு தோள்கை.

---

13. [1](துறவிகளை) நெருங்கி. [2](கண்களாகிய) தங்களுக்கு அனுப்பிய. [3]திருமுகத்தை. [4]ஒத்து. [5]காதணி

14. [1]ஒப்பாகாதென்று பழிக்கின்ற. [2]பற்கள். [3]அப்பற்கள். [4]வீடாகிய வாயின் முன்னிடத்தே. [5]தூக்கிட்டுக்கொள்ளும். [6]முத்து [7]புல்லாக்கு. மூக்கில் புல்லாக்கிடுவது பல்லுக்குத் தோற்ற முத்தானது அதன்மேல் பழிசுமத்துதற்கு அதன் வீடாகிய வாயின்முன் ஞான்றுகொண்டதுபோலுமென்பதாம்.

15. [1]மாயையின் கரங்கள். [2]கடகத்தினுள்ளே நிலைபெற்றிருப்பது. [3]வளையல்கள். கன்னி ஓரைக்குரிய அத்தநாள் கற்கடக ஓரையில் நிலைபெற்றிருப்பது வியப்பு என்ற பொருளும் தோன்றுதல் காண்க.

16. [1]இனிய சுவையுள்ள உணவுப் பொருள்களை. [2]ஊட்ட. [3]கூடி. [4]பார்க்க. [5]சேர்ந்திருக்கு மாறுபோல. கைக்கடகத்தின்முன் பவளமணிதல் பண்டைய வழக்கு.

மாயையின் தோற்றப் பொலிவு

17. வீர வேள்வளை யாதசெங் கரும்பவன் வில்லின்
[1]நாரி மேலிடா மலர்[2]மறு விலாநகை மதியம்
காரு ருதமின் கடற்பிற வாதவின் னமுதம்
வேரி லாதபூங் கொடியென விளங்கினள் மாயை.

மாயையின் ஆய வெள்ளத்தைக்கண்டு ஆடவர் மயங்கல்

18. [1]இனத்தியல் பாமறி வென்ப துண்மையே
மனத்துயர் செயு[2]மயல் மாற்று [3]நீறுதான்
அனிச்சமெல் லடியினர் [4]நுதல டுத்தலும்
[5]பனித்துடல் வெதும்பு[6]மால் படுத்த லாலென்பார்.

19. [1]இக்குழு மகளிருள் யார்வ னப்பினல்
[2]மிக்கவ ளெனத்[3]தமை வினவி னுரெதிர்
[4]முக்கனி களுட்சுவை முதிர்ச்சி பெற்றுள
தெக்கனி யதனைநீர் இயம்பு வீரென்பார்.

மாயை, சந்திரனைப் பழித்தல்

20. [1]தாய்வா யடைந்து மிகுந்[2]தலையை மோதி மோதிச்
சலித்தலறக்
[3]காய்வாய் நிலவே [4]யுடன்பிறந்தா ளிருந்து வாழுங்
கடி[5]மனையை
நீவா னெழுந்து வந்தழிப்பா யென்று லந்தோ [5]நிலையின்றித்
தேய்வாய் நின்னே டுறைவில்லா என்னை யென்ன செய்யாயே.

---

17. [1] நாண். [2] களங்கம். இது விலக்கு உருவகம்.

18. [1] அறிவு தான் சேர்ந்த இனத்தின் தன்மைத்தாம். [2] காம மயக்கத்தை. [3] திருநீறு. [4] நெற்றி. [5] வெயர்த்து; நடுங்கியெனலுமாம். [6] காமமயக்கத்தை விளைத்தலால். நீறு மால்படுத்தலால் (எம்) உடல் பனித்து வெதும்பும் என்க.

19. [1] இக்கூட்டத்திலுள்ள. [2] சிறந்தவள். [3] தம்மைக் கேட்டவர்க்கு. [4] மா, பலா, வாழை.

20. [1] தாயிடம் (கடல்) தோன்றி. [2] (அத்தாய்) தலையை அடித்து அடித்துச் சலிப்புற்றுக் கதறும்படி. [3] வெகுள்வாய் எனவும். (கடல்நீர்) தாவிக் கரையை யடைந்து மிகுந்த அலைகளை மோதிமோதிச் சலசலத்து ஒலிக்கும்படி எரிப்பாய் எனவும் இருபொருள் கொள்க. [4] திருமகள். [5] தாமரைப்பூ. [6] நிலைத்தலின்றித் தேய்ந்துபோவாய்.

சந்திரன் உதிக்குங்கால் கடல்நீர் பேரொலி செய்தலும் தாமரை மலர் குவிதலும் இயல்பு. பெற்றாட்கும் உடன்பிறந்தாட்கும் துன்பம் விளைக்கும் நீ, உன்னோடு சிறிதுந் தொடர்பில்லாத என்னை என்னதான் செய்யமாட்டாய் என்று இரங்கிக் கூறியது.

21. [1]அங்க மதில்நஞ் [2]சிருத்திஞேன் அங்க மல்லா
அவிர்சடைமேல்
தங்கு நினைவைத் திட்டதுநின் கொடுமை கருதித்
தானன்ருே
பொங்கு மமுத கலையென்ன நின்னைப்[3]புகறல் வெண்டிங்காள்
இங்கு மனிதர் காராட்டை வெள்ளா டென்ப தேய்க்குமால்.

தென்றலைப் பழித்தல்

22. கொல்லா நோன்பு முனி[1]மலையில் தோன்றி யென்னைக்
கொல்கின்ருய்
பொல்லா [2]மந்த மாருதமே யென்ஞே கருணை பூண்டிலாய்
சொல்லாய் திருப்பாற் கடலினிடைத் தோன்றுங் [3]கடுவிற்
றன்குணமே
யல்லா லமுத குணமுண்டோ நின்னை வெறுப்ப தறிவன்றே.

குயிலைப் பழித்தல்

23. [1]உயிர்த்த பொழுதே நின்குரல்கே ளாமுன் ஞேடிற்
[2]றீன்றதாய்
நயத்தின் [3]வளர்த்த தாய்குரல்கேட் டலுமே நடுங்கத்
[4]துரந்ததால்
[5]பயத்த மலர்ப்பூங் காவகத்தி லிருந்து பல்காற் கூவிஞற்
[6]செயிர்த்து நின்னைக் குயிலேநான் வெறுத்தல் செப்ப
வேண்டுமோ.

---

21. [1] உடம்பில்; கழுத்தில். [2] சிவபெருமான். [3] சொல்லுதல். நஞ்சினுங் கொடிய நின்னை அமுதகலை என்றல், காராட்டை வெள்ளாடென வழங்கும் மங்கலங் கருதிய தகுதி வழக்குப்போலும் என்பதாம்.

22. [1] பொதியில் மலை. [2] இளந் தென்றற்காற்றே [3] நஞ்சில். பிறப்பிடத்தாலும் இனத்தாலும் ஒருவர் இயற்கை மாருதென்பதாம். "பிறந்ததெங்கள் பிரான் மலயத்திடை, சிறந்தணைந்தது தெய்வநீர் நாட்டினிற், புறம்பணைத்தடம் பொங்கழல் வீசிட, மறம்பயின்ற தெங்கோ தமிழ்மாருதம்" என்னும் சேக்கிழார் திருவாக்கு இங்கு நினைக்கத்தக்கது.

23. [1] முட்டையாய் ஈன்ற அப்பொழுதே. [2] குயில். [3] காகம். [4] துரத்திவிட்டது. [5] பயனைத் தருகின்ற. [6] வெகுண்டு. "வருந்தி ஈன்ருள் மறந்தொழிந்தாள் வளர்த்தாள் சொற்கேட் டில்கடிந்தாள்" என்னும் சிந்தாமணிச் செய்யுளை ஈண்டு நினைக்க.

மத்தளிகனுய்வந்த அல்லமன்பால் மாயை காதல்கோண்டமை யறிந்து மோகினி கடிந்துரைத்தல்.

24. மானமு முயிரு மொருங்குநில் லாத வழியுயிர் தன்னையே விடுத்துத்
தானுறு பொருளாய் மானமே கொளுமுன் [1]தந்தைதன் செவிப்படி [2]லென்னும்
[3]பானுவு மதியு மியங்குறு மளவும் பழியிது வழிவழி வராதோ
யானுனை வருந்தி யீன்றது மிதற்கோ என்செய்தாய் பாவியென்[4]றிசைப்பாள்.

25. [1]குரவர்தா மிசைந்து கொடுத்தில ராயிற் குமரவே ளனையவ ரெனினும்
[2]அருவரா நிற்பர் தந்தைதாய் தங்கள் ஆணையி னொழுகுகன் னியர்தாம்
[3]உருவிலா ரெனினுங் குரவருண் மகிழ்வுற் [4]றுதவுறி னனையவர் தம்மைப்
பரவுவான் கடவு ளாகவே நினைந்து [5]பண்பொடும் பயிலுவ ரன்றே.

---

24. [1] மமகாரன் என்னும் அரசன். [2] என்ன விளையும். [3] சூரியன். [4] சொல்லுவாள். "மயிர் நீப்பின் வாழாக் கவரிமா வன்னார், உயிர் நீப்பர் மானம்வரின்" என்றார் தெய்வப் புலவர்.

25. [1] தந்தைதாயர். [2] அருவருத்து. [3] (மணமகனுவார்) வடிவழகில்லாராயினும். [4] (அவர்க்கு) மணஞ்செய்து கொடுத்தால். [5] அவர் குணத்தோடும் பொருந்தப் பழகுவர்.

26. மணம்புரி வதன்முன் குரவரா ணையினு மணவினை முற்றிய பின்னர்
இணங்குற வருள்செய்[1]கொழுநனா ணையினு மிருப்பர்[2]தம் வயமில ரென்றும்
அணங்கனை யவர்தா மென்பதை யறிந்தும் [3]அடாதவிச் [4]செயலினைச் செய்தாய்
[5]பிணங்குவா ரிலையென் றிருந்தனை போலும் பேதைநீ யென்றுதாய் முனிந்தாள்.

27. [1]பீடுறு மானிடப் பிறப்பு[2]வாய்த்துநல்
ஏடவிழ் மலரினால் இறையைப் பூசியார்
[3]பாடமை நாளெலாம் [4]பாழ்க்கி றைப்பரால்
மூடரை யெண்ணுங்கால் முந்தி நிற்பரே.

28. [1]காம்படு [2]தோளிமுக் கண்ணன் றாண்மலர்
தேம்படு மலர்கொடு பூசை செய்பவர்
[3]பாம்பொடு பழகிலாப் பரம னென்றவர்
பூம்பத மனமகிழ்ந் துலகம் போற்றுமே.

29. [1]நோய்ப்பிறப் பிலாதகண் ணுதலைப்[2]பூசியா
[3]வாய்ப்புறத் தலைக்கொரு[4]மதிபெறா [5]நரன்
ஆய்ப்பிறப் புற்றதின் அறிஞ ரெள்ளுறு
நாய்ப்பிறப் [6]பாற்றவு [7]நன்று நன்றரோ.

---

26. [1] கணவன். [2] எந்நாளும் தம் பொறுப்பு இல்லாதவராவர். [3] (குடிப்பிறப்பு முதலிய தகுதிக்கு) ஏலாத. [4] மத்தளக்காரனாய்வந்த அல்லமன்பாற் காதல் கொள்ளுதல். [5] சண்டையிடுவார்.

விமலை சிவபூசையின் பெருமையை மாயைக்குக் கூறுதல்

27. [1] பெருமை. [2] கிடைக்கப்பெற்றும். [3] உண்டாதல்; பெருமையுமாம். [4] பாழ் நிலத்திற்கு நீர் இறைப்பவர்போன்று வீணாகக் கழித்தவராவர்.

28. [1] மூங்கில். [2] அண்மை விளி. [3] பாம்பணிகனோடு பழகாமை இவர்க்கு வேறுபாடு.

29. [1] துன்பத்தைச் செய்யும் பிறவி. [2] பூசித்து. [3] தலைக்கு ஒருமதி வாய்ப்புறப் பெறா எனக்கூட்டுக. [4] சந்திரன், சிவசாரூப்பியம் பெறாத என்பது பொருள். [5] மனிதனாக. [6] மிகவும். [7] அடுக்குத்தொடர் மக்கட் பிறப்பின் இழிவை யுணர்த்திற்று.

சிவப்பிரகாசர் இயற்றிய

## சீகாளத்திப்புராணம்

### நக்கீரச்சருக்கம்

1. [1]அமுதுறழ் தமிழொண் முத்தம் [2]ஐயசந் தனமெல் வாசங்
கமழ்குளிர் தென்ற லென்று[3]கரையரும் பொருள்[4]ப டாமல்
[5]இமிழ்[6]கடல் வரைப்பெ லாந்தோன் [7]றெண்பொருள் படுநா [8]டெள்ளித்
[9]தமிழ்முதல் பிறக்கு நாடாய்த் [10]தயங்குமாற் பாண்டி நாடு.

2. [1]தன்கால் சுமக்கும் [2]உறுப்பிலான் தன்[3]னே வலரால் [4]நிலைகலங்கிப்
[5]பொன்கால் [6]திதலை முலை[7]மடவார்ப் பொருத்து [8]துணையா மாநிலத்து
[9]வன்கால் தரியா துழல்வாரைத் தலையாற் சுமக்கு [10]மலையைநகு
மின்கார் மழைதோய்[11] முடி[12]மலய விலங்க லுடைத்தத் திருநாடு.

---

1. [1] அமுதத்தையொத்த. [2] அழகிய. [3] சொல்லப்படுகின்ற. [4] உண்டாகாமல். [5] ஒலிக்கின்ற. [6] கடல்சூழ்ந்த உலகம் எல்லாவற்றிலும். [7] எளிய பொருள்கள் உண்டாகின்ற. [8] இகழ்ந்து. [9] தமிழ் முதலிய பொருள்கள். [10] விளங்கும். ‘ நெல்லும் நீரும் எல்லார்க்கு மெளியவென, வரைய சாந்தமும் திரைய முத்தமும், இமிழ்குரல் முரசம் மூன்றுட னாளுந், தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே ” என்றார் பிறரும்.

2. [1] தன்னிடத்துப் பிறந்த தென்றற் காற்றினால். [2] அங்கமில்லாத மன்மதன்; இவனுக்குத் தேர்தென்றல். [3] அம்பாகிய மலர்களால். [4] தம் நிலை கலங்கிய சுந்தரரை; வினையாலணையும் பெயர். [5] பொன் ஒளியை வீசுகின்ற. [6] தேமல். [7] பரவையார் சங்கிலியாரென்னு மிருவரிடத்தும். [8] தூதாக. [9] வலிய திருவடிகள் தரிக்காமல் உழன்ற சிவபெருமானை. [10] கைலையை. [11] சிகரம். [12] பொதியின் மலை.

3. வானோ ரமுதஞ் சாபத்தால் மண்ணிற்[1]புனலா யொழுகியது
தானோ நிலத்தி னியல்பாற்றன்[2]தன்மை திரியா வரம்பெற்ற
[3]மானீ ரோமற் றிதுவென்ன[4] மதுரங் குடிகொண்
டெஞ்ஞான்றும்
[5]ஆறு தொழுகும் [6]பொருநையாற் றரசு முடைத்தத் திருநாடு.

4. இன்ன தன்மைய வளங்கெழு பாண்டிநா டென்னும்
[1]அன்ன மன்னவள் திரு[2]முக மண்டல மாகி
[3]மன்னும் விண்ணவர் பொன்னக ரத்தினை[4]மறுக்கும்
பொன்னி னன்மணி மாமதில் மதுரையம் புரமே.

5. [1]இனைய வாம்பெரு வளம்பல சிறந்தவவ் [2]வினையில்
[3]அனக மாநகர் வெண்குடைச் செய்யகோ லரசன்
புனித [4]வானவன் [5]தலைக்கொளத் திங்களம் புத்தேள்
தனது [6]தொல்குல விளக்கமோர் [7]வழுதிபைந் தாரான்.

6. இத்த கைப்[1]பெரும் பெயர்முடி வேந்தர்கோன் இலங்கும்
[2]நித்தி லத்தனிக் கவிகையால் நிலமெலா [3]நிழற்றி
[4]மெய்த்த [5]செய்யகோல் தடையற [6]நடாய்த்திசை மேவும்
மத்த வாரண முகங்களிற் [7]கயற்பொறி வரைந்து.

---

3. [1] நீர் வடிவாய். [2] நிறம் சுவை முதலிய குணங்கள் மாறுபடாத. [3] பெருமை பொருந்திய நீரோ; மேகம் பொழிந்த நீரோ எனலும் ஆம். [4] இனிமை. [5] நீங்காமல். [6] பொருநை யென்னும் சிறந்த யாற்றையும்.

4. [1] அன்னம்போன்றவளான பெண்ணுக்கு. [2] முகம்போன்ற தன்மையதாய். [3] நிலைபெறும்; முற்று. [4] தனக்கு ஒப்பாகாதென்று தடுக்கும். புரம் மண்டல மாகி மன்னும் என்க. "அத்திருத்தகு நாட்டினை யண்டர்நா, டொத்திருக்கு மென்றுரை யொக்குமோ, எத்திறத்தினும் எழுலகும் புகழ், முத்துமுத் தமிழுந் தந்து முற்றுமோ" என்றார் கம்பர்.

5. [1] இத்தன்மையவாகிய. [2] ஒப்பில்லாத. [3] குற்றமற்ற மதுரைமா நகரில். [4] சிவ பெருமான். [5] தலையிற் சூடிய, [6] பழமையான குலத்துக்கு விளக்குப் போன்றவன். [7] பாண்டியன்.

6. [1] பெரும் புகழ். [2] ஒப்பற்ற முத்துக் குடையால். [3] நிழல்செய்து. [4] உண்மை யான. [5] செங்கோலை. [6] செலுத்தி. [7] மீன் அடையாளத்தை யெழுதி.

7. [1]வெளிறில் [2]நுண்புல மந்திரிக் [3]கிளையொடு மேவி
யளவில் [4]போகந்துய்த் தினிதுவீற் றிருந்தனன் அந்நாள்
[5]நெளிதி ரைக்கடல் உலகெலாந் தம்புகழ் நிறீஇய
[6]தளர்வில் கேள்விநக் கீரனார் முதலிய [7]சான்றோர்.

8. அன்பர் [1]எண்ணிய [2]எண்ணியாங் [3]கந்நிலை யளிக்கும்
[4]பின்பு தாழ்சடைப் [5]பெருந்தகை யருளினாற் பெற்ற
[6]பொன்பி றங்கிய [7]தெய்வதப் பலகைதம் [8]புலமை
வன்ப றிந்[9]திடந் தரவதி லிருந்துள மகிழ்ந்து.

9. [1]யாக்கை பெற்றவர்க் குறுதியாம் அறம்பொரு ளின்பம்
[2]போக்கில் நுண்பொருள் [3]அரிலறப் புதுமொழி புணர்த்துத்
[4]தூக்கி னம்பல பலபுனைந் தெறிதிரை சுருட்டும்
[5]மாக்க ருங்கட லுலகிடைத் தமிழினை வளர்த்தே.

---

7. 1 அறியாமையில்லாத. 2 நுண்ணிய நூலறிவு. 3 சுற்றத்துடன். 4 இன்பம். 5 வளைவு; புரளுதலுமாம். 6 வறுமையானாதல் அறிவின்மையானாதல் இடுக்கட்பட்டு மனந்தளர்வுழி அதனைக் கேள்வியானாய அறிவு நீக்குமாகலின் இங்ஙனங் கூறினார். 7 பெரியோர்.

8. 1 நினைத்த பொருள்களை. 2 நினைத்தபடியே. 3 அப்பொழுதே. 4 முதுகில். 5 சோமசுந்தரர். 6 பொன்மயமாய் விளங்கிய. 7 தெய்வத்தன்மை வாய்ந்த சங்கப் பலகை. 8 கல்வியறிவின் வன்மையைத் தெரிந்து. 9 இடங்கொடுக்க.
நக்கீரர் முதலிய கடைச்சங்கப் புலவர்கள் நாற்பத்தெண்மரும் ஆலவாய்ப் பெருமானடிகளையடைந்து, எங்கள்பால் பலரும்வந்து வீண்வாதம் செய்கின்றனர். அங்ஙனம் செய்யாமைப்பொருட்டு அவரவர் புலமையை அளவிடும் கருவியாகச் சங்கப் பலகையொன்று தந்தருள்க வெனவேண்ட, இறைவர் புலவருருக் கொண்டெழுந்தருளி, நாற்கோண வடிவாய் ஒருமுழ அளவுள்ள பலகையொன்றனைத் தந்து, இது நம்போல்வார் யாவர்க்கும் முழம் வளர்ந்து இடங்கொடுக்குமென்று கட்டளையிட்டனர் என்பர்.

9. 1 மக்கட்கு. 2 வீடு; யாவரும் அடையத்தகுந்த இடம் என்பது பொருள். 3 குற்றமற. 4 பாவும் இனங்களும். 5 பெரிய.

10. வெள்ளைத் தாமரைச் [1]செல்விதன் பெண்மையை விடுத்திட்
[2]டெள்ளற் பாடிலா னுரு[3]வெடுத் தெனமுடி யேந்தும்
[4]பிள்ளைப் பான்மதி யான்[5]தமி ழொருவனாப் பெருஞ்சீர்
வள்ளற் [6]பாண்டியற் காருயிர்த் துணைவராய் வாழ்ந்தார்.

11. இன்ன வாறவர் வாழுநாள் ஓர்பகல் [1]எரிகால்
மின்னு வாட்படைச் [2]சேல்வல னுயர்த்ததார் வேந்தன்
பொன்னின் மாடத்தின் [3]மேனிலைக் [4]குழையடர் பூங்கண்
அன்னம் [5]அன்னவ ளோடினி தேறினன் அமர்ந்தான்.

12. ஆய காலையின் [1]மந்தமா ருதத்தொடும் [2]அரிக்கண்
வேயை வென்றதோள் [3]அணங்கின்வார் குழன்மணம் வீசச்
[4]சேய னுன்குவி முகிழ்[5]நகிற் செய்யவாய்த் தேவி
[6]மாயி ருங்குழ லின்மண மாமென மதித்தான்.

13. [1]மதித்த காவல னதுமனங் கொண்டுதன் மனத்தில்
[2]ததைத்த நுண்பொருள் [3]தரவொரு செய்யுள்செய் புலவர்
இதைக்கொள் கென்றுபொன் னாயிரம் [4]ஒருகிழி யியற்றி
அதைப்பொற் [5]சங்கமண் டபத்தின்முற் [6]றூக்கின னன்றே.

14. புலவர் யாவருந் தாங்கண்ட வாறுபாப் புனைந்து
[1]தலைவன் முன்புபோய்ச் சாற்றிய வனைத்தையுந் தண்டார்
[2]மலைகொள் தோளினன் மறுத்தலின் வறிதகன் றனரவ்
விலகு பொற்கிழி யிருந்ததங் கறுப்பவ ரின்றி.

---

10. [1] கலைமகள். [2] இகழப்படுதல் இல்லாத. [3] எடுத்துவந்தாற்போல. [4] வெள்ளிய இளம்பிறையையுடைய இறைவன். [5] (இறையனார் என்னும் பெயருடைய) ஒரு தமிழ்ப் புலவராக (தம்முள் இருக்கப்பெற்று). [6] உக்கிய சூடாமணி யென்னும் பாண்டியனுக்கு.

11. [1] நெருப்பையுமிழ்கின்ற. [2] மீனக்கொடியை வலப்பக்கத்து உயர்த்துப் பிடித்த. [3] மேல்தளத்தில். [4] காதணி. [5] பட்டத்துத் தேவி.

12. [1] இளந்தென்றலோடும். [2] செவ்வரி. [3] தேவியின்; மாருதத்தொடு சேர்ந்து மணம் வீச என்க. [4] முருகக்கடவுளையொத்த பாண்டியன். [5] கொங்கை. [6] கரியபெரிய; மிகக்கரிய எனலுமாம்.

13. [1] (அங்ஙனம்) கருதிய. [2] பொருந்திய. [3] வெளிப்பட. [4] ஒரு முடிப்பாகக் கட்டி. [5] தமிழ்ச்சங்க மண்டபத்தின்முன். [6] தொங்கவிட்டான்.

14. [1] பாண்டியன். [2] மலையையொத்த.

15. [1]காலம் அங்கதில் [2]உரோணியிற் [3]கரியவன் புகுத
[4]ஆல வெவ்வர [5]வடுத்தவீ ருவாவினும் அழன்று
கோல வெஞ்சுடர் தண்சுட ரிரண்டும்வாய்க் கொள்ள
[6]ஞால மைந்தனும் வெள்ளியும் [7]இகல்பட நடந்தார்.

16. [1]சிலர்பி ழைத்தவவ்[2]வற்கடத் [3]திறையையர்ச் சிக்குந்
தலைமை பெற்றவன் றருமியென் பவனுடல் தளர்ந்திங்
[4]கிலையு யிர்க்கரண் இனிநடந் தெத்திசை யேனும்
[5]மலிவி லைத்துநா டெய்துவம் எனமனம் [6]வலித்தான்.

17. கோயில் சென்றடைந் [1]தருட்பெருங் கடலினைக் குறுகித்
[2]தாயில் அன்புடை யாயிவ ணுறிலினிச் சாவேன்
றேயம் [3]உய்வதற் கேற்றது [4]புகுந்துறீ இச் செழுமை
யாய பின்பிவண் அடைகுவ லெனத்தொழு தழுதான்.

---

15. [1] அக்காலத்தில். [2] உரோகணி நாளில். [3] சனி. [4] நஞ்சையுடைய கொடிய இராகு கேது என்னும் பாம்புகள். [5] தொடர்ந்துவந்த அமாவாசை பூரணை யென்னும் இரண்டு உவா நாட்களிலும். [6] செவ்வாயும். [7] மாறுக; செவ்வாய் முன்னும் சுக்கிரன் பின்னுமாக.

அருக்கனையுஞ் சோமனையும் ஐம்மூன்று நாளிற், பெருக்கவராத்தீண்டிற் பேசுங் கால்—செருக்களத்தில், மன்னர் மடிவார் மடியாரே யாமாகில், அன்ன மரிதாய்விடும்".

'காய்சின வெய்யோன் சேயோன் முன்செலக் கதிர்கால் வெள்ளித்
தேசிகன் பின்பு சென்று நடக்குமிச் செயலால் முந்நீர்த்
தூசின வுலகிற் பன்னீ ராண்டு வான்சுருங்கும்" என்பன ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கன.

16. [1] (பலர் மடிந்து) சிலர்மாத்திரம் உயிருடனிருந்த. [2] பஞ்சகாலத்தில். [3] சோமசுந்தரக்கடவுளை. [4] உயிர்க்கு ஒரு பாதுகாப்பும் இல்லை. [5] குறைந்த விலையை யுடையதான; செழித்த. [6] துணிந்தான்.

17. [1] சோமசுந்தரக்கடவுளை. [2] தாயினும் சிறந்த. [3] உயிர்வாழ்தற்கு ஏற்றதாகிய. [4] போயிருந்து. உய்வதற்கேற்றதேயம் புகுந்துறீஇ எனக் கூட்டுக.

18. குழவியந் திங்கள் வேணிக் [1]குரிசில்மற் றதனைக் கேளா
அழுதகங் [2]குழையல் வாழி யன்ப[3]வொன் றறைவல் [4]கேட்டி
வழுதி தூக் கின[5]னோர் பாத்தன் மனங்கொள வுரைத்தோர்க்
கென்று
[6]கிழியதா யிரம்பொன் சங்கக் கிளர்மணி மண்ட பத்தே.

19. [1]அங்கதை [2]யிப்பா வேந்தற் [3]கறைந்தனை பெறுதி யென்று
[4]கொங்குதேர் வாழ்க்கை யென்னுங் [5]கோதில்தூக்
கீந்து விட்டான்
பொங்கிய [6]களிப்பி னானும் போய்த்[7]தொடர் பமுதந் தன்னைத்
திங்கள்வெண் குடையி னான்றன் [8]செவிப்புலத்
தூற்றி னானால்.

20. மற்றது கேட்டுத் [1]திங்கள் மருகன்தான் நினைந்த வண்ணஞ்
[2]சொற்றலின் [3]இனிது வந்து தொழுசங்கத் [7]தவர்பாற்
பேர்யிப்
[4]பொற்றபாட் [5]டிசைவி யென்றான் [6]பொருக்கெனத்
தருமி சென்று

---

18. [1] இறைவன். [2] வருந்தாதே. [3] ஒருபாயம் சொல்லுவேன். [4] கேட்பாய். [5] ஒரு செய்யுள். [6] முடிப்பை.
வழுதி, தன்மனங்கொள ஓர் பா உரைத்தோர்க்கென்று ஆயிரம்பொன் கிழியது மணிகிளர் சங்கமண்டபத்துத் தூக்கினன் எனக் கூட்டுக.

19. [1] அப்பொன் முடிப்பை. [2] இச்செய்யுளை. [3] சொல்லி; வேந்தற்கு இப் பா அறைந்தனை அங்கதைப் பெறுதி என்க. [4] கொங்குதேர் வாழ்க்கையென்று தொடங்கும். [5] குற்றமற்ற பாடலை. [6] தருமியும். [7] செய்யுளாகிய அமுதத்தை. [8] காதுகளினிடத்து.

அப்பாடல் வருமாறு

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோநீ யறியும் பூவே."

20. [1] சந்திரகுலத்தோன்றலான பாண்டியன். [2] சொல்லியிருத்தலால். [3] இனிதாக மகிழ்ந்து. [4] அழகிய; பொன் என்பதனடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். [5] ஏற்றுக்கொள்ளச்செய். [6] விரைவாக. [7] அப்புலவர்கள்.

கற்றவ ரவைமுன் சொன்னான் [7]கவிகள்கேட் டலுமு வந்தார்.

21\. ஆங்கவர் தம்முட் [1]கீரன் [2]அரும்பெறற் கல்விச் செல்வத்
தோங்கிய [3]தருக்கி னாலிவ் வுரைத்தபாக் குற்ற மென்றான்
தாங்கிய வுவகை [4]சிந்தித் தருமிதான் [5]துனைவிற் போந்து
தேங்கமழ் [6]கடுக்கை வேணிச் செல்வனோ டிதனைச்
சொன்னான்.

22\. கேட்டலும் அங்க யற்கட் [1]கிளியுறழ் கிளவி பங்கன்
[2]பாட்டியற் புலவ னாகிப் பாவலர் தம்பாற் போயெங்
[3]கோட்டமில் கவிக்குக் குற்றங் கூறின ரியாவ ரென்றான்
[4]நாட்டிய புகழ்நக் கீரன் நானெனத் தருக்கிச் சொன்னான்.

23\. சொல்லலும் குற்றம் யாது சொல்லென நெடுங்க ணல்லார்
[1]சில்லிருங் குழற்கு நாற்றஞ் [2]செயற்கையன் [3]றியற்கை
யுண்டோ
இல்லது கூற லால்மற் றிதுகுற்ற மென்றான் [4]அண்ணல்
[5]மல்லல்விண் மகளிர் [6]கூந்தல் மணமியல் பன்றோ
வென்றான்.

24\. என்றலும் அரம்பை யர்க்கும் இருங்குழல் நறிய நாற்றம்
[1]இன்றென வுரைத்தா னையன் இறைவியெண் ணுலக மேத்துங்
[2]குன்றிறை பயந்த [3]செல்வி கூந்தல்[4]எற் றென்றான் கீரன்
தன்றனித் தருக்கா லம்மை தனதுகூந் தலு[5]மற் றென்றான்.

---

21\. [1] நக்கீரன். [2] பெறுதற்கரிய. [3] செருக்கினால். [4] இழந்து. [5] விரைவாகவந்து. [6] கொன்றை மாலையணிந்த சடையினையுடைய.

22\. [1] கிளிமொழியையொத்த சொற்களையுடைய உமாதேவியாரை. [2] பாடுந்தன்மை வாய்ந்த ஒரு புலவனுருக்கொண்டு. [3] குற்றமில்லாத. [4] நிலை நிறுத்திய.

23\. [1] பொன் வட்டத்தகட்டை யணிந்த கரிய கூந்தலுக்கு. [2] செயற்கையால் அல்லாமல். [3] இயற்கையாக உளதோ. [4] இறைவன். [5] வளம்பொருந்திய. [6] கூந்தலுக்கு மணம்.

24\. [1] (இயற்கையாக) இல்லை. [2] மலையரசன் பெற்ற. [3] ஞானப் பூங்கோதையின். [4] எத்தன்மைத்து. [5] அத்தன்மைத்து.

25. [1]ஏற்றினன் நெற்றிக் கண்ணும் [2]எரிமருள் சடையுங் காட்ட
[3]மாற்றரு [4]மருட்சி யான்[5]கண்[6]வடிவெலாங் காட்டி னாலும்
சாற்றிய செய்யுள் குற்றம் சடைகொண்டு[7]வெருட்டல்
வேண்டா
[8]தோற்றிலன் இதனுக் கென்றான்[9] தொலைவிலான் வெகுண்டு
சொல்வான்.

26. எம்மொடு[1]முரணி வான்றோ யிமயமால் வரைப்[2]பூங்
கொம்பின்
[3]மைம்மலி மறைசொல் லானு[4]மணங்கமழ் குழல்ப ழித்த
செம்மைகொ ளறிவி லாய்நீ தீர்ப்பருங் குட்ட நோய்கொண்
[5]டிம்மையி லலைக வென்றா [6]னிறப்பநக் கீரன் அஞ்சி.

27. [1]முழுமெயும் பனித்தி ரங்கி [2]முருகலர் கமலம் வென்ற
[3]கழலடி வீழ்ந்தி றைஞ்சிக் கருணையுங் கடலே யெந்தாய்
இழிபுடை [4]நாயி னன்னே னிலங்கறி விலாது செய்த
பிழைபொறுத் தருளிச்[5]சாபப் பிணிகெட வருள்வா
யென்றான்.

28. என்றலுங் கருணை வள்ளல் [1]எரிசினந் தணிந்து [2]கீர
சென்றுநீ கயிலை காணிற் றீருமக் கொடுநோ யென்று
[3]குன்றுறழ் புரிசை விண்டோய் கோயிலிற்
புகுந்தொ ளித்தான்
தென்றலம் பொதிய வெற்பிற் [4]றென்னர்கோ னதிச யித்தான்.

---

25. [1] இடபவாகனத்தையுடைய இறைவனாகிய புலவர். [2] நெருப்பையொத்த. [3] நீக்குதற்கரிய. [4] மயங்கிய அறிவையுடைய கீரன். [5] கண்ணை. [6](நெற்றியில் மட்டுமன்றி இந்திரனைப்போல) உடம்பெல்லாங் காட்டினாலும். [7] அச்சுறுத்தல் வேண்டியதில்லை. [8] என் கொள்கையை விடுவேனல்லேன். [9] அழிவில்லாத இறைவன்.

26. [1] மாறுபட்டு. [2] பூங்கொம்புபோன்ற பார்வதிதேவியின். [3] கருநிறம். [4] இயற்கை மணங்கமழ்கின்ற. [5] இப்பிறப்பில் [6] மிகவும்.

27. [1] உடல் முழுதும் நடுங்கி. [2] மணம். [3] வீரக் கழல் அணிந்த திருவடிகளில். [4] நாயினையொத்த கடையனாகிய யான். [5] சாபநோய்.

28. [1] எரிகின்ற வெகுளி. [2] கீரனே. [3] மலையையொத்த மதில்சூழ்ந்த, [4] தென்னாட்டவர்க்கு அரசனாகிய பாண்டியன்.

29\. பொற்குவை தருமி யேற்றுப் பொலிந்தினி திருந்தான் வெய்ய
[1]வற்கடந் தீர வெங்கு மழைவளஞ் சுரந்த திப்பாற்
[2]சிற்குணன் தந்த[3]சாபத் தீப்பிணி யுடலம் போர்ப்ப
[4]நற்கவி னிகந்து கீர நாவலன் சிந்தை செய்வான்.

30\. [1]விரனிரை யழுகி நைந்து வீழ்ந்து[2]கால் குறையா முன்னம்
இருகையும் விரல்கு றைந்திட் டெரிபுகு [3]துடிப்பொவ் வாமுன்
உருவினுண் புழுக்கள் சோர வொழுகுசீ நாறச்[4]சேணில்
வருதல்கண் டவ[5]ரு மிழ்ந்து வழிவில கினர்செல் லாமுன்.

31\. பலப்பல நா[1]டிறந்து படரொளிக் கயிலை யென்னும்
[2]உலப்பில்குன் றெய்தி யிந்நோ யொழிக்குவ மெனத்து ணிந்தான்
விலக்கரு நண்பி னோரை [3]விட் டக றற்கு நெஞ்சங்
கலக்கமுற் றழுதி ரங்கி[4]கரையில்[5]பே ரஞருள் ஆழ்ந்தான்.

32\. [1]தடையில்பே ரறிஞர் தம்மைத்[2]தனித்தனி விளித்து நும்மோ
[3]டுடனுறை வாழ்வு நீங்கும் ஒருபெரும் பாவி யேனை
[4]மடனறு நமரங் காணீர் [5]மறவன்மி னென்று தன்மெய்ப்
[6]படுபிணி நோக்கி மார்பம் படத்தழு வாது நின்றான்.

---

29\. [1] சிறுவிலைக்காலம். [2] இறைவன். [3] சாபத்தாலாகிய கொடிய நோய். [4] நல்ல அழகு நீங்கப்பெற்று.

30\. [1] விரல்களின் வரிசை. [2] கால்கள் குறைந்துபோதற்கு முன்னமே. [3] செய்த் துடிப்பு. [4] தூரத்தில். [5] வாய் நீரையுமிழ்ந்து.

31\. [1] கடந்து. [2] அழிவில்லாத. [3] விட்டு நீங்குதற்கு. [4] அளவில்லாத. [5] பெரிய துன்பக்கடலுள்.

32\. [1] ஐயந்திரிபுகளாகிய தடையில்லாத. [2] ஒவ்வொருவராக அழைத்து. [3] கூடி இருத்தலாகிய வாழ்க்கையை. [4] அறியாமை நீங்கிய நம்மவர்களே. [5] மறவா திருங்கள். [6] உண்டான.

33. நாவலர் அனைய றிந்து நண்ணி[1]மார் பிறுகப் புல்லி
[2]ஓவில்கண் ணருவி பாய வுளங்குழைந் தழுது நல்லோய்
[3]மேவரு நின்னை நீத்து[4]வெறுவிய மிருப்ப நின்ற
[5]ஆவல்வல் வினையு ளார்யாம் அல்லதிவ் வுலகத் தியாரே.

34. என்றன ரிரங்க[1]மேலோன் எதிர்[2]தழீஇத் தழுவி [3]யாறிக்
[4]குன்றனீர் சிறியற் காகக் குழைந்[5]தழல் தமியேன் [6]செல்வல்
[7]பொன்றலில் நட்பி னுக்குப் [8]புணர்வொடு[9]பழகல் வேண்டா
[10]நின்றநல் லுணர்ச்சி தானே [11]நிறைக்குமென் றுணர்ந்த நல்லீர்.

35. என்று[1]பஃ றிறத்தாற் கூறி யிணையிலான் அரிதி னீங்கிச்
சென்றனன் புலவர் கண்ணுஞ் சிந்தையுந் தொடர்ந்து செல்லத்
தன்றிரைக் கையால் மோதித் [2]தான்றியங் குலையு திர்க்கும்
[3]மன்றலம் புதுநீர் வையை வடகரை கடந்து மன்னோ.

36. [1]என்றினி மதுரை காண்பேம் எப்பகல் சவுந்த ரேசன்
றன்றிரு வடிகள் காண்பேந்[2]தாயையெஞ் ஞான்று காண்பேம்
வென்றிவேற் றரும[3]வேந்தர் வேந்தனை யெந்நாட் காண்பேம்
[4]ஒன்றுயிர்த் துணையாஞ்[5]சங்கத் துறவையெப் பொழுது காண்பேம்.

---

33. [1] மார்போடு அழுந்தும்படி அணைத்துக்கொண்டு. [2] ஒழிதல் இல்லாத. [3] பெறுதற்கரிய. [4] பயனற்றவர்களாய். [5] சூழ்ந்த வலிய தீவினையையுடையவர்கள்.

34. [1] நக்கீரன். [2] (அவர்களைத்) தனித்தனி அணைத்துக்கொண்டு [3] (சிறிது) தேறி. [4] அளக்கலாகா அளவும் பொருளு முதலிய உடைமையால் மலையை யொப்பவரானார். [5] அழுதல் வேண்டா; அல்லீற்று எதிர்மறை வியங்கோள். [6] செல்வேன். [7] கெடுதல் இல்லாத. [8] ஓரிடத்து இருத்தலும். [9] பலநாட்கண்டு பேசுதலும். [10] இருவர்க்கும் ஒத்து நின்ற வுணர்வுதானே. [11] (நட்பாம் உரிமையை) நிரப்பும். "புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான், நட்பாங் கிழமைதரும்" என்னுங் குறட்கருத்து அமைந்திருத்தல் காண்க.

35. [1] பலவகையால். [2] தான்றிமரத்தின் காய்க்குலைகளை. [3] மணம்பொருந்திய. நீங்கி, செல்ல, கடந்து சென்றனன் என்க.

36. [1] எந்நாளில். [2] அங்கயற்கண்ணம்மையை. [3] அரசர்க்கரசனைய பாண்டியனை. [4] உயிரோடு ஒத்த நண்பினராகிய. [5] சங்கப் புலவர்களாகிய சுற்றத்தை.

37. [1]நுணங்கு[2]மா ணறிவின் மிக்க[3]நூல்வலார் மறப்பர் கொல்லோ
வணங்குதேர்த் தானை மன்னர் மணிமுடி[4]யுழுக ழற்கால்
[5]அணங்குடை [6]யரிமான் துப்பி னரசர்கோ னினையான் கொல்லோ
இணங்குநூற் புலவர்[7]நாற்பா னெழுவரென்[8]றுரைக்குங் கொல்லோ.

38. இனித்தமி ழினிமை யாவர்க் [1]கெடுத்திசைத் திடுவ மன்னோ
எனப்பல பலவு மெண்ணி[2]யினைந்து[3]வெஞ் சுரமி றந்து
[4]புனற்றிரு நாடு புக்குப் பொருந்திரைப் [5]பெண்ணை நாடு
தனைக்கடந் தந்தண்[6]பாலித் தண்ணடை கண்டு சென்றான்.

சிவக்கொழுந்து தேசிகரியற்றிய

## மருதவன புராணம்

### குமாரக் கடவுள்

1. சத்தி[1]தனை யனைவள்ளி[2]காந்தனைக்கந் தனையசுரர் தம்மை வென்ற
[2]சத்திதனை யுறுமலர்க்[4]கைத் தலத்தனை[5]யன் போர்கட[6]மி தயமாம் பூங்க
சத்[7]திதனை[8]யிடைமருதூர்க் குமரனைநெஞ் சேபணி [9]யென் றன்பான்[10]மன்னே
சத்[11]திதனை யவனுகந்தின் னருளெனக்குத்[12]தருமஃதுன் [13]சகாய மாமால்.

---

37. [1] நுட்பமான. [2] மாட்சிமைப்பட்ட அறிவிற்சிறந்த. [3] கல்வியில் வல்ல புலவர்கள்; இவர் நுண் மாண் நுழைபுல முடையாரென்க. [4] உராயப் பெற்ற. [5] (பகைவரை) வருத்துதலையுடைய. [6] சிங்க ஏறுபோன்ற வலியினையுடைய. [7] நாற்பத்தேழுபேர். [8] (உலகம்) சொல்லுமோ.

38. [1] எடுத்துச்சொல்லுவோம். [2] வருந்தி. [3] கொடிய காடுகளைக் கடந்து. [4] சோழவளநாடு. [5] பெண்ணையாற்றையுடைய நடுநாடு. [6] பாலியாற்றையுடைய மருத நிலஞ்சூழ்ந்த தொண்டைநாடு.

1. [1] புதல்வனை. [2] கணவனை. [3] வேற்படையைத் தாங்கிய. [4] திருக்கரத்தையுடையவனை. [5] அடியார்களுடைய. [6] உள்ளமாகிய தாமரையின்கண். [7] இன்பஞ்செய்பவனை. [8] திருவிடைமருதூர் என்னுந் திருத்தலம். [9] என்னிடத்து. [10] மிக்க அன்புடன். [11] இவ்வணக்கத்தை. [12] அளிப்பான். [13] உதவியாகும்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

2\. சிவஞானக் கடலருந்திக்[1]கருமைகொடு திசைகளெங்குந்
தெரிய[2]மின்னித்
[3]தவரினஞ்சூழ்ந் திட[4]வுலக முணர[5]விடித் [6]தமண்கோடை
தணப்ப வோங்கு
புவனமதிற் சைவநெடும் பயிர்தழைப்பப் பரங்கருணைப்
பொருப்பின் மீது
கவிமழைகள் சொரி[7]புறவக்[8]கவுணியக்கொண் டலைநாளுங்
கருத்துள் வைப்பாம்.

திருநாவுக்கரசு நாயனார்

3\. [1]வடமருவு[2]தென்னிழலிற் கருணைவடி வாய்விளங்கு[3]வரதன்
போல
விடமமிர்த மெனப்பருகிச் சூலந்தோண் மிசையேற்று
விடைமேற் கொண்டு
தடமருவு தரணியிடைத் திகழ்ந்திடு[4]வா கீசர்[5]பத சரோரு
கத்தைத்
திடமுறுமன் பொடுதினமுஞ்[6]சிந்திப்போந்
துயர்களெல்லாஞ்[7]சிந்திப் போமால்.

---

2\. மேகத்திற்கு :—[1] கரிய நிறம். [2] மின்னலை வீசி. [3] வானவில் முதலிய தொகுதி. [4] உலகத்துயிர்கள். [5] இடிமுழக்கம் செய்து. திருஞானசம்பந்தர்க்கு :— [1] பெருமை. [2] ஒளிவீசி. [3] சைவமாதவர் கூட்டம். [4] உயர்ந்தோர்கள். [5] சிவநாம முழக்கஞ் செய்து. [6] அமணர் கூட்டமாகிய வெப்பம் நீங்க. [7] சீகாழி. [8] கவுணியர் கோத்திரத்து அவதரித்த ஆளுடைய பிள்ளையாராகிய முகிலை.

3\. [1] கல்லாலமரம். [2] அழகிய நிழலின் கண். [3] தென்முகப்பெருமானாகிய சிவபெருமான். [4] திருநாவுக்கரசர். [5] திருவடித்தாமரைகளை. [6] சிந்தை செய்வோம். [7] சிதறுண்டுபோகும்.

அமணரிட்ட நஞ்சினை அமுதாக உட்கொள்ளுதலும் சூலப்படையும் இடபமுமாகிய இலச்சினைகளைத் தோள்களில் தாங்கி இருத்தலும் அப்பர்க்கு உளவாம். இக்கருத்தை,

“பொடியார்க்குந் திருமேனிப் புனிதர்க்குப் புவனங்கள்
முடிவாக்குந் துயர்நீங்க முன்னைவிடம் அமுதானால்
படியார்க்கும் அறிவரிய பசுபதியார் தம்முடைய
அடியார்க்கு நஞ்சமுதம் ஆவதுதான் அற்புதமோ” “அவ்விடத்தை ஆண்டவா சமுதுசெய்து முன்னிருப்ப” எனவும், “நீடுதிருத் துங்கானை மாடத்து நிலவுகின்ற, ஆடகமேருச் சிலையான் அருளாலோர் சிவபூதம், மாடொருவர் அறியாமே வாகீசர் திருத்தோளில், சேடுயர் மூவிலைச் சூலஞ் சின விடையினுடன் சாத்த” எனவும் அருள்மொழித்தேவர் கூறியது கொண்டு தெளிக.

சுந்தரமூர்த்தி நாயனார்

4. [1]முதலைவள [2]ராறுறு தந்திட[3]வை யாறெய்தி முடிவில் லாத
[4]முதலை[5]நெடுந் தமிழொடுசெந் தமிழ்க்கவிதை யாற்றுதித்து
மொழி[6]யா விக்கண்
முதலையொரு மகவுதரச் செய்துகந்த முன்னோனை
முகிழ்மென் கொங்கை
[7]முதலையிதழ்ப் பரவை[8]மணாளனைவணங்க நமதெண்ண
முற்றுந் தானே.

மாணிக்கவாசக சுவாமிகள்

5. [1]வந்திதனிச் சிவலோகம் பெற[2]வழுதி பவநீங்க மனத்தி
னீ[3]டார்
வந்[4]திதனிக் [5]கொம்மைநகில் உமையவள்பால் வைத்தபரன்
மகிழ்வி[6]னுடல்
வந்[7]திதம்பெற் றிடப்பல்லோர் வையையின்பாற்
கண்டிடச்செய் [8]மறையோன் றன்னை
[9]வந்திதக வுறமனமே நந்தமைமெய் யன்பரிடை வைக்கு
மன்றே.

நாட்டுச் சிறப்பு

6. [1]குரவ னேதவத் தொருவனை வலுவினிற் கொண்டு
விரவு[2]பாசநீத் தரனிடை விடுத்திடுந்[3]திறத்தின்
[4]உரவு தண்கடற் புனல்முகந் [5]துவர்கெடுத் துலகம்
பரவ நீள்புயல் விடுத்தது [6]பொன்னியின் பாங்கர்.

---

4. [1] பெரிய அலைகள். [2] காவிரியாறு வழிவிட. [3] திருவையாற்றை யடைந்து. [4] முதற்கடவுளாகிய சிவபிரானை. [5] மிக்க இனிமையோடு. [6] பொய்கையினிடத்து. [7] செங்கிடை. [8] ஆளுடைய நம்பிகளை.

5. [1] பிட்டுவாணிச்சி. [2] அரிமர்த்தன பாண்டியனுடையபாவம். [3] விருப்பம். [4] தேமல். [5] திரட்சி. [6] திருவிளையாடல் செய்வான் புகுந்து. [7] இன்பமுற்றிட. [8] வாதவூரடிகளை. [9] தகுதிபொருந்த வணங்குவாய். ஆர்வம் வைத்த பரன் என்க.

6. [1] ஞானசிரியன். [2] மலங்களைக் கெடுத்து. [3] தன்மைபோல. [4] வலிய. [5] உப்புச் சுவையைப்போக்கி. [6] காவிரியாற்றின் கண்.

களைபறித்தல்

7. [1]மள்ளர்[2]தம் விழியின்[3]சாயல் கயலென மறிக்கக் கையால்
தெள்ளுநீர் வயலுள் நின்று[4]செறிகளை களையு [5]நல்லார்
[6]அள்ளல வனையும் பற்றிக்[7]குழிசியி னடைப்பர் காணிற்
[8]கள்வனை விடுவர் கொல்லோ வுலகினிற்[9]களைகள் தீர்ப்போர்.

8. [1]விளைவுகண் டரிவாள் கொண்டு மேவினா ரரியும் போது
[2]களையினிற் பிழைத்த செங்[3]கட் கமலமொண் குமுதமென்னும்
[4]கிளையுறு மலருங் கூட வரிபட்டுக் கிடந்த வம்ம
[5]தளர்வுறில் அடுத்தோர் தாமும் தளர்வுறும் அறிஞர் போல.

மருதநிலத்தின் சிறப்பு

9. மின்னிய வெழிலி யூர்தி வேந்தனென் றிசைத்த லாலும்
பண்ணிசை யரம்பை மாதர் பயிலுற வினிதி னெங்கு
மன்னிய தாலும் வெள்ளை வாரணஞ் சூழ்த லாலும்
பொன்னிசூழ் மருதந் தன்னைப் பொன்னுல கென்ன லாகும்.

---

7. [1] உழவர். [2] கடைசியருடைய. [3] நிழலை. [4] அடர்ந்த புல் முதலியவற்றைப் பறித்து எறியும். [5] உழத்தியர். [6] நெருங்கிய நண்டையும். [7] பானை. [8] களவு செய்வோனுக்கும் நண்டுக்கும் பொது. [9] கொடிய குற்றஞ் செய்வோரையும் புல் முதலியவற்றையும் உணர்த்தும். கையால் மறிக்க எனக் கூட்டுக. இது வேற்றுப்பொருள் வைப்புச் சிலேடையுடன் கூடியதாம்.

8. [1] நெல் முற்றியதைப் பார்த்து. [2] களை பறிக்கும்போது தப்பிய. [3] தேன். [4] கூட்டம்; உறவுமாம். [5] தம்மைச் சார்ந்தவர் வருத்தமுற்றால். வேற்றுப் பொருள்வைப்பணி. அடுத்தோர் தளர்வுறிலெனக் கூட்டுக,

9. பொன்னுலகிற்கு :—மேக வாகனத்தையுடைய இந்திரன் அரசன் என்று சொல்லப் படுதலும், அரமகளிர் ஆராய்ந்த இசைப்பாடல்கள் பயிலும்படி எங்கும் நிலை பெற்றிருத்தலும், ஐராவதமென்னும் வெள்ளை யானை சுற்றித்திரிதலும் உளவாம்.
மருத நிலத்திற்கு :—இந்திரன் தலைவன் எனப்படுதலும், வாழை மரங்கள் அழகு பொருந்த எங்கும் மிக்கிருத்தலும், வெண்ணிறமான சங்குகள் உலாவித்திரிதலும் உளவாம். இவற்றால் இரண்டிற்கும் ஒற்றுமை கூறியவாறும்.

10. பேசு [1]மம்மரு [2]தலர்கடுப்ப்ப் பிறைகொள்வே ணியனைப்
[3]பூசை செய்து[4]தன் பெயர்முத லிடைகளாற் புறஞ்சூழ்
[5]கேச ரங்களை வருவியாக் கிளர்[6]முத லீறு
வீசி நல்லிசை பயில்விக்கும் [7]விமலனுண் மகிழ.

11. [1]கொடிபடு நெடிய[2]மாளிகை வீதி குலவுறு மணியபொற்
[3]பதியில்
[4]அடிபடன் மணி[5]வார் செறிந்திடு முரசே யமை[6]வடுப்
படுவன மாவே
[7]கடிமது வருந்தல் சிறைகொள்வண் டினமே [8]கட்புன
லுகுத்தல்பைம் பொழிலே
படியுறு குளனே [9]யலைபடல் [10]சிறுமைப் படலெழிற்
பாவைய ரிடையே.

---

10. [1] அந்த மருதமரம்; இஃது அத்தலத்து மாமாம். [2] மலர்களைத் தூவி. [3] வழி பாடியற்றி. [4] மருது என்னுந் தன் பெயரின் முதலிலும் நடுவிலும் உள்ள எழுத்துக்களாகிய மரு என்பதனால்; மணம் வீசுதலால் என்பது கருத்து. [5] வண்டுகளையழைத்து. [6] மதுவைச் சொரிந்து என்பதாம். [7] மகாலிங்கப் பெருமான்.

11. [1] கொடிகள் கட்டுப்பட்டுள்ள. [2] மாடங்களையுடைய தெருக்கள் விளங்குகின்ற; மாளிகைகள் தெருக்களில் விளங்குகின்ற எனினுமாம். [3] திருவிடைமருதூர் என்னும் நகரின்கண். [4] அடிக்கப்படுதல், [5] தோல்வார்கள் நெருக்கிக் கட்டப் பட்டுள்ள. [6] வடுக்கள் (இளங்காய்கள்) தோன்றப்பெறுவன மாமரமே. [7] மணமுள்ள தேன். [8] தேனாகிய நீரைச் சொரிதல். [9] அலைகள் வீசுதல். [10] தேய்ந்துபோதல்.

அடிக்கப்படுதல், குற்றப்படுதல், நூல்களால் விலக்கப்பட்ட கட்குடித்தல், கண்ணீர் ஒழுக்கல், துன்புறுத்தப்படுதல், எளிமைப்படுதல் என்பன, அந்நகரத்து மக்கள் மாட்டில்லையென ஒழித்து, முரசு முதலியவற்றின்கண்ணே உள வெனக் காட்டலால் இஃது ஒழித்துக் காட்டணியாம். ஏகாரங்கள் பிரிநிலைப் பொருளில் வந்தன.

12. காரணமின்றிச் சினத்துட னெதிர்த்துக் கடுஞ்[1]சமர்
விளைத்தல்செஞ் [2]சூட்டு
வாரண மதுவே[3]திரித்திடு கோட்டு வளம்பெறு [4]பெருமையும்
[5]விளைக்கும்
[6]ஏரண வுருவ மதனனே தன்னோ டெதிர்த்திடா திருப்பவர்
தம்மேல்
[7]தாரண முறுநீ [8]டம்புக டிரக்குந் [9]தடித்துறு முகிலு[10]மத்
தகைத்தால்.

13. திரிதரு பறவைக் குலங்களே யன்றிச் [1]சிறைப்படு
முயிர்களங் கில்லை
விரிதரு [2]பயமுற் றொளித்திருந் திடுதன் மீனின மன்றிவே
றில்லை
வரிதரு மகளிர் கடைக்கணே யன்றி வளை[3]நெறி கடப்பன
வில்லை
யுரிமையற் றொருவர்க் குதவிசெய் யாத தோவிய
மன்றிமற் றில்லை.

---

12. [1] போர் செய்வன. [2] உச்சிக்கொண்டையையுடைய கோழிச் சேவல்களே. [3] முறுக்கேறிய கொம்புகளையுடைய. [4] பெரிய செம்மறியாட்டுக் கடாக்களும். [5] (சமர்) செய்யும். [6] அழகு பொருந்திய வடிவத்தையுடைய. [7] தரித்தல். [8] மலர்ப்பாணங்களைச் செலுத்துவான். [9] மின்னல். [10] (எதிர்த்திடாதிருப்பவர் மேல் அம்புகளை (நீரை)ச் செலுத்துதலாகிய அத்தகுதியையுடையது.

காரணமின்றிச் சினந்து செருச்செய்தலும் எதிர்த்திடாதவர்மேல் அம்பெய்தலும் மக்கள்பால் இல்லையென்பதாம். இது நியமவிலக்குச் சிலேடையணியாம்

"கறுப்புறு மனமுங் கண்ணிற் சிவப்புறு சூட்டுங் காட்டி, உறுப்புறு படையிற் றாக்கி யுறுபகை யின்றிச் சீறி, வெறுப்பில களிப்பின் வெம்போர் மதுகைய வீர வாழ்க்கை, மறுப்பட வாவி பேணு வாரணம் பொருத்து வாரும்" (கம்ப. நாடு 16)

"கறுவொடு மொன்றோ டொன்று காரண மின்றிச் சீறிப்
பொறியுடைக் குறும்பூழ் தம்மிற் போர்செயப் பொருத்து மோதை
செறிமயிர்த் தகர்க டம்மில் தீயெழத் தாக்க நோக்கி
அறைகழல் வீர ரார்க்கும் அமலையை யவிக்கு மன்றே" (நைட. நா. 15)

என்பன இப்பாட்டின் முற்பகுதியுடன் ஒப்புநோக்கத்தக்கன.

13. [1] சிறகு முளைக்கும். [2] நீர். [3] நெறி பிறழ்வன.

சிறைச்சாலையில் அடைக்கப்படுதலும், அஞ்சி மறைதலும், ஒழுக்கத்தை விடுதலும், பிறர்க்குதவி செய்யாமையும் மக்கள்பால் இல்லை.

பிரிநிலை ஏகாரத்தை மீனினத்தோடும் ஓவியத்தோடுங் கூட்டுக.

"மாளிகைமேற் காரிகையார் கண்ணே, விலங்குவன மெய்ந்நெறியை விட்டு" என்றார் புகழேந்தியார்.

14\. மாயனை நிகர்க்கும்[1] பூமணம் பெறலான் [2]மயின்மிசை
யிருப்பதா லெனையாள்
சேயினை நிகர்க்குங் [3]கொண்டலூர்ந் திடலாற் றேவர்க
ளிறைவனை நிகர்க்கும்
பாய[4]தா மரைதங் கலின்விதி நிகர்க்கும் [5]பசுமையா லுலகினை
யீன்ற
தாயினை நிகர்க்குங் [6]கலைநிறைந் திடலாற் றண்மதி
நிகர்க்குமவ் வனமே.

15\. [1]காவுற வளருந் [2]தேமா [3]புளிமாநற்[4]கருவி ளந்தண்
[5]கூவிள [6]மருவுஞ் சீருங்[7]குலவுகாய் கனியின் சீரும்
பூவுட னிழலின் சீரும் புகலு[8]நேர் நிரைய தாகிப்
[9]பாவுறு சீரு மெங்கும் பார்த்தனர் மகிழ்ச்சி பெற்றார்.

---

14\. [1]-புவிமகளை மணத்தலென மாயவனுக்கும் மலர்மணம் என வனத்திற்கும் கொள்க. பின் வருவனவும் இன்ன. [2] மயிலாகிய ஊர்தியின்கண் எழுந்தருளி யிருத்தல்; மயில்கள் (மரக் கிளைகளின்) மேல் ஏறியிருத்தல். மேகத்தை ஊர்தியாகக் கொண்டுசெலுத்தல்; மேகங்கள் தவழ்ந்து செல்லுதல். [4] தாமரை மலரின்கண் வீற்றிருத்தல்; தாவுகின்ற மரையென்னும் விலங்குகள் வசித்தல். [5] பசிய நிறம் உடைமை உவமான உவமேயம் இரண்டிற்கும் பொது. [6] ஒளியின் கூறு; மான்.

15\. [1] சோலையின்கண் மிகுதியாக; கற்பகச் சோலையைப் பொருந்த எனினுமாம். [2], [3] இவை மாமர விசேடங்கள். [4] ஒருவகை மரம்; காக்கணஞ் செடியுமாம். [5] வில்வம். [6] (ஆகிய இவைகள்) பொருந்தியிருத்தலால் உண்டாகிய சிறப்பும். [7] (அம்மரங்களில்) விளங்குகின்ற. [8] ஒழுங்கான வரிசையுடையதாய். [9] பாவியிருக்கின்ற சிறப்பும்.

இதன்கண், யாப்பிலக்கண நூலார் கூறும் தேமா முதலிய வாய்பாடுகள் பொருந்திய ஈரசைச் சீர் நான்கும், இவற்றுடன் காய் கனி பூ நிழல் என்பன சேர்ந்த ஏனைய சீர்களும் நேர்நிரை யென்பனவற்றை உடையனவாய்ப் பாவின்கண் அமைந்திருக்கும் சிறப்பையுங் கண்டு மகிழ்ந்தனர் எனப் பிறிதுமொரு பொருள் தோன்றுதல் காண்க.

16. இருந்திடு முனிவர் அடைந்த[1]மா தவன்றன் எழின்முகப் பங்கய நோக்கிப்
பொருந்திரைக் [2]கடலை யருந்தருட் கடலே [3]புண்ணிய மியற்றுபுண் ணியமே
திருந்திய [4]வேள்வி யாதிநல் வினைகள் செய்திடிற் [5]பயனினி தளித்தல்
புரிந்திடு [6]வினையோ பரமனோ வெமக்குப் [7]புலப்படப் புகல்கெனப் புகன்றார்.

17. தண்டமிழ் [1]முனிவன் இன்னுநும் முளத்திற் சார்ந்திடு [2]சங்கைக ளியாவும்
[3]விண்டிடு மெனமற் றவர்மறைக் குலங்கள் விதித்திடு வேள்விகள் தவங்கள்
[4]எண்டர வியற்றிற் பரனெதிர் தோன்று [5]மெனுமுறை யிசைவதன் றாகும்
[6]கண்டிடா மையினால் [7]மனாதியாங் கரணங் கண்ணாதற் [8]பரமன்மற் றில்லை.

---

16. 1 அகத்திய முனிவர். 2 கடல் குடித்த வரலாறு இந்திரன் பழிதீர்த்த படலத்திற் காண்க. 3 "தவஞ்செய்த தவமார்தையல்" 'அறஞ்செய்த அறத்தாலும்" என்றார் கம்பரும். 4 யாகம் முதலிய. 5 அவ்வவ்வினைக்கேற்ற இன்பப் பயனை. 6 வேள்வி முதலிய நல்வினைகளோ. 7 வெளிப்படக் கூறுவாயாக.

17. 1 அகத்தியன். 2 ஐயப்பாடுகள். 3 கூறுங்கள் என்று சொல்ல. 4 மதித்தல் பொருந்த. 5 என்று சொல்லப்படுமுறைமை. 6 (இதுகாறும் அவ்விறைவனைக்) காணாமையினால். 7 மனமுதலிய கருவிகளே பலனளித்தற்குச் சிறப்புடைக் காரணங்களாம். 8 இறைவன் காரணனாகான். மன முதலிய கருவிகளால் காணப்படாமையின் பரமனே யில்லையென்றார் எனினுமாம்.

18. [1]இம்பரிற் புரிந்த நல்வினைப் பயனை யெய்திமற் [2]றிவருயிர்
தாமே
[3]யும்பரி [4]னருந்து மென்னவிவ் வுலகோர் உரைப்பர்க
ளின்னவும் புகல்வாய்
[5]பம்பிட வினவு பொருள்களுண் டின்னும் பார்க்கிலிந்
நெறியவே யென்றார்
[6]கும்பசம் பவனீர் தெளிவுற வுரைப்பன் [7]குறிப்புறக்
கேண்மெனக் கூறும்.

19. முனிவர்கா [1]ளென்கண் [2]முனிவுறா தொழிமின் மொழியுநுங்
[3]குலத்தொடு தவமும்
நனியுய ரமுதைப் புவியுறு [4]கமரில் நண்ணினர் [5]உகுத்தது
போன்ற
வினைகளும் உடலுஞ் [6]சடமெனக் கலைகள் விளம்பிடு மாதலா
லொருவன்
அனையதொல் வினையைக் கூட்டுவித் தன்றி யாருயிர்
அருந்திடா தாகும்.

20. தவமுறு வேள்வி யாதிக ளியற்றில் [1]தகுபல னடைகுவ
துயிரே
நவிலுறு [2]தனுவுங் [3]கரணமு மிடமும் நண்ணிடு
[4]போகமு மான
[5]திவளுறு பலனைத் தெரிந்துயிர்க் கெங்குஞ் செறிந்தினி
துறைந்திடு மெங்கள்
சிவபரஞ் சோதி யெனுமிறை யவனே [6]திறம்பிடா [7]தடைவினி
லருள்வோன்.

---

18. [1] இந்நிலவுலகத்தில். [2] இந்நல்வினை செய்தவரின் உயிர்களே. [3] மேலுலகத்தில். [4] இன்பப்பயனைத் துய்க்கும், [5] மிகுதியாக. [6] குடத்தில் தோன்றிய அகத்தியன். [7] கருத்தூன்றிக் கேளுங்களென்று; கேளும் என்னும் ஏவல்முற்றுக் கேண்மென நின்றது. "முற்றேல், உயிரும் உயிர்மெய்யுமேகலு முளவே" என்ற பொதுமையாற் கொள்க.

19. [1] என்பால். [2] வெகுளாதீர். [3] குலமும் தவமும் ஆகிய இரண்டும். [4] வெடிப்புக்குழியில். [5] சிந்தியதையொத்தன. [6] அறிவில்லாத பொருள்களென்று.

20. [1] அவற்றிற்குத் தக்க பயனை நுகர்வது. [2] உடலும். [3] அகக்கருவி புறக்கருவிகளும். [4] நுகர்ச்சியுமாகிய. [5] துவளுகின்ற. "திவமுறுபலனை" யென்பது பாடமாயின் தோற்றமுறுகின்ற பலனை யெனக் கொள்க. [6] தவறாமல். [7] முறையாக.

21. [1]ஆவியுங் கரும மதுவும்[2]விண் ணாதி யடைந்துறு
பலன்கொளு மென்னில்
மேவுறு குருட னுகுமோர் முடவன் மேருவின் [3]முடித்தனிச்
சென்று
நாவுறப் பசுந்தே னெடுத்தருந் தியது நானெதிர் கண்டன
[4]னெனலாங்
காவலன் றனைச்சூழ் மறவர்வென் றனரேற் கருதிடு
வரிசையார் கொடுப்பார்.

22. [1]விற்பெறுநன் மணிக்குணங்கள் விழியில்லான் காண்பதுவும்
பொற்புறு[2]வித் தாதியிலான்[3]பயிர்விருப்பும் [4]புரைவாகும்
சொற்படுமெய்ப் பரம்பொருளைத் தொகு[5]பத்தி யிலாரறிதல்
பற்பலமா தவத்தன்றித் தோன்றுதப் பத்தியுமே.

23. இன்னுமொரு வழியுரைப்பன் இய[1]லளவைக் கடங்காத
[2]சின்மயனை [3]யவனருளால் தெரிசித்தல் வேண்டும்[4]கண்
முன்னிருந்து [5]மொளியின்றி மொழி[6]பொருள்கள்
தெளிவுறுமோ
[7]அன்னதனுற் [8]பராபரையால் [8]அறியமுயன் றிடல்வேண்டும்.

---

21. [1] உயிரும் வினைகளும். [2] சுவர்க்கம் முதலிய புவனங்களை அடைந்து. [3] சிகரத்தில். [4] என்று சொல்லுதல் கூடும்.

22. [1] ஒளிபெற்ற. [2] விதை முதலிய உபகாணங்கள் இல்லாதவன். [3] பயிர்த்தொழில் செய்வதில் வேட்கையுறுதலும். [4] ஒப்பாகும். [5] அன்பில்லார் அறிய முயறல். அறிதல், காண்பதும் விருப்பும் புரைவாகுமெனக.

" ஏரும் இரண்டுளதாய் இல்லத்தே வித்துளதாய்
நீரருகே சார்ந்த நிலமுளதாய் = ஊரருகே
சென்று வரவெளிதாய்ச் செய்வார் பணிகேட்கில்
என்று முழவே யினிது " என்றல் காண்க.

23. [1] காண்டல் முதலிய பிரமாணங்களுக்கு. [2] ஞானவடிவான இறைவனை. [3] " அவனருளாலே அவன்றாள் வணங்கி " என்றார் ஆளுடைய அடிகள். [4] கண்களுக்கு முன்னேயிருந்தாலும். [5]ஞாயிறு முதலியவற்றின் ஒளி இல்லையானல். [6]உலகப் பொருள்கள். [7] அதனால். [8] பராசத்தியின் துணையால். [9] இறைவனைக் காண. " கண்.....தெளிவுறுமோ " என்றதனை " இருவிழிகள் வாண் முகத்தில் இருந்தாலும் வானிரவி யெழுந்தாலன்றிக், கருதுநிலப் பல்பொருளுங் காண்டலரிதாம் " என்பதனுலறிக.

தம்மைத்தாம் அருச்சனைச் சருக்கம்

24. [1]சத்தி[2]யிது மொழிந்திடலு நித்தனுவந் தருந்தவர்கள்
தம்மை நோக்கிப்
பத்தியெனுங் கற்பகமொன் றுங்களிடத் திருந்[3]தெவையும்
[4]பயக்கு மாற்றால்
[5]நத்தனயன் றனக்கரிய நம்மையுங்கட் கௌிதெளிதின்
நல்கிற்[6]றன்ன
தெத்தகையோர்க் குளதவர்கட் கெளியமியா மவர்வேண்டு
மெவையு மீவோம்.

சிவ பூசை செய்தலின் இயல்பு

25. [1]செல்வமுட னுற்றலுடை யவர்புரி[2]பூ சையிற்குறைவு
செய்திட் டாரேல்
[3]நல்குரவெய் திடுமெவரும் அவரவராற் றலுக்கிசைய
நவில வேண்டும்
சொல்லுறுமன் பொடுபூசை புரிந்தவ[4]ரெண் ணின்பமெலாஞ்
சுகித்து வாழ்ந்து
[5]மல்லலுறு[6]சாத்தியமாம் பேரின்ப மினிதடை வர்
மறுமைக் கண்ணே.

26. [1]பூசைபுரிந் திடுபவர்க [2]ளெவரேனுஞ்[3] சுகர்களெனப் புகலு
நூல்கள்
ஆசையுட னஃதியற்று ரெவரேனும் விலங்கொடுபுள்
ளனைய ராகும்
தேசுறுநந் தமைப்பூசை யொருமலரா யினுங்கொண்டு
செய்வோர் கட்கு
வீசுபுகழ் விரதமொடு தவந்தருமம் வேறொன்றும்
வேண்ட லின்றே.

---

24. [1] உமையம்மை. [2] அருந்தவரை உவகையுறச் செய்தல் வேண்டும் என்றது. [3] விரும்பிய எல்லாப் பொருளையும். [4] கொடுத்தலால். [5] சங்கு ஏந்திய திருமால். [6] அப்பத்தி. இறைவன் பத்தி வலையிற்படுவோனென்பது கூறப்பட்டது.

25. [1] பொருளும் உடல் வன்மையும் உடையவர்கள். [2] சிவ வழிபாட்டில். [3] வறுமை. [4] கருதிய சுகங்களெல்லாவற்றையும். [5] வளம்பொருந்திய. [6] அடைதற்பாலதாகிய.

26. [1] சிவபூசை செய்பவர்கள். [2] யாவரேயாயினும். [3] சுகமுனிவர்.

27. புண்ணிய முயர்த்தும் எவரையும் பாவம் புகைந்[1]தழல்
நரகில்வீழ்த்[2]துழலப்
பண்ணிடு மெனவும் சிறியவர் பெரியோர்[3]பாங்குறிற்
றுங்களும் பெருமை
நண்ணுவ ரெனவு [4]மாங்கதற் கேது நற்றவந் தருமமே
யெனவும்
[5]எண்ணமுண் [6]டூழ்வந் துற்றிடி லதனை யாவரே
விலக்கிடற் பாலார்.

28. அறந்தொடர்ந் திலர்பாற் பாவமூழ் தொடரின் [1]அங்கவர்
தேவரே யெனினும்
துறந்தவ ரெனினும் வாய்மையும் புகழுந் தூய்மையு
[2]நிலைமையு [3]மதியும்
[4]பிறழ்ந்திட மயக்கி யாவரு மிகழப் பெரி[5]தலைத் திடுமெனி
லென்னை
மறந்துவிட் டிடுமோ தனியனே னிழைத்த வல்வினை
யென்னவாங் கென்னில்.

---

27. [1] எரிகின்ற. [2] துன்புறச்செய்யும். [3] பக்கம். [4] அங்ஙனம் பெருமையுறுதற்கு. [5] நினைவு உள்ளது; யான் அறிவேன் என்றபடி. [6] பழவினை.

28. [1] அத்தீயூழ் தொடரப்பெற்றவர். [2] உறுதியும். [3] அறிவும். [4] வேறுபட. [5] வருத்தும். "பேதைப் படுக்கும் இழவூழ்" என்றார் பொய்யில் புலவர்.

29. பிறரினுக் [1]கின்னா[2]முற்பக லியற்றிற் [3]பிழைத்திடா [4]தவ்வினைத் தாமே
வுறவருந் தமக்குப் [5]பிற்பக [6]லெனலால் உற்றிடத் [7]துயரினை யருந்தும்
திறனெளி தலவே யென்[8]றதைச் சிந்தை செய்து[9]தற் காத்திட மதித்தோர்
அறைதருஞ் சினமும் பிறர்பொருள் கவரும் அவாவுநன் கவித்திட வேண்டும்.

உரோமசச் சருக்கம்

30. எண்ணிடுஞ் செல்வம் இளமைமெய் [1]கணத்தில் [2]இயல்பதா யழிந்திடு [3]மென்றும்
புண்ணிய மதனுக் கழிவிலை [4]யதனிற் புகல்சிவ புண்ணிய மதிகம்
பண்ணிடுந் தவத்தா [5]லியாவையு மருவும் பயின்றிடு மினையமா தவத்திற்
கண்ணுதற் பிறைச்செஞ் சடைமணி மிடற்றுக் கடவுடன் [6]பூசனை யதிகம்.

---

29. [1] துன்பங்கள். [2] ஒரு பகற்பொழுதின் முற்கூற்றில். [3] தவறாது. [4] அத்துன்பங்களே; இடைக்குறை. [5] பகற்பொழுதின் பிற்கூற்றில். [6] என்று ஆன்றோர் கூறுதலால். [7] அத்துன்பங்களைத் துய்த்துக் கழிக்கும் விதம். [8] அவ்வான்றோர் கூற்றை உட்கொண்டு. [9] தம்மைப் பேணிக்கொள்ள; பன்மை யொருமை மயக்கம்.

"பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமேவரும்" (திருக்குறள்—32. 9.)

"முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு, பிற்பகற் காண்குறூஉம் பெற்றிய காண்" (சிலப் வஞ்சின—3. 4.) என்னும் அறவுரைகள் ஈண்டு நோக்கத் தக்கன.

30. [1] ஒரு நொடிப்பொழுதில். [2] இயற்கையாகவே அழிந்துபோம். [3] எந்நாளும். [4] அப்புண்ணியத்தில். [5] விரும்பியவனைத்துங் கைகூடும். "வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம், ஈண்டு முயலப்படும்" என்றார் திருவள்ளுவர். [6] சிறந்தது.

31. மருத்[1]துள வணிமான் முதலினோர் [2]பதமும் மற்றவர் செல்வமும் பிறவும்
[3]திருத்தனைப் பூசை புரிந்திடு பயனே நிலவுமப் பூசைதன் கையால்
[4]அருத்தியிற் செயலே [5]யமையு [6]மான் மார்த்தம் அன்றி[7]யன் னியவடி வதனில்
[8]ஒருத்தராற் செய்வித் திடலுமாம் [9]அவற்றுள் உயர்ந்தது [10]சுயம்புவா மிலிங்கம்.

32. இன்புற வொருவன் முன்புதி தாக இயற்றிடு [1]மறத்தினு [2]மொருவன்
முன்புசெய் திருந்த அறத்தினுக் [3]கிறுதி முந்துறச் செய்திடா திருக்கில்
[4]கொன்பயில் பலனங் [5]கெண்மடங் கினிது கூடு[6]நீ டறனழிந் திடுகால்
தன்[7]பொருள் முயற்சி கொண்டதை விளங்கச் சமைத்திடிற் [8]சதமடங் கெய்தும்.

---

31. 1 துளபமாலை யணிந்த திருமால். 2 பதவிகளும். 3 கூத்தப்பெருமானாகிய சிவபிரானை. 4 ஆர்வத்தோடு. 5 தக்கது. 6 அதுவே உயிருக்கு உறுதி பயப்பது. 7 வேறு இலிங்கமூர்த்தங்களில். 8 பிறர் ஒருவரைக்கொண்டு. 9 அப்பரார்த்தலிங்கங்களுள். 10 தானே தோன்றியது.

"மருத்துள......பயனே" என்ற கருத்து,

"வண்டுளருந் தண்டுழாய் மாயோன் இறுமாப்பும்
புண்டரிகப் போதுறையும் புத்தேள் இறுமாப்பும்
அண்டர்தொழ வாழுன் இறுமாப்பும் ஆலாலம்
உண்டவனைப் பூசித்தபேறென் றுணர்கிலையால்" (திருவி—வெள்ளை)

என்ற பாடற்கண் அமைந்திருத்தல் காண்க.

32. 1 அறத்தைப்பார்க்கினும். 2 பிறனொருவன். 3 அழிவு செய்யாது பேணிவருதல். 4 பெருமை பொருந்திய. 5 எட்டுப்பங்கு. 6 தொன்றுதொட்டு நடைபெற்ற அறச்செயல். 7 பொருளாலும் முயற்சியாலும். 8 நூறு பங்கு பலன்.

சுகீர்த்திமன் சருக்கம்.

33. [1]சிந்தி டப்பெறு [2]தளகையோன் செல்வமு மதவேள்
[3]அந்த மும்விதி [4]மகிமையும் [5]அனந்தனீ டறிவும்
இந்தி ரன்பெறு [6]போகமு மெய்திவாழ்ந் திடினும்
மைந்த ரின்றெனின் மற்[7]றதோர் வாழ்வெனப் படுமோ.

பராசரச் சருக்கம்.

34. பன்னு தெண்டிரைப் பரவைசூழ் பாருல கிதனுள்
மன்னு [1]புல்லறி வுற்றிடு[2]மணுளர்நெஞ் சென்னுந்
துன்னு மீனினங் களைக்கவர் [3]தொடர்வலை யன்றே
[4]கன்னன் மென்மொழிப் பொன்னனார் கதிர்முக [5]வலயம்.

35. தேறுபொற் [1]பணிகளுந் திகழும் ஆடையும்
[2]மாறிடப் பிரித்திடில் [3]மாத ரென்றிடல்
கூறிடு மலப்[4]புழுக் குரம்பை யேயலால்
[5]வேறுறக் கண்டதென் விளம்பு காலையில்.

36. தோலிது நரம்பிது [1]சோரி நீரிது
[2]கோலுறு தசையிது குடர்மற் றீதென
[3]ஏலுறச் சிலபகல் எண்ணும் போதினின்
வேல்விழி மகளிர்பால் வேட்கை நீங்குமால்.

---

33. [1] அழிதல் இல்லாத; ஈறுதொக்கது. [2] குபேர சம்பத்தும். [3] அழகும். [4] குணத்தின் பெருமையும்; பிரமனுக்கு ஒப்பான பெருமை என்றலுமாம். [5] ஆதிசேடனுக்கு ஒப்பான சிறந்த அறிவும். [6] இன்பநுகர்ச்சியும். [7] அவ்வாழ்க்கை

34. [1] சிற்றறிவு. [2] ஆடவர்களுடைய. [3] ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டுள்ள. [4] கருப்பஞ்சாறு. [5] வட்டம்.

35. [1] அணிகலங்களும். [2] வேறுவேறாகப் பிரித்துவிட்டால். [3] பெண்களென்று சொல்லப்படுதல். [4] புழுக்கூடு. [5] தனியாக.

36. [1] குருதிநீர். [2] சுற்றப்பட்டுள்ள. [3] உள்ளத்திற் பதியவைத்து.

37. திருவுறு மகளிர்பால் வேட்கை தீர்ந்திடின்
[1]மருவிடும் வீ[2]டணர் மருவு போதினும்
பரசிவத் திடைமனம் பற்றி நிற்பினும்
[3]இருவினை சமனுறு மெனினு [4]மெய்திடும்.

38. நிலைபெறு [1]பரத்திடை நிலவு நெஞ்சரை
யுலகினி லவர்செயும் [2]வினைவந் தொன்றிடா
வலியுறு மந்திர மருந்து வல்லரை
[3]நலிவுசெய் திடுங்கொலோ நண்ணுந் தீவிடம்.

சோமதீர்த்தச் சருக்கம்.

39. மேவு மன்புறு[1]தாதையே யாயினும் விளம்புந்
[2]தாவில் [3]காதல ராயினுஞ் சகோதர ரெனினும்
யாவ ராயினும் இளமையும் எழிலுமெய் தினரேல்
[4]பாவை மார்மனம் அவரிடைப் [5]படர்ந்திடு மன்றே.

---

37. [1] பேரின்ப வீட்டை யெய்தும். [2] அம்மகளிர். [3] இருவினை யொப்புவாய்க்கு மாயினும். [4] அவ்வீட்டினை யெய்துதல்கூடும்.
ஒருவன் என எழுவாய் வருவித்து முடிக்க.

38. [1] பரம்பொருளினிடத்து. [2] தீவினைகள். [3] வருத்தம். உள்ளம் முதலிய கருவிகள் பசுத்தன்மை நீங்கிப் பதித்தன்மை யெய்தப்பெற்றமையான் அவர் செய்வன அனைத்தும் தவமாம் என்பது கருத்து. எடுத்துக்காட்டுவமையணி.

39. [1] தந்தை. [2] கெடுதலில்லாத. [3] அன்பு செய்தற்குரிய மக்களாயினும். [4] பெண்களுடைய. [5] செல்லும்.

“ தந்தையாயினும் விழைவிற் றம்முடனே யொருவயிற்றிற் சார்ந்தாரேனும்,
மைந்தராயினும் மிகவும் வனப்புடையரெனில் அவர்மேல் மடநல்லார்தம்,
சிந்தை கலங்கிடு மதனுற் சாம்பன் மலர்க்கணை வேளிற் செவ்வி வாய்ந்தோர்,
பைந்தொடியார் இனிதழுரும் உவளகத்தில் தனிப்போதல் பான்மைத்
தன்றே ” (காசிகா) என்றார் அதிவீர ராம பாண்டியர்.

40. [1]விகுதி முன்[2]னிடை நிலைமுத லவற்றொடு [3]மேவப்
[4]பகுதி யின்பொருள் [5]அதனிடத் [6]தவாவுறு பரிசிற்
றொகுதி யுற்றிடு பூண்[7]முலை[8]தொடர்ந்திட மயங்கி
மிகு[9]தி டத்துறு முளத்தசந் திரனுமே வினனே.

41. கலக வேல்விழி யவர்முகங் காணினு மவர்கள்
இலகு தீஞ்சொல்கேட் பினுமவர் தம்மையெண் ணிடினும்
உலகி லாடவர் மனமுரு கிடுமெனி [1]லுவரே
[2]வலிமை செய்திழுத் திடினெவர் மறுத்திட வல்லார்.

மாந்தாதாச் சருக்கம்—வசந்தகால வருணனை.

42. [1]சலதியி னமுது நஞ்சுந் தனித்தனி யன்றோ[2]வந்த
[3]மலையவெற் புதவு[4]மந்த மருத்தொன்றே[5]மணந்திட் டோர்கட்
கலகி[6]லின் பமிர்த மாகித் தணந்தவர்க் கடனஞ் சாகி
யிலகிடு [7]மினையோர் வைகு மிடந்[8]துரீஇ யெழுந்த தன்றே.

---

40. [1] அன் ஆன் முதலிய இறுதி நிலைகள். [2] இடைநிலை முதலிய பிறவுறுப்புக்களுடன். [3] முன்மேவ எனக் கூட்டுக. [4] நடவா முதலிய முதனிலையின் பொருள். [5] அவ்விகுதியினிடத்து. [6] அவாவி விகாரப்படுந் தன்மைபோல [7] தாரை; வியாழன் மனைவி. [8] விடாது பின்பற்ற. [9] திடம்பொருந்திய உள்ளத்தையுடைய.

"விகுதி முன்...பரிசில்" என்ற கருத்து. "தன்னியல்பில் நிற்கும் ஒருவனுள்ளத்தை ஆடையணி முதலியவற்றோடு ஒருத்தி முன்னின்று தன்னிடத்து அவாவ விகாரப்படுத்தல்போலத் தன்னியல்பில் நிற்கும் பகுதிப்பொருளை இடைநிலை முதலியவற்றோடு விகுதி முன்னின்று தன்னிடத்து அவாவ விகாரப்படுத்தலின் விகுதியென்றும்...பெயர் பெற்றன." எனச் (நன். பத 6-உரை) சங்கர நமச்சிவாயப் புலவர் உரையில் அமைந்திருத்தல் காண்க.

41. [1] அம்மகளிரே. [2] வற்புறுத்தி யிழுத்தால். "உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங், கள்ளுக்கில் காமத்திற்குண்டு" என்றார் தெய்வப் புலவர்.

42. [1] கடலில். [2] தோன்றின. [3] பொதிய மலை. [4] இளந்தென்றற்காற்று. [5] உடனுறையும் ஆடவர் மகளிர்கட்கு. [6] இன்பத்தைச் செய்யும் அமுதத்தையொத்தும். [7] மணத்தலுந் தணத்தலுமுடையோர். [8] துருவி; தேடி.

43. மறுவறு கலைக ளாய்ந்தோர் [1]மடனெனத் தருக்க ளியாவு
முற்[2]பழுப் பிலைகள் போக்கி யோதவ [3]ருணர்வு மானக்
குறைவறத் தளிர்த்தன் னோர்தங்[4]குணத்தின்மெல் லரும்பு தோற்றி
[5]நிறைபுக ழென்ன வெங்கு மலர்ந்தன நிறைபூஞ்[6]சோலை.

44. [1]பத்திர முதவு[2]பொன்னிப் புதுப்புனல் பாய்ந்து[3]காவுஞ்
[4]சித்திரத் தடமுந் தே[5]மா முதலிய பூத்த செய்கை
[6]சத்திர மதிகொண் டோனுக் கவன்[7]பரி சனங்க ளன்னோன்
[8]அத்திரங் களையங் கங்கே யமர்செயற் [9]கீட்ட லொக்கும்.

### பொழில் விளையாட்டு

45. [1]உரமிசை யென்கொல்[2]சொர்க [3]முயரற மியற்றி னோர்கள்
பரிவிற்சே ரிடமே யோங்கு[4]பயோதர [5]மின்ப மாரி
தருவதே[6]தனமிங் [7]கேழைத் தனியனேற் குதவ லாமென்
றொருவிற லோனும் வாட்க ணொருத்தியு மிசைத்து நின்றார்.

---

43. [1] அறியாமையைப் போக்குதல் போல. [2] முற்றிய தழைகளை யுதிர்த்து. [3] உணர்ச்சி புதிதுபுதிதாகத் தோன்றுதல் போல. [4] வன்கண்மையின்றி இளகிய பண்பு போல. [5] (அவருடைய) நிறைபுகழ் விரிந்தாற்போல. [6] காவின்கண்.

44. [1] மகிழ்ச்சி. [2] காவிரி. [3] சோலைகளிலும். [4] அழகிய தடாகங்களிலும். [5] மா, அசோகு, முல்லை, தாமரை, குவளையென்பன. [6] குடையாகச் சந்திரனைக்கொண்ட அரங்கனுக்கு. [7] ஏவலர்கள். [8] அம்புகளை. [9] தேடி வைத்தலை நிகர்க்கும்.

45. [1] உன்னுடைய மார்பின்கண் இருப்பது யாது? [2] கொங்கை; சுவர்க்க லோகம். [3] சிறந்த அறச்செயல் புரிந்தவர்கள் விருப்பத்துடன் சென்று சேர்தற்குரிய இடமோ? [4] கொங்கை; மேகம். [5] இன்பத்திற்கேதுவான மழை பெய்வதோ. [6] கொங்கை; செல்வம். [7] வறியனாய் ஆதரவற்ற எனக்கு.

உரமிசையென்கொல் என்ற வினாவிற்குக் கொங்கையென்று விடையிறுப்பாள், அதன் பரியாயச் சொற்களாகிய சொர்க்கம், பயோதரம், தனம் என்று கூறுதலும், அவன் அவள் கருத்துணரான் போன்று அச்சொற்களுக்குச் சுவர்க்கலோகம், மேகம், செல்வம் எனப் பொருள்கொண்டு இன்ப உரையாடலும் காண்க. ஏகாரங்கள் வினாப்பொருளன.

3, 5, 7 இவ்வெண்ணுள்ள தொடர்கள் முறையே உயர்ந்த தவஞ் செய்தவர்கள், விருப்புடன் தழுவுதற்குரிய இடமோ, இன்பமாகிய மழை பொழிவதோ, இளம் பருவத்தனாய் மணமின்றித் தனித்திருக்கின்ற எனக்குக் கொடுக்கலாம் என்ற பொருளுக் தருவனவா தலுணர்க.

46. வன்மதக் களிறன் னானோர்[1] வயவனோர்[2]வனிதை முன்போய்த்
[3]தன்மைமுன்னிலைப்பே ரியார்க்குத் தகு[4]மஃ துரைக்க வேண்டு
[5]மென்னமற் றவளெ னக்கு முனக்குமீங் [6]கிசையு மென்றாள்
[7]அன்னவன்[8]போது மீதென் றகத்திடை யுவகை பூத்தான்.

47. மெல்லியன்[1]மகளி ராயம் விர[2]வொரு மடந்தை கொங்கை
[3]புல்லுதற் [4]கலகில் காதல் பூண்டவ [5]னொருவ [6]னாங்கு
[7]வில்வமென் கனியி னென்று தொடுதலு [8]நோக்கி [9]மேவு
மல்லிகை முகையி னென்று மலரொன்று கொய்து நின்றாள்.

நீர்விளையாட்டு

48. [1]சமரவேற் கண்ணி னாளோர் தையல்வண் புனல்வாய்க்
கொண்டாங்
[3]குமிழ்தலு [4]மதனை [5]நேருற் றொருவன்றன் வாயேற்
றுண்டான்
அமிர்தமோ வனைய தென்றா [6]னொருவனங் கதனுக் [7]கன்னான்
குமுதமென் மலரிற் றீந்தேன் [8]கைக்குமோ குடித்தா
லென்றான்.

---

46. [1] வீரன். [2] பெண். [3] யான் நீ யென்னும் பெயர்கள். [4] அப்பொருத்தத்தை [5] என்று கூற. [6] பொருந்தும். [7] அவ்வீரன். [8] இதுவே அமையுமென்று. யான் நீ யென்பன, யான் வேறு நீ வேறெனாது யானே நீ நீயே யான் என்னும் ஒற்றுமையுணர்த்துவனவாம்

47. [1] மகளிர் கூட்டத்தில் கலந்திருக்கின்ற. [2] ஒரு நங்கையின். [3] தழுவுதற்கு. [4] அளவில்லாத. [5] ஓர் ஆடவன். [6] அவள்முன் நின்று. [7] வில்வப்பழம் ஒன்றைத் தீண்டிய அளவில். [8] அவன் குறிப்பினையறிந்து. [9] அவ்விடத்துப் பொருந்திய மல்லிகை அரும்பு ஒன்றையும் அதன் மலர் ஒன்றையும் பறித்து நின்றாள் என்பதாம்.

தலைவன் வில்வக் கனியைத் தீண்டியது தலைவியின் தனங்களைத் தழுவுங்குறிப்பை உணர்த்திற்றென்றும், அவள் ஓர் மல்லிகையரும்பையும் அதன் மலர் ஒன்றையும் பறித்தது, இவ்வரும்பு மலரும் காலமாகிய இரவில் வருக என்னும் குறிப்பை உணர்த்திற்றென்றுங் காட்டியவாறும்.

பிறர் கருத்தை யறிந்துகொண்டு அக்கருத்தோடு கூடிய செய்கையால் எதிர்மொழி கொடுத்தலால் இது நுட்ப அணியாம்.

48. [1] போர். [2] நீரை வாயில் அடக்கிக்கொண்டு. [3] கொப்பளித்த அளவில். [4] அவ்வுமிழ் நீரை. [5] எதிர் நின்று. [6] பிறனொருவன். [7] அந்நீர் பருகினவன். [8] கசக்குமோ.

குமுதமலர் வாயினையும் தேன் வாயில் ஊறும் நீரையும் உணர்த்தும். "பாலொடு தேன்கலந்தற்றே பணிமொழி, வாலெயிறூறியநீர்" என்றது பொதுமறை.

49. சேலன கருங்கண்[1]சேப்பச் செய்யவாய் விளர்ப்பக் கூந்தல்
[2]பாலுற வவிழ்ந்து லாவ நிற்குமோர் பாவை தன்னை
[3]மாலனை னவடன்[4]காந்தன் [5]வடிவிதென் னென்னவோர் தையல்
ஏல[6]நீர் தோய்ந்திட் டான்மற் [7]றெவ்வண மிருப்ப தென்ன.

உண்டாட்டு

50. [1]குடித்தவ ளொருத்தி [2]வேரிக்
குழிசியின் மதியை நோக்கிப்
படுத்திமுன் னென்னையின் றீண்டுப்
[4]பதுங்கிடில் விடுவ னோவென்
[5]றெடுத்தலைத் திடக்[6]கை யிட்டாள்
காண்கில ளெதிர் [7]வா னோக்கி
விடுத்ததிக் குழிசி யென்ன
வெகுண்டுதைத் துடைத்திட் டாளால்.

---

49. 1 சிவப்ப. 2 பக்கம். 3 திருமாலையொத்தவனாகிய. 4 கணவன். 5 இங்ஙனம் உருவம் வேறுபடுதற்குக் காரணம் என்னை என்று வினவ. 6 நீரில் மூழ்கினால். 7 யாங்ஙனம் இருக்குமென்று விடைகூற. நீர் தோய்ந்திட்டால் என்பதற்கு. நீவிர் என்னைத் தழுவினால் என்ற பொருளும் தோன்றும்.

கண் சேத்தல் முதலியன புனல் விளையாட்டின்கண்ணும் கலவிக் கண்ணும் ஒப்ப நிகழ்வனவாதல் உணர்க.

50. 1 மதுவருந்தினவள். 2 கள் வைத்திருக்கும் பானையில். 3 முன்பு என்னைத் துன்பப்படுத்தினாய். 4 இப்பானையினுள் ஒளித்திருந்தால். 5 அதனைப் பிடித்து வருத்த. 6 கையைக் குழிசியினுள் இட்டாள். 7 வானத்தின்கண் மதி யிருத்தலைக்கண்டு.

பரஞ்சோதி முனிவர் இயற்றிய
திருவிளையாடற் புராணம்

**மதுரைக்காண்டம்**

காப்பு

சித்தி விநாயகர்

1. சத்தி யாய்ச்சிவ மாகித் [1]தனிப்பர
முத்தி யான [2]முதலைத் துதிசெயச்
[3]சுத்தி யாகிய சொற்பொருள் [4]நல்குவ
[5]சித்தி யானைதன் செய்யபொற் பாதமே.

சபாநாயகர்

2. [1]உண்மையறி வானந்த வுருவாகி யெவ்வுயிர்க்கு முயிராய் [2]நீரின்
தண்மையனல் வெம்மையெனத்[3]தனையகலா திருந்து[4]சரா சரங்க ளீன்ற
பெண்மையுரு வாகிய[5]தன் னானந்தக் கொடிமகிழ்ச்சி பெருக யார்க்கும்
[6]அண்மையதா யம்பலத்து ளாடியருள்[7]பேரொளியை யகத்துள் வைப்பாம்.

---

1. [1] ஒப்பற்ற பரமுத்திப்பேறாகியும் உள்ள. [2] முதற்கடவுளை. [3] தூய்மையவான. [4] அருளுவன. [5] யானை முகத்தினையுடைய சித்தி விநாயகக்கடவுளின். துதி செய்யப் பாதங்கள் நல்குவ எனக் கூட்டுக.
சொற்பொருள் வடிவான அம்மையப்பராம் முதற்பொருளைத் துதித்தற்குச் சொல்லும் பொருளும் நல்குதல் உறுதியென்பார் ‘நல்குவ’ என்றார்.

2. [1] சத்து சித்து ஆனந்த வடிவமாகி. [2] நீரில் தட்பமும் நெருப்பில் வெப்பமும் நீங்காமைபோல. [3] தன்னை நீங்காதிருந்து. [4] இயங்குவனவும் நிற்பனவுமாகிய எல்லாப் பொருள்களையும் பெற்ற. [5] சிவகாமவல்லியார். [6] அணித்தாய். [7] பெரிய ஒளிப்பிழம்பான கூத்தப்பெருமானை.

சோமசுந்தரர்

3. சடைமறைத்துக் கதிர்மகுடந் தரித்துநறுங் கொன்றையந்தார் [1]தணந்து [2]வேப்பந்
தொடைமுடித்து விட[3]நாகக் கலனகற்றி மாணிக்கச் சுடர்ப்பூ ணேந்தி
[4]விடைநிறுத்திக் கயலெடுத்து[5]வழுதிமரு மகனாகி [6]மீன நோக்கின்
மடவரலை[7]மணந்துலக முழுதாண்ட[8] சுந்தரனை வணக்கஞ் செய்வாம்.

தடாதகைப்பிராட்டியார்

4. [1]செழியர்பிரான் திருமகளாய்க்[2]கலைபயின்று முடிபுனைந்து செங்கோ லோச்சி
முழுதுலகுஞ்[3] சயங்கொண்டு திறைகொண்டு[4]நந்திகண [5]முனைப்போர் சாய்த்துத்
[6]தொழுகணவற் கணி[7]மணமா லிகைசூட்டித் தன்மகுடஞ் சூட்டிச் செல்வந்
தழைவுறுதன் னரசளித்த[8]பெண்ணரசி யடிக்கமலந் தலைமேல் வைப்பாம்.

---

3. 1 நீக்கி. 2 வேப்ப மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையை யணிந்து. 3 பாம்புப் பணி. 4 இடபக் கொடியை உயர்த்தாது நிறுத்தி. 5 மலையத்துவச பாண்டியன். 6 மீன்போன்ற கண்களையுடைய தடாதகைப் பிராட்டியாரை. 7 திருமணஞ் செய்து. 8 சோமசுந்தரக் கடவுளை.

4. 1 பாண்டியர் தலைவனாகிய மலையத்துவசன். 2 எல்லாக் கலைகளையுங் கற்று. 3 வெற்றிகொண்டு. 4 நந்திதேவர் முதலிய சிவகணங்களை. 5 போர்முனையில் தோல்வியுறச் செய்து. 6 யாவராலும் வணங்கத்தகும் கொழுநனுக்கு. 7 மண மாலை. 8 மங்கையர்க்கரசியாகிய தடாதகைப் பிராட்டியாரின்.

தட்சணாமூர்த்தி

5. [1]கல்லாலின் புடையமர்ந்து நான்மறை[2]யா றங்க[3]முதற் கற்ற [4]கேள்வி
வல்லார்க [5]ணால்வருக்கும்[6]வாக்கிறந்த பூரணமாய் மறைக்[7]கப் பாலாய்
[8]எல்லாமா யல்லதுமா [9]யிருந்ததனை[10]யிருந்தபடி யிருந்து காட்டிச்
[11]சொல்லாமற் சொன்னவரை[12] நினையாம னினைந்து[13]பவத் தொடக்கை வெல்வாம்.

சித்தி விநாயகக் கடவுள்

6. உள்ளமெனுங்[1]கூடத்தி [2]லூக்கமெனுந் தறிநிறுவி யுறுதி யாகத்
தள்ளரிய வன்பென்னுந்[3]தொடர்பூட்டி[4]யிடைப்படுத்தித் [5]தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக் களித்துண்டு கருணை யென்னும்
[6]வெள்ளமதம் பொழி[7]சித்தி வேழத்தை நினைந்து[9]வரு வினைக டீர்ப்பாம்.

---

5. [1] கல்லாலமரத்தின் கீழிருந்து. [2] சிட்சை, வியாகரணம், நிருத்தம், கற்பம் சந்தம் சோதிடம் என்பன. [3] முதலானவற்றை. [4] கேட்டலில் வல்லுநர்கள். [5] சனகர், சனந்தரர், சனாதரர், சனற்குமாரர். [6] சொல்லின் எல்லையைக் கடந்த நிறைவாய். [7] அப்பாற்பட்டதாய். [8] "ஒன்று நீயல்லை யன்றி யொன்றில்லை" என்பது திருவாசகம். [9] உள்ள தன் உண்மையை; வினையாலணையும் பெயர்; இருந்த தன்னையெனவும் பிரிக்கலாம். [10] மோன முத்திரையத் தனாய் உள்ளபடியிருந்து. [11] குறிப்பாலுணர்த்திய தட்சணாமூர்த்தியை. [12] இடையறாமல் நினைந்து. [13] பிறவிக்கட்டாகிய பகையை.

6. [1] யானை கட்டுமிடம். [2] மனவுறுதியாகிய கட்டுத்தறியை நிறுத்தி. [3] சங்கிலி. [4] அதிலகப்படுத்தி. [5] வன்கண்மையான ஆணவ மலத்தொடர்புள்ள வஞ்ச வினைகளையுடைய சீவபோதமாகிய கவளத்தைக் கொடுக்க. [6] மதப்பெருக்கை. [7] சித்திவிநாயகக் கடவுளாகிய யானையை. [8] பிறவிதோறும் தொடர்ந்து வருகின்ற வினைகளை. உறுதியாகப் பூட்டி எனக்கூட்டுக.

சித்தி விநாயகரை வேழம் என்றதற்கேற்ப உள்ளமுதலியவற்றைக் கூடம் முதலியவாக உருவகப்படுத்திக் கூறியது இயைபு உருவக அணியாம்.

முருகக்கடவுள்

7. [1]கறங்குதிரைக் கருங்கடலுங் [2]காரவுணப் பெருங்கடலுங்
கலங்கக் கார்வந்
துறங்கு[3]சிகைப் பொருப்புஞ்[4]சூ ருரப்பொருப்பும்
பிளப்பமறை யுணர்ந்தோ ராற்றும்
அறங்குலவு[5]மகத்தழலு மவுணமட வார்[6]வயிற்றி னழலு மூள
[7]மறங்குலவு வேலெடுத்த குமரவேள் சேவடிகள் வணக்கஞ்
செய்வாம்.

ஆளுடையபிள்ளையார்

8. [1]கடியவிழ்[2]கடுக்கை வேணித்[3] தாதைபோற்[4]கனற்கண்[5]மீனக்
கொடியனை[6]வேவ நோக்கிக் குறையிரந் தனையான் கற்பிற்
பிடியன[7]நடையாள்[8]வேண்டப் பின்னுயி [9]ரளித்துக் காத்த
[10]முடியணி மாடக் காழி[11]முனிவனை வணக்கஞ் செய்வாம்.

---

7. [1] ஒலிக்கின்ற. [2] கரிய அசுரப்படையாகிய பெரிய கடலும். [3] உச்சியையுடைய கிரவுஞ்ச மலையும். [4] சூரபன்மாவின் மார்பாகிய மலையும். [5] வேள்வித் தீயும். [6] சோகத்தீயும். [7] வீரம்பொருந்திய.

சூரபன்மன் கடல் நடுவில் மாமரமாய்த் தோன்றி நின்ற காலை முருகக்கடவுள் அதனைத் தமது வேலால் துணித்தன ராதலின் கடல்கலங்குவதாயிற்று. "பாயிரும் பனிக்கடல் பார்துகள் படப்புக்கு...நோயுடை நுடங்குசூர் மாமுதல் தடிந்து...மாய அவுணர் மருங்கறத் தபுத்தவேல்... குருகொடு பெயர்பெற்ற மால்வரை யுடைத்து" என்னும்பரிபாடற் பகுதிகள் ஈண்டு நோக்கத்தக்கன.

8. [1] நறுமணம். [2] கொன்றை மலர். [3] தந்தையாகிய சிவபிரான் செய்தருளியது போல. [4] வெப்பு நோயாகிய தீயின்கண். [5] பாண்டியனை. [6] வெதும்பி வருந்தும்படி. [7] மங்கையர்க்கரசியார். [8] வேண்டிக்கொண்டதன் பின்பு. [9] அப்பாண்டியற்கு உயிரை நல்கி. [10] சிகரம். [11] திருஞானசம்பந்தப் பெருமானை.

"கனற்கண்...காத்த" என்பது சிலேடை. தழல்விழியால் மீனக் கொடியையுடைய மன்மதனை யெரியும்படி பார்த்தருளி, அவன் மனைவியாகிய இரதிதேவி வேண்டிக்கொள்ளப் பின்பு அம்மன்மதனுக்கு உயிரை நல்கிக் காத்தருளிய எனச் சிவபெருமானுக்கேற்பப் பொருளுரைத்துக்கொள்க. தந்தையின் இயல்பு பிள்ளையினிடத்தும் அமையுமென்பது காட்டியவாறு

ஆளுடைய அரசுகள்

9. [1]அறப்பெருஞ் செல்வி பாகத் தண்ண[2]லஞ் செழுத்தா லஞ்சா
[3]மறப்பெருஞ் செய்கை மாறு[4]வஞ்சக ரிட்ட நீல
நிறப்பெருங் கடலும் யார்க்கு நீந்துதற் கரிய வேழு
பிறப்பெனுங் கடலு[5]நீத்த பிரானடி வணக்கஞ் செய்வாம்.

ஆளுடைய நம்பிகள்

10. [1]அரவக லல்கு லார்பா லாசை[2]நீத் தவர்க்கே [3]வீடு
தருவமென் றளவில் [4]வேதஞ் சாற்றிய [5]தலைவன் றன்னைப்
பரவைதன் புலவி[6]தீர்ப்பான் [7]கழுதுகண் படுக்கும் [8]பானாள்
இரவினில் [9]தூது கொண்டோ னிணையடி முடிமேல்
வைப்பாம்.

ஆளுடைய அடிகள்

11. [1]எழுதரு மறைக டேறு விறைவனை [2]யெல்லிற் கங்குற்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமே லேறத் [3]துளும்புகண் ணீருண் மூழ்கி
அழுதடி யடைந்த [4]அன்ப னடியவர்க் கடிமை செய்வாம்.

---

9. [1] முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்த உமையம்மையார். [2] திருவைந்தெழுத்தாகிய புணையால். [3] பெரிய பாவச் செயல்கள். [4] அமணர்கள் கற்றூணோடு பிணித்து இட்ட. [5]திருநாவுக்கரசர்.

" இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்க ளேறிட
அருளுமெய் யஞ்செழுத்து அரசை யிக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ " எனச் சேக்கிழார்

பெருமான் கூறுமாறு காண்க.

10. [1] பாம்பின் படம். [2] ஒழித்தவர்க்கே. [3] பேரின்ப வீட்டை. [4] வேதங்களால் கூறியருளிய. [5] முதல்வனுகிய சிவபிரானை. [6] நீக்கும்பொருட்டு. [7] பேய்களும் உறங்குகின்ற. [8] நள்ளிரவில். [9] சுந்தரமூர்த்தி நாயனர்.

11. [1] எழுதப்படாத வேதங்களாலும். [2] பகற்பொழுதிலும் இராப்பொழுதிலும் உள்ள

### சண்டேசுரரும் மற்றை அடியார்களும்

12. [1]தந்தைதா ளொடும்பிறவித்[2]தாளெறிந்து
திருத்தரிரு தாளைச் சேர்ந்த
[3]மைந்தர்தாள் [4]வேதநெறி [5]சைவநெறி
[6]பத்திநெறி வழாது வாய்மெய்
சிந்தைதா னரனடிக்கே செலுத்தினராய்ச்
[7]சிவாநுபவச் செல்வ ராகிப்
[8]பந்தமாந் தொடக்கறுத்த [9]திருத்தொண்டர்
தாள்பரவிப் பணிதல் செய்வாம்.

### நாட்டுச் சிறப்பு

மேகத்தின் எழுச்சி

13. [1]தெய்வ நாயக னீறணி மேனிபோற் [2]சென்று
[3]பௌவ மேய்ந்துமை மேனிபோற் பசந்துபல் லுயிர்க்கும்
[4]எவ்வ மாற்றுவான் [5]சுரந்திடு மின்னருளென்னக்
[6]கௌவை நீர்சுரந் தெழுந்தன [7]கனைகுரல் மேகம்.

---

ஆறுவகைக் காலங் களிலும்; அவை—விடியல், நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை என்பன. [3] ததும்பி வடிகின்ற. [4] மணிவாசகப் பெருமான். "பூசனை யுகந்தென் சிந்தையுட் புகுந்து பூங்கழல் காட்டிய பொருளே." "அழு மதுவேயன்றி மற்றென் செய்கேன் பொன்னம்பலத்தரசே" என்பன அடிகள் திருவாக்கு.

12. [1] தந்தையாகிய எச்சதத்தரின் பாதங்களோடு. [2] வேரையுங்களைந்து. [3] சிவ. குமாரராகிய சண்டேசுரரின் திருவடிகளையும். [4] வைதிகம். [5] ஆகமநெறி [6] இவ்விரண்டினும் மேற்பட்ட அன்புநெறி. [7] சிவாநுபூதிமான்களாகி. [8] பாச மாகிய கட்டு. [9] பிற அடியார்கள்.

13. [1]தேவர்களுக்குத் தலைவனாகிய சிவபெருமான். [2] (வெண்ணிறத்தோடு) போய். [3] கடல் நீரைப் பருகி. [4] பிறவித் துன்பத்தை நீக்குதற்பொருட்டு. [5] இனிய திருவருளைச் சுரந்திடுதல்போல. [6] ஒலி. [7] ஒலிக்கின்ற குரலையுடைய மேகங்கள். மேகம் எவ்வம் மாற்றுதலாவது: வெயில் வெப்பம் உணவின்மை என்பவற்றைப் போக்குதலாம்.

மேகம் பொதியத்தில் மழைபெய்தல்

14. [1]முனித னீள்[2]வரை யுச்சிமேன் முழங்கி[3]வா னிவந்து
[4]தனித [5]நீர்மழை பொழிவன தடஞ்சிலை யிராமன்
[6]கனித னீர்மையால் ஆலவாய்க் கண்ணுதன் முடிமேல்
[7]புனித நீர்த்[8]திரு மஞ்சன மாட்டுவான் போலும்.

அருவிநீர் வீழ்ச்சி

15. உடுத்த [1]தெண்கடன் மேகலை யுடைய[2]பார் மகடன்
இடத்து தித்தபல் லுயிர்க்கெலா மிரங்கித்தன் [3]கொங்கைத்
தடத்து நின்[4]றிழி பாலெனத் தடவரை [5]முகடு
தொடுத்து வீழ்வன [6]விழுமெனத் [7]தூங்குவெள் ளருவி.

பொருநையாற்று நீர்ப்பெருக்கின் சிறப்பு

16. [1]வல்லைதா [2]யிருபால் வைகுஞ் [3]சிவாலய மருங்கு மீண்டி
[4]முல்லை[5]யா னைந்துந் தேனுந் திரைக்கையான் முகந்து வீசி
நல்ல[6]மான் மதஞ்சாந் தப்பி நறுவிரை மலர்[7]தூய் [8]நீத்தம்
செல்லலாற் [9]பூசைத் தொண்டின் [10]செயல்வினை [11]மாக்கள்
போலும்.

---

14. [1] அக்த்திய முனிவருடைய. [2] பொதியில்மலை. [3] வானின்கண் உயர்ந்து. [4] முழக்கம்; மேகத்திற்கு ஆகுபெயர். [5] நீராகிய மழையைப் பொழிதல். தனிதமழை நீர்பொழிவன என இயைத்தலுமாம். [6] கனிதல் தன்மையோடு. [7] தூய்மையான நீரால். [8] திருமுழுக்காட்டுதலை. பொழிவன, ஆட்டுவான் என்பன ஈண்டுத் தொழிற்பெயராளவாய் நின்றன.

15. [1] தெளிந்த கடலை ஆடையாக உடைய. [2] நிலமகள். [3] கொங்கையினிடத்தினின்றும் (சொரிய). [4] பால் ஒழுகுதல்போல. [5] உச்சியினின்றும். [6] இழுமென்னும் ஒலியோடு. [7] ஒழுகுகின்ற. அருவி பாலென வீழ்வனவாமென்க.

16. [1] விரைந்து தாவி. [2] கரையின் இரண்டு பக்கங்களிலும். [3] சிவாலயங்களிடத்தில்; உம்மை அசை. [4] முல்லை நிலத்திலுள்ள. [5] ஆவின் பால் தயிர் நெய் கோநீர் கோமயம் என்பன. [6] கத்தூரியையும் சந்தனத்தையும் பூசியும். [7] தூவியும். [8] பொருநையாற்றுவெள்ளம். [9] சிவபூசைத் தொண்டின். [10] செயலாகிய தொழிலையுடைய. [11] அடியார்கள்.

17. அரும்பவி [1]ழனங்க வாளி [2]யலைதர [3]ஆகம் பொன்போர்த்
[4]திரங்கி[5]வா லன்ன மேந்தி [6]யிருகையுஞ் [7]சங்கஞ் சிந்தி
[8]மருங்குசூழ் [9]காஞ்சி தள்ளி [10]வரம்பிற வொழுகும் [11]வாரி
[12]பரம்பரற் [13]கையம் பெய்யும் [14]பார்ப்பன மகளிர் போலும்.

யாற்றுநீர் கலங்கித் தெளிதல்

18. மறைமுதற் கலைக ளெல்லா [1]மணிமிடற் றவனே யெங்கும்
நிறை[2]பர மென்றும் [3]பூதி சாதன [4]நெறிவீ டென்றும்
அறைகுவ தறிந்துந் தேறார் [5]அறிவெனக் கலங்கி [6]யந்த
முறையின்வீ [7]டுணர்ந்தோர் போலத் தெளிந்தது [8]மூரி
வெள்ளம்.

கடல்நீர் இனிய நீராதல்

19. [1]இழிந்த மாந்தர்கைப் பொருள்களும் [2]இகபரத் தாசை
கழிந்த [3]யோகியர் கைப்படில் [4]தூயவாய்க் களங்கம்
ஒழிந்த வாறுபோ [5]லுவரியுண் டுவர்கெடுத் தெழிலி
பொழிந்த நீரமு தாயின [6]புவிக்கும்வா னவர்க்கும்.

---

17. [1] மன்மத பாணமாகிய மலர்களை. [2] அலைகள் கொண்டுவர. [3] தன்னிடம் முழுதும் பொன்மணலையுடையதாய். [4] ஒலித்து. [5] வெண்ணிறமான அன்னப்புட்கள். [6] இரண்டு கரைகளிலும். [7] சங்குகள். [8] பக்கம். [9] காஞ்சி மரம். [10] கரை உடையும்படி. [11] பொருநை வெள்ளம். [12] சிவபெருமானுக்கு. [13] பிச்சை யிடும். [14] தாருகாவனத்து முனிவர் மனைவியர்.
மகளிர்க்கு :—மன்மதபாணங்கள் வருத்த, உடல் முழுதும் பொன்போன்ற தேமல் பரவப்பெற்று, மனங்கவன்று, வெண்ணிறமான சோற்றைத் தாங்கி, இரண்டு கைகளிலுமுள்ள வளையல்களை உதிர்த்து, இடையில் அணிந்த காஞ்சி யென்னும் அணியை நழுவவிட்டு, கற்பு நிலைகெட ஒழுகும் எனக்கொள்க.

18. [1] நீலமணி. [2] பரம்பொருளென்றும். [3] திருநீறு முதலிய சாதனங்களே ; அவை. உருத்திராக்கம், திருவைந்தெழுத்து என்பன. [4] வீடுபேற்றுக்கு வழியென்றும். [5] அறிவின்கலக்கத்தைப்போல. [6] அம்மறைமுதலியன கூறு முறையால் [7] உணர்ந்த பெரியோரின் உள்ளத்தெளிவுபோல. [8] பெரிய வெள்ளம்.

19. [1] கீழ் மக்கள். [2] இம்மை மறுமைப் பயன்களில். [3] சிவயோகியர். [4] குற்றத்தி னீங்கித் தூய்மையாயினவாறுபோல. [5] கடல் நீரைப் பருகி. [6] நிலவுலகத்துள்ள உயிர்கட்கும்.

### கடல்நீர் வேறுவேறு பெயர்பெறுதல்

20. [1]ஈறி லாதவ ளொருத்தியே [2]யைந்தொழி லியற்ற
[3]வேறு வேறுபேர் பெற்றெனா [4]வேலைநீ ரொன்றே
ஆறு [5]கால்குளங்[6]கூவல்[7]குண் டகழ்கிடங் கெனப்பேர்
மாறி[8]யீறில்வான் பயிரெலாம் வளர்ப்பது மாதோ.

### உழுதற் சிறப்பு

21. [1]களமர்கள்[2]பொன்னேர் பூட்டித் தாயர்வாய்க் [3]கனிந்த பாடற்
குளமகிழ் [4]சிறாரின்[5]ஏறு மொருத்தலு [6]மூவகை தூங்க
வளமலி [7]மருதம் பாடி[8]மனவலி கடந்தோர் வென்ற
[9]அளமரு[10]பொறிபோ லேவ லாற்ற[11]ஆள் வினையின்
மூண்டார்.

### கடைசியர் களைபறித்தல்

22. [1]பட்பகை யாகுந் தீஞ்சொற்[2]கடைசியர் பவளச் செவ்வாய்க்
குட்பகை யாம்ப லென்று மொண்ணறுங் [3]குவளை நீலங்
[4]கட்பகை யாகு மென்றுங் கமலநன் முகத்துக் [5]கென்றுந்
[6]திட்பகை யாகு மென்றுஞ் [7]செறுதல்போற்[8]களைதல்
செய்வார்.

---

20. [1] அழிவில்லாதவளாகிய சிவசத்தி ஒருத்தியே. [2] படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல். [3] பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியா சத்தி. [4] கடல். [5] வாய்க்கால். [6] கிணறு. [7] ஆழமாகத் தோண்டப்பட்ட கிடங்கு. [8] அளவில்லாத.

21. [1] உழவர்கள். [2] புதிதாகப் பூட்டப்படும் ஏர் பொன்னேர் எனப்படும். [3] அன்பு கனிந்த பாடலுக்கு. [4] சிறுவர்களைப்போல. [5] எருதுகளும் எருமைக் கடாக்களும். [6] மகிழ்ச்சிமிக. [7] மருதப்பண்ணைப் பாடி. [8] மனத்தின் வலிமையைக் கடந்தவர்களால். [9] சுழலுகின்ற. [10] ஐம்பொறிகளும், அவர் ஏவிய வழி நிற்றல் போல. [11] உழுதொழிலில் தலைப்பட்டார்கள்.

22. [1] பண்ணுக்குப் பகையாகிய. [2] உழத்தியர். [3] செங்குவளை மலர்களும், கருங்குவளை மலர்களும். [4] கண்ணுக்குப் பகை. [5] எந்நாளும். [6] திண்ணிய பகை. [7] அழித்தல்போல. [8] வேரோடும் பறித்தெறிவார்.

மள்ளர்கள் களைபறித்தல்

23. [1]கடைசியர் முகமுங் காலுங் கைகளுங் கமல மென்னார்
படைவிழி குவளை யென்னார் பவளவாய் குமுத மென்னார்
[2]அடையவுங் களைந்தார் மள்ளர் [3]பகைஞரா யடுத்த வெல்லை
[4]உடையவ னாணை யாற்றால் [5]ஒறுப்பவர்க் [6]குறவுண் டாமோ.

நெற்பயிரின் வளர்ச்சி.

24. [1]புரையற [2]வுணர்ந்தோர் நூலின் [3]பொருளினுள் ளடங்கி [4]யந்நூல்
[5]வரையறை கருத்து மான வளர்[6]கருப் புறம்பு தோன்றிக்
[7]கரையமை கல்வி[8]சாலாக்[9]கவிஞர்போ லிறுமாந் தந்நூல்
உரையென [10]விரிந்து[11] கற்பின் மகளிர்போல் [12]ஒசிந்த தன்றே.

நெற்கதிர் விளைதல்

25. [1]அன்புறு[2]பத்தி வித்தி [3]யார்வநீர் பாய்ச்சுந் தொண்டர்க்
[4]கின்புரு வான வீச னின்[5]னருள் விளையு மாபோல்
வன்புறு கருங்கான் மள்ளர் வைகலுஞ்[6]செவ்வி நோக்கி
[7]நன்புல முயன்று காக்க விளைந்தன நறுந்தண்[8]சாலி.

---

23. 1 "கடைசியர்...என்னார். கமலமலர்கள் (தங்கள்) உழத்தியருடைய முகமும் காலும் கைகளும் ஆகும் என்று கருதாமலும் என மாற்றுக. பின் வருபவற்றையும் இவ்வாறே கொள்க. 2 (அம்மலர்கள்) எல்லாவற்றையும். 3 (உறவினராயினும்) பகைவராய் வந்த காலத்தில். 4 ஆண்டானுடைய ஆணைவழி நின்று. 5 தண்டிப்பவர்க்கும். 6 அவ்வுறவை நினைத்தல் கூடுமோ. என்னார் மூன்றும் எச்சம். வேற்றுப்பொருள் வைப்பணி.

24. 1 (ஐயந்திரிபாகிய) குற்றம் நீங்க. 2 கற்றுணர்ந்தவர்கள் (இயற்றிய) நூலின்கண். 3 பொருள் (உள்ளடங்கியிருத்தல்) போல. 4 அந்நூற்பொருளின். 5 அளவைத் தெரிவிக்கின்ற கருத்துரையையொப்ப. 6 நெற்பயிரின் கருவானது. 7 இலக்கண வரம்பு. 8 நிரம்பாத. 9 புன்கவிஞர் (இறுமாத்தல்) போலத் தலை நிமிர்ந்து. 10 தலை விரிந்து. 11 கற்புடை மகளிர் (தலைவணங்குதல்) போல. 12 தலை வளைந்தது. கரு, அடங்கி தோன்றி இறுமாந்து விரிந்து ஒசிந்தது என்க.
"சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்" என்ற சிந்தாமணிப் பாடல் இதனைப் பிறிதொரு வகையாற் கூறிற்று.

25. 1 அன்புமிக்க. 2 பத்தியாகிய வித்தை விதைத்து ; அன்பின் முதிர்ச்சி பத்தியெனப் படும். 3 விருப்பமாகிய நீரை. 4 இன்பமே வடிவான. 5 அருளாகிய பயன். 6 பருவம் பார்த்து. 7 நல்ல விளை நிலங்களை. 8 நெற்பயிர்கள்.

### விளைவைப் பயன்படுத்து முறை

26. [1]கற்றைவை களைந்து தூற்றிக்[2]கூப்பி[3]யூர்க் காணித் தெய்வம்
[4]அற்றவர்க் [5]கற்ற வாறீந் [6]தளவைகண் டாறி லொன்று
கொற்றவர் [7]கடமை கொள்ளப்[8]பண்டியிற் கொடுபோய்த் [9]தென்று
டுற்றவர் சுற்றந் [10]தெய்வம் விருந்தினர்க் கூட்டி யுண்பார்.

### சிவனடியார்களை ஆதரிக்கு முறை

27. [1]துறவின [2]ரீச னேசத் தொண்டினர் பசிக்கு நல்லூண்
[3]திறவினைப் பிணிக்குத் தீர்க்கு மருந்[4]துடற் பனிப்புக் காடை
உறைவிடம் பிறிது நல்கி [5]யவரவ ரொழுகிச் செய்யும்
[6]அறவினை யிடுக்கணீக்கி [7]யருங்கதி யுய்க்க வல்லார்.

28. [1]நிச்சலு மீச னன்பர்[2]நெறிப்படிற் சிரூர்மேல் வைத்த
[3]பொச்சமி லன்பு மன்னர் புதல்வரைக் கண்டா லன்ன
அச்சமுங் கொண்டு[4]கூசி யடிபணிந் தினிய கூறி
[5]இச்சையா றொழுகி யுள்ளக் குறிப்பறிந் தேவல் செய்வார்.

---

26. [1] தொகுதியான வைக்கோலை. [2] நெல்லைப் பொலியாகக் குவித்து. [3] கிராம தேவதைகளுக்கும். [4] வறியவர்களுக்கும். [5] வரையறுத்தபடி. [6] அளந்து. [7] இறைப் பொருளாகக்கொள்ள [8] (எஞ்சியவற்றை) வண்டிகளிற் கொண்டு போய். [9] தென்புலத்தாராகிய பிதிரர். [10] தேவர். "தென்புலத்தார் தெய்வம்" என்னுந் திருக்குறளும் அதற்குப் பரிமேலழகர் எழுதிய உரையும் இங்கே அறிதற்பாலன.

27. [1] துறவிகள். [2] சிவபெருமான் இடத்து அன்பு செலுத்தும் அடியார்கள். [3] வினை வகையாலாகிய. [4] உடம்பிற் குளிரைப் போக்குதற்கு. [5] தத்தம் நிலையில் வழுவாது ஒழுகி. [6] அறச் செயலுக்கு. [7] அரிய வீட்டு நெறியில்.

28. [1] நாள்தோறும். [2] வழியில் எதிர்ப்பட்டால். [3] உண்மையான. [4] ஒடுங்கி. [5] (அவர்கள்) விருப்பின் வழி நடந்து.

திணைமயக்கம்

29. [1]கொல்லை யானிரை மேய்ப்பவர்[2]கோழிணர்க் குருந்தின்
[3]ஒல்லை தா[4]யதிற் படர்[5]கறிக் கருந்துண [6]ருகுப்ப
[7]முல்லை சோறெனத் தேன்[8]விராய் [9]முத்திழை சிற்றில்
எல்லை யாயமோ [10]டாடுப [11]வெயின்சிறு மகளிர்.

30. [1]கழிந்த தெங்கினெண்[2]பழம்பரீஇ முட்பலாக் கனி[3]கீண்
டழிந்த தே[4]னுவர்க் கேணிபாய்ந் தகற்றுவ வுவரை
வழிந்த தேன்மடற் [5]கேதகை மலர்நிழல் [6]குருகென்
[7]றெழிந்த தாமரைப் போதுபுக் கொளிப்பன கெண்டை.

போதியில் முதலியவற்றின் சிறப்பு

31. [1]பொதியி லேவிளை கின்றன சந்தனம் [2]பொதியின்
நதியி லேவிளை கின்றன முத்தமந் நதிசூழ்
[3]பதியி லேவிளை கின்றன தருமமப் பதியோர்
[4]மதியி லேவிளை கின்றன [5]மறைமுதல் பத்தி.

---

29. 1 முல்லை நிலத்தில். 2 செழித்த. 3 விரைவாகத் தாவி ஏறி. 4 அம்மரத்தில். 5 மிளகுக் கொடியின் கருநிறமுள்ள காய்க்கொத்துக்களை. 6 உதிர்ப்பார்கள். 7 முல்லையரும்புகளை. 8 கலந்து. 9 முத்துக்களாலியற்றப்பட்ட சிறிய வீட்டினிடத்து. 10 விளையாடுவர். 11 வேட்டுவச் சிறுமியர்.
எயினென்னும் சாதிப்பெயர் குறிஞ்சிநில மக்கட்கும் பாலை நில மக்கட்கும் உரியது. "ஆயர் வேட்டுவர் ஆடூஉத்திணைப் பெயர்" (தொல்—பொருள். 21) என்னுஞ் சூத்திரத்தில் வேட்டுவர் என்பது குறிஞ்சி நில மக்களாதல் காண்க. திணை மயக்கமென்பது:—ஈண்டு ஒரு நிலத்திற்குரிய கருப்பொருள்கள் மற்றொரு நிலத்தில் மயங்குதலாம். இச்செய்யுளில் முல்லையுங் குறிஞ்சியும் மயங்கிவந்தன. பிற்பகுதிக்கு வேறு கூறுதலுமுண்டு. 'அகிற்படர்' என்ற பாடத்திற்கு அகில் மரத்தில் படர்ந்த எனக்கொள்க.

30. 1 குலையினின்றும் நீங்கிய. 2 நெற்றுக்காய்களைச் சுமந்து. 3 கிழிபட்டு. 4 (நெய்தல் நிலத்துள்ள) உப்புக்கேணியில். 5 தாழை. 6 கொக்கு. 7 (அக்கொக்கு இருந்து) நீங்கிய. இது மருதத்திற்கும் நெய்தலுக்கும் மயக்கங் கூறிற்று.

31. 1 பொதிய மலையினிடத்தே. 2 பொதியிலில் தோன்றிய பொருநையாற்றிலே. 3 நகரங்களிலே. 4 அறிவிலே. 5 வேத முதல்வனாகிய சிவபெருமானிடத்து அன்பு.

### தென்னாட்டின் சிறப்பு

32. [1]கடுக்க வின்பெறு கண்டனுந் [2]தென்றிசை நோக்கி
அடுக்க வந்துவந் [3]தாடுவா [4]னுடலி னிளைப்பு
விடுக்க [5]ஆரமென் காறிரு முகத்திடை [6]வீசி
மடுக்க வுந்தமிழ் திருச்செவி [7]மாந்தவு மன்றோ.

33. [1]விடையு கைத்தவன் [2]பாணினிக் கிலக்கண [3]மேனாள்
வடமொ ழிக்குரைத் தாங்[4]கியன் மலயமா [5]முனிக்குத்
[6]திடமு றுத்தியம் மொழிக்[7]கெதி ராக்கிய [8]தென்சொன்
மடம கட்[9]கரங் கென்பது வழுதிநா டன்றோ.

### தமிழின் சிறப்பு

34. கண்ணு தற்பெருங் [1]கடவுளுங் [2]கழகமோ டமர்ந்து
[3]பண்ணு றத்[4]தெரிந் தாய்ந்தவிப் [5]பசுந்தமிழ் [6]ஏனை
மண்ணி டைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோல்
[7]எண்ணி டைப்படக் [8]கிடந்ததா வெண்ணவும் படுமோ.

---

32. [1] நஞ்சினால் அழகுபெற்ற. [2] தெற்கின்கண்ணதாகிய தமிழ்நாட்டை நோக்கி; தெற்கு முகமாக நின்று எனலுமாம். [3] ஆடுதல்; தொழிற்பெயர். [4] ஆடுதலால் உண்டான அயர்ச்சியை. [5] சந்தனச் சோலையில் தோய்ந்துவரும் மெல்லிய தென்றற்காற்று. [6] வீசப்பெற்று அதனை ஏற்கவும். [7] நுகரவும்.
கைலை முதலிய இடங்களை விட்டுத் தமிழ்நாட்டின்கண் ஆடுதலும், அதனுள்ளும், திருவாலங்காடு, சிதம்பரம், திருவாலவாய், திருநெல்வேலி, திருக்குற்றாலம் என்னும் திருத்தலங்களில் திருக்கூத்தாடுதலும் நோக்கி "தென்றிசை......... ஆடுவான்" என்றார்.

33. [1] சிவபெருமான். [2] பாணினிமுனிக்கு. [3] முன்னொரு காலத்தில். [4] தமிழிலக்கணத்தை. [5] அகத்தியருக்கு. [6] உறுதியாக அறிவுறுத்தி. [7] எதிர்மொழியாகச் செய்த. [8] தென் மொழியாகிய தமிழ் மாதுக்கு. [9] நடிக்குமிடம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது.

34. [1] சிவபிரானும். [2] கழகத்தின்கண்; உருபு மயக்கம். புலவரோடு எனினுமாம். [3] செப்பமுற. [4] ஆராய்ந்தறிந்த. [5] இளமைச் செவ்வி குன்றாத கன்னித்தமிழ். [6] "சிங்களஞ் சோனக" முதலிய பிற நிலங்களில். [7] எண்ணின்கட் பொருந்த. [8] அமைந்து கிடந்ததாக. இறைவன் தலைச்சங்கப் புலவராயிருந்து தமிழாராய்ந்ததனைக் களவியலுரை முதலியவற்றானறிக.

35. [1]தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது முதலை
உண்ட பாலனை யழைத்தது மெலும்புபெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததுங் [2]கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ [3]மறுபுலச் சொற்களோ சாற்றீர்.

அறம் வளர்தற் சிறப்பு

36. [1]வெம்மை யால்விளை [2]வஃகினும் வேந்தர்[3]கோல் கோடிச்
[4]செம்மை மாறினும் [5]வறுமைநோய் சிதைப்பினுஞ் சிவன்பாற்
பொய்ம்மை மாறிய பத்தியும் [6]பொலிவுங் [7]குன் றுவாத்
[8]தம்மை மாறியும் [9]புரிவது தருமமந் நாடு.

பாண்டி நாட்டின் பெருமை

37. உலகம் யாவையு மீன்றவ [1]ளும்பரு ளுயர்ந்த
திலக [2]நாயகி [3]பரஞ்சுடர் [4]சேயென மூன்று
தலைவ ரான்[5]முறை செய்தநா டிஃதன்றிச் [6]சலதி
சுலவு பாரி[7]னுண் டாகுமோ துறக்கத்து மஃதே.

---

35. [1] அடியார்கட்குத் தலைவனாகிய சிவபிரானை. [2] அழிவில்லாத. [3] வேறு நிலங்களில் வழங்கும் மொழிகளோ. சம்பந்தர் முதலான பெரியோர்கள் தமிழ்ப் பதிகங் களின் வாயிலாகச் செய்த அருஞ் செயல்கள் தமிழின் செயலாகக் கூறப்பட்டன. இவ்வரலாறுகளைத் திருத்தொண்டர் புராணத்தாலறிக.

36. [1] கோடை மிகுதியால். [2] குன்றினும். [3] செங்கோல் திறம்பி. [4] நடுநிலை பிறழ்ந்தாலும். [5] வறுமைப்பிணி வாட்டினாலும்; வறுமையும் பிணியும் என்றலும் பொருந்தும். [6] (சைவ) விளக்கமும்; இது திருநீறு அக்குமணி தரித்தல், திருவைந்தெழுத்து ஓதுதல் என்பவற்றால் வருவது. [7] குறையாதபடி. (பி-ம்) குன்றுவாய். [8] (அங்குள்ளார்) தங்களை விற்றாயினும். [9] அறஞ் செய் தற்கு இடமாயிருப்பது.

செங்கோல் கோடுதல், வெம்மையால் விளை வஃகுதல் முதலிய நிகழ்தற்கு ஏதுவாம் என்பதனை "கோல்நிலை திரிந்திடிற் கோள்நிலை திரியும், கோள்நிலை திரிந் திடில் மாரிவறங் கூரும், மாரிவறங் கூறின் மன்னுயிரில்லை" என்னும் மணி மேகலைப் பகுதியாலும் "கோள்நிலை திரிந்து நாழி குறைபடப் பகல்கள் மிஞ்சி" என்னும் சிந்தாமணிப் பாடலாலும் அறிக.

37 [1] சத்திகளுள் எனக்கொள்க. [2] உமாதேவி; ஈன்றவளும் திலகம்போல்வாளு மாகிய நாயகி என்க. [3] சிவபெருமான். [4] முருகக்கடவுள். [5] செங்கோல் செலுத்தப்பெற்ற. [6] கடல் சூழ்ந்த உலகத்தில். [7] வேறு நாடும் உளதோ.

இவர் மூவரும் முறையே தடாதகைப் பிராட்டி, சோமசுந்தர பாண்டியர், உக்கிர குமாரர் எனப் பெயர்தாங்கி ஆட்சிபுரிந்தமை மதுரைக் காண்டத்தால் உணரலாம்.

நகரச் சிறப்பு

38. கொங்கை யே[1]பரங் குன்றமுங் [2]கொடுங்குன் றுங் [3]கொப்பூழ்
அங்க மேதிருச் [4]சுழிய[5]லவ் வயிறு[6]குற் றாலம்
செங்கை [7]யேடக [8]மேனியே [9]பூவணந் திரடோள்
[10]பொங்கர் வேய்வனந் திருமுக [11]மதுரையாம் புரமே.

39. வடுவின் மாநில மடந்தைமார் பிடைக்கிடந் [1]திமைக்கப்
படு[2]வி லாரமே பாண்டிநா டாரமேற் பக்கத்
திடுவின் மாமணி [3]அதன்புற நகரெலா மிவற்றுள்
நடுவி [4]ணுயக மாமணி மதுரைமா நகரம்.

40. திரும கட்[1]கொரு தாமரைக் கூடமே திருமான்
[2]மரும கட்குவெண் டாமரை மாடமே ஞானந்
தரு[3]ம கட்கி[4]யோ கத்தணிப் பீடமே தரையாம்
பெரும கட்கணி திலகமே [5]யான திப் பேரூர்.

---

38. [1] திருப்பரங்குன்றம். [2] பிரான்மலை. [3] உந்தியாகிய உறுப்பு. [4] ஒரு திருப்பதி; உந்திக்கு உவமையாகிய நீர்ச்சுழியென்னும் பொருளுந் தோன்றுதல் காண்க. பின்வருவனவும் இங்ஙனமே கொள்க. [5] அழகிய வயிறு. [6] ஒரு சிவதலம்: சிறிய ஆலிலை. [7] திருவேடகம் என்னுந்தலம்; தாமரை. [8] உடல். [9] திருப்பூவணமென்னுந்தலம்; பூவின் நிறம். [10] சோலைகள் சூழ்ந்த திருநெல்வேலி; மூங்கிற்காடு. [11]சந்திரனிடத்துள்ள அமிழ்தினுற் சாந்தி செய்யப்பெற்றமையால் அந்நகர்க்கு இப்பெயராயிற்று என்பர். இதனை முகமாகக் கூறுதற்கண்ணும் இயைபுண்மை காண்க. பாண்டிநாடாகிய மகட்கு என்பது வருவிக்க.

39. [1] விளங்குகின்ற. [2] ஒளிபொருந்திய பதக்கமே. [3] அப்பாண்டி நாட்டின் புறத்துச் சூழ்ந்த நகரங்களெல்லாம். [4] தலைமைவாய்ந்த பெரியமணி.

40. [1]ஒப்பற்ற செந்தாமரை யில்லம். [2] கலைமகளுக்கு. [3] மலைமகளுக்கு. [4] ஒப்பற்ற யோக பீடம். [5] ஆனதாகிய இப்பெரிய நகரம் என்க. அன்றி, முற்றுகக் கொண்டு கூட முதலிய நான்கனெடுங் கூட்டி முடிப்பினும் அமையும். செல்வம், கல்வி, ஞானம் என்பவற்றுற் சிறந்தது என்பதாம்.

புறம்பணை

41. [1]ஒல்லொ லிக்கதிர்ச் [2]சாலிகள் புறந்தழீஇ யோங்க
[3]மெல்லி லைப்பசுங் கொடியினால் [4]வீக்குறு பூகம்
[5]அல்லெ னுங்[6]களத் தண்ணற னணி[7]விழாத் தருப்பைப்
புல்லொ டும்பிணிப் புண்டபொற் கொடிமரம் போலும்.

அகழி

2. [1]கண்ணி லாதவெங் கூற்றெனக் [2]கராங்கிடந் [3]தலைப்ப
மண்ணி னாரெவ ரேனுமிம் [4]மடுவிடை வீழ்ந்தோர்
தெண்ணி லாமதி [5]மிலைந்தவர்க் கொப்பெனச் [6]சிலரை
எண்ணி னா[7]ரிரு ணரகநீத் தேறினு மேறார்.

43. [1]குமிழ லர்ந்த[2]செந் தாமரைக் கொடி[3]முகிழ் கோங்கின்
[4]உமிழ்த ரும்பர ஞானமுண் [5]டுமிழ்ந்தவாய் [6]வேதத்
தமிழ றிந்து[7]வை திகமுடன் சைவமு நிறுத்தும்
அமிழ்த வெண்டிரை வையையு மொருபுறத் தகழாம்.

---

41, [1] ஒல்லென்ற ஒலியையுடைய. [2] நெற்பயிர்கள். [3] பசிய வெற்றிலைக் கொடியினால்; மெல்லிலை—வினைத்தொகை. [4] கட்டப்பட்டுள்ள பாக்குமரம். [5] இருள். [6] மிடற்றினையுடைய. [7] திருவிழாவின்கண்.

கமுகமரம் நெற்பயிர்கள் வெற்றிலைக்கொடி யென்பவற்றிற்குக் கொடிமரம் தருப்பைப்புல் கயிறு என்பவை உவமைகளாம்.

42. [1] கண்ணோட்டமில்லாத. [2] முதலை. [3] வருத்தம் செய்ய. [4] அகழியின்கண். [5] சடையில் அணிந்த இறைவனுக்கு. [6] சில தேவரை. [7] இருளாகிய நரகம்.

43. [1] குமிழம்பூ மலர்ந்த. [2] செந்தாமரை மலரையுடைய கொடியின்கண். [3] முகிழ்த்த கோங்கரும்பினின்றும். [4] பொழிந்த சிவஞானத்தை. [5] (ஆளுடைய பிள்ளையார்) தம் திருவாயால் வெளியிட்டருளிய. [6] தமிழ் வேதமாகிய தேவாரப் பாசுரத்தின் பெருமையையறிந்து; அஃது—“வாழ்க அந்தணர்” என்று தொடங்கும் பதிகமாம். [7] வேத நெறியோடு சைவ நெறியையும் நிலைபெறச் செய்த. குமிழ், தாமரை மலர், கொடி, கோங்கரும்பு என்பன அம்பிகையின் மூக்கு, முகம், திருமேனி, தனம் என்பவற்றை யுணர்த்தின.

“யாரறிவார் தமிழருமை யென்கின்றேன் என் அறிவீனமன்றோ இம்மதுரை மூதூர், நீரறியும்” என இவ்வாசிரியரே அந்தாதியிற் கூறுதல் காண்க.

மதிற்கோபுரம்

44. [1]புரங்க டந்தபொற் குன்றுகோ புரமெனச் [2]சுருதிச்
சிரங்க டந்தவர் தென்னரா யிருந்தனர் [3]திருந்தார்
உரங்க டந்திட [4]வேண்டினு முதவிசெய் [5]தவரால்
[6]வரங்க டந்திடப் பெறவெதிர் நிற்பது மானும்.

மதில்

45. [1]மகர வேலையென் றியானைபோன் [2]மழையருந் [3]தகழிச்
சிகர மாலைசூ ழும்மதில் [4]திரைக்கரந் துழாவி
[5]அகழ வோங்குநீர் வையையா லல்லது [6]வேற்றுப்
பகைவர் சேனையாற் பொரப்படும் பாலதோ வன்றே

சந்திரகாந்த மாளிகை

46. [1]ஆல நின்றமா மணிமிடற் [2]றண்ணல் [3]ஆனந்தக்
கோல நின்றசே வடிநிழல் குறுகினார் [4]குணம்போல்
வேலை நின்றெழு மதியெதிர் [5]வெண்ணிலாத் தெண்ணீர்
கால நின்றன [6]சந்திர காந்தமா ளிகையே.

---

**44.** [1] திரிபுரத்தை வெல்லுதற்கு வில்லாயிருந்த மேருமலை. [2] மறைமுடி. [3] பகைவரின் வலிமையை அடக்க. [4] இன்னும் வேண்டியிருந்தாலும். [5] அவ்விறைவரால். [6] வரங்கள் கொடுக்க.

குன்று கோபுரமென எதிர் நிற்பதுமானும் எனக் கூட்டுக.

**45.** [1] சுறா மீன்களையுடைய கடலென்று கருதி. [2] மேகங்கள் நீர் பருகுதற்கு இடமான. [3] அகழியின் அலை வரிசையால் சூழப்பட்ட. [4] அலையாகிய கைகளால். [5] தோண்டும்படி. [6] அயல்நாட்டுப் பகை மன்னர் படையால்.

மதில் வையையாலன்றிப் படையாற் பொரப்படும்பாலதன்று என்பதனை,
"வையைதன், நீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லால் நேராதார்
போர்முற்றொன் றறியாத புரிசைசூழ் புனலூரன்" என்னும் மருதக்கலியால் அறிக.
"அகழி சிகரமாலை சூழ்" என்ற பாடத்திற்கு அகழியும் சிகர வரிசையும் சூழ்ந்த எனக் கொள்க.

**46.** [1] நஞ்சு. [2] இறைவனுடைய. [3] இன்ப வடிவம் நிலைபெற்ற. [4] (இன்பக்கண்ணீர் உகுத்து நிற்கும்) தன்மைபோல. [5] வெள்ளிய ஒளியையுடைய தெளிந்த நீர் ஒழுகும்படி நின்றன. [6] சந்திரனைக்கண்டு நீர் சொரியும் ஒருவகைக்கல்.

### பளிங்கு மாடம்

47. குன்ற நேர்[1]பளிக் குபரிகை நிரைதொறுங் குழுமி
நின்ற பல்சரா சரமு[3]மந் நீழல்வாய் வெள்ளி
மன்ற கம்பொலிந் தாடிய மலரடி நிழல்புக்
[4]கொன்றி யொன்றறக் [5]கலந்தபல் லுயிர் நிலை யனைய.

48. [1]பரிய மாமணி [2]பத்தியிற் பதித்திருட் [3]படலம்
பொரிய [4]வில்லிடக் குயிற்றிய பொன்[5]னர மியமுந்
தெரிய மாமுர் சொலிகெழு செம்பொ[6]னு டரங்கும்
[7]அரிய மின்[8]பயோ தரஞ்சுமந் தாடுவ கொடிகள்.

49. தைய லார்மதி முகங்களுந் தடங்களுங் [1]குழைய
[2]மைய ளாவிய விழிகளு மாடமுங் கொடிய
கையு நாண்மலர்ப் பொதும்பருங் [3]கறங்கிசை வண்ட
நெய்ய் வோதியும் வீதியு [4]நீளற னெறிய.

---

47. [1] பளிங்குக் கற்களாலாகிய மேல் மாடங்களின். [2] சேர்ந்து நின்ற. [3] அம்மேல் மாடங்களின் நிழலின்கண். ஒன்றி—கலத்தலால். (அவை) [4] ஒன்றும் ஆகாமல் வேறுமாகாமல் சேர்ந்து. ஒன்றற ஒன்றியென மாற்றுக. [5] கலந்த தன்மையை யுடைய பல உயிர்களை ஒத்தன.

நீழல்வாய் ஒன்றியெனவும், கலந்த நிலை பல்லுயிரனைய எனவுங்கூட்டுக.

48. [1] பருத்த. [2] வரிசையாக. [3] கூட்டம் சிதறும்படி. [4] ஒளிவிடுமாறு செய்த. [5] நிலா முற்றங்களிலும். [6] நடனசாலைகளிலும். [7] பசிய, நுண்ணிய என இருபொருளுங்கொள்க. [8] நீரைத் தரிப்பது, பாலைத்தரிப்பது என்னுங் காரணங் களால் மேகத்திற்கும் கொங்கைக்கும் பெயராம். நிலா முற்றங்களில் கொடிகள் மின்னலையுடைய பசிய மேகங்களைத் தாங்கி அசைவன எனவும், நடனசாலைகளில் பூங்கொடி போன்ற பெண்கள் நுண்ணிய மின்னல்போலும் இடையினையும் கொங்கைகளையும் தாங்கி நடிப்பார்கள் எனவுங் கூறுக.

49. [1] காதணிகளையுடையன, தளிர்களையுடையன என முறையே முகங்கட்கும் பொய்கைகட்கும் கூட்டுக. [2] மைதீட்டப்பெற்ற (அவர்) கண்கள் கொடுமையை யுடையன; மேகமண்டலத்தை அளாவிய மாடங்கள் கொடிகளையுடையன. [3] ஒலிக்கின்ற ஒலியை யுடைய வளையல்களையுடையன, ஒலிக்கின்ற இசையினை யுடைய வண்டுகளையுடையன என முறையே கைக்கும் சோலைக்கும் ஏற்றுக. [4] கருமணல்போலும் நீண்ட நெறிப்பினையுடையன, மிக்க அறநெறிகளையுடையன எனக் கூந்தலுக்கும் தெருவுக்கும் கொள்க.

50. மலருந் திங்கடோய் மாடமுஞ் [1]செய்வன மணங்கள்
அலருந் தண்டுறை யுங்[2]குடைந் தாடுவ தும்பி
சுலவுஞ் சோலையு மாதருந் [3]தூற்றுவ வலர்கள்
குலவும் பொய்கையு மனைகளுங் [4]குறைபடா வன்னம்.

பரத்தையர் வீதி

51. [1]இழிபவ ருயர்ந்தோர் [2]மூத்தோ ரிளையவர் [3]கழியா நோயாற்
[4]கழிபவர் யாவ ரேனுங் [5]கண்வலைப் பட்டு நெஞ்சம்
அழிபவர் பொருள்கொண் டெள்ளுக் கெண்ணெய்போ லளந்து காட்டிப்
[6]பழிபடு போகம் விற்பார் [7]ஆவணப் பண்பு சொல்வாம்.

52. ஆலவா யுடையா னென்றும் அங்கயற் கண்ணி யென்றுஞ்
சோலைவாழ் [1]குயிலி னல்லார் [2]சொல்லியாங் கொருங்கு சொல்லும்
[3]பாலவாங் கிளிகள் பூவை பன்முறை [4]குரவ னோதும்
[5]நூலவாய்ச் [6]சந்தை கூட்டி நுவன்[7]மறைச் சிறாரை யொத்த.

---

50. [1] மலர்கள் மணங்களை வீசுவன; மாடங்களில் திருமணங்கள் செய்யப்படுவன. [2] பூக்களில் வண்டுகள் கிண்டி ஆடுவன; நீர்த்துறைகளில் யானைகள் மூழ்கி விளையாடுவன. [3] சூழ்ந்திருக்கின்ற சோலைகள் மலர்களைச் சொரிவன; பெண்களால் பழிமொழிகள் தூற்றப்படுவன. [4] வாவிகளில் அன்னப்புட்கள் நிறைந்துள்ளன; வீடுகளில் அடிசில்கள் நிறைந்துள்ளன என்க.

51. [1] குலத்தால் இழிந்தவர். [2] ஆண்டில் முதிர்ந்தவர். [3] நீங்காத. [4] மெலிபவர். [5] தங்கள் கண்களாகிய வலையில் அகப்பட்டு. [6] பெரியோராற் பழிக்கப்படுகின்ற கலவியின்பத்தை. [7] வீதியின் இயல்பை.

52. [1] குயில்போன்ற பரத்தையர். [2] சொல்லினாற்போல. [3] பாலைவிரும்பும்; செய்யுமென் எச்ச வீற்றுயிர் மெய் சென்றது. [4] ஆசிரியன் ஓதுகின்ற. [5] மறைநூல்களை விரும்பி. [6] பண்ணுடன் ஓதுமுறைமை. [7] பார்ப்பனச் சிறுவர்களை. கிளிகளும் நாகணவாய்ப் புட்களும் மறைச்சிறாரை ஒத்தன என்க. விலைமாதரும் அம்மையப்பர் திருநாமங்களை ஓதும் இயல்பினர் என்பதாம்.

வேளாளர் வீதி

53. [1]வருவிருந் தெதிர்கொண் டேற்று [2]நயனுரை
வழங்கு மோசை
அருகிருந் [3]தடிசி லூட்டி [4]முகமனன் கறையு மோசை
[5]உரைபெறு [6]தமிழ்பா ராட்டு மோசைகேட் டுவகை துள்ள
இருநிதி யளிக்கு மோசை [7]யெழுகட லடைக்கு மோசை.

54. அருந்தின ரருந்திச் செல்ல வருந்துகின் றாரும் [1]ஆங்கே
இருந்தினி தருந்தா நிற்க வின்னமு தட்டுப் பின்னும்
[2]விருந்தினர் வரவு நோக்கி வித்தெலாம் வயலில் வீசி
[3]வருந்திவிண் ணோக்கு மோரே ருழவர்போல் [4]வாடி நிற்பார்.

55. [1]வானமுந் திசையும் பொங்கும் புகழ்மையும் [2]வானம்
பேணும்
ஞானமும் பொறையுங் குன்றா நன்றியு மூக்கப் பாடுந்
[3]தானமுங் [4]கொடையு மன்பும் [5]வரிசையுந் தகைசா னண்பும்
[6]மானமுந் தவஞ்செய் தீன்ற [7]மகவுபோல் வளர்க்க வல்லார்.

---

**53.** [1] வருகின்ற விருந்தினரை. [2] இன்சொற்கள். [3] அறுசுவையுணவு. [4] உபசாரம். [5] புகழ்பெற்ற. [6] தமிழ்ப்பாக்களைச் சொற்பொருட் சுவையுணர்ந்து பாராட்டுகின்ற. [7] எழுகடல் ஒலிகளையும் கீழ்ப்படுத்தும் ஓசைகளாம்.
இருந்தோம்பி இல்வாழ்வார்க்கு விருந்தோம்பி வேளாண்மை செய்தலே தலைசிறந்த அறமாதலின் அதனை முதற்கட் கூறினார்.

**54.** [1] முன் உண்டவர் போலவே. [2] வரக்கடவராகிய விருந்தினர்களின். [3] மழையை வருந்தி யெதிர்பார்க்கின்ற. [4] (விருந்தினர் வரவு தாழ்ப்பின்) வருந்தி நிற்பார்.

**55.** [1] வானுலகத்தினும் எட்டுத் திக்குகளினும் பரந்த கீர்த்தி. [2] வீட்டுலகை விரும்பும் மெய்யுணர்வும். [3] அறநெறியான் வந்த பொருளைத் தக்கார்க்கு உவகையோடும் அளித்தல். [4] வறியராய் ஏற்றார்க்கு மாற்றாது கொடுத்தல். [5] தகுதி. [6] நிலையில் தாழாமையும் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையும். [7] மகவைக் குறிக்கொண்டு பேணி வளர்த்தல் போல.

வணிகர் வீதி

56. [1]புல்லியோர் பண்டங்[2]கொள்வார் [3]வினவினப் பொருடம் பக்கல்
இல்லெனி னினமா யுள்ள பொரு[4]ளுரைத் [5]தெதிர்ம றுத்தும்
அல்லதப் பொருளுண் டென்னின் [6]விலைசுட்டி யறுத்து நேர்ந்துஞ்
[7]சொல்லினு மிலாபங் கொள்வார் தொன்மர பிருக்கை சொல்வாம்.

57. பாய [1]தொன்மரப் பறவைபோற் பயன்கொள்வான் [2]பதினெண்
டேய மாந்தருங் கிளந்தசொற் றிரட்சிதான் [3]தூய
மாயை காரிய வொலியன்றி [4]வான்முதற் கருவின்
ஆய [5]காரிய வோசையே யாய்க்கிடந் தன்றே.

---

56. [1] நெருங்கி வந்து. [2] வாங்குவார். [3] ஓர் பொருள் உண்டோ எனக் கேட்பின்; ஓர் பண்டம் வினவின் என்க. [4] உண்டென்று கூறுவதனால். [5] கேட்ட பொருள் இல்லையென்றும். [6] விலையை வரையறுத்துக் கூறியும் கொடுத்தும்; பொருளைச்சுட்டியும் விலையைவரையறுத்தும் இவற்றால் உளதென்பதனை உடன்பட்டும் எனினுமாம். [7] பொருளாலன்றிச் சொல்லாலும் ஊதியம் பெறும் வணிகர்.

ஊதியமாவது—வினவும் விடையுமாகிய சொற்கள் பல்காமை.

"தம்பால் இல்லது இல்லெனின்" என்ற நன்னூற் சூத்திரமும், "எப்பொருளாயினும்" "அப்பொருள் கூறின்" என்னும் தொல்காப்பியச் சூத்திரங்களும் இங்கு நோக்கத்தக்கன.

57. [1] ஆலமரத்திற் பயன்கொள்ளும் பொருட்டுக் கூடிய பறவைகளைப்போல. [2] தமிழ், சிங்களம் முதலிய பதினெண் மொழி வழங்கும் நிலத்து மக்களும். [3] சுத்த மாயையின் காரியமாகிய ஒலியாக அல்லாமல்; இவ்வொலி பொருள் அறிவுறுக்கும் எழுத்து வடிவம் பெற்றது. [4] ஆகாயமாகிய முதற்காரணத்தினால் உண்டான. [5] பொருள்பயவாது வெறுஞ் சத்த மாத்திரையாயிருப்பது. பல மொழிகளும் ஒருங்கு பேசப்படுதலால் ஒரு மொழியின் வடிவந் தோன்றாது வெறும் ஓசையளவாய் இருந்ததென்றார்.

மன்னவர் வீதி

58. [1]பெண்முத்த மனைய பேதைச் சிறுமியர் பெருநீர் வையை
வெண்[2]முத்த மிழைத்த சிற்றில் சிதைபட வெகுண்டு
நோக்கிக்
கண்[3]முத்தஞ் சிதறச் [4]சிந்துங் கதிர்முத்த மாலை[5]தட்பத்
தெண்[6]முத்தி னகைத்துச் [7]செல்வச் சிறார்கள்தே
ருருட்டு வார்கள்.

மறையவர் வீதி

59. [1]தீவினை யந்த ணாளர் சிறார்பயி றெய்வ [2]வேதம்
[3]நாவுரு வேற்றக் கேட்டுக் [4]கிளிகளோ நவிலும் [5]வேற்றுப்
பூவையும் பயின்று புத்தே ளுலகுறை புது[6]மந் தாரக்
காவுறை கிளிகட் கெல்லாங் கசடறப் பயிற்று மன்னோ.

கழகங்கள்

60. வேதமும் அங்க மாறும் [1]மிருதியும் புராண நூலின்
பேதமும் தெரிந்தோ ராலும் [2]பிறர்மதங் களைய வல்ல
வாதமும் [3]மதமேற் கொண்டு மறுத்தலு [4]நிறுத்த வல்ல
போதமும் உடையோ ராலும் பொலிந்தன கழக மெல்லாம்.

---

58. [1] பெண்களுள் முத்துப்போன்ற. [2] முத்துக்களால் கட்டிய. [3] முத்துப் போன்ற நீர்த்துளிகளைத் துளிக்க. [4] அறுத்து வீசிய. [5] தடைப்படுத்த. [6] முத்தைப்போல் முறுவலித்து. [7] அரசிளங் குமரர்கள். சிதைபட, தட்ப உருட்டுவார் எனத் தனித்தனி முடிக்க.

59. [1] முத்தீ வளர்க்குந் தொழிலையுடைய. [2] மறைகளை. [3] நாவினால் பலமுறை ஓதிப் பயிலுதலைக்கேட்டு. [4] (அவர் இல்லங்களிலுள்ள) கிளிகள்மட்டுமா. [5] அயலிடங்களிலுள்ள நாகணவாய்ப் புட்களும். [6] ஐந்தருக்களில் ஒன்று.

60. [1] அறநூல்களும். [2] பிறர்கொள்கையை அழிக்கவல்ல வாதமும்; இதுமறுத்தலாம். [3] அவர் கொள்கையை ஒருவாற்றான் மேற்கொண்டு மற்றொரு வாற்றான் மறுத்தலும்; இது பிறர்தம் மதமேற்கொண்டு களைதலாம். [4] தங்கொள்கையை நிலைநாட்டவல்ல அறிவும்; இது, தான் நாட்டித் தனது நிறுத்தலாம்.

மடங்கள்

61. [1]உறிபொதி கரகக் கையர் ஒளிவிடு [2]செங்கற் றோய்த்த
அறுவையர் [3]உயிர்க்கூ றஞ்சும் நடையினர் [4]அவிச்சை மாள
எறிசுடர் [5]மழுவா ளன்னக் கோவணம் யாத்த [6]கோலர்
[7]மறைமுடி வன்றித் தேறு[8]மாதவர் மடங்க ளெங்கும்.

சைவர் வீதி

62. தெய்வ நீறுமைந் தெழுத்துமே [1]சிதைக்கல னாக
[2]எவ்வ மா[3]சிரு வினையுடம் பெடுத்துழல் பிறவிப்
[4]பௌவ மேழையுங் கடந்தரன் பதமலர்க் கரைசேர்
[5]சைவ மாதவர் உறை[6]மடத் தனிமறு குரைப்பாம்.

63. [1]மறைக ளாகமம் பொதுச்சிறப் பெனச்சிவன் [2]வகுத்த
முறையி [3]னோதிய [4]விதிவிலக் குரைகளு முடிவில்
அறையும் வீடுமொன் றிரண்டெனும் பிணக்கற [5]அமைந்த
குறைவி லாச்சிவ யோகியர் குழாங்களும் பலவால்.

---

61. [1] உறியாற் பொதியப்பட்ட கமண்டலந்தாங்கிய கையினையுடையவர். [2] காவிக்கல் குழம்பில் நனைத்த உடையினையுடுத்தவர். [3] எறும்பு முதலிய சிற்றுயிர்களுக்கு நேரும் ஊறுபாட்டையஞ்சி மெல்ல நடக்கும். [4] அஞ்ஞானமாகிய மாங்கெட. [5] மழுப்படைபோல. [6] தண்டத்தையுடையர். [7] வேதமுடிவாகிய உபநிடதங்களையல்லாமல். [8] நான்காம் ஆச்சிரமத்தவர்.

62. [1] பாய்மரத்தையுடைய கப்பலாகக்கொண்டு. [2] துன்பம். [3] நல்வினை தீவினைகளால். [4] கடல். [5] தவத்திற் சிறந்த சைவப் பெரியார்கள். [6] மடங்களையுடைய ஒப்பற்ற வீதி.

63. [1] மறைகள் பொது ஆகமம் சிறப்பு என நிரல்நிறையாக்குக. [2] அருளிச் செய்த முறைமையினால். [3] அவற்றுட் கூறப்பட்ட. [4] விதி விலக்கு வீடுகள் ஒன்றென்றும் இரண்டென்றும் கூறுகின்ற மாறுபாடில்லையாகக் கொண்டு. [5] தெளிந்திருந்த.

மக்களின் பல்வேறு நிலைக்கேற்பப் பொருளுணர்த்தலின் மறை பொதுவென்றும், திருவருட்பதிவுடையார்க்கு வேதத்தின் உண்மைப் பொருள் உணர்த்தலின் ஆகமம் சிறப்பென்றுங் கூறுப.

திருக்கோயில்

64. [1]குழலுந் தும்புரு நாரதர் பாடலுங் [2]குனித்துச்
சுழலுங் கொம்பனார் ஆடலு [3]மூவர்வாய்த் துதியும்
[4]விழவின் செல்வமுஞ் சுருதியுந் திசையெலாம் விழுங்கும்
[5]முழவுங் [6]கண்டுயி லாதது முன்னவன் கோயில்.

65. [1]முன்ன வன்[2]னர சிருக்கையால் [3]அந்நகர் முளரிப்
[4]பொன்னை யீன்றதால் [5]அதுபல பொருணிறை செல்வந்
தன்னை யீன்றதால் [6]அதுபல தருமமென் றுரைக்கும்
[7]மின்னை யீன்ற[8]தஃ தீன்றதால் விழுத்தகு புகழே.

## இந்திரன் பழிதீர்த்த படலம்

இந்திரன் அரசிருக்கைச் சிறப்பு

66. [1]முன்னதா முகத்தில் வண்டு [2]மூசு[3]மந் தார நீழற்
பொன்னவிர் [4]சுணங்குண் கொங்கைப் [5]புலோமசை மணாளன் பொற்பூண்
[6]மின்னவிர்ந் திமைப்பச் சிங்கஞ் சுமந்தமெல் லணைமேன் மேவி
[7]அன்னமென் னடையா ராடும் ஆடன்மே லார்வம் வைத்தான்.

---

64. [1] வேய்ங்குழலின் இசையும். [2] வளைந்து சுழன்று ஆடுகின்ற. [3] அப்பர் சம்பந்தர் சுந்தரர் என்னும் மூவருந் திருவாய்மலர்ந்தருளிய தேவாரத்திருமுறைகளின் முழக்கமும். [4] திருவிழாவின் சிறப்பும். [5] தண்ணுமை ஓசையும். [6] நீங்கா திருப்பது.

65. [1]யாவர்க்கு முதல்வனாகிய சோமசுந்தரக் கடவுள். [2] அரசு செய்து இருந்தமையால். [3] மதுரை. [4] திருமகள். [5] அத்தெய்வம். [6] அச்செல்வம். [7] பெண்ணை. [8] அப்பெண்.

66. [1] முற்பட்ட கிரேதா யுகத்தில். [2] மொய்க்கும். [3] ஐந்தருக்களிலொன்று; ஏனையவற்றையும் உபலக்கணத்தாற் கொள்க. அன்றி, சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம் என்னும் ஐந்தனுள் நடுவணதாகிய இம்மந்தார நிழலில் இந்திரன் அமர்ந்திருந்தான் எனலுமாம். இது தெய்வத்தருவாயினும் மரமென்னும் பொதுமையால் வண்டுமொய்க்கு மெனப்பட்டது. [4] தேமலைக் கொண்ட. [5] இந்திராணிக்குக் கணவனாகிய இந்திரன். [6]மின்னலைப்போல் ஒளி விட்டு விளங்க. [7] அன்னத்தின் நடைபோன்று மெதுவான நடையினையுடைய அரம்பையர். அன்னத்தின் நடையென்று சொல்லத்தக்க நடையினையுடையாரெனப் பொருள் கூறினும் பொருந்தும். அன்னம் ஆகுபெயர்.

67. [1]மூவகை மலரும் பூத்து வண்[2]டுளே முழங்கத் தெய்வப்
[3]பூவலர் [4]கொடிபோர்ந் தன்ன [5]பொன்னனார் கூத்தும் அன்னார்
[6]நீரவல ரமுத மன்ன பாடலு [7]நாக நாட்டுக்
காவலன் [8]கண்டு கேட்டுக் [9]களிமதுக் கடலு ளாழ்ந்தான்.

குருவின் வருகை

68. [1]பையரா வணிந்த வேணிப் பகவனே யனைய தங்கள்
[2]ஐயனும் வியாழப் புத்தேள் ஆயிடை யடைந்தா னாகச்
[3]செய்யதாள் வழிபா டின்றித் தேவர்கோ னிருந்தா னந்தோ
தையலார் மயலிற் பட்டோர் தமக்கொரு [4]மதியுண் டாமோ.

---

67. [1] கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ என்னு மூன்று வகைமலர்களையும். [2] உள்ளே ஒலித்துக்கொண்டிருப்ப. [3] தாமரை மலரானது விரியப்பெற்ற. [4] பூங்கொடிகள் ஆடினாற்போன்ற; இல்பொருளுவமை. [5] திருமகளையொத்த தெய்வ மகளிரின் ஆடலையும். [6] நாவிலிருந்து உண்டாகின்ற. [7] விண்ணுலகத்தைக் காத்தல் செய்யும் இந்திரன். [8] கூத்தைக்கண்டும் பாடலைக்கேட்டும் என நிரல் நிறையாக்குக. [9] களிப்பாகிய மதுக்கடலில் அழுந்தினான்; தன்னை மறந்திருந்தான் என்பதாம்.

நால்வகைமலருள் நீர்ப்பூவாகியதாமரை ஒழிய மூவகை மலரையும் பூத்துக் கொண்டிருக்கப்பெற்ற கொடியென்க. மகளிர்க்குக் கொடியும், அவர் முகத்திற்கு நீர்ப்பூவாகியதாமரையும், கண்ணிற்கும் இதழிற்கும் கோட்டுப் பூவாகிய கருவிளை மலரும் முருக்க மலரும், மூக்கிற்கு நிலப்பூவாகிய எட்பூவும், பல்லுக்குக் கொடிப்பூவாகிய முல்லையரும்பும், பாட்டுக்கு வண்டு உள்ளே முழங்குதலும், ஆட்டத்திற்குக் கொடியின் பெயர்ச்சியும் உவமைகளாம்.

68. [1] படம். [2] குருவாகிய வியாழதேவன். [3] (அவனுடைய) திருவடிகளுக்கு வழிபாடு செய்யாமல். [4] நல்லறிவு. வேற்றுப் பொருள்வைப்பணி.

குரு வழிபாடு செய்யாமையால் வந்த கேடு

69. [1]ஒல்லெனக் குரவ னேக வும்பர்கோன் [2]திருவி னூக்கம்
[3]புல்லெனச் சிறிது குன்றப் [4]புரந்தர னறிந்திக் கேடு
நல்ல[5]தொல் குரவற் [6]பேணா நவையினால் விளைந்த தென்னா
அல்லலுற் றறிவன் றன்னைத் தேடுவா னாயி னானே.

70. [1]அங்கவ [2]னிருக்கை புக்கான் கண்டிலன் [3]அவித்த பாசப்
புங்கவ ருலகும் ஏனோர் பதவியும் புவன மூன்றில்
எங்கணுந் [4]துருவிக் காணா னெங்குற்றான் குரவ னென்னுஞ்
[5]சங்கைகொண் மனத்த னாகிச் [6]சதுர்முக னிருக்கை
சார்ந்தான்.

71. துருவின னெங்குங் காணான் [1]திசைமுகற் றொழுது தாழ்ந்து
பரவி[2]முன் பட்ட வெல்லாம் பகர்ந்தனன் பகரக் கேட்டுக்
குரவனை யிகழ்ந்த பாவங் [3]கொழுந்துபட் [4]டருந்துஞ் செவ்வி
வருவது நோக்கிச் [5]சூழ்ந்து மலர்மக னிதனைச் சொன்னான்.

---

69. 1 விரைவாக. 2 செல்வத்தின் மிகுதி. 3 பொலிவின்றிச் சிறிதாகக் குறைதலால். 4 இந்திரன். 5 தொன்றுதொட்டுவந்த ஆசானை. 6 வழிபாடு செய்யாத குற்றத்தால்.

70. 1 அங்குக் கண்டிலன் எனக்கூட்டுக. 2 இருப்பிடம். 3 பாசங்களைக் கெடுத்த முனிவர்கள். 4 தேடியும். 5 ஐயம். 6 சத்தியலோகம்.

71. 1 நான்குதிக்கையு நோக்கிய நான்குமுகங்களையுடைய பிரமனை. 2 முன்பு நிகழ்ந்தவற்றை எல்லாம். 3 கொழுந்து விட்டு வளர்ந்து. 4 (அவனை) விழுங்குங்காலம் வருதலை. 5 ஆராய்ந்து.

நான்முகன் சூழ்ச்சி

72. அனையதொல் குரவற் காணு மளவுநீ [1]துவட்டா வீன்ற
தனையன்[2]முச் சென்னி யுள்ளான் [3]தானவர் குலத்தில் வந்தும்
வினையினு லறிவான் மேலான் [4]விச்சுவ வுருவ னென்னும்
இனையனைக் [5]குருவாக் கோடி யென்னலு மதற்கு [6]நேர்ந்தான்.

விச்சுவ உருவனைக் குருவாகக் கோடல்

73. [1]அழலவிர்ந் தனைய [2]செங்கே ழுடுக்கிதழ் முளரி வாழ்க்கைத்
தொழுதகு [3]செம்மல் தன்னைத் [4]தொழுதுமீண் [5]டகன்று நீங்கா
[6]விழைதகு காதல் கூர விச்சுவ வுருவன் றன்னை
வழிபடு குருவாக் கொண்டான் மலர்மகன் [7]சூழ்ச்சி தேறுன்.

விச்சுவவுருவன் வேள்வி செய்தல்

74. [1]கைதவக் குரவன் [2]மாயங் கருதிலன் வேள்வி யொன்று
[3]செய்திடல் [4]அடிக ளென்னத் தேவர்கட் [5]காக்கங் கூறி
வெய்தழல் வளர்ப்பா னுள்ளம் வேறுபட் டவுணர்க்
கெல்லாம்
[6]உய்திற நினைந்து [7]வேட்டான் தனக்கு[8]மே லுறுவ தோரான்.

---

72. [1] ஓர் அசுரன். [2] மூன்று தலைகளையுடையவனும். [3] அசுரர் குலத்திற் பிறந்தும். [4] விச்சுவ வுருவன் என்று பெயர் சொல்லப்படுகின்ற. [5] குரவனாகக்கொள்வாய். [6] உடன்பட்டவனாகி.

73. [1] நெருப்பு ஒளிவீசினாற்போன்ற. [2] சிவந்த நிறத்தையுடைய. [3] பெருமையிற் சிறந்த பிரமனை. [4] மீளவும் வணங்கி. [5] நீங்கிப்போய். [6] விரும்பத்தகுந்த. [7] உபாயத்தை அறியானாய்க் கொண்டான் என முடிக்க.

74. [1] வஞ்சனையுள்ள அக்குருவின். [2] தீய எண்ணத்தை. [3] செய்க; அல்லீற்று வியங்கோள். [4] பெரியோரை யுணர்த்தும் உயர்வுப் பன்மைச்சொல். [5] நலனுண்டாகச் எனச் சொல்லி. [6] ஆக்கங்கருதி. [7] வேள்வி செய்தான். [8] மேல் விளைவதை ஓரானாகி வேட்டான் என முடிக்க.

### இந்திரன் அக்குருவைக் கொல்லுதல்

75. [1]வாக்கினான் மனத்தால் வேறாய் மகஞ்செய்வான் செயலை [2]யாக்கை
நோக்கினா [3]னோதி தன்னா னோக்கினான் [4]குலிச வேலால்
தாக்கினான் தலைகள் மூன்றுந் [5]தனித்தனி பறவை யாகப்
போக்கினான் [6]அலகை வாயிற் [7]புகட்டினான் [8]புலவுச் சோரி.

### அக்கொலைப் பாவத்தைப் பகுத்தளித்தல்

76. [1]தெற்றெனப் [2]பிரம பாவஞ் சீறிவந் தமரர் வேந்தைப்
பற்றலும் அதனைத் தீர்ப்பான் [3]பண்ணவர் மரமேன் மண்மேற்
பொற்றொடி யார்மே னீர்மேல் வேண்டினர் [4]புகுத்த லோடும்
[5]மற்றவ ரிஃதியாந் [6]தீர்க்கும் வண்ணம்[7]யா தென்ன விண்ணோர்.

### பாவங்கழியும் விதம்

77. [1]அப்பிடை நுரையாய் மண்ணில் [2]அருவருப் புவரா யம்பொற்
செப்பிளங் கொங்கை யார்பால் தீண்டுதற் கரிய[3]பூப்பாய்க்
[4]கப்பிணர் மரத்திற் [5]காலும் பயினதாய்க் கழிக வென்றார்
இப்பழி சுமந்த வெங்கட் [6]கென்னல மென்றார் பின்னும்.

---

75. [1] சொல்லால் வேறாகவும் நினைவால் வேறாகவும் எனக் கூட்டுக. [2] உடலிற் கண்களை உடைய இந்திரன். [3] ஞானத்தால். [4] வச்சிரப் படையால். [5] வெவ்வேறு. [6] பேய்களின். [7] புகவிட்டான் என்பது மருவிற்று. [8] புலாலோடுகூடிய உதிரத்தை. நோக்கினான் முதலிய முற்றுக்கள் மூன்றும் எச்சப் பொருளன. சோமபானஞ்செய்யுமுகம் காடையாகியும், சுராபானஞ்செய்யுமுகம் ஊர்க்குருவியாகியும், அன்னபானஞ்செய்யுமுகம் சிச்சிலியாகியும் பறந்தன வென்ப.

76. [1] விரைவாக. [2] பிரமக் கொலைப்பழி. [3] தேவர்கள். [4] புகச்செய்த அளவில். [5] திணைவிரவிச் சிறப்பால் உயர்திணை முடிபேற்றது. [6] நீக்கும் விதம். [7] எவ்வாறு என்று கேட்ப.

77. [1] நீரில். [2] அருவருக்கத்தக்க உவராகியும். [3] சூதகமாகியும். [4] கிளைகளையும் பூங்கொத்துக்களையுமுடைய. [5] கசிந்து ஒழுகுகின்ற பிசினாகியும்; அது பகுதிப் பொருள் விகுதி. [6] யாது நன்மை.

பாவத்தை யேற்றதற்குப் பயன்

78. [1]கருவின் மாதர் [2]கருவுயிர்க்கு மளவு முறையாற் கணவர்
தோண்
மருவி வாழ்க மண்ணகழ்ந்த குழியு [3]மதனல் வடுவொழிக
பொருவி னீரு [4]மிறைத்தோறு மூறிப் பொலிக மரங்[5]குறைபட்
டொருவி னுலுந் தழைகவென ஒழியா நலனு முதவினர்.

துவட்டா வேள்வி செய்தல்

79. மாசிற் கழிந்த [1]மணியேபோல் வந்த பழிதீர்ந் திந்திரனுந்
[2]தேசிற் றிகழத் துவட்டாதன் [3]செல்வன் றன்னைத் தேவர்
பிரான்
வீசிக் [4]குலிசத் துயிருண்ட [5]விழுமங் கேட்டு
வெகுண்டுயிர்த்துக்
[6]கூசிப் [7]பழிகோள் கருதியொரு கொடிய வேள்வி
கடிதமைத்தான்.

வேள்வியில் விருத்திரன் தோன்றுதல்

80. அந்தக் குண்டத் [1]தெரிசிகைபோல் [2]அழலுங் குஞ்சி
யண்டமுக
டுந்தக் கொடிய [3]தூமம்போ லுயிர்த்துச் செங்கண் சினச்
செந்தீச்
சிந்தப் பிறைவாள் [4]எயிறதுக்கித் [5]திசைவான் செவிடு
படநகைத்து
[6]வந்தக் கொடிய விடம்போல வெழுந்தா னொருவாள்
மறவீரன்.

---

78. [1] சூற்கொண்ட மகளிர். [2] மகப்பெறும்வரையும். [3] அம்மண்ணினலேயே. [4] இறைக்குந்தோறும். [5] வெட்டப்பட்டு.

79. [1] மாணிக்கத்தைப்போல். [2] ஒளியோடு விளங்க. [3] புதல்வனை விச்சுவ உருவனை. [4] வச்சிரப்படையால். [5] துன்பச் செய்தியைக் கேட்டு. [6] உள்ளம் ஒடுங்கி. [7] பழிவாங்குதலை யெண்ணி.

80. [1] தீக்கொழுந்துபோல. [2] செந்நிறத்தால் விளங்குங் குடுமி. [3] புகை. [4] பற்களைக் கடித்து. [5] திக்குகளும் வானமும். [6] (பாற்கடலினின்றும்) தோன்றிய அந்தக் கொடிய ஆலாலவிடத்தைப்போல ; பெயரொச்சம் ஈறு தொக்கது.

அவன் இயல்பு

81. [1]ஈங்குவன் விருத்திர னென்ப வா[2]ரழல்
தூங்குவன் [3]கணைவிடு தூர நீண்டுநீண்
டோங்குவன் ஓங்குதற் கொப்ப வைகலும்
[4]வீங்குவன் [5]அறனிலார் வினையி னென்பவே.

துவட்டா விருத்திரனை விடுத்தல்

82. வீங்குடல் விருத்திரன் றன்னை விண்ணவர்
ஏங்குற வருதுவட் டாவெ னும்பெயர்த்
[1]தீங்குறு மனத்தினோன் தேவர் கோனுயிர்
[2]வாங்குதி பொருதென வரவிட் டா[3]னரோ.

83. [1]மதித்துணி யெயிற்றினோன் வடவை போற்[2]சினை இக்
கொதித்தெதிர் குறுகினான் [3]கொண்ட லூர்தியும்
எதிர்த்தனன் களிற்றின்மேல் இமயத் துச்சிமேல்
உதித்ததோர் கருங்கதி ரொக்கு மென்னவே.

---

81. [1] இங்குத் தோன்றிய இவனை. [2] நெருப்புத் தங்கிய. [3] (வில்லினின்றும்) விடப்பட்ட அம்பு செல்லுந்தூரம். [4] பருப்பான். [5] அறவினை இல்லாதாருடைய தீவினைபோல ; அறநெறியில் நில்லாருடைய வினைபோல என்றலும் ஆம். (பி - ம்) தனிலறுவினையின்.

82. [1] தீமை மிக்க. [2] போர் செய்து வாங்குவாயென்று. [3] அசை.

83. [1] மதியின் துண்டம்; இளஞ்சந்திரன். [2] சினந்து. [3] மேக வாகனத்தையுடைய இந்திரனும். வெள்ளை யானையின்மேல் இருக்கும் கரிய நிறத்தையுடைய இந்திரனுக்குப் பனிமலையின்மேலுதித்த கருஞாயிற்றை யொப்புக்கூறியது இல்பொருளுவமையாம்.

இந்திரன் புதிய வச்சிரம் பெறுதற்குத் திருமால் உபாயங்கூறல்

84. [1]ஆற்றவும் பழையதுன் னங்கை வச்சிரம்
மாற்றவ ருயிருண [2]வலியின் ருதலால்
வேற்றொரு [3]புதியது வேண்டு மாலினிச்
சாற்றுது மதுபெறுந் தகைமை [4]கேட்டியால்.

85. தொடை[1]யகன் மார்பநாந் தூய பாற்கடல்
கடையுநாள் அசுரருஞ்[2] சுரருங் கையில்வெம்
படையொடும் [3]அடையன்மின்[4]பழுதென் றப்படை
[5]அடையவுந் ததீசிபால்[6]அடைவித் தாமரோ.

86. [1]சேட்படு நாள்நனி செல்லத் [2]தேவரா
வாட்படை [3]அவுணரா வந்து கேட்டிலர்
[4]ஞாட்படை படையெலா ஞான நோக்கினல்
[5]வேட்படை வென்றவன் விழுங்கி னனரோ.

87. [1]விழுங்கிய படையெலாம் [2]வேற றத்திரண்
[3]டொழுங்கிய [4]தான்[5]முது கந்தண் டொன்றியே
எழுங்கதிர்க் குலிசமாம் [6]அதனை யெய்துமுன்
வழங்குவன் கருணையோர் வடிவ மாயினன்.

---

84. [1] மிகவும் பழமையானது. [2] வலியில்லதாயிற்று. [3] புதிய படை. [4] கேட்பாய். ஆல் இரண்டும் அசை.

85. [1] பரந்த மார்பையுடையவனே; கல் எனப் பிரித்து மலைபோன்ற என்றலுமாம். [2] தேவரும். (ஆகிய நீவிர் இருதிறத்தீரும்) என்பது வருவிக்க. [3] வாராதீர்கள். [4] (அங்ஙனம் வருதல்) குற்றமாம் என்று. [5] முழுதும். [6] சேர்ப்பித்தோம்.

86. [1] மிகப்பல நாட்கள்கழிய. [2] தேவராதல். [3] அசுராதல்; இவ்விரண்டிலும் ஆதல் என்பதன் ஈறுகள் தொக்கன. [4] போர் செய்தற்கு அடுத்த. [5] மன்மத பாணங்களை. ஞான நோக்கினல் வென்றவன் என்றுதல், ஞான நோக்கினல் (அறிந்து) விழுங்கினனென்றுதல் கொள்க.

87. [1] விழுங்கப்பட்ட. [2] ஒன்றாகத்திரண்டு. [3] ஒழுங்குபட்டது. [4] அசை. [5] முதுகெலும்பை சேர்ந்து; ஒன்றி ஒழுங்கிய தென்க. [6] அவ்வெலும்பை.

இந்திரன் ததீசி முனிவர் இருக்கை சார்தல்

88. என்று [1]மாதவன் இயம்ப வும்பர்கோன்
ஒன்றும் வானவர் தம்மொ [2]டொல்லெனச்
சென்று மாயையின் செயலை [3]நோன்பினால்
வென்ற மாதவ னிருக்கை மேவினான்.

89. [1]அகமலர்ந் தருந்தவன் அமரர்க் கன்புகூர்
[2]முகமலர்ந் தின்னுரை [3]முகமன் கூறிநீர்
மிகமெலிந் தெய்தினீர் விளைந்த தியாதது
[4]தகமொழிந் திடலென [5]வலாரி சாற்றுவான்.

இந்திரன் ததீசிமுனிவரை வேண்டல்

90. [1]அடிகணீர் [2]மருததொன் றதனை வேண்டியிம்
முடிகொள்வா னவரொடு [3]முந்தி னேனது
[4]செடிகொள்கா ரிருளுடல் [5]அவுணர்த் தேய்த்[6]தெமர்
குடியெலாம் புரப்பதோர் [7]கொள்கைத் தாயது.

91. யாதெனின் [1]இனையதுன் யாக்கை யுள்ளதென்
றோதலும் யாவையு முணர்ந்த மாதவன்
[2]ஆதவற் கண்டதா மரையின் [3]ஆனனப்
போதலர்ந் தின்னன புகல்வ தாயினான்.

---

88. [1] இலக்குமிக்குக் கணவனான திருமால். [2] விரைந்துபோய். [3] தவவலிமையால்.

89. [1] மனமகிழ்ந்து. [2] முகமலர்ச்சியடைந்து. [3] உபசாரமாகச் சொல்லி; இன் முகமன் உரையெனக் கூட்டுதலும் ஆம். [4] பொருந்தச் சொல்வீர்களாக என்று கேட்ப; அல்லீற்று வியங்கோள். [5] வலன் என்னும் அசுரனைக் கொன்றவன்; இந்திரன்.

90. [1] அடிகளே. [2] மறுக்காமல் அளிக்கத்தக்கதாகிய ஒரு பொருள். [3] முற்பட்டு வந்தேன். [4] முடைநாற்றத்தையுடைய. [5] அசுரரையழித்து. [6] எம்மைச் சார்ந்தவரின். [7] இயல்பையுடையது.

91. [1] இத்தன்மையுடைய பொருள். [2] சூரியனைக்கண்ட. [3] முகமாகிய மலர்.

ததீசி கூறும் நீதிகள்

92. நாய்[1]நம தெனநரி நமதெ னப்பிதா
தாய்நம தெனநமன் தனதெ னப்பிணி
பேய்நம தென்[2]மன மதிக்கும் பெற்றிபோல்
ஆய்[3]நம தெனப்படும் யாக்கை [4]யாரதே.

93. விடம்பயி லெயிற்[1]றர வுரியும் [2]வீநுழை
குடம்பையுந் [3]தானெனுங் கொள்கைத் தேகொலாம்
நடம்பயில் [4]கூத்தரி னடிக்கும் [5]ஐவர்வாழ்
உடம்பையும் யானென [6]வுரைக்கற் பாலதோ.

94. [1]நடுத்தயா விலார்[2]தமை நலியத் துன்பநோய்
அடுத்தயா வருந்[3]திரு வுடைய யாக்கையைக்
கொடுத்[4]தயா [5]அறம்புகழ் கொள்வ னேயெனின்
எடுத்த[6]யாக் கையின்பயன் [7]இதனின் யாவதே.

---

92. [1] எம்முடையது எனவும். [2] மனத்தால் கருதுந் தன்மைபோலாக; ஆய்-எச்சத் திரிபு. [3] நாமும் நம்முடையதென்று சொல்லப்படும். [4] யாருக்குரியது.
உயிர் நீங்கியபின் தமக்குணவாதல் கருதி நாய் நரிகள் நம்முடையதென்னும். பெற்று வளர்த்த உரிமையால் தாய் தந்தையர் தம்முடையதென்பர். தன்னாற் பற்றப் படும் உயிர்க்கு நிலைகளனாதலால் நமன் தனதென்பன். நோய்களும் பேய்களும் பற்றியிருந்து வருத்துதலால் தம்முடையதென்னும். நாமும் சிலகாலந்தங்குதல் பற்றி நமதென்கின்றோம். அவ்வளவன்றி உடல் நமக்கே யுரியதென்பது பொருந்தா தென்பதாம்.

93. [1] பாம்பானது தன் தோலையும். [2] பறவையானது தான் நுழைந்து வாழ்கின்ற கூட்டையும். [3] தான் என்று கொள்ளுங் கொள்கையை யுடையதாகுமோ (ஆகாது அதுபோல). [4] கூத்தர்களைப்போல். [5] ஐம்பொறிகள். [6] உயிர், கூறும் பான்மையையுடையதோ (அன்று) என்பதாம். எடுத்துக்காட்டுவமை யணி. கொள்கைத்து என்பதனை அரவோடும் வீயோடும் தனித்தனி இயைக்க. ஐவர் என்றது உடம்பென்னுங் குறிப்பால் பொறிகளை யுணர்த்திற்று; திணை வழுவமைதி.

94. [1] நடுநிலைமையும் இரக்கமுமில்லாத அசுரர்கள். [2] தங்களை வருத்துதலால் [3] இன்பமடைய. [4] இந்திரனே ;போலி. [5] அறத்தையும் புகழையும். [6] உடம்பினால் அடையும் பயன். [7] இதனினும் சிறந்தது யாதுளது.

### ததீசி தன் யாக்கையை விடுத்தல்

95. என்றனன் [1]கரண மொன்றி [2]யெழுகருத் தறிவை [3]யீர்ப்ப
[4]நின்றனன் [5]பிரம நாடி நெறிகொடு [6]கபாலங் கீண்டு
சென்றனன் விமான மேறிச் சேர்ந்தன [7]னுலகை நோன்பால்
வென்றவன் [8]துறக்கம் புக்கு வீற்றினி திருந்தா னம்மா.

### இந்திரன் புதிய வச்சிரப்படை பெறுதல்

96. அம்முனி [1]வள்ள லீந்த [2]அடுபடை முதுகந் தண்டைத்
[3]தெம்முனை யடுபோர் சாய்க்குந் திறல்கெழு குலிசஞ் செய்து
[4]கம்மியப் புலவன் [5]ஆக்கங் கரைந்துகைக் கொடுப்ப வாங்கி
மைம்முகி லூர்தி யேந்தி மின்விடு மழைபோ னின்முன்.

### புதிய வச்சிரப்படை கண்டு விருத்திரன் மறைதல்

97. வீங்கிரு ளொதுங்க மேக[1]மின்விதிர்த் தென்னக் கையில்
[2]ஓங்கிருங் குலிச வேலை [3]யொல்லென விதிர்த்த லோடுந்
[4]தீங்குளம் போன்றி ருண்ட திணியுடற் கள்வ னஞ்சி
வாங்கிருங் கடலில் [5]வீழ்ந்தான் மறைந்த[6]மை
நாக மொத்தான்.

---

95. [1] உடம்பின் அகத்தும் புறத்தும் உளவாகிய கருவிகளெல்லாம் ஒன்றுபட்டு. [2] எழுகின்ற மெய்யுணர்வானது. [3] விகற்ப அறிவுகளைத் தன்பால் இழுத்து அடக்கிக்கொள்ள. [4] சமாதியில் நின்று. [5] சுழிமுனை நாடியின் வழியால். [6] கபாலத்தைக் கிழித்து. [7] உலக மாயையை.; [8] ஈண்டுச் சிவலோகம். என்றனன் முதலான முற்றுக்கள் நான்கும் எச்சப் பொருளன.

96. [1] என்பும் பிறர்க்கு உரிமையாக்கிய சிறப்பால் வள்ளலென்றார். [2] கொல்லும் படைகள் திரண்ட முதுகெலும்பை. [3] பகைவர் முனைந்து செய்கின்ற. [4] தெய்வத் தச்சன். [5] மேன்மேலுயர்ச்சி யுண்டாகுக என வாழ்த்துக் கூறி. குலிசத்திற்கு மின்னலும், இந்திரனுக்கு மேகமும் உவமையாம்.

97. [1] மின்னலை வீசினாற்போல. [2] மிகப்பெரிய. [3] விரைவாக. [4] தீமை நிறைந்த தனது உள்ளத்தைப்போன்று; உள்ளமும், உடலும் கரியன் என்பதாம். [5] எச்சம். [6] வச்சிரத்தால் இந்திரன் மலைகளின் சிறகறுத்தஞான்று அஞ்சிக் காற்றினுதவியால் கடலுள் ஒளித்த ஒரு மலை; கரிய நிறத்தானும் பெரிய வடிவானும் வச்சிரங்கண்டு அஞ்சிக் கடலுள் ஒளித்தமையானும் விருத்திரனுக்கு உவமையாயிற்று.

### இந்திரன் நான்முகனைக் காணல்

98. [1]ஒக்கவிந் திரனும் வீழ்ந்தா [2]னுடல்சின் வுருமே றன்னான்
[3]புக்கிடந் தேடிக் காணான் [4]புண்ணிய முளரி யண்ணல்
பக்கம்வந் தனைய செய்தி பகர்ந்தனன் [5]பதகன் மாளத்
தக்கதோர் சூழ்ச்சி முன்னிச் சராசர மீன்ற [6]தாதை.

99. [1]விந்தவெற் படக்கி னாற்கீ துரையென விடுப்ப மீண்டு
[2]சந்தவெற் படைந்தான் வானோர் தலைவனை [3]முகமன் கூறிப்
[4]பந்தவெற் பறுத்தான் [5]வந்த தெவனெனப் [6]பறைக ளெல்லாஞ்
சிந்தவெற் பறுத்தான் வந்த செயலெலா முறையாற் செப்பி.

### இந்திரன் அகத்தியரிடம் தன் குறை கூறல்

100. யாவையு முணர்ந்த [1]எந்தைக் கியானெடுத் [2]துணர்த்து கின்ற
தாவதென் னமருக் காற்று தாழிபுக் [3]கொளித்தா னாவி
[4]வீவது மவனால் வந்த [5]விழுமநோ யெல்லா மின்று
போவதுங் கருதி நும்பாற் புகுந்தனம் அடிக ளென்றான்.

### அகத்தியர் செய்த அருஞ்செயல்

101. என்றவ னிடுக்கண் டீர்ப்பான் [1]இகல்புரி புலன்க ளைந்தும்
வென்றவ [2]னெடியோன் றன்னை [3]விடையவன் வடிவ மாக்கி
நின்றவன் [4]அறிவா னந்த மெய்மையாய் நிறைந்த [5]வெள்ளி
மன்றவ னூழிச் செந்தீ வடிவினை மனத்துட் கொண்டான்.

---

98. [1] அவனோடுகூட. [2] வருத்தும் வெகுளி. [3] பெயரெச்சஈறுதொக்கது. [4] தூய்மையான தாமரை. [5] விருத்திரன். [6] பிரமன்.

99. [1] விந்தமலையை அடக்கிய அகத்திய முனிவருக்கு. [2] சந்தனச் சோலையையுடைய பொதியில் மலை. [3] உபசார மொழிகள். [4] ஆசையாகிய மலை. [5] வந்த காரணம். [6] சிறகுகளெல்லாம்.

100. [1] எனது தந்தைபோல்பவராகிய நுமக்கு. [2] அறிவிப்பது யாது ; ஆவது இடைச்சொல். [3] விருத்திரன். [4] நீங்குவதும். [5] துன்பநோய் முழுதும்.

101. [1] பகைமையைச் செய்கின்ற. [2] திருமாலின் வடிவத்தை. [3] சிவபெருமான் திருவுருவமாகச் செய்து ; இந்நிகழ்ச்சி திருக்குற்றாலத்தில் நடந்தது. [4] சச்சிதானந்த வடிவாய். [5] வெள்ளியம்பலவாணனாகிய சிவபெருமானுடைய, கடல் நீர் வற்றுதற்கு ஊழிச் செந்தீ வடிவத்தை நினைத்தார்.

102. [1]கைதவன் [2]கரந்து வைகுங் கடலை[3]வெற் படக்குங் கையிற்
பெய்[4]துழுந் தெல்லைத் தாக்கிப் பருகினான் பிறைசேர்
சென்னி
ஐயன தருளைப் பெற்றார்க் கதிசய மிதென்கொல் [5]மூன்று
வைய[6]முத் தொழிலுஞ் செய்ய வல்லவர் [7]அவரே யன்றோ.

கடல்நீர் வறத்தல்

103. [1]அறந்துறந் [2]தீட்டு வார்தம் அரும்பெறற் செல்வம் போல
வறந்தன [3]படுநீர்ப் பௌவம் [4]வடவை[5]கட் புலப்பட் டாங்கு
நிறைந்தசெம் மணியும் அத்தீ நீண்டெரி[6]சிகைபோ னீண்டு
சிறந்தெழு பவளக் காடுந் திணியிருள் விழுங்கிற் [7]றம்மா.

விருத்திரன் தவநிலை

104. [1]செருவினி லுடைந்து போன செங்கண்வா ளவுண
[2]னங்கோர்
அருவரை [3]முதுகிற் கார்போ லடைந்துவா னாடர் செய்த
[4]உருகெழு பாவந் தா[5]னோ ருருவெடுத் திருந்து [6]நோற்கும்
பரிசென நோற்றா [7]னின்னும் பரிபவ விளைவு பாரான்.

---

102. [1] வஞ்சகனாகிய விருத்திரன். [2] மறைந்து. [3] விந்தமலை. [4] உழுந்தின் அளவினதாகச் செய்து. [5] மூன்றுலகத்திலும். [6] படைத்தல் காத்தல் அழித்தல். [7] அவ்வடியார்களேயல்லவா. இது வேற்றுப் பொருள் வைப்பணி.

103. [1] அறத்தைக் கை விட்டு. [2] பழிபாவங்களால் தேடுபவருடைய. [3] மிக்க நீரையுடைய கடல் முழுதும். [4] (அங்குள்ள) பெண் குதிரையின் முகவடிவான ஊழித்தீ. [5] கண்களுக்குத் தோன்றினாற்போல. [6] கொழுந்துபோல. [7] வியப்பிடைச் சொல் விழுங்கிற்று என்பதனை மணி, காடு என்பவற்றுடன் தனித் தனி கூட்டுக.

104. [1] போரில் தோற்று ஓடின. [2] அக்கடலினிடத்து. [3] உச்சியில்; நடுவில் எனினுமாம். [4] அஞ்சத்தக்க. [5] ஒரு வடிவெடுத்து. [6] தவஞ்செய்யுந் தன்மைபோல. [7] மேலும் துன்பம் உண்டாதலை. பாரானாகி நோற்றான் என்க.

இந்திரன் அவனைக் கொன்று பழியேற்றல்

105. [1]கைதவ நோன்பு நோற்குங் கள்வனைக் கண்டு வானோர்
செய்தவம் [2]அனையான் [3]யாணர் வச்சிரஞ் சீரிப் பான்போற்
[4]பொய்தவன் றலையைக் கொய்தான் [5]புணரிவாய் நிறையச் [6]சோரி
பெய்தது வலாரி தன்னைப் பிடித்தது [7]பிரமச் சாயை.

நகுடன் தேவர்க்கு அரசனாதல்

106. விரைந்[1]தரன் றிசையோர் வாவி வீழ்ந்தொரு [2]கமல நூலுட்
கரந்தனன் மகவா னிப்பால் கற்பக நாடு[3]புல்லென்
றிருந்ததா லிருக்கு மெல்லை [4]யிம்பரில் [5]நகுடன் என்போன்
அரும்[6]பரி மேத வேள்வி யாற்றினா னூற்று மெல்லை.

அவன் இந்திராணியை யழைத்துவரச் சொல்லல்

107. அரசிலா வறுமை நோக்கி யவனை[1]வா னுடர் யாரும்
விரைசெய்தார் மகுடஞ் சூட்டி வேந்தனுக் கொண்டார் [2]வேந்தாய்
வருபவன் [3]சசியை [4]யீண்டுத் தருகென மருங்கு ளார்போய்த்
திரைசெய்[5]நீ ரமுத னாட்குச் செப்பவக் கற்பின் மிக்காள்.

---

105. [1] வஞ்சனையான தவத்தைச் செய்யும். [2] இந்திரன். [3] புதிய வச்சிரப்படையைப் பரீட்சித்துப் பார்ப்பவன்போல. [4] பொய்க்கின்ற தவத்தையுடைய விருத்திரன்; வினைத்தொகை. [5] கடலிடம். [6] (அவனுடல்) குருதிநீர் பொழிந்தது. [7] பிரமக் கொலைப்பழி. வேள்வியிற் றோன்றுதலும் தவஞ்செய்தலுமுடையனாதலின் அவனைக்கொன்ற பழி பிரமக் கொலைப் பழியாயிற்று.

106. [1] ஈசான திசையில்; வடகிழக்கு மூலையில். [2] தாமரைத் தண்டின் நூலுள். [3] பொலிவழிந்திருந்தது. [4] இந்நிலவுலகில். [5] நகுடன் என்னும் பெயர் வாய்ந்த சந்திரகுலத்து மன்னன் ஒருவன். [6] அசுவமேத யாகம்.

107. [1] தேவர்கள் எல்லோரும். [2] அரசனாகி. [3] இந்திராணியை. [4] இங்கே அழையுங்கள் என்று கூற. [5] கடலிற்றோன்றிய அமுதம்போன்ற இந்திராணிக்கு.

சசி வியாழனை வினாதல்

108. [1]பொன்னுயிர்த் தனைய [2]காட்சிப் [3]புண்ணியக் குரவன் முன்போய்
[4]மின்னுயிர்த் தனையாள் நின்று விளம்புவா [5]ளிதென்கொல் கெட்டேன்
என்னுயிர்த் [6]துணைவ னுங்கே [7]யிருக்கமற் றொருவ னென்னைத்
தன்[8]னுயிர்த் துணையாக் கொள்கை தருமமோ அடிக ளென்றாள்.

வியாழன் கூறும் மாற்றமும் சசி தூது விடுத்தலும்

109. [1]மாதவ ரெழுவர் தாங்க மாமணிச் சிவிகை மீது
[2]போதரி னவனே [3]வானோர் புரந்தர னவனே யுன்றன்
[4]காதல னாகு மென்றான் கைதொழு ததற்கு நேர்ந்[5]தம்
மேதகு சிறப்பா லிங்கு வருகென விடுத்தா டூது.

நகுடனுக்குக் காமத்தால் வந்தகேடு

110. மனிதரின் மகவா னாகி[1]வருபவன் சிவிகை தாங்கும்
புனித[2]மா தவரை யெண்ணான் [3]புன்கணோய் விளைவும் பாரான்
[4]கனிதரு காமந் துய்க்குங் காதலால் விரையச் [5]செல்வான்
இனி[6]தயி ராணி பாற்கொண் டேகுமின் [7]சர்ப்ப வென்றான்.

---

108. [1] பொன் ஓர் உயிர் பெற்றாற்போன்ற; ஓர் உருவெடுத்தாலொத்த என்றபடியாம். [2] தோற்றம். [3] அறத்தின் வடிவாகிய வியாழபகவான். [4] மின்னல் ஒருவடிவெடுத்தாற்போன்ற இந்திராணி. [5] இஃது என்ன வியப்பு; கொல் அசை. கேட்டேன், வியப்பிடைச் சொல். [6] கணவன். [7] உயிரோடிருக்கவும். [8]. உயிர்த் துணைவியாக; மனைவியாக.

109. [1] எழு முனிவரும்; அகத்தியன், ஆங்கீரசன், கோதமன், காசிபன், புலத்தியன், மார்க்கண்டன், வசிட்டன் என்போர். [2] வந்தால். [3] தேவர்களைப் புரக்கும் அரசனாவான். [4] கணவனுமாவான். [5] அந்த மேன்மையான சிறப்போடு.

110. [1] நகுடன். [2] முனிவர்களின் பெருமையைக் கருதாமலும். [3] துன்ப நோய் உண்டாதலையும் பாராமலும். [4] முதிர்ந்த காமவின்பத்தை, [5] செல்லும் பொருட்டு. [6] இந்திராணி. [7] விரைய,

111. [1]சர்ப்பமா கென[2]முற் கொம்பு தாங்கிமுன் னடக்குந் [3]தென்றல்
வெற்பனு முனிவன் சாபம் விளைத்தனன் [4]விளைத்த லோடும்
[5]பொற்ப[6]மா சுணமே யாகிப் போயினு னறிவி லாத
[7]அற்பரா னவர்க்குச் செல்வ மல்லது பகைவே றுண்டோ.

வியாழன் இந்திரனை அழைத்து வருதல்

112. பின்னர்த்தங் குரவ னுன [1]பிரானடி பணிந்து வானோர்
பொன்னகர் வேந்த னின்றிப் [2]புலம்படைட் கின்ற[3]தைய
என்னலுங் குரவன் போயவ் [4]விலஞ்சியு ளொளித்தாற் கூவித்
தன்னுரை யறிந்து போந்த [5]சதமகற் கொண்டு மீண்டான்.

கொலைப்பழிநீங்க இந்திரன் நிலவுலகிற்கு வருதல்

113. கொடும்[1]பழி கோட்பட் டான்றன் குரவனை வணங்கி யென்னைச்
சுடும்பழி கழிவ [2]தெங்ஙன் சொல்லெனத் [3]தொலைவ தோர்ந்தான்
[4]அடும்பழி மண்மே லன்றி யருகுநீ[5]வேட்டைக் கென்னப்
[6]படும்பழி யிதனைத் தீர்ப்பான் பார்மிசை வருதி யென்றான்.

---

111. [1] பாம்பு ஆகக்கடவாயென்று. [2] சிவிகையின் முன் கொம்பை. [3] பொதியமலை: [4] சாபமிட்டவுடன். [5] பொலிவுபெற. [6] பெரும் பாம்பின் வடிவமாகி. நிறை மொழி மாந்தர் அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அச்சொல் அவ்வப்பயன் களை விரைந்து பயக்குமாதலின், "விளைத்தலோடும் மாசுணமாகிப் போயினு" னென்றார். [7] இழிந்த குணமுடையவர்க்கு. இது வேற்றுப் பொருள் வைப் பணி.
"மைய லொருவன் களித்தற்றாற் பேதைதன், கையொன் றுடைமை பெறின்"
"ஏந்திய கொள்கையார் சீறின் இடை முறிந்து, வேந்தனும் வேந்து கெடும்"
என்னும் மறை மொழிகட்கு இவ்வரலாறு இலக்கியமாதல் காண்க.

112. [1] வியாழன் [2] வருந்துகின்றது. [3] விளி. [4] தாமரைத் தடாகத்தில் மறைந்திருக் கும் இந்திரனை. [5] நூறு வேள்வி செய்தவன்: இந்திரன்.

113. [1] கொலைப் பாவத்தால் பற்றப்பட்ட இந்திரன். [2] எவ்வாறு. [3] (அது) தீரும் வழியை அறிந்த வியாழன். [4] கொலைப்பழி; உன்னை வருத்தும் பழி எனினுமாம். [5] வேட்டைக்குச் செல்லுதல்போல. [6] உண்டாகிய.

குருவின் கடமை

114. [1]ஈசனுக் கிழைத்த குற்றந் [2]தேசிக னெண்ணித் [3]தீர்க்குந்
தேசிகற் கிழைத்த குற்றங் குரவனே தீர்ப்ப தன்றிப்
[4]பேசுவ தெவனோ தன்பாற் [5]பிழைத்தகா ரணத்தால் வந்த
வாசவன் பழியைத் [6]தீர்ப்பான் குரவனே வழியுங் கூற.

இந்திரன் கயிலையிலிருந்து தெற்குநோக்கி வருதல்

115. கங்கைமுதல் அளவிறந்த தீர்த்தமெலாம் போய்ப்[1]படிந்து காசி காஞ்சி
அங்[2]கனக கேதார முதற்பதிகள் பலபணிந்தும் அவுணற் கொன்ற
பொங்குபழி [3]விடாதழுங்கி [4]அராவுண்ண மாசுண்டு [5]பொலிவு மாழ்குந்
திங்களனை யான்கடம்ப வனத்[6]தெல்லை யணித்தாகச் [7]செல்லு மெல்லை.

116. [1]தொடுத்தபழி வேறாகி விடுத்தகன்ற திந்திரன்முன் [2]சுமந்த பாரம்
விடுத்தவனைத் தளவிறந்த மகிழ்வெய்தித் தேசிகன்பால் விளம்பப் [3]பாசங்
கெடுத்தவன்[4]மா தலம்புனித தீர்த்தமுள இவணமக்குக் [5]கிடைத்தல் வேண்டும்
அடுத்தறிக [6]வெனச்சிலரை விடுத்[7]தவ்வே முநிலைநின் றப்பாற் செல்வான்.

---

114. [1] கடவுளுக்குச் செய்த. [2] குரவன். [3] தீர்ப்பான். [4] (பிறர் தீர்ப்பாரென்று) கூறுவது யாது. [5] தவறு செய்தமையால். [6] நீக்கும் பொருட்டு.

115. [1] முழுகி. [2] பொன் மயமான். [3] நீங்காமையால் வருந்தி. [4] இராகுவென்னும் பாம்பானது விழுங்க. [5] பொலிவு குன்றிய. [6] எல்லைக்குப் பக்கமாக. [7] செல்லும்பொழுது.

116. [1] (தன்னைப்) பற்றியிருந்த கொலைப்பாவம். [2] சுமையை யிறக்கினவனைப் போன்று. [3] ஆசைத் தொடர்பை ஒழித்த குரவன். [4] சிறந்த தலமும் தூய தீர்த்தமும் இவ்விடத்து உள்ளன. [5] கிட்டுதல் வேண்டும். [6] என்று சொல்ல, [7] பழிநீங்கிய அவ்விடத்தினின்று.

### கடம்பவனத்திற்கண்ட இயற்கைக் காட்சிகள்

117. [1]அருவிபடிந் தருவி[2]யெறி மணியெடுத்துப் [3]பாறையிலிட்
டருவி நீர்[4]தூய்க்
[5]கருவிரல்கொய் தலர்சூட்டிக் [6]கனியூட்டி [7]வழிபடுவ
[8]கல்லா மந்தி
ஒரு[9]துறையில்[10]யாளிகரி[11]புழைக்கைமுகந் தொன்றற்கொன்
றூட்டி யூட்டிப்
பருகுவன [12]புலிமுலைப்பால் [13]புல்வாய்க்கன் றருத்தியிடும்
பசிநோய் தீர.

118. [1]நெளியராக் குருளை[2]வெயில் வெள்ளிடையிற் கிடந்[3]துயங்கி
நெளியப்[4]புள்ளே
றெளியமுச் [5]சிறைவிரித்து நிழல்பரப்பப் [6]பறவைநோ
யுற்ற தேகொல்
அளியவாய் [8]அச்சோவென் றேதியயன் [9]மடமந்தி யருவி
யூற்றுந்
[10]துளியநீர் [11]வளைத்தசும்பின் முகந்தெடுத்துக்
கருங்கையினூற் சொரிவ மாதோ.

---

117. 1 அருவியில் நீராடி. 2 வீசிய மணியை. 3 பாறையில் (சிவலிங்கமாக) வைத்து. 4 சொரிந்து. 5 கரிய விரல்களால் பறித்து. 6 பழங்களை உண்பித்து. 7 சிவ வழிபாடு செய்வன. 8 அறிவில்லாத குரங்குகள். 9 நீர்த் துறையில். 0 யானை யாளிகளும் யானைகளும். 11 தொளையுள்ள கைகளால் நீரைமொண்டு. 12 புலி தன் முலைப்பாலை. 13 மான் கன்றுக்கு ஊட்டும். (பி-ம்) " அருந்தியிடும் "

118. 1 நெளிகின்ற பாம்புக்குட்டிகள். 2 வெயில் மிகுந்த வெற்றிடங்களில். 3 வருந்தி. 4 பறவை வேந்தாகிய கருடன். 5 சிறகுகளை. 6 இக்கருடன் துன்பமடைந்ததோ (என்று எண்ணி). 7 இரக்கமுடையனவாய். 8 ஐயோ என்று கூறி. 9 பெண் குரங்குகள். 10 துளியையுடைய நீரை. 11 சங்காகிய குடத்தில். " அளியவா வச்சோ " எனவும் பாடம்.

119. [1]படவரவ [2]மணியீன்று [3]நொச்சிப்பா சிலையன்ன பைந்தாண் [4]மஞ்ஞை
பெடைதழுவி மணஞ்செய்ய மணவறையில் [5]விளக்கிடுவ பெருந்தண் [6]கானத்
[7]தடர்சிறைமென் குயி[8]லோமென் றார்ப்பமடக் கிள்ளை[9]யெழுத் தைந்து மோசைத்
தொடர்புபெற [10]வுச்சரிப்பக் [11]குருமொழிகேட் டாங்குவப்ப [12]தொடிக்கட் பூவை.

சிவலிங்கப்பெருமானைக் காண்டல்

120. [1]அருவாகி யுருவாகி [2]யருவுருவங் [3]கடந்[4]துண்மை யறிவா னந்த
உருவாகி யளவிறந்த வுயிராகி யவ்வுயிர்க்கோ ருணர்வாய்ப் [5]பூவின்
மருவாகிச் சராசரங்கள் [6]அகிலமுந்தன் னிடையுதித்து [7]மடங்க நின்ற
[8]கருவாகி மூலத்தசிவக் கொழுந்தையா யிரங்கண்ணுங் களிப்பக் கண்டான்.

---

119. [1] படத்தையுடைய பாம்புகள். [2] மணியையுமிழ்ந்து. [3] நொச்சியின் பசிய இலையை யொத்த. [4] ஆண் மயில்கள். [5] விளக்காக வைப்பன. [6] காட்டில். [7] நெருங்கிய சிறகுகளையுடைய. [8] ஓம் என்று கூவா நிற்கவும். [9] திருவைந்தெழுத்தினையும். [10] ஓதவும். [11] குருமொழியைக் கேட்டு மகிழ்வதுபோல். [12] வட்டமான கண்களையுடைய நாகணவாய்ப் புட்கள்.

120. [1] அருவமாகியும். [2] அருவுருவமாகியும்; ஆகியென்பது இங்குக் கூட்டப்பட்டது. [3] இவற்றைக் கடந்து. [4] சச்சிதானந்த வடிவாகியும். [5] மலரின் மணம்போலாகியும். [6] அனைத்தும். [7] ஒடுங்க நின்ற. [8] மூலகாரணமாய்த் தோன்றியருளிய.

போற்றாமரை பெறுதல்

121\. [1]தங்குடிமைத் தச்சனையோர் [2]விமானமமைத் திடவிடுத்[2]தத்
தடத்தின் பாற்போய்
[3]அங்கணனைக் கடிதருச்சித் திடநறிய மலர்கிடையா
[4]தயர்வான் அந்தச்
சங்கெறிதண் டிரைத்தடத்தில் அரனருளாற் [5]பலபரிதி
[6]சலதி யொன்றிற்
பொங்குகதிர் பரப்பிமுளைத் தாலென்னப் [7]பொற்கமலம்
பூப்பக் கண்டான்.

122\. அன்பு[1]தலை சிறப்பமகிழ்ந்[2]தாடினன் [3]காரணத்தா லதற்கு
நாமம்
[4]என்பதுபொற் றாமரையென் [5]றேழுலகும் பொலிகவென
இசைத்துப் பின்னும்
[6]மின்பதுமத் தடங்குடைந்து பொற்கமலங் கொய்தெடுத்து
மீண்டு[7]நீங்காத்
தன்பழிநோய் தணியமுளைத் தெழுந்த[8]முழு
முதன்மருந்தின் றன்பால் வந்து.

---

121\. [1] தங்குடிக்குரிய தெய்வத் தச்சனை. [2] அத்தீர்த்தத்தின் பக்கலிற் சென்று. [3] அழகிய அருட் பார்வையுடைய இறைவனை. [4] வருந்துகின்றவன். [5] பலசூரியர்கள். [6] ஒரு கடலில். [7] பொற்றாமரைகள்.

122\. [1] மிக. [2] நீராடினன். [3] (பொற்றாமரை மலர்ந்த) ஏதுவினால். [4] முதல் வேற்றுமைச் சொல்லுருபு. [5] எழுலகங்களிலும் விளங்குக. [6] பொற்றாமரைத் தீர்த்தம். [7] நீங்காத தன் பழியாகிய நோய். [8] முழுமுதற்கடவுளாகிய மருந்தினிடத்து.

தெய்வ விமானஞ்சாத்தி வழிபாடு செய்தல்

123. [1]கிரியெட்டு மென[2]மழையைக் கிழித்தெட்டும்
புழைக்கை[3]மதிக் கீற்றுக் கோட்டுக்
கரியெட்டுஞ் சின[4]மடங்கல் நாலெட்டும் [5]எட்டெட்டுக்
கணமுந் தாங்க
விரியெட்டுத் திசைபரப்ப மய[6]னிருமித் துதவியவவ்
விமானஞ் [7]சாத்தி
[8]அரி [9]யெட்டுத் திருவுருவப் பரஞ்சுடரை யருச்சிப்பா
னாயி னானே.

124. தெய்வத்தா மரைமுளைத்த தடம்படிந்து [1]பவந்தொலைக்குந்
திருநீ [2]றாடிச்
[3]சைவத்தாழ் வடந்தாங்கி யன்புருவா யருளுருவந் தானாய்த்
தோன்றும்
[4]பைவைத்தா [5]டரவார்த்த [6]பசுபதியை
அவனுரைத்த [7]பனுவ லாற்றின்
[8]மெய்வைத்தா தரம்பெருக அருச்சனைசெய் தானந்த
வெள்ளத் தாழ்ந்தான்.

---

123. [1] அட்டமலைகளும் என்று சொல்லும்படி. [2] மேகத்தைக் கிழித்து அதற்கு மேலும் செல்லுகின்ற. [3] சந்திரனது பிளவையொத்த கொம்புகளையும் உடைய. [4] முப்பத்திரண்டு சிங்கங்களும். [5] அறுபத்துநான்கு சிவகணங்களும். [6] ஆக்கிக் கொடுத்த. [7] சிவலிங்கப் பெருமானுக்கு இருக்கையாக அமைத்து. [8] இந்திரன். [9] ஐம்பெரும்பூதம் ஞாயிறு திங்கள் உயிர் என்னும் எட்டுத்திருவுருவங்களை யுடைய.

124. [1] பிறவி. [2] தரித்து. [3] சைவ வேடத்திற்குரிய உருத்திராக்க மாலையை. [4] படமெடுத்து ஆடுகின்ற. [5] பாம்பை அணிகலன்களாகக் கட்டிய. [6] உயிர்கட் கெல்லாந் தலைவனாகிய இறைவனை. [7] ஆகமநெறியால். [8] உண்மையன்புமிக.

125. [1]பூசையும் [2]பூசைக் கேற்ற பொருள்களும் பூசை செய்யும்
[3]நேசனும் பூசை கொண்டு [4]நியதியிற் பேறு நல்கும்
ஈசனு மாகிப் பூசை யான்செய்தே னெனும்[5]என் போத
வாசனை யதுவு மான மறைமுத லடிகள் [6]போற்றி.

இறைவன் இந்திரனுக்கு யாதுவேண்டுமேனல்

126. [1]என்ன நின் றேத்தி னானை[2] இன்னகை சிறிது தோன்ற
முன்னவன் அடியா ரெண்ண முடிப்பவன் [3]அருட்க ணோக்கால்
உன்னது வேட்கை யாதிங் குரையென விரையத் தாழ்ந்து
சென்னிமேற் செங்கை கூப்பித் தேவர்கோ [4]னிதனைச் சொன்னான்.

இந்திரன் வேண்டுகோள்

127. ஐய நின் [1]னிருக்கை யெல்லைக் கணியனு மளவில் நீங்கா
வெய்யவென்[2]பழியி னோடு [3]மேலைநா ளடியேன் செய்த
[4]மையல்வல் வினையு [5]மாய்ந்துன் மலரடி வழுத்திப் பூசை
செய்யவு முரிய னானேன் [6]சிறந்தபே றிதன்மேல் யாதோ.

---

125. [1] பூசனையும். [2] பூசைக்குத் தகுந்த உபகரணங்களும். [3] அன்பனும். [4] முறைப்படி பயனை அருளுகின்ற. [5] தற்போத வாசனையுமான. [6] வணக்கம்; காக்க எனவும் ஆம். செய்வானும் செய்வினையும் அவ்வினைக்கு உதவியாகும் பொருள்களும் அவ்வினைப்பயனும் அதனை நல்குவானும் இறைவனே என்பது கருத்து.

126. [1] என்று சொல்லி. [2] இனிய புன்முறுவல் தோன்ற. [3] அருட் பார்வையால். [4] இனிக் கூறப்படுவதனை வேண்டுவானாயினன்.

127. [1] இருப்பிடத்தின் எல்லைக்கு. [2] கொலைப் பாவத்தோடு. [3] பழம் பிறப்புக்களில். [4] மயக்கத்தைத்தரும் தீவினைகளும். [5] மாயப்பெற்று. [6] இதைவிடச் சிறந்த பயன் யாதுளது.

128. [1]இன்ன நின் பாதப் போதே யிவ்வாறே யென்றும் பூசித்
துன்னடி யாருள் யானு மோ[2]ரடித் தொண்ட னவேன்
அன்னதே யடியேன் வேண்டத் தக்கதென் றடியில் வீழ்ந்த
மன்னவன் றனக்கு முக்கண் வரதனுங் [3]கருணை பூத்து.

இறைவன் தன்னைவழிபடுமுறையும் வரமும்அருளி இந்திரனைவிடுத்தல்

129. [1]இருதுவிற் சிறந்த வேனிலு மதியா றிரண்டினிற்
சிறந்தவான் [2]தகரும்
பொருவில்[3]தா ரகையிற் சிறந்தசித் திரையுந் திதியினிற்
சிறந்தபூ ரணையும்
[4]மருவு[5]சித் திரையிற் சித்திரை தோறும் வந்துவந்
[6]தருச்சியோர் வருடந்
தெரியுநாண்[7]முந் நூற் றறுபது மைந்துஞ்
செய்தவர்ச் சனைப்பய னெய்தும்.

130. [1]துறக்கநா டணைந்து [2]சுத்தபல் போகந் துய்த்துமேன்
[3]மலபரி பாகம்
பிறக்கநான் முகன்மான் முதற்பெருந் தேவர் [4]பெரும்பதத்
தாசையும் [5]பிறவும்
மறக்கநாம் வீடு வழங்குது மென்ன வாய்மலர்ந் தருளிவான்
கருணை
சிறக்க[6]நால் வேதச் சிகையெழும் [7]அனாதி சிவபரஞ்
சுடர்விடை கொடுத்தான்.

---

128. [1] இத்தன்மையான. [2] தாழ்ந்த தொண்டனவேன். [3] அருள் சுரந்து.

129. [1] பருவங்களிலுயர்ந்த இளவேனிலும். [2] ஆடு ; மேடம் ; சித்திரை. [3] நாண் மீன்களில். [4] (இவையனைத்தும்) ஒருங்கு சேர்ந்த. [5] சித்திரைத் திங்களில் சித்திரை நட்சத்திரந்தோறும். [6] வழிபடுவாயாக. [7] முந்நூற்றறுபத்தைந்து நாட்களிலும்.

130. [1] சுவர்க்கத்தையடைந்து. [2] தூய பலவகை இன்பங்களையும் நுகர்ந்து. [3] பந்த பாசம் நீங்கிப் பக்குவமடைதல். [4] பெரிய பதவிகளிலுள்ள விருப்பமும். [5] ஏனைய விருப்பங்களும். [6] நான்மறை முடிவில் தோன்றும். [7] ஆதியில்லது ; அறிவுக்கெட்டாத தொன்மை வாய்ந்தது என்றபடி.

131. [1]தொடுத்தவறு மையும்[2]பயனுந் [3]தூக்கிவழங் குநர்போல
அடுத்த[4]வயல் குளநிரப்பி யற்பெருக்கி யவனியெல்லாம்
உடுத்தகடல் [5]ஒருவருக்கு முதவாத வுவரியென
[6]மடுத்தறியாப் புனல்வையைக் கரையுளது வாதவூர்.

132. ஆயவளம் பதியதனின் [1]அமாத்தியரில் [2]அருமறையின்
தூயசிவா கமநெறியின் துறைவிளங்க வஞ்சனையால்
[3]மாயனிடும் புத்தவிரு ளுடைந்தோட வந்தொருவர்
[4]சேயவிளம் பரிதியெனச் சிவனருளா லவதரித்தார்.

133. பேர்வாத வூரரெனப் பெற்றுத்தம் பிறங்குமறைச்
சார்வாய நூல்வழியாற் சடங்கெல்லா நிறைவெய்தி
[1]நீர்வாய [2]விளமதிபோ னிரம்புவார் வேதமுதற்
[3]பார்வா[4]யெண் ணெண்கலையும் பதினாறுண்
டினிற்பயின்றார்.

---

131. [1] ஒருவரைப்பற்றிய. [2] அவரால் பிறர்க்கு உண்டாகும் பயனையும். [3] சீர்தூக்கிப் பார்த்து. [4] (வறியனவும் பிறர்க்குப் பயன்படுவனவுமான) வயல்களையுங் குளங்களையும் நிரப்பி. [5] (வறுமையில்லாததுடன்) ஒருவர்க்கேனும் பயன்படாத் உவர் நீரையுமுடையதென்று கருதி. [6] அதிற்பாய்ந்தறியாத. வையைநீர் கடலிற் கலவாமைக்குப் பிறிதுகாரணங் கற்பித்துக்கூறியது தற்குறிப்பேற்ற அணியாம்.

132. [1] அமாத்தியர் மரபில்; இவர் அமைச்சுத் தொழில்பூணும் அந்தணர். [2] அருமறையின் நெறியும் சிவாகமத்துறையும் விளங்க எனக் கூட்டுக. "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க" என்பது சேக்கிழார் திருவாக்கு. [3] திருமால், திரிபுரத்தசுரர்கள் சைவமதத்தினின்றும் விலகுதற்காக அவர்கட்குப் புத்தருடைய கொள்கையைப் போதித்தனர் என்பது வரலாறு. [4] இளைய செஞ்ஞாயிறுபோல.

133. [1] குளிர்ச்சி பொருந்திய. [2] இளம்பிறை வளர்வதுபோல. [3] பூமியில். [4] வேத முதலான அறுபத்துநான்கு கலைகளையும் எனக்கூட்டுக.

134. இத்தகையோர் [1]நிகழ்செய்தி யறிந்தவர்சென் றியம்பஅரி
மர்த்தனபாண் டியன்கேட்டு வரவழைத்து மற்றவரைச்
சித்தமகிழ் [2]வரிசையினாற் [3]சிறப்பளித்துத் [4]தன்கோயில்
[5]வித்தகநன் மதியமைச்சின் றொழில்பூட்டி [6]மேம்படுத்தான்.

135. [1]செற்றமிகுங் [2]கருவிகளின் திறநூலு மனுவேந்தன்
சொற்றபெருந் [3]தொன்னூலுந் [4]துளக்கமற விளக்கமுறக்
கற்றறிந்தோ ராதலினாற் காவலற்குக் [5]கண்போன்ற
முற்றுணர்ந்த வமைச்சரினு முதலமைச்ச ராய்நிகழ்வார்.

136. [1]அண்ணலரி மருத்தனனுக் [2]கடல்வாத வூரமைச்சர்
[3]கண்ணுமிடு கவசமும்போற் காரியஞ்செய் தொழுகுவார்
தண்ணளிசெய் [4]தவனியெலாந் தங்கிளைபோற் [5]குளிர்தூங்க
வண்ணமதிக் குடைநிழற்றி முறைசெய்து வாழுநாள்.

---

134. [1] இருக்குஞ் செய்தியை. [2] (ஆடை அணிகலன் பொன் மணி முதலிய) வரிசைகள் வழங்குதலோடு. [3] மேன்மையும் அளித்து; "தென்னவன் பிரமராயன்" என்னும் சிறப்புப்பெயரெனக்கொள்ளின் தொழில் பூட்டியபின் அளித்ததாகக் கொள்க. [4] தன் அரண்மனையில். [5] சதுரப்பாடு உடைய. [6] மேன்மைப்படுத்தினன்.

135. [1] சினம் மிக்க. [2] படைக்கலப்பயிற்சியும் யானை குதிரை யூர்தலும் ஆகிய இவற்றைத் தெரிவிக்கு நூல்கள். [3] நீதிநூல். [4] ஐயந்திரிபு அற. [5] அமைச்சர் அரசர்க்குக் கண்போறலை. "சூழ்வார் கண்ணாக ஒழுகலால் மன்னவன், சூழ்வாரைச் சூழ்ந்துகொளல்" என்னும் பொது மறையால் அறிக.

136. [1] பெருமை. [2] வெற்றி. [3] நெறியறிந்து செலுத்துதலால் கண்ணும், தெய்வத்தானும் மக்களானும் வரும் இடையூறு நீக்கிக் காத்தலால் கவசமும் போன்றார் [4] உலகிலுள்ள மக்களெல்லோரும். [5] மகிழ்ச்சியில் தங்க.

வேறு

137. [1]மெய்ம்மை யாம்பொருள் விவேகமும் வேறுபா டாய
[2]பொய்ம்மை யாம்பொருள் விவேகமும் [3]புந்தியுட் டோன்ற
[4]இம்மை யாசையு மறுமையி லாசையும் இகந்து
[5]செம்மை யாகிய கருத்தராய்ப் [6]பரகதி தேர்வார்.

138. பத்தி செய்தர னருள்பெறும் பத்தருக் கன்றி
முத்தி யெய்தரி தெனமறை மொழிவதப் [1]பொதுநூற்
[2]சத்தி யப்பொருட் டெளிவெலாஞ் [3]சத்திநி பாதர்க்
[4]குய்த்து ணர்த்துவ [5]தாகம மென்பர்மெய் யுணர்ந்தோர்.

139. [1]கரவி லாதபே ரன்பினுக் கெளிவருங் கருணைக்
[2]குரவ ஞ[3]ரரு ளன்றியிக் கொடியவெம் [4]பாசம்
[5]புரையில் கேள்வியாற் [6]கடப்பது [7]புணையினு லன்றி
உரவு நீர்க்கடல் கரங்கொடு[8]நீந்துவ தொக்கும்.

---

**137.** [1] நித்தப்பொருள் உணர்ச்சி. [2] அநித்தப் பொருள் உணர்ச்சி ; இவற்றை நித்தியா நித்தியவத்து விவேகம் என்பர். [3] உள்ளத்தில். [4] இம்மைமறுமை இன்பங்களில் விருப்பம் நீங்கி ; இது, இகபர போகவிராகம் எனப்படும். [5] தூய உள்ள முடையவராய் ; இந்நிலை, சமாதி சட்கசம்பத்தியெனப்படும். [6] வீடு அடைதற் குரிய நெறியினை ஆராய்வாராயினர். இது முமூட்சுத்துவம் எனப்படும். இவற்றைச் சாதன சதுட்டயம் என வழங்குவர்.

**138.** [1] வேதம் ; யாவர்க்கும் உரியது. [2] உண்மைப்பொருள். [3] திருவருள் பதியப் பெற்றவர். [4] விளக்கியறிவிப்பது. [5] இது சிறப்பு நூல் எனப்படும் ; சத்தினி பாதர்க்கு உரியது. சத்தி-திருவருள். நிபாதர்-நன்றாகப் பதியப்பெற்றவர்.

**139.** [1] கள்ளமில்லாத. [2] ஞானாசிரியன். [3] அருளாகிய புணையினாலன்றி. [4] பாச மாகிய கடலை. [5] குற்றமில்லாத நூற்கேள்வியால். [6] கடக்கக் கருதுதல். [7] தெப்பத்தாலல்லது. [8] நீந்திக் கடக்கக் கருதுதலை. (பி-ம்) "கேள்வியாற் கழிப்பது" "கரங்கொடு நீங்குவது."

140. என்றிவ் வாதவூர் மறையவர் [1]இன்பவீ டெய்தத்
துன்று மாசையால் [2]தொடக்குண்டு சுருதியா கமநூல்
ஒன்று கேள்வியோர் [3]வருந்தொறு முணர்ந்தவ ரிடைத்[4]தாஞ்
சென்று காண்டொறும் [5]அளவளாய்த் தேர்குவா ரானார்.

141. [1]எண்ணி லாரிடத் [2]தளந்தளந் தறிபொருள் [3]எல்லாம்
உண்ணு [4]நீர்விடாய்க் [5]குவரிநீ ருண்டவ ரொப்ப
[6]அண்ண லாரகத் [7]தமைவுறா தரசனுக் குயிருங்
கண்ணு மாயமைச் சுரிமையுங் கைவிடா தியல்வார்.

142. [1]கள்ளக் காதல னிடத்தன்பு கலந்துவைத் தொழுகும்
உள்ளக் [2]காரிகை [3]மடந்தைபோல் உம்பரைக் காப்பான்
[4]பள்ளக் கர்ரியுண் டவனிடத் துள்ளன்பு பதிந்து
கொள்ளக் காவல னிடைப்[5]புறத் தொழிலுமுட் கொண்டார்.

---

140. 1 பேரின்ப வீட்டையடைய. 2 கட்டுப்பட்டு. 3 தம்மிடம் வருந்தோறும். 4 தாமே போய் அவரைப் பார்க்குந்தோறும். 5 கலந்து ஆராய்வாராயினர்.

141. 1 அளவிறந்த அறிஞரிடத்து. 2 பல முறை ஆராய்ந்து. 3 எல்லாவற்றையும் 4 நீர்வேட்கை தணிதற்கு. 5 கடல் நீரைப் பருகினவர்க்கு அந்நீர்வேட்கை குறையாது மிகுமாறுபோல. 6 வாதவூரர். 7 அமைதி பிறவாதாக; உண்மையுணரும் வேட்கைமிக என்றபடி.

142. 1 சோரநாயகன். 2 அழகு. 3 ஒருபெண் கொண்டகணவனுக்கும் ஏற்ப நடந்துகொள்ளுதல்போல. 4 ஆழமான கடலில் தோன்றிய நஞ்சை. 5 அரசியற் கருமங்களையும் உட்கொண்டு செய்து வருவாராயினர்.

143. [1]மன்றல் வேம்பனும் வாதவூர் வள்ளலை நோக்கி
இன்று நீர்நம [2]தறைதிறந் திருநிதி யெடுத்துச்
சென்று [3]வேலையந் துறையில்வந் [4]திறங்குவ தெரிந்து
வென்றி வாம்பரி கொடுவரப் போமென்று விடுத்தான்.

144. [1]உள்ளம் வேறுபட் டமைச்சிய னெறியினின் றொழுகும்
[2]வள்ள லார்நிதி யறைதிறந் தரும்பெறல் [3]வயமான்
கொள்ள வேண்டிய பொருளெலாங் கொண்டு[4]தா ழிறுக்கி
வெள்ளை மா[5]மதி வேந்தனை விடைகொடு போவார்.

145. கருணை நாயகி யங்கயற் கண்ணி[1]யெம் பிராட்டி
[2]அருண நாண்மலர்ச் செய்ய[3]சீ றடித்தல மிறைஞ்சி
[4]வருண னார்பெரு வயிற்றுநோய் வலிகெடுத் தாண்ட
[5]தருண நாண்மதிச் சடையுடை [6]யடிகண்முன் றொழா.

146. [1]ஒன்று வேண்டுமிப் பொருளெலா முனக்குமைம் பொறியும்
வென்று [2]வேண்டுநின் னன்பர்க்கும் [3]ஆக்குக வெள்ளி
மன்று வேண்டிநின் றுடிய வள்ள[4]லென் குறையீ
தென்று வேண்டிநின் றேத்துவார்க் கிறைவனின்
[5]னருள்போல்.

---

143. [1] மணம் பொருந்திய வேப்ப மலர் மாலையையணிந்த பாண்டியனும். [2] கருவூலம். [3] கடற்றுறையில். [4] இறங்குங் குதிரைகளில்.

144. [1] சித்தத்தைச் சிவன்பாலே வைத்து. [2] வாதவூரர் ; மன்னன் பொருளை இறைவனுக்கும் அவனடியார்க்கும் வழங்கி அவனுக்கு இருமைப்பயனும் நல்குவாராதலின் இங்ஙனங் கூறினர். [3] வெற்றி பொருந்திய குதிரைகள். [4] தாழிட்டு. [5] மதி மரபில் தோன்றிய மன்னனிடம் ; உருபு மயக்கம்.

145. [1] எம்பெருமாட்டியின். [2] சிவந்த. [3] சிற்றடிகளை. [4] இவ்வரலாற்றை வருணன் விட்ட கடலை வற்றச்செய்த படலத்திற் காண்க. [5] இளமை. [6] இறைவன் திருமுன் வணங்கி.

146. [1] (அடியேனுக்கு) ஒரு வரம் அருளவேண்டும். [2] நின்னையே விரும்பும். [3] உரியனவாகச் செய்க. [4] என் வேண்டுகோள் இதுவாகும். [5] திருவருளை நல்கியது போல.

147. [1]ஆதி சைவனும் அருச்சக னுருவ[2]னே ரணைந்து
[3]பூதி யீந்தனன் நமக்[4]கிது போலிலை நிமித்தம்
ஈது [5]நன்னெறிக் கேதுவென் றிருகையேற் றணிந்து
வேத நாதனை [6]யிறைஞ்சினார் விடைகொடு மீண்டார்.

148. மற்றிவர் [1]வழிப்படுமுன்[2]மாறிநட மாடும்
வெற்றிவிடை யாரிவர் [3]வினைத்தொகையி னொப்பும்
பற்றிய [4]இருட்டுமல பக்குவமு நோக்கா
உற்றடிமை கொண்டு[5]பணி கொண்டருள [6]வுன்னா.

149. [1]சந்தமறை தீண்டரிய தங்கருணை யாலோர்
அந்தணர் குலக்[2]குரவ னாகியடி நீங்கா
[3]மைந்தர்பலர் தம்மொடு [4]பெருந்துறையில் வந்தோர்
[5]கொந்தலர் நெருங்கிய குருந்தடி யிருந்தார்.

150. நெருப்பிலிடு [1]வெண்ணெயென நெஞ்சுருக வென்னை
உருக்கு[2]மித னா[3]லென்னை யொளித்த[4]மல வாற்றல்
கருக்குமவ னாகியெனை யாள்[5]கருணை வெள்ளம்
இருக்குமிட னே[6]யிதென வெண்ணி[7]நகர் புக்கார்.

---

147. [1] சிவமறையோனாகிய. [2] நேரில்வந்து. [3] திருநீறு அளித்தான். [4] நன்னிமித்தம் இதுபோல் சிறந்தது பிறிதில்லை. [5] நல்வழியடைதற்கு. [6] பணிந்து; முற்றெச்சம்.

148. [1] செல்லுதற்கு முன்னமே. [2] கால் மாறி நடித்தருளும். [3] இருவினையொப்புமை; இன்பத்துன்பங்களை ஒருபடித்தாகக் கருதுதல். [4] இருண்ட ஆணவ மலபரிபாகத்தையும். [5] திருப்பணியையேற்று. [6] நினைந்து.

149. [1] சந்தத்துடன்கூடிய. [2] ஞானாசிரிய வேடங்கொண்டு. [3] ஞானபுத்திரரான மாணாக்கர் பலரோடு. [4] திருப்பெருந் துறையின்கண். [5] பூங்கொத்து.

150. [1] வெண்ணெய் உருகுமாறுபோல. [2] இக்காரணத்தால். [3] என் அறிவை மறைத்த. [4] ஆணவ மலத்தின் வலியைக் கெடுப்பவனாகி. [5] அருட்கடலாகிய இறைவன். [6] இதுவேயென்று; ஏகாரத்தைப் பிரித்துக் கூட்டுக. [7] அந்நகருட் புகுந்தார்.

151. [1]ஆலய மருங்குவல மாகவரு வார்[2]முன்
[3]மூலமறை யோதி[4]முடி யாதபொரு டன்னைச்
சீல[5]முனி வோர்தெளிய [6]மோனவழி தேற்றுங்
கோலமுறை கின்றதோர் குருந்தையெதிர் கண்டார்.

152. வேத நூலொரு மருங்கினு [1]மெய்வழிச் [2]சைவப்
போத நூலொரு மருங்கினும் [3]புராணத்துட் கிடந்த
[4]கீத நூலொரு மருங்கினுங் [5]கிளைகெழு [6]சமய
பேத நூலொரு மருங்கினும் வாய்விட்டுப் பிறங்க.

153. சுருதி கூறிய [1]அறமுத னான்கு[2]மூத் தொன்னூற்
கரிய தாங்[3]கதிக் கேதுவென் றாகமங் காட்டுஞ்
[4]சரியை யாதிநாற் பாதமுந் [5]தலைதெரிந் துணர்ந்த
பெரிய [6]மாணவர் கழகமும் [7]வினாவிடை பேச.

154. [1]ஒழித்த நோன்பினர் [2]ஆடலர் பாடல ருலகம்
பழித்த செய்கைய ரழுகையர் நகையினர் பாசங்
கழித்த [3]கண்ணினால் அரனுருக் கண்டுகொண் டுலகில்
[4]விழித்த கண்குரு டாத்திரி வீரரும் பலரால்.

---

151. [1] கோயிலின்கண். [2] முற்காலத்தில். [3] முதல் நூலாகிய வேதங்களையோதியும். [4] அறியமுடியாத. [5] சனகர் முதலிய நால்வர். [6] மௌன நெறியால்; நால்வர்க்கு அறம் உரைத்த கோலத்துடனே குருந்தின் நிழலில் இருந்தனரென்பதாம்.

152. [1] உண்மை நெறி. [2] சிவஞானத்தை விளக்கும் ஆகமங்கள். [3] புராணத்துடன்; உருபு மயக்கம். [4] இசை நூல். [5] பல கிளைகள் பொருந்திய. [6] பலதிறப்பட்ட சமய நூல்கள்.

153. [1] அறம்பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப்பொருள் நான்கினையும். [2] அப் பழைமையான மறைநூலுக்கு. [3] வீடுபேற்றுக்கு ஏதுவாமென்று. [4] சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு நிலைகளையும். [5] சிக்கறுத்து உணர்ந்த. [6] மாணவர் கூட்டங்களும். [7] வினாவும் விடையுமாகப் பேசவும்.

154. [1] விதிவிலக்குக் கடந்த தவத்தினையுடையாராய்; சித்தம் சிவமான நிலையில் அவர் செய்வன யாவும் தவமாகலின் இங்ஙனங் கூறினார். [2] ஆடலும் பாடலும் செய்பவராய். [3] ஞானக்கண்ணினால். [4] திறந்து பார்க்கின்ற ஊனக்கண்.

155. இத்த கைப்பல தொண்டர்தங் குழாத்திடை [1]யாலம்
ஒத்த பைங்குருந் தடியினில் யோகவா சனத்திற்
[2]புத்த கத்தெழு தியசிவ ஞானமெய்ப் போதந்
தைத்த லந்தரித் திருப்பதோர் [3]கருணையைக் கண்டார்.

156. மன்று ளாடிய [1]வானந்த வடிவமும் [2]வடவால்
ஒன்றி [3]நால்வருக் [4]கசைவற வுணர்த்திய [5]வுருவும்
இன்று நாயினேற் கெளிவந்த [6]விவ்வுரு வென்று
அன்று நாயகன் [7]குறிப்புளத் [8]துணர்த்திட வறிந்தார்.

157. முன்ப ணிந்தனர் [1]அணிந்தன ரஞ்சலி முடிமேல்
என்பு நெக்கிட வுருகின ரினியரா யெளிவந்
[2]தன்பெ னும்வலைப் பட்டவ ரருள்வலைப் பட்டார்
துன்ப வெம்[3]பவ வலையறுத் திடவந்த தொண்டர்.

158. அண்ணல் [1]வேதிய [2]ரொழுக்கமு மன்புங்கண் டி[3]யாக்கை
[4]உண்ணி லாவுயிர் பொருள்[5]புன லுடன்கவர்ந் [6]துள்ளக்
கண்ணி னான்[7]மலங் கழீஇப்[8]பத கமலமுஞ் சூட்டி
வண்ண மாமலர்ச் [9]செங்கரஞ் சென்னிமேல் வையா.

---

155. [1] கல்லாலமரம் போன்ற. [2] உண்மையான சிவஞானபோத மெழுதிய சுவடியை என மாற்றுக. [3] அருள் வடிவத்தை.

156. [1] இன்பவடிவமும். [2] கல்லாலின் அடியிலிருந்து. [3] சனகர் முதலிய நான்கு முனிவர்க்கும். [4] மன அலைவு நீங்க; மோன நிலையில் இருந்து என்றுமாம். [5] அருளுருவமும். [6] இத்திரு வுருவமேயென்று. [7] திருவருட் குறிப்பு. [8] அறிவித்ததால். இவ்வுரு, வடிவமும் உருவுமே என்று அறிந்தார் எனவுமாம்.

157. [1] தலைமேற் கைகளைக் குவித்து; முற்றெச்சம். [2] பத்திவலையில் அகப்பட்டவராகிய அவ்விறைவரது. [3] பிறவியாகிய வலையை அறுத்தற்கு.

158. [1] வாதவூரடிகளின். [2] ஞான ஒழுக்கத்தையும். [3] உடலையும். [4] அதனுள்ளே உலாவுகின்ற உயிரையும். [5] தான நீருடன் ஏற்று. [6] அகநோக்கால். [7] மலமாசு போக்கி; இது மானத தீக்கை. [8] இது திருவடி தீக்கை. [9] இது அத்தமத்தக சையோகம் எனப்படும் பரிச தீக்கை.

"அன்றே யென்றன் ஆவியும் உடலும் உடைமையெல்லாமும், குன்றேயனையா யென்னை யாட்கொண்டபோதே கொண்டிலையோ" என அடிகள் கூறுதலால் "யாக்கை......கவர்ந்து" என்றார்.

159. பார்த்த [1]பார்வையால் [2]இரும்புண்ட நீரெனப் பருகுந்
[3]தீர்த்தன் றன்னையுங் குருமொழி செய்ததுந் தம்மைப்
[4]போர்த்த பாசமுந் தம்மையு மறந்து[5]மெய்ப் போத
மூர்த்தி யாயொன்று மறிந்திலர் வாதவூர் முனிவர்.

160. தேனும் பாலுந்தீங் [1]கன்னலு மமுதுமாய்த் தித்தித்
தூனு முள்ளமு முருக்க[2]வுள் ளொளியுணர்ந் [3]தின்பம்
ஆன வாறுதேக் கிப்[4]புறங் கசிவதொத் தழியா
[5]ஞான வாணிவந் திறுத்தனள் அன்பர்தந் நாவில்.

161. பழுதி லாத[1]சொன் மணியிணைப் [2]பத்திசெய் [3]தன்பு
முழுது மாகிய வடத்தினன் [4]முறைதொடுத் தலங்கல்
அழுது சாத்துமெய் யன்பருக் ககமகிழ்ந் தையர்
வழுவி லாதபேர் மாணிக்க வாசக னென்றார்.

162. தித்திக்கு [1]மணிவார்த்தை யின்னஞ் சின்னாள் திருச்[2]செவியி
லருந்தவுங்கைச் செம்பொ னெல்லாம்
[3]பத்திப்பே ரன்பளித்துக் கவர்ந்து [4]வேண்டும்
பணிகொடு [5]பாண் டியனையிவர் பண்பு தேற்றி
முத்திக்கே விடுத்திடவும் [6]புத்தை வாது முடித்திடவுந்
திருவுள்ள[7]முன்ன மெய்தி
[8]எத்தித்தொண் டரைக்[9]கருமஞ் சிறிதுண் டிங்கே
யிருத்தியென [10]வுருக்கரந்தான் அடிய ரோடும்.

---

159. [1] திருவருள் நோக்கத்தால். [2] காய்ச்சிய இரும்பு நீரைப் பருகினாற்போல. [3] தூயவனாகிய அவ்வாசிரியனையும். [4] மறைத்த. [5] உண்மை ஞான வடிவினராய்.

160. [1] கருப்பஞ்சாறும். [2] உள்ளத்தில் தோன்றும் அருளொளியை உணர்ந்து. [3] இன்பமாகிய ஆறு நிறைக்கப்பட்டு. [4] புறத்திற் கசிவதுபோல. [5] ஞானக்கலை மகள்தானே வந்து தங்கினாள்.

161. [1] சொல்லாகிய மாணிக்கங்களை. [2] வரிசைப்படுத்தி. [3] முழுதும் அன்பாகிய கயிற்றினால். [4] முறையாகக் கோக்கப்பட்ட பாமாலையை; பெயரெச்ச ஈறு தொக்கது.

162. [1] மாணிக்கம்போலும் வாசகமாகிய அமுதத்தை. [2] செவியாகிய வாயினால் நுகரவும். [3] பத்தியாகிய தலையன்பைக் கொடுத்துப் பொன்னெல்லாங் கவர்ந்து என்க. [4] தாம் விரும்பும் பணியை ஏற்றுக்கொண்டு. [5] பாண்டியனுக்கு; உருபு மயக்கம். [6] புத்தரை வாதின்கண் வென்று அழிக்கவும். [7] கருதி. [8] ஏமாற்றி. [9] சிறிது காரியம் உளது. [10] மறைந்தருளினான்.

163. கனவில்வருங் காட்சியெனக் கருணை மூர்த்தி [1]காட்டிமறைத்
தலுமன்பர் [2]கலக்கத் தாழ்ந்து
நனவுகொல்லோ கனவுகொல்லோ வின்று நாதன்
[3]ஞமலிக்குத் தவிசிட்ட நலம்போ லென்னை
நினைவரிய திருமேனி காட்டி யாண்டு [4]நீத்ததையென்
றையுற்று [5]நெஞ்சந் தேறி
[6]இனவடியா ருடன்கூட்டா தேகி னையோ வென்னையுமென்
வினையையுமிங் கிருத்தி யெந்தாய்.

164. வஞ்ச[1]வினைக் கொள்கலனா முடலைத்[2]தீவாய் மடுக்கிலேன்
வரையுருண்டு மாய்ப்பே னல்லேன்
நஞ்சொழுகு வாளாலுங் [3]குறைப்பே னல்லேன் நாதனே
[4]யதுவுநின துடைமை யென்றே
அஞ்சினேன் றனேயு மழியா தாவி யையனே
நினைப்பிரிந்தும் [5]ஆற்ற கில்லேன்
[6]என்செய்கோ வெந்தாயோ வெந்தா யோவென்
றிரங்கினர் புரண்டழுதா ரினைய சொல்வார்.

---

163. [1] தமது உருவத்தைக்காட்டி. [2] துன்பக்கடலுள் அழுந்தி. [3] நாய்க்குத் தவிசளித்து நலம்பட ஆண்டமைபோல. [4] நீங்கியது; ஐ சாரியை. [5] (நனவே யென்று) மனந்தெளிந்து. [6] உன் இனமாகிய அடியாருடன். என்னை ஆண்டு நீத்தது, நனவுகொல்லோ கனவுகொல்லோவென் றையுற்றுத்தேறி எனக் கூட்டுக.

164. [1] வினைகள் நிறைந்த பாண்டம்; மரக்கலமுமாம். [2] நெருப்பின்கண் வீழ்த்திலேன். [3] வெட்டுவேனல்லேன். [4] அவ்வுடலும். [5] பொறுக்ககில்லேன். [6] யாது செய்வேன்.

"தாயிலாகிய இன்னருள் புரிந்தவென் தலைவனை நனிகாணேன்
தீயில் வீழ்கிலேன் திண்வரை யுருள்கிலேன் செழுங்கடல் புகுவேனே."

"அறுக்கி லேனுடல் துணிபடத் தீப்புக் கார்கி லேன்திரு வருள்வகை யறியேன்
பொறுக்கி லேனுடல் போக்கிடங் காணேன் போற்றி போற்றியென்
போர்விடைப் பாகா
இறக்கி லேனுனைப் பிரிந்தினி திருக்க என்செய் கேனிது செய்கவென் றருளாய்"
என்னும் அடிகள் திருவாக்குகள் ஈண்டு நினைக்கத்தக்கன.

165. வறியவனு மொருபிறவிக் குருடன் கையில் [1]வந்தபெரு
விலை[2]மணிபோன் [3]மழலை தேருச்
சிறியவனு மொரு[4]மதலை கையிற் கொண்ட [5]செம்பொன்மணி
வள்ளம்போற் றேவர் யார்க்கும்
அறிவரியாய் சிறியேனை யெளிவந் தாண்ட வருமையறி
யேன்[6]துன்பத் தழுவத் தாழப்
[7]பிறிவறியா வன்பரொடு மகன்றாய் [8]கல்லாப் பேதையேன்
குறையலதெம் பிரானு [9]லென்னே.

166. என்று வாய்திறந் [1]தரற்றின ரிரங்கினார் [2]புனிற்றுக்
கன்று நீங்கிய வானெனக் [3]கரைந்தநெஞ் சினராய்ச்
சென்று கோபுர வாயிலின் [4]புறம்புபோய்த் திரண்டு
நின்ற [5]காவலன் றமர்களை [6]நேர்ந்தனர் நோக்கா.

167. [1]துங்க வாரியிற் கடும்பரித் [2]தொகையெலாம் [3]ஆடித்
திங்க ளின்றலை [4]வருமென முன்புபோய்த் [5]தென்னர்
புங்க வன்றனக் குணர்த்துமின் போமென விடுத்தார்
அங்க ணாயகன் பெருந்துறை நாயக னன்பர்.

---

165. [1] தானேவந்து கிடைத்த. [2] மாணிக்கத்தைப்போலவும். [3] மழலைச்சொல் தெளியாத. [4] குழந்தை. [5] சிவந்த பொன்னாற் செய்து மணிகள் பதித்த கிண்ணத்தைப்போலவும். [6] துன்பக்கடலுள் அழுந்த. [7] பிரிவை அறியாத. [8] கல்லாத புல்லறிவினையுடைய எனது குறையேயன்றி. [9] யாது குறையுளது. குருடனும், மதலையும், மணியும் வள்ளமும் கிடைத்தவழியும் அவற்றின் அருமை அறியாது நெகிழவிடல்போல, பேதையேனும் நினது அருமையறியாது நெகிழவிடலானேன் என்றார்.

"மையிலங்குநற் கண்ணிபங்கனே வந்தெனைப்பணி கொண்டபின் மழக்
கையிலங்குபொற் கிண்ணமென்றலால் அரியையென்றுனைக் கருதுகின்றிலேன்."
"என்னு லறியாப் பதந்தந்தா யான தறியா தேகெட்டேன்
உன்னு லொன்றுங் குறைவில்லை உடையா யடிமைக் காரென்பேன்." என அடிகள் அருளிச் செய்திருத்தல் காண்க.

166. [1] கதறி வருந்தி; முற்றெச்சங்கள். [2] இளங்கன்று. [3] உருகிய. [4] வெளியே போய். [5] அரசன் பணியாளர்களை. [6] நேர்ந்து பார்த்து.

167. [1] சிறந்த கடற்றுறையில். [2] கூட்டம். [3] ஆடி மாதத்தில். [4] வந்திறங்குமென்று. [5] பாண்டியர் பெருமானுக்கு.

168. சிறந்த பூசைக்குந் [1]திருவிழாச் சிறப்புக்குஞ் செல்வம்
நிறைந்த வாலயத் [2]திருப்பணித் திறத்துக்கு [3]நிரப்பி
[4]அறந்த வாதபே ரன்பர்க்குஞ் செலுத்தி[5]யத் தலத்தே
உறைந்[6]த வாவற [7]இன்னண மொழுகுநாள் கழிப்பார்.

169. மன்ன வன்[1]திரு முகங்கண்டு முறைமையால் வாங்கி
அன்ன வாசகந் தெரிந்துகொண் [2]டாதியீ றில்லா
முன்ன வன்றிரு வருட்கடன் மூழ்கிய [3]முனிவர்
என்னை வேறினிச் செய்யுமா றென்றுநின் றயர்வார்.

170. [1]என்னா யகனே பொன்னாடர்[2]ஏறே [3]யேறு கொடியுயர்த்த
மன்னா [4]தென்னா பெருந்துறையெம் மணியே வழுதி பொருளெல்லாம்
நின்னா லயத்து நின்னடியா ரிடத்துஞ் செலுத்து நெறி[5]யளித்தாய்
[6]பின்னா னவனுக் [7]கென்கொண்டு பரிமாச் செலுத்தப் பெறுமாறே.

171. என்னா விறைஞ்சி யெழுந்தேத்தி [1]யிரந்தா ரெதிரே பெருந்துறையின்
மின்னார் சடைமேற் பிறைமுடித்தோன் விசும்பி னிறைந்த [2]திருவாக்கான்
[3]மன்னா னவற்குப் பரியெல்லாம் வருமென் றோலை[4]விடுதி யெனச்
சொன்னா னதுகேட் டகத்துவகை [5]துளும்பி[6]வரைந்து சுருள்விடுத்தார்.

---

168. [1] திருவிழாவாகிய சிறப்புக்கும். "சிறப்பொடு பூசனை செல்லாது" என்னுந் திருக்குறளும் அதனுரையும் நோக்குக. [2] திருப்பணி வகைக்கும். [3] நிரம்பக் கொடுத்து. [4] அறநெறியின் நீங்காத. [5] அத்திருப்பெருந்துறையின்கண். [6] ஆசையின்றி. [7] இவ்வாறு செல்லும் நாட்களைக் கழிப்பாராயினர்.

169. [1] ஓலையைப் பார்த்து. [2] பிறப்பிறப்பில்லாத முதல்வன். [3] மணிவாசகனார்.

170. [1] எனது தலைவனே. [2] சிங்கமே. [3] இடபத்தைக் கொடியின்கண் உயர்த்தியருளிய. [4] சௌந்தர பாண்டியனே. [5] எனக்குத் தந்தருளினாய். [6] இனியான். [7] எதுகொண்டு. இதற்கும் நீயே வழிகாட்ட வேண்டுமென்பது கருத்து.

171. [1] குறையிரந்துநின்ற அடிகளுக்கு நேரே. [2] அசரீரியால். [3] மன்னற்கு; ஆனவன்-முதல் வேற்றுமைச் சொல்லுருபு. [4] அனுப்புவாய். [5] நிறைந்து. [6] முடங்கல் எழுதிப் போக்கினார்.

172. அன்று துயிலும் வாதவூ ரடிகள் கனவிற் சுடர்[1]வெள்ளி
மன்று கிழவர்[2]குருந்தடியில் வடிவங் காட்டி யெழுந்தருளி
வென்றி வேந்தன் மனங்கவரும்[3]விசயப் பரிகொண்
டணைகின்றேம்
இன்று நீமுன் னேகுதியென் றருளிச் செய்ய
வெழுந்திருந்தார்.

173. எழுந்தா[1]ருடைய பெருந்துறையா ரிருதாள் பணிந்தா
ரினிப்பிறப்பில்
[2]அழுந்தார் வழிக்கொண் டாரடைந்தா ரகன்றார் நெறிக
ளவிர்திங்கட்
கொழுந்தார் சடையார் விடையார்தென் கூட லணைந்தார்
[3]பாடளிவண்
[4]டுழுந்தார் வேந்தன் பொற்கோயி லுற்றார் காணப்
பெற்றாரால்.

174. [1]மன்னர் பெருமா னெதிர்வந்த மறையோர் பெருமான்
வழிபாடு
[2]முன்னர் முறையாற் செய்தொழுகி [3]முன்னே நிற்ப
முகநோக்கித்
தென்னர் பெருமா னெவ்வளவு செம்பொன் கொடுபோ
யெவ்வளவு
[4]நன்ன ரிவுளி கொண்டதெனக் கேட்டான் [5]கேட்ட
நான்மறையோர்.

---

172. [1] வெள்ளியம்பலத்துக்கு உரிய சோமசுந்தரக்கடவுள். [2] குருந்தமரத்தின் அடியில் ஆட்கொண்ட ஆசிரியக்கோலம். [3] வெற்றிபொருந்திய குதிரைகளை வாங்கிக் கொண்டுவருவோம்.

173. [1] தம்மை ஆளாகவுடைய. [2] வினையாலணையும் பெயர்; அழுந்தாத வாதவூரடிகள் எழுந்து பணிந்து என முறையே கொள்க. [3] இசை பாடும் அளியாகிய வண்டுகள். [4] கிண்டுகின்ற. எழுந்தார் முதலிய முற்றுக்கள் எழும் எச்சப் பொருளன.

174. [1] அரசர்க்கரசனாகிய பாண்டியனுக்கு. [2] பரிவாங்கப் புறப்படுமுன் செய்த முறைப் படியே. [3] எதிரில் நிற்க. [4] நல்ல குதிரைகள். [5] அதனைச் செவியுற்ற.

175. பொன்னு மளவோ விலைகொண்ட புரவித் தொகையு [1]மனைத்தவைதாம்
பின்னர் வரக்கண் டருளுநிதியெம் பெருமா [2]னிதனாற் றரங்கபதி
என்னு நாமம் பெறுதி[3]மதி யென்றா ரென்ற [4]மந்திரர்க்குத்
தென்னன் சிறந்த வரிசைவளஞ் செய்து விடுப்பச் செல்கின்றார்.

176. [1]பொன்னங் கமலத் தடம்படிந்து புழைக்கை மதமா முக்க[2]கடவுள்
தன்னங் கமல சரணிறைஞ்சித் தனியே முளைத்த சிவக்கொழுந்தை
மின்[3]னங் கயற்கட் கொடிமருங்கில் விளைந்த தேனை [4]முகந்துண்டு
[5]முன்னங் கருத்து மொழியுடம்பு [6]மூன்று மன்பாய்த் தோன்றினார்.

177. [1]மன்னே யென்னை யாட்கொண்ட மணியே வெள்ளி மன்றாடும்
[2]அன்னே யடியேன் [3]வேண்டியவா றரச னீந்த நிதியெல்லாம்
முன்னே கொண்டென் பணிகொண்டாய் முனியா தரச னனிமகிழ
[4]என்னே புரவி வரும்வண்ண மென்று வேண்டி நின்றிடலும்.

---

175. [1] அத்தன்மைத்து; அளவில்லையென்றதாம். [2] இங்ஙனம் அளவிறந்த குதிரைகளைப் பெற்றமையால். [3] முன்னிலையசை. [4] அமைச்சர்க்கு.

176. [1] பொற்றாமரைத் தீர்த்தத்தில். [2] சித்திவிநாயகருடைய. [3] அங்கயற்கண் அம்மை என்னுங்கொடியின் பக்கத்தில். [4] கண்களால் மொண்டு பருகி. [5] திருமுன் நின்று. [6] மூன்று காரணங்களும்.

177. [1] என் இறைவனே. [2] தாயே. [3] வேண்டிக்கொண்ட வண்ணமே. [4] எவ்விதம்.

178. மெய்யன் புடையா [1]யஞ்சலைநீ வேட்ட வண்ணம் [2]விண்ணிரவி
[3]வையம் பரிக்கும் பரியனைய [4]வயமாக் கொண்டு[5]வருது மென
ஐயன் றிருவாக் ககல்[6]விசும்பா றெழுந்த தாக வதுகேட்டுப்
பொய்யன் பகன்றார் சிவன்கருணை போற்றி மனையிற் போயினார்.

179. [1]கடிமனை யடைந்த வெல்லை வாதவூர்க் [2]காவ லோரை
[3]மடிமையில் சுற்றத் தோருங் [4]கேளிரு [5]மாண்ட காதல்
அடிமையுள் ளாரும் [6]ஏதி லாளரும் பிறரு மீண்டி
[7]இடிமழை வாய்விட் டென்னப் புந்திகள் [8]இனைய சொல்வார்.

180. [1]மந்திரக் கிழமை பூண்டு மன்னவர் கருமஞ் செய்வ
தந்தணர்க் கறனே யல்ல அமைச்சிய லறத்து நின்றால்
[2]வெந்திற லரசர்க் [3]கேற்ற செய்வதே வேண்டு மென்னத்
[4]தந்திர மனுநூல் வல்லோர் சாற்றுவா ரன்றோ வையா.

181. [1]அரைசிய லமைச்சு நீதி யாய்ந்தநுங் கட்கு நாங்கள்
[2]உரைசெய்வ தெவனீர் செய்வ தொன்றுநன் றாவ தில்லை
விரைசெறி [2]தாரார்க் கின்று வெம்பரி வருவ தாக
[4]வரையறை செய்தீர் நாளை யென்சொல வல்லீ ரையா.

---

178. [1] அஞ்சாதே. [2] வானின்கண் உள்ள. [3] தேரை இழுக்கும். [4] வெற்றி பொருந்திய குதிரைகளை. [5] வருவேம். [6] வானின் வழியே (அசரீரியாக) எழாநிற்க.

179. [1] விளக்கம். [2] பெரியோர்களை அவர்கள் அவதரித்த ஊர்க்குத் தலைவராகக் கூறுதல் மரபாதலின் இங்ஙனம் கூறினார். [3] சோர்வு. [4] நண்பர்களும். [5] சிறந்த அன்புடைய. [6] அயலாரும். [7] இடிக்கின்ற மேகம். [8] இவ்வாறான அறிவுரைகளை.

180. [1] அமைச்சியலுரிமை. [2] மிக்க வலிமை. [3] பொருத்தமான வினைகளையே. [4] தந்திரமாகிய நீதிநூல் வல்லவர்.

181. [1] அரசியலையும் அமைச்சர் நீதியையும். [2] சொல்லத்தக்கது யாது. [3] பாண்டியனுக்கு. [4] வரையறுத்துக் கூறினீர்.

182. தழுவிய கிளைஞர் நட்டோர் [1]சார்வுளோர் தக்க சான்றோர்
குழுவினைக் காக்க வேண்டுங் [2]குறிப்பிலீர் போலு நீவிர்
[3]ஒழுகுறு செயலி னாலே யுஞ்செய லுமக்கே சால
[4]அழகிது போலு மென்னக் [5]கழறினு ரதுகேட் டையன்.

183. சுற்றமுந் [1]தொடர்பு நீத்தேந் துன்பமு மின்பு மற்றேம்
[2]வெற்றுடன் மானந் தீர்ந்தேம் [3]வெறுக்கைமேல்[4]வெறுக்கை வைத்தேஞ்
[5]செற்றமுஞ் செருக்குங் காய்ந்தேந் [6]தீவினை யிரண்டுந் தீர்ந்தேங்
கற்றைவார் சடையான் [7]கோலங் காட்டியாட் கொண்ட வன்றே.

184. தந்தைதாய் [1]குரவ [2]னைசான் சங்கரன் [3]நிராசை பெண்டிர்
[4]மைந்தர்பல் லுயிருஞ் சுற்ற மாசிலா [5]வீச னன்பர்
[6]அந்தமில் பிறவி யேழும்[7]அடுபகை யென்ப தோர்ந்தேம்
எந்தையார் கருணை காட்டி யெம்மையாட் கொண்ட வன்றே.

185. [1]ஊரெலா [2]மட்ட சோறு நம்மதே யுவரி சூழ்ந்த
பாரெலாம் [3]பாய[4]துன்னற் கோவணம் [5]பரிக்கு மாடை
[6]சீரெலாஞ் சிறந்த[7]சாந்தந் தெய்வநீ றணிபூண் [8]கண்டி
[9]நீரெலாஞ் சுமந்த வேணி நிருத்தனாட் கொண்ட வன்றே.

---

**182.** [1] (உம்மைப்) பற்றுக் கோடாக உடையவர்கள். [2] கருத்துடையீரல்லீர். [3] நடக்க லுற்ற. [4] அழகினையுடையது. [5] இடித்துக் கூறினர். போலும் என்பது இரண்டும் ஒப்பில் போலி.

**183.** நட்டோர் சார்வுளோர் என்னும் தொடர்புகளையுந் துறந்தேம். [2] பயனற்ற இவ்வுடம்பின் பற்றையும். [3] பொருள். [4] வெறுத்தல். [5] சினத்தையும் மதத்தையும். [6] கொடிய நல்வினை தீவினையென்னும் இரண்டினின்றும்; நல்வினையும் பிறவிக்கு ஏதுவாகலின் தீவினையெனப்பட்டது. "இருள்சேர் இருவினையுஞ்சேரா" என்பது மறைமொழியாதல் உணர்க. [7] தமது அருட் கோலத்தைக் காட்டி.

**184.** [1] ஞானசிரியன். [2] போதகாசிரியன். [3] மனைவி ஆசையின்மையே. [4] மக்கள். [5] சிவனடியாரே. [6] முடிவில்லாத. [7] கொல்லும் பகை.

**185.** [1] ஊர் முழுதும். [2] சமைத்த சோறு. [3] படுக்கையே. [4] தைத்தகோவணம். [5] உடுக்கும் உடை. [6] சீர் எல்லாவற்றினும் சிறந்த. [7] சந்தனம். [8] உருத்திராக்கமாலை. [9] கங்கை நீர் முழுதும்.

186. இறக்கினு மின்றே [1]யிறக்குக வென்று மிருக்கினு
மிருக்குக வேந்தன்
[2]ஒறுக்கினு மொறுக்க வுவகையு முடனே யூட்டினு மூட்டுக
வானிற்
[3]சிறக்கினுஞ் சிறக்க கொடிய[4]தீ நரகஞ் சேரினுஞ் சேருக
சிவனே
மறக்கிலம் [5]பண்டைப் பழவினை விளைந்தான் மாற்றுவார்
யாரென மறுத்தார்.

வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்த படலம்

187. [1]என்னா யகனேயோ வென்னிருகண் மணியேயோ வென்னை
யீன்றான்
தன்னாவி யன்னா[2]தனி மருகாவோ [3]முருகாவோ [4]தாரார்
முல்லை
மன்னாவோ வணிகர்குல மணியேயோ விடவரவின்
வாய்ப்பட் டாயோ
உன்[5]னாக நிழலான வென்னைவிடுத் தெவ்வண்ணம் [6]ஒளிப்ப
தேயோ

---

186. [1] இறக்கக்கடவோம். [2] தண்டித்தாலும். [3] சிறப்புப் பெறினும் பெறக்கடவோம். [4] நெருப்புமயமான நிரயத்தின் கண். [5] முன் செய்த பழவினைகள்.
இறைவன் பழவினைப் பயனை நுகர்விக்குங்கால் அதற்கு அமைந்து நுகர்தலன்றி மறுத்தல் இயலாதென்பது கருத்து.

187. [1] எனது கணவனே; தன் தந்தையால் உறுதி செய்யப்பட்டமையால் நாயகன் என்றாள். [2] ஒப்பற்ற மருகனே. [3] இளமைப் பருவமுடையவனே. [4] முல்லை மலர் மாலையணிந்த. [5] உடம்பின் நிழலாகிய என்னைவிட்டு. [6] எவ்வாறு மறைந்திருப்பது. ஓகாரங்கள் புலம்பலில் வந்தன.

188. பொன்னாட்டின் [1]மடவாரைப் புணர்வதற்கோ நம்மளகா
புரத்து[2]வேந்தன்
நன்னாட்டின் [3]மடவாரை மணப்பதற்கோ வுனைக்கடித்த
நாகர் வேந்தன்
றன்னாட்டின் [4]மடவாரைத் தழுவுதற்கோ வென்னாவித்
தலைவா வென்னை
இந்நாட்டி லிருத்தியெனை வஞ்சித்துப் போயினவா
றென்னே யென்னே.

189. [1]தென்னுலகிற் புகுந்தனையோ பணிந்தனையோ [2]மாதுலனைத்
[3]தேவி யோடும்
தன்[4]னிருதோ ளுற[5]வாரத் தழுவினையோ நானுமுடன்
சார்ந்தே னாகில்
என்னுரிய[6]குரவரையுங் கண்ணாரக் காணேனோ வெனையீங்
கிட்டாய்
பின்னுரிய [7]பரிசனமுங் கைவிட்டாய் தனிப்போ [8]யென்
பெற்றா யையா.

---

**188.** [1] அரமகளிரை. [2] குபேரன்; தனவணிகர் நிதிக்கிழவன் வழியினர் என்னுங்கருத்தால் நம் அளகாபுரத்து வேந்தன் என்றாள். [3] இயக்கமகளிரை. [4] நாககன்னியரை. இவர்களாற் பெறும் இன்பம் இந்நிலவுலகத்து மகளிர் இன்பத்தினும் சிறந்ததென எண்ணி ஏகினையோ என்பாள் இங்ஙனம் கூறினாள்.

**189.** [1] தென்புலத்தார் வாழும் உலகில்; பிதுரர் உலகில். [2] மாமனை. [3] தேவியொடும் பணிந்தனையோ என்க. [4] இரண்டு தோள்களும் பொருந்த; முற்றும்மை தொக்கது. [5] நிரம்ப. [6] தாய் தந்தையரை. [7] ஏவலாளர். [8] என்ன பயனை யடைந்தாய்.

190. [1]வரிசைமரு மகனரவால் விளிந்ததுநா [2]னறைபோய்
மனத்தோ டிங்குப்
[3]புரிவுறலு மெனைப்[4]பயந்தார் நோற்றபய னன்றாகப் [5]பலித்த
தேயோ
பெரி[6]தவ[7]ரிக் கட்கலக்கங் காணாமு னிறந்தன்றோ
[8]பிழைத்தா ரந்தோ
அரியதிலு மரியபய னிதுவன்றோ வெவர்பெற்றா
ரவர்போ லம்மா.

191. உன்காதன் மாமனெனைப் [1]பயந்தவன்றே [2]யுறவறிய
வுனக்கே [3]பேசிப்
பின்காதன் மனைவியொடு முயிரிழந்தான் யானுமந்தப்
[4]பெற்றி யாலே
என்காத [5]லுயிர்போக [6]வெற்றுடம்போ விருக்குமுட
னிறப்பே னென்னாத்
தன்காதல் [7]துணையிழந்த [8]வன்றிலென விருந்தழுதாள்
தமிய ளானாள்.

வேறு

192. [1]நன்னக ருறக்க நீங்கி நடுக்கமுற் [2]றழுங்கக் [3]காழித்
தென்னகர் [4]ஞானச் செல்வர் சிவனகர் தொறும்போய்ப் பாடி
அந்நக ரடைந்தா ரங்கோ ரணிமடத் திருந்தார் [5]கேட்டீ
தென்னென [6]வாள்விட் டாய்ந்து கோயிலி னிடைவந்
தெய்தி.

---

190. [1] பாராட்டுக்குரிய. [2] அறிவாகிய உள்ளீடற்ற. [3] துன்புறுதலும். நோக்கின் என ஒரு சொல் வருவிக்க. [4] பெற்ற தாய்தந்தையர். [5] வாய்த்தது. [6] அத்தாய் தந்தையர். [7] இந்தக் கண் கலக்கத்தை. [8] (துன்பத்தினின்றும்) தப்பினார். "நோற்ற பயன் நன்றாகப் பலித்தது" "அரியதிலும் அரிய பயன் இது" "எவர் பெற்றார் அவர் போல்" என்பன குறிப்பினால் எதிர் மறைப் பொருள் பயந்தன. அந்தோ, அம்மா என்பன இரக்கப் பொருளில் வந்தன.

191. [1] பெற்ற அந்நாளிலேயே, [2] சுற்றத்தார் அறிய. [3] மணஞ் செய்து கொடுப்பதாகப் பேச்சிட்டு. [4] தன்மையினாலே. [5] உயிராகிய நீ சென்றுவிட. [6] உயிரற்ற உடலாகிய யானே. [7] ஆண் அன்றிலை. [8] அன்றிற் பேடு போல.

192. [1] நல்ல அந்நகரில் (திருப்புறம்பயம்) உள்ளவர்கள். [2] வருந்த. [3] சீகாழியாகிய அழகிய நகர். [4] திருஞானசம்பந்தர். [5] இவ்வழுகை யொலியைக் கேட்டு. [6] ஏவலாளை விட்டு ஆராய்ந்து தெரிந்துகொண்டு.

193. கன்னிநீ [1]யாரை [2]யுற்ற தென்னெனக் கன்னி[3]தாழ்ந்து
தன்னரு மரபு மீன்றார் தம்மையு [4]மருகற் கென்றே
உன்னினர் மன்றல் பேசி யிறந்தது முயிரன் னோ
டிந்நெறி [5]யடைந்தீங் குற்ற நிகழ்ச்சியு மெடுத்துச்
சொன்னாள்.

194. [1]தந்தையுந் தாயு மன்னார் தமியளா யிரங்கும் பேதைப்
[2]பைந்தொடி யாவி காப்பான் [3]பாம்புகோட் பட்டான் மாடே
வந்தவ[4]னாக மெல்லா [5]மருந்துரு வாகும் வண்ணஞ்
[6]சிந்தைசெய் தருட்கண் வைத்தார் குதித்தது[7]தீவாய்
நஞ்சம்.

195. எழுந்தன னுறங்கி னான்போ லிறந்தவன் [1]யாருங் கண்டு
[2]தொழுந்தகை ஞான வேந்தைத் தொழுதனர் துதிசெய் [3]தார்வத்
தழுந்தினர் [4]கன்னி யன்ன மனையவ ளின்பத் தீந்தேன்
பொழிந்தொரு புறத்தே [5]கஞ்சம் பூத்ததோர் கொம்பி
னின்றாள்.

---

193. [1] யார்; ஐ முன்னிலைக்கண் வந்தது. [2] உனக்கு நேர்ந்தது யாதென்று வினவ. [3] வணங்கி. [4] இந்த மருமகனுக்குக் கொடுப்பதென்றே. அடைய. மரபு முதலியவற்றிலும் ஐயுருபு விரிக்க.

194. [1] உயிர்களுக்கு அத்தனும் அன்னையும் போல்வாராகிய ஆளுடைய பிள்ளையார். [2] வணிகப் பெண்; அன்மொழித்தொகை. [3] பாம்பினாற் கொள்ளப்பட்டவன் பக்கல். [4] உடல் முழுதும். அமுதமயமாகும்படி. [6] திருவுள்ளங் கொண்டு. [7] நெருப்பின் தன்மை வாய்ந்த.

195. [1] எல்லோரும். [2] யாவரும் வணங்குந் தகுதிவாய்ந்த. [3] மகிழ்ச்சிக் கடலுண் மூழ்கினர். [4] இளைய அன்னப் பேட்டினையொத்த அம்மாது. இல் பொருளுவமை. இறந்தவன் உறங்கினான் போல் எழுந்தனன் எனவும், ஒருபுறத்தே நின்றாள் எனவுங் கூட்டுக.

196. தலைவனை யிறந்த போதுந் தனியுயிர் பெற்ற போதுஞ்
[1]சிலைநுதல் காதன் மாமன் [2]செல்வியா யிருந்துந் தீண்டா
நிலைமையு மன்புங் கற்பி னீர்மையும் வியந்து நோக்கி
[3]மலைமகண் ஞான முண்டார் வணிகனை நோக்கிச் சொல்வார்.

197. வருதி நின் மரபுக் கெல்லா மணியனு யுன்றன் மாமன்
[1]தருதிரு வனையா [2]ளின்பஞ் [3]சாருநாள் [4]துன்பம் வந்து
பெருகுநா ளன்றி [5]யென்றுன் மெய்தொடப் பெறுவ
[6]ளீண்டே
திருமண முடித்துக் கொண்டு [7]போகெனச் செப்ப லோடும்.

198. செங்க[1]ணேறனையா னையன் திருமொழி தலைமேற் கொண்டு
பங்கயன் படைத்த [2]சாதி நான்கையும் பாது காப்பீர்
எங்குல வணிக ரின்றிக் [3]கரிகளு மின்றி யீங்கே
[4]மங்கல முடிக்கும் வண்ணம் யாதென வணங்கிச் சொன்னான்.

---

196. [1] வில்லையொத்த நெற்றியினையுடைய அவ்வணிக மாது; அன்மொழித்தொகை. [2] மகளாயிருந்தும். [3] உமையம்மையின் ஞானப்பாலையுண்ட பிள்ளையார்.

197. [1] பெற்ற. [2] மீண்டு உயிர்த்தெழுந்ததனாலாயது. [3] பொருந்தும் நாளிலும். [4] அரவு கடித்து இறந்ததனாலாயது. [5] எந்நாளில். [6] இவ்விடத்திலேயே. [7] வியங்கோள் ஈறு தொக்கது. இன்பத்துன்பங்களிரண்டிலும் மெய்தீண்டற்குத் தடையாயிருந்தது அவளது கன்னிமையேயாகலின் அது நீங்க மணமுடித்துக்கொண்டேகுமாறு கட்டளையிட்டனர்.

198. [1] ஆனேறுபோன்ற வணிகன். [2] நான்கு வருணத்தாரின் ஒழுக்கங்களையும். [3] சான்றுகளுமில்லாமல். [4] மணம் முடிக்கும் விதம்.

199. கன்னியை [1]யீன்ற ஞான்றே யுனக்கென்றுன் காதன் மாமன்
[2]உன்னிய துறவி னுள்ளா ரறிவரே யுனக்கீ தன்றி
[3]வன்னியுங் கிணறு மிந்த விலிங்கமுங் [4]கரிகண் மைந்தா
[5]இந் நிலை [6]வதுவை செய்தி [7]யெம்முரை கடவா தென்றார்.

200. மாசறு [1]மனத்தான் காழி [2]வள்ளலைப் பணிந்து நீயே
[3]தேசிகர் [4]குரவர் நட்டோர் தெய்வமுங் கிளையு மென்னாப்
பேசி[5]யவ் வாறே [6]வேள்வி பெற்றியா னிறீஇத்தான் [7]வேட்ட
பாசிழை யோடு [8]தாழ்ந்து விடைகொடு பரவிப் போனான்.

---

**199.** [1] பெற்றபொழுதே. [2] கருதிப் பேசியதை. [3] வன்னிமரமும். [4] சான்றுகளாகும். [5] இவ்விடத்திலேயே; இப்பொழுதே யென்றலுமாம். [6] மணமுடிப்பாய். [7] எம் சொல்லைக்கடவாமல். குலத்தாரும் சான்றுகளுமின்றி மண முடிக்கும் வண்ணம் யாதென்ற வணிகர்க்கு மாற்றங் கூறப்பட்டது.

**200.** [1] வணிகன். [2] உயிர் கொடுத்தாராதலின் சம்பந்தர் ஈண்டு வள்ளலெனப்பட்டார். [3] ஞானாசிரியரும். [4] கல்வி கற்பிப்போரும். [5] அவர் கூறியபடியே. [6] திரு மணத்தை முறைப்படி முடித்து. [7] மணந்த மாதோடும். [8] (அவரை) வணங்கி.

முற்றிற்று.

---

The Trichinopoly United Printers Ltd. 500—10-5-45

# பிழை திருத்தங்கள்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 14 | 2 | வேஙகட | வேங்கட |
| 25 | 9 | விஞ்ஞாஞசலர் | விஞ்ஞாஞகலர் |
| 33 | 18 | சொண்ட | கொண்ட |
| 44 | 24 | மற்ெருருபால் | மற்ெருருபால் |
| 46 | 29 | வழிபடாதார்க்கு | வழிபடாதார்க்கு |
| 51 | 7 | யால் | 8 யால் |
| 54 | 20 | நீயெரன்று | நீயொன்று |
| 58 | 30 | இறைவித்தும் | இறைவிக்கும் |
| 59 | 15 | I கண்ட | 11 கண்ட |
| 65 | 17 | திரை | 17 திரை |
| 66 | 5 | 29 | 28 |
| 76 | 17 | காமவி51னேத | காம51விேனத |
| 81 | 16 | டிரு8வடிகள் | 8 டிருவடிகள் |
| 82 | 6 | கலமபகம | கலம்பகம் |
| 91 | 9 | இளசைசக | இளசைக் |
| 108 | 20 | கால்களுய் | கால்களும் |
| 114 | 9 | களுந8னி | களுந8னி |
| 118 | 1 | கூட்டத்தால் | கூட்டத்தால் |
| ,, | 2 | முன்டெண்ப | முண்டென்ப |
| 139 | 4 | பொருவரே | பொருவரோ |
| 158 | 31 | என்ருர் | என்ருன் |
| 159 | 18 | வழியில | வழியில் |
| 162 | 33 | நரத்தின் | நகரத்தின் |
| 163 | 5 | விழை | 4 விழை |
| 192 | 5 | 6 யமையு | 5 யமையு |
| 197 | 10 | புனல் | 2 புனல் |
| 198 | 8 | படுத்தி | 3 படுத்தி |
| 207 | 8 | 6 ஏறு | 5 ஏறு |
| 216 | 2 | குழுமி | 2 குழுமி |
| 225 | 25 | னுண்டாகச் | னுண்டாக |
| 234 | 15 | நோற்கும் | 6 நோற்கும் |
| 236 | 24 | கேட்டேன் | கெட்டேன் |
| 239 | 14 | அளிய | 7 அளிய |
| ,, | ,, | அச்சோ | 8 அச்சோ |
| 252 | 4 | தைத்த | கைத்த |
| 258 | 10 | கமலசரண் | கமலச்சரண் |
| 265 | 6 | தரு | 1 தரு |